# இந்திய வம்சாவழித் தமிழரும் இலங்கை அரசியலும்



ச. கீத பொன்கலன், B.Ph., B.Th., M.A.Soc.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய வம்சாவழித் தமிழரும் இலங்கை அரசியலும்

சந்தியாபிள்ளை கீத. பொன்கலன்

லியோ மார்கா பதிப்பகம்
2/7, வேளாங்கன்னி நகர்,
காரமடை ரோட்
மேட்டுப்பாளையம் - 641 301

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதல் பதிப்பு - டிசம்பர் 1999
பக்கங்கள் - 268 + xxxii
உரிமை ஆசிரியருக்கே.

**நூல் கிடைக்குமிடம்**

**ஐந்திணைப் பதிப்பகம்**
779, பாரதி சாலை,
திருவல்லிக்கேணி,
சென்னை - 600 005.

**காந்தளகம்**
4, முதல்மாடி, ரகிசா கட்டிடம்,
834 அண்ணா சாலை,
சென்னை - 600 002.

இந்திய வம்சாவழித் தமிழரும் இலங்கை அரசியலும்
**சந்தியாபிள்ளை கீத. பொன்கலன்**

| | | |
|---|---|---|
| Title | : | **Indiya Vamsavali Thamilarum Ilangai Arasiyalum** |
| Author | : | **FR. S. GUY DE FONTGALLAND**<br>B.Ph., B.Th., M.A. (Soc-Belgium) |
| Language | : | Tamil |
| Edition | : | First |
| Publisher | : | Leo Marga Ashram |
| Copy right © | : | Fr. S. Guy De Fontgalland |
| Size of the book | : | Demy Octavo |
| Type point used | : | 10 points |
| No.of Pages | : | 268 + xxxii |
| Printers | : | Devaki Printers,<br>48/2 South Usman Road,<br>T.Nagar, Chennai - 600 017. |
| Cover | : | Loolecondera Estate - 1870<br>James Taylor's Original tea bushes after pruning. |
| Price | : | **120/-** |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

மலையகத் தொழிலாளர்கள் தங்கள் உரிமைகளுக்காக பல போராட்டங்களை நடத்தியுள்ளார்கள். இப்போராட்டங்களின் விளைவாக பலர் உயிர்த்தியாகம் புரிந்துள்ளார்கள். இவர்களுக்கே இந்நூல் சமர்ப்பணமாகின்றது.

1940ம் ஆண்டு ஜனவரி 15ம் திகதி முல்லோயாவில் கோவிந்தன் என்ற மலையக தமிழர் சுடப்பட்டதிலிருந்து, 1977ல் டெவன் தோட்டத்தை சேர்ந்த சிவனு லட்சுமனனும், 1980ல் பல்லேகல தோட்டத்தில் பழனிவேலும் தங்கள் சமூகத்திற்காக தமது இன்னுயிரை ஈந்தனர். இவர்களுடன் மூன்று பெண்கள் உட்பட 1980ம் ஆண்டு வரை 35க்கும் மேற்பட்டோர் மலையகத்தில் உயிர்த்தியாகம் செய்துள்ளனர். இத்தியாகிகளின் மரணம் மலையக மக்களுக்கு ஒரு எடுத்துக்காட்டாக இருப்பதுடன், அவர்கள் சமுதாயத்தை ஒரு முழுமையான வாழ்விற்கு இட்டுச் செல்லும் கலங்கரை விளக்காக திகழ வேண்டும்.

★ (வீர மரணம் எய்தியோரின் பெயர் பட்டியல் பின்னிணைப்பு 3ல் காணலாம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை

இலங்கையில் வாழ்கின்ற பத்து இலட்சத்துக்கு மேற்பட்ட மலையகத் தமிழர்கள் இந்நாட்டில் ஒரு முக்கிய சிறுபான்மைப் பிரிவினராவர். பிற இனத்தவருடன் ஒப்பிடும் போது அவர் களுடைய வரலாறு சில வேறுபட்ட அம்சங்களைக் கொண்டது. முக்கியமாக அவர்தம் வரலாறு 150 ஆண்டு காலத்தையே கொண்டது. ஆரம்பத்தில் அவர்கள் தொழில் நாடி குறிப்பிட்ட பருவத்தில் இலங்கை வருவதும் திரும்ப இந்தியா செல்வதுமாக இருந்து படிப்படியாக இலங்கையில் நிரந்தரக் குடி மக்களாக மாறினர். இவர்கள் இந்நாட்டின் பல்லின சமூகத்துடன் புதி தாக இணைந்து கொண்ட ஒரு மக்கள் பிரிவினராவர். இந்தியா விலிருந்து வந்தவர்கள் என்ற முறையில் அவர்கள் மிக நீண்ட காலமாகத் தேசிய நீரோட்டத்தில் தம்மை இணைத்துக்கொள்ள முடியாத வகையில் பல தடைகள் உருவாக்கப்பட்டன. குடியுரி மையும் வாக்குரிமையும் மறுக்கப்பட்ட நிலையில் அவர்கள் அரசி யல் வேலைவாய்ப்பு, சுகநலம், வாழ்க்கைத்தரம் போன்றவற்றில் பல இயலாமைகளை எதிர்நோக்க நேர்ந்தது. இப்பின்னணியில் அவர்களுடைய பல்வகைப்பட்ட வளர்ச்சி பின்னடைய நேர்ந்தது. நுணுகி நோக்குமிடத்து இம்மக்களின் வரலாறு அரசியல் நிலைப் பாடு, கல்விவளர்ச்சி, சமூகவியல் பொருளாதார நிலைமை போன்ற பல அம்சங்களை ஆய்வு செய்யவேண்டிய அவசியம் இருந்த போதி லும் இவ்வகை ஆய்வுகளைச் செய்வதற்கான ஓர் அறிஞர் குழாம் இம்மக்கள் மத்தியில் பரவலாகத் தோன்றவில்லை என்பது கவலைக் குரிய விடயமாகும். இம்மக்கள் பற்றிய ஆரம்பகால ஆய்வுகள் வெவ்வேறு வரலாற்று விடயங்கள்பற்றிய ஆய்வுகளின் ஒரு சிறு அம்சமாகவே இருந்தது என்பது குறிப்பிடத்தக்கது. இப்பின்னணி யில் வண. பிதா. கீத பொன்கலன் அவர்கள் மலையகமக்களின் அரசியல் நிலைப்பாடுபற்றி எழுதியுள்ள இந்நூல் முக்கியத்துவம் வாய்ந்தது.

வண. பிதா, அவர்கள் நீண்ட காலமாக மலையக மக்கள் மத்தியில் வாழ்ந்து அவர்களுடைய பல்வேறு தேவைகளை நிறைவு செய்யும் வகையில் தொண்டாற்றி வருபவர். சமூகவியல் துறையில் உயர்கல்வி பயின்றவர். அத்துடன் இலங்கைவாழ் தமிழ் மக்களின் பல்வேறு பிரச்சினைகளையிட்டு நூல்களையும் கட்டுரைகளையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுதியவர். உயர்கல்வி கற்றுணர்ந்த கல்விமான் என்ற முறையில் இத்தகைய ஓர் ஆய்வு நூலை எழுத எல்லாத் தகுதிகளும் பெற்ற வர். பேராசிரியர் பஸ்தியாம்பிள்ளை, திருவாளர்கள் பாலசிங்கம், ஞானமுத்து ஆகியோரின் வழிநின்று இவ் ஆய்வு நூலை அவர் எழுதியுள்ளார்.

இலங்கையின் அரசியல் வளர்ச்சி பற்றியும் சர்வசன வாக் குரிமை, உள்ளூராட்சியமைப்புப் போன்ற அம்சங்களை வரலாற்று ரீதியாக ஆராய்ந்துள்ள நூலாசிரியர் மலையகத் தமிழர் ஒரு தனித்தேசிய இனமாக அங்கீகரிக்கப்பட வேண்டிய அவசியத்தை வலியுறுத்தியுள்ளார். இலங்கையில் நடைபெற்ற பல்வேறு பொது தேர்தல்கள், ஜனாதிபதித் தேர்தல்கள் அவற்றில் மலையகத் தமி ழர்களின் பங்கு என்பன பற்றி முறைப்பட ஆராய்ந்துள்ளார். இவ்வாண்டு நடைபெற்ற தேர்தல்கள் பற்றியும் ஆராயப் பட்டுள்ளது.

மலையக மாவட்டங்களில் மக்கள் தேர்தலில் வாக்களித்த முறை பற்றி நுணுகி ஆராயின் இந்நூல் எதிர்காலத்தில் மலையக மக்கள் அரசியலில் எத்தகைய நிலைப்பாடுகளை மேற்கொள்ள வேண்டும் என்பது பற்றிய தீர்மானங்களை மேற்கொள்வதற்கு வழிகாட்டியாக விளங்கக்கூடிய பல நோக்குகளை இந்நூல் முன் வைக்கின்றது. தமிழ் மக்களின் ஏகோபித்த வரவேற்பையும் பாராட்டையும் பெறும் வகையில் நூலாசிரியர் இந்நூலை ஆக்கி யுள்ளார்.

**சோ. சந்திரசேகரம்**
சமூக விஞ்ஞான கல்வித் துறைத் தலைவர்,
கொழும்பு பல்கலைக்கழகம்
*02.12.1994*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூன்முகம்

மலையகத் தமிழர் அரசியல் பொருளாதார சமூகத்துறையில் ஒரு சக்திமிக்க சமுதாயமாக மாற வேண்டுமென்றும், அத்துடன் தேசிய நீரோட்டத்தில் கலந்து இந்நாட்டின் ஏனைய பிரஜைகள் போன்று சம அந்தஸ்துடன் வாழ வேண்டும் என்ற உணர்வை இந்த மக்கள் தாங்களாகவே சிந்தித்து, கடந்தகால அரசியல் வரலாற்றையும் அறிந்து, அதிலுள்ள குறைகளை களைந்து, புதியதோர் சமுதாயத்தை உருவாக்க திடசங்கற்பம் பூண வேண்டும் என்ற ஒரே ஆவலோடு இந்த ''மலையகத் தமிழரும் அரசியலும்'' என்ற நூலை எழுத முன்வந்துள்ளேன்.

மலையக மக்களின் கடந்த கால, தற்கால அரசியல் வாழ்வை விஞ்ஞான ரீதியில் ஆய்வு செய்வது இந்நூலின் முக்கிய நோக்கமாகும். மலையக மக்களுடைய அரசியல் வாழ்வு இன்று முழுமையாக மூழ்கடிக்கப்பட்டு இந்த மக்கள் இரண்டாந்தர பிரஜைகளாகவும் நாடற்றவர்களாகவும் இன்னும் கூட வாழ்ந்து வருவது கவலைக்கிடமான ஒரு விடயமாகும். இலங்கைக்கு சர்வசன வாக்குரிமை கொடுக்கப்பட்டது முதல் இன்று வரையும் அந்த மக்கள் இந்நாட்டு மக்களல்ல, அன்னியர் என்ற ஒரு கொள்கையை ஒரு சில சிங்கள சந்தர்ப்ப அரசியல்வாதிகள் பரப்பி படிப்படியாக இவர்களுக்கெதிரான பல சட்டங்கள் மூலமாக இவர்களுடைய எண்ணிக்கையை குறைத்து, மேலும் குறைப்பதற்கான திட்டங்களை முன்வைப்பதற்கு, கங்கணம் கட்டிக் கொண்டிருக்கிறார்கள். இவ்வித எண்ணங்களுக்கு உடந்தையாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போகின்ற ஒரு சில மலையகத்தலைவர்களும் உள்ளனர் என்பதை அறியும் போது எமது சமூகத்திற்கு அது ஒரு சாபக்கேடு என்று தான் கூற வேண்டியுள்ளது.

இந்நிலையை உருவாக்கியதில் மலையகத் தலைவர்கள் மட்டு மல்ல, மலையக மக்கள் தமது எதிர்காலத்தைப்பற்றி தூர நோக்குடன் சிந்திக்காது, அன்றாடப் பிரச்சினைகளில் மட்டும் அமிழ்ந் திருப்பதும் முக்கிய காரணங்களில் ஒன்றாகும். அதனால் இந்த மக்கள் மத்தியில் தாங்களும் இந்நாட்டு மக்கள், ஒரு தேசிய இனம் என்று சிந்திக்கும் தன்மை இன்னமும் முழுமையாக தோன்றவில்லை என்றே கூற வேண்டும். இவர்கள் மத்தியில் இத்தேசிய உணர்வு ஏற்படாத நிலையிலும் ஒற்றுமையின்மையும், தலைவர்களது, தவறான போக்கும் தான் இன்று இம்மலையக மக்களை அரசியல் அநாதைகளாக்கியுள்ளது. இக்கருத்துக்கள் இந்நூலில் பல இடங்களில் சுட்டிக்காட்டப்படுவதை காணலாம்.

மலையகத் தமிழரைப்பற்றிய ஆய்வு நூல்கள் வெகு சொற்பமே. அ வகளில் அனேகமானவை ஆங்கில மொழியிலேயே வந்துள்ளன. இவை அந்த சமூகத்தை சார்ந்த 5 வீதமான மக்களுக்கே பயன் தரக்கூடியதாயுள்ளது. இக்குறையை நீக்கி மலையகத்தமிழர் அனைவரும் தங்களது அரசியல் வாழ்வை இனங்கண்டு அதற்கேற்ற ஆக்க முயற்சிகளில் ஈடுபடுத்துவதற்காகவே இந்நூல் தமிழில் வடிவம் பெறுகிறது. மேலும், இலங்கையில் பல அரசியல் ஆய்வு நூல்கள் வெளிவந்திருப்பினும், அவற்றில் மலைகத் தமிர்களின் பங்கு எவ்விதத்திலும் எடுத்துக் காட்டப்பட வில்லை. எனவே இக்குறையையும் நிவர்த்தி செய்யும் விதமாக இந்நூல் வெளிவருகிறது. ஆகவே, இம் மக்களின் முன்னேற்றத்தில் தங்களை ஈடுபடுத்தும் அரசியல் வாதிகள், தொழிற்சங்க வாதிகள், சமூகநல சேவையாளர்கள்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலையக மக்கள் மன்றத்தினர், ஆசிரியர்கள், சமய வழி காட்டிகள் அனைவரும் மலையக மக்களை சரியான பாதையில் அழைத்துச் செல்வதற்கு இந்நூல் உதவுமென்று நம்புகிறேன்.

மலையகத் தமிழர் மத்தியில் கடந்த 20 வருடங்களாக வாழ்ந்து அவர்களுடன் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்கள் மூலமாக நெருங்கிய தொடர்பு கொண்டு, அதன்மூலம் அவர்களின் உண்மையான அரசியல் வாழ்வைப் புரிந்து பல கருத்தரங்குகள் மூலமாக அவர்கள் கருத்துக்களை அறிந்து, குறிப்பாக கடந்த ஒரு வருடகாலமாக மலையக மக்களின் அரசியல் வாழ்வு பற்றிய பல ஆய்வரங்குகள் கருத்தரங்குகள் நடத்தி அவற்றின் மூலமாக பெற்ற கருத்துக்களை தொகுத்து, மேலும் பத்திரிகை மூலமாகவும், புஸ்தகங்கள் மூலமாகவும் பெற்ற அறிவை நெறிப்படுத்தி இந்நூல் எழுதப்பட்டுள்ளது.

இந்த கருத்துக்கள் யாவும் நூல் வடிவுபெற்று வெளிவருவதற்கு உதவியோர் பலர். விசேஷமாக மலையகத் தமிழ் மக்கள், தங்கள் கருத்துக்களை ஒழிவுமறைவின்றி வழங்கி ஒத்துழைத்துள்ளார்கள் லியோ மார்கா ஆஸ்ரத்தின் ஆவணப்பகுதியான மலையகஆய்வுகளத்திற்கு எனது இதய பூர்வமான நன்றியை தெரிவிக்க கடமைப்பட்டுள்ளேன். அத்துடன் இந்நூலிற்கு கருத்து நிறைந்த ஒரு அணிந்துரை வழங்கிய, கொழும்பு பல்கலைக்கழகத்தின் விரிவுரையாளர் சோ. சந்திரசேகரன் அவர்களுக்கும், இவ்வேடு நல்ல முறையில் அச்சேற உறுதுணையாக இருந்த தேவகி இராஜகோபால், ஆர். சி மரியரட்ணம், எஸ். என். ஜோசவ்வாஸ், அருட். சகோதரி மார்கிரட் மோசஸ், எல். சாந்திகுமார் போன்றோருக்கும், ஏனையோருக்கும் எனது நன்றி உரித்தாகுக. இந்நூலை மலையகத் தொடர் வரிசையில் நாலாவது பிரசுரமாக வெளியிடுவதில் பெருமை கொள்ளுகிறேன்.

ச. கீதபொன்கலன்,
B.Ph., B.Th , M. A. Soc.

ஜனவரி-1995

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலவரிசை நிரல்

1505 — டொன் லோறன்ஸ் டெ அல்மெயிடா-இந்தியாவின்போர்த் துக்கல் அரச பிரதிநிதியின் மகன்-காலிக்கு வந்தடைதல்

1589 — மார்ச் 5-முதல் ஆங்கிலேயன் றொல்வ் லர்பிர்ச் கொழும்பு வந்தடைதல்

1658 — போர்த்துக்கல் நாடு ஒல்லாந்தருடன் நடத்திய போரில் தோல்வி அடைதல்.

1660 — றொபர்ட் நொக்ஸ் கண்டியரசனால் கைது செய்யப்படல்

1796 — ஒல்லாந்தர்,சென்னையிலுள்ள பிரித்தானிய பிரதிநிதி கேர் பட்டிடம் கரையோரப் பகுதிகளை கையளித்தல்.

1796 — முதல் தாவரவியல் பூங்கா ஓர்ட்டபுலா என்ற இடத்தில் தொடங்கப்பட்டது.

1802 — இலங்கை அரசு செய்தியேடு தொடங்கப்படல்

1806 — கண்டி அரசன் கண்டி ஏரியை நிர்மாணித்தல்

1815 — பிரித்தானிய படைகள் ஆளுநர் றொபர்ட் பிரவுனிங்கின் தலைமையில் கண்டி இராச்சியத்தை கைப்பற்றல்

— பெப்ரவரி 14-ஆங்கிலப்படை கண்டி எல்லையில் பிரவேசித்தல்

— மார்ச் 2-கண்டி மாகாணத்தில் ஆங்கில அரசை ஸ்தாபிப்பதற்கான பேரவை முடிவுறல்.

1824 — ஜோர்ஜ் பேர்ட் கண்டி பிராந்தியத்தில், பேராதெனியாவுக்கருகில் உள்ள சின்னப்பிட்டியில் முதல் கோப்பித் தோட்டத்தை தொடங்குதல்.

1825 — பேராதெனியாவிற்கு அருகில் உள்ள கன்னொருவ என்ற இடத்தில் ஆளுநர் எட்வர்ட் பானஸ் கோப்பித் தோட்டம் ஏற்படுத்தல்.

— கங்காணிகள் மூலமாக இந்தியத் தமிழர் இலங்கைக்கு கொண்டு தரப்படல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1826 — பெண்களை நீரில் அமிழ்த்தி கொல்லும் மரண தண்டனை கண்டி மாகாணத்தில் ஒழிக்கப்படல்.

1827 — முதல், முறையாக கோப்பிச் செய்கை ஆரம்பம்.

— இவ்வருடத்தின் கோப்பி ஏற்றுமதி 16,000 அந்தராகும்.

— பெண்கள்சர்வசன வாக்குரிமை சங்கம் ஸ்தாபிக்கப்பட்டது

1832 — கோட்டை, புறக்கோட்டை பகுதிகளில் தமிழர்களும் முஸ்லிம்களும் வீடுகள், காணிகள் வாங்க அனுமதிக்கப் படல்.

— செப்டெம்பர் 28-கட்டாய வேலைச் சட்டம் திருத்தப் படல்,

— கண்டி மாஜி மன்னர், வேலூரில் இறத்தல்.

1833 — பிரித்தானிய காலனித்துவ நாடுகளில் அடிமை ஒழிப்பு

— சட்ட, நிருவாக மன்றங்கள் நிறுவப்படல்.

1836 — இறக்குமதி ஏற்றுமதிகளுக்கு பிரித்தானிய அரசால் வரி விதிக்கப்படல்.

837 — தும்பறையில் முதல் கரும்புத் தோட்டம் தொடங்குதல் திட்டமிடப்பட்ட கோப்பிச் செய்கை மலையகத்தில் ஆரம்பிக்கப்படல்.

1838 — ஜுலை 2- காலியில் புகையிரத சேவை ஆரம்பிக்கப்படல்

1839 — பேராதெனியா தோட்டத்திற்கு 205 அசாம் தேயிலைச் செடிகள் கொண்டுவரப்படல்.

1841 — புசல்லாவையில் சீன தேயிலைச் செடிகள் நடப்படல்.

— வீட்டு வேலையாள், தொழிலாளர், பிரயாணம் பற்றிய சட்டத்தின் 5வது சரத்து பிரகடனம் செய்யப்படல்.

1844 — வடமேல் மாகாணம் என்ற புதிய பகுதி தொடங்கப் படல்.

— டிசம்பர் 20-அடிமை முறை ஒழிக்கப்படல்.

1848 — பிரித்தானியருக்கெதிரான கண்டியப் புரட்சி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1854 — பெப்ரவரி 17- பெருந்தோட்டத்துறை நிர்வாகிகளின் முதல் கூட்டம் கண்டியில் நடைபெறல்.

1858 — ஆகஸ்ட் 3-சேர் ஹென்றி வோட் என்பவரால் இலங்கை புகையிரத சங்கம் தொடங்கப்பட்டது.

1859 — பேர்கூசன் இலங்கை ஒழுங்குச்சாவடி பிரசுரிக்கப்பட்டது
— பல கணவர் மணமுறைக்கெதிராக புதிய திருமண மசோதா கண்டிய மக்கள் மத்தியில் கொண்டுவரப்படல்.

1863 — திருமண பதிவு, நிலபதிவு சட்டம் நிறைவேற்றப்படல்.

1865 — மே 26-இலங்கை கூட்டிணைப்புக்குழு ஸ்தாப்பிக்கப்படல்
— நவம்பர்-கொழும்பு, கண்டி நகரசபைகள் அமைக்கப்படல்

1866 — முதன்முதலாக கலப்பின தேயிலைச் செடிகள் அசாமில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டது.

— ஒப்பந்த முறிவு பற்றி தொழில் சட்டம் கொண்டுவரப்படல்.

— ஒப்பந்த உடைப்பு மூலமாக ஒரு தொழிலாளி சிறையிலே அடைக்கப்படவும், 50 ரூபா அபராதம் கட்டவும் பணிக்கும் சட்டம்.

1867 — ஜேம்ஸ் ரெயிலர் என்பவரால், முதல் தேயிலைத் தோட்டம் லூல்கொந்தெரா என்ற இடத்தில் தொடங்கப்பட்டது.
— கொழும்பிலிருந்து கண்டிக்கு புகையிரதப் பாதை தொடங்கி வைக்கப்பட்டது.

1869 — கோப்பிச் செடிகளில் நோய் பரவி அழிபடல்

1872 — தோட்டப் பகுதிகளுக்கு மருத்துவ வசதி பற்றிய ஆணை.

1873 — முதன்முதலாக இலங்கை தேயிலை லண்டனுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டது.
— ஹேவா ஹெட்ட, எலகந்த தோட்டங்களில் முதன் முதலாக தேயிலை பயிர் செய்யப்பட்டது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1882 — ஏ. எஸ். வொயிட் என்பவரால், மின்சாரவெளிச்சம், கொழும்புத்துறைமுகத்தில் முதன்முதலாக நிறுவப்படல்.
— வின்ஸ்டர் பொறஸ்த் தோட்டத்தில், தேயிலை காயவைக்கும் இயந்திரம் முதன்முதலில் நிறுவப்படல்.

1883 — கொழும்பில் முதன்முதலாக தேயிலை ஏலவிற்பனை இடம் பெற்றது.

1885 — ஜனவரி-1-புதிய இலங்கை அரசின் தாள் நாணயம் புழக்கத்திற்கு கொண்டுவரப்படல்.
— மார்ச் 31-சிங்கள, இந்து, முஸ்லிம் புது வருட தினங்கள் அரசு விடுமுறைகளாக பிரகடனம் செய்யப்படல்.

1886 — பெப்ரவரி 1-பதுளையில் பெரும் கொண்டாட்டத்துடன் ஊவா புதிய மாகாணமாக அறிவிக்கப்படல்.

1888 — ஹப்புத்தளை புகையிரத பாதை விஸ்தரிப்பு

1889 — தோட்டத் தொழிலாளரின் வேலையை ஒழுங்கு படுத்தும் முகமாக தோட்டத் தொழிற் சட்டம் கொண்டுவரப்படல்

1891 — பெப்ரவரி 20-இலங்கையில் மக்கள் கணக்கெடுப்பு இரவு வேளையில் தொடங்குதல்.

1892 — நவம்பர் 14-இலங்கையிலும்,தென் இந்தியாவிலும் உள்ள புகையிரத நிலையங்களில் கூலியாட்களை பதிவு செய்யும் முறை தொடங்குதல்

1894 — ஆகஸ்ட் 9-கொழும்பில் தேயிலைத் தொழிலாளர் சங்கம் தொடங்கப்பட்டது.

1896 — பெப்ரவரி 15-சிங்கள நாளிதழான 'வகறவிகிரண'' தொடங்கப்படல்.
— ஜூலை ஹப்புத்தளையில் புதிய வைத்தியசாலை ஆரம்பித்தல்.
— ஆகஸ்ட் 14-இலங்கை பெருந்தோட்டத்துறை நிர்வாகிகளின் கமிட்டிக்கூட்டம் கூட்டப்படல்.
— மேட்டுநில கிராமவாசிகள் தங்களுக்குள்ள மீதமான நிலங்களை ஐரோப்பியருக்கு விற்கக் கூடாதென ஒரு சில ஆளுநர்கள் தடைவிதித்தல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1896 — செப்டம்பர்-அரசு கல்வி மன்றம் நிறுவப்படல்.

— டிசம்பர்-கொழும்பில் 'காலரா' நோய் பரவுதல்

— தமிழ் கூலிகளுக்கு ஜரிகை வேலைப்பாடு உற்பத்தி துறையை ஏற்படுத்தல்.

1897 — தரிசு நில சுவீகரிப்பு சட்டமும், பயன்படுத்தபடாத நிலங்களை அரசுடமையாக்குதலும்

— ஆகஸ்ட்-றாகமையில் கூலிகளுக்கான குடியிருப்பு முகாம் ஒன்று அமைக்கப்படல்.

— செப்டம்பர் 1-இந்திய-இலங்கை வரட்சி நிவாரண நிதி பற்றிய கடைசிப் பொதுக் குழுக்கூட்டம் நடைபெறல்.

1900 — இந்திய வரட்சி நிவாரண நிதிக்காக ஆளுநரால் ஒரு பொதுக் கூட்டம் கூட்டப்படல். அரசின் வருமான நிதியிலிருந்து 75,000-நிதிக்கென ஒதுக்கப்படல்.

1901 — கண்டி மாவட்ட பெருந் தோட்டத்துறை நிர்வாகிகள் சங்கம் தொடங்கப்படல்.

— டிசம்பர்-அம்பலாங்கொடை மக்கள் மத்தியில், சுகாதார தேவைகளுக்காக விதிக்கப்பட்ட கட்டணத்திற்கெதிராக குழப்பம் ஏற்படல். இதன் தலைவர்கள் கைது செய்யப்பட்டு உயர்நீதிமன்றத்தின் மூலமாக தண்டனைகள் பெறல்.

1902 — கூலி 'ரின்சீட்டு' முறை நடைமுறைக்கு வரல்

1903 — இலங்கை பெருந் தோட்டத்துறை நிர்வாகிகளால் தொழில் தொகுதி ஆணையர் நியமிக்கப்படல்

1904 — தேயிலை வரிச்சட்டம் அமுல் படுத்தப்படல்

— இலங்கை தொழில் ஆணைக்குழு, ஆணையர் நோர்மான்-ரோ செல் என்ற ஆங்கிலேயரின் கீழ் ஸ்தாப்பிக்கப்படல்

1905 — ஜனவரி 21-கேவ்ஸ் ஆணைக்குழு நியமிக்கப்படல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1907 — கேவ்ஸ் அறிக்கையின்படி பாடசாலை மாணவருக்கு, வசதிகள் செய்து கொடுப்பதாக கிராம பாடசாலை சட்டம் இயற்றப்படல்.

1910 — மார்ச் 10-இலங்கைத் பெருந் தோட்ட நிர்வாகிகளின் நியமனமுறையை புகுத்த, காலனிக்கு பொறுப்பான அரசு செயலர் ஆணை பிறப்பித்தல்.

— தோட்ட நிர்வாகிகள், ஐரோப்பிய பொதுமக்கள், வியாபாரிகள், கரையோர சிங்களவர், முஸ்லிம் முதலியோர் எதிர்ப்புக்கு மத்தியில் வாக்குரிமை மசோதா சபையில் நிறைவேறுதல்.

1911 — சட்டசபையில் உத்தியோகஸ்தரல்லாதோரும் தெரிவு செய்யப்படல்

1914 — இலங்கை இந்திய புகையீரத நிறுவனம் ஸ்தாபீக்கப்படல்

1915 — மே-சிங்கள முஸ்லீம் கலகம்

1916 — 'இந்திய குடி பெயர்வு' என்ற பத்திரிகையின் ஆசிரியரான சாமினாதன் என்பவர் இலங்கைக்கு விஜயம் செய்தல்

1917 — இலங்கை சீர்திருத்த குழுவும், இலங்கை தேசிய சங்கமும் ஸ்தாபிக்கப்படல்

1919 — நியுகினியாவிலிருந்து றப்பர் செடிகள் ஹெனரட்கொட தாவரவியல் தோட்டத்திற்கு கொண்டு வரப்படல்

— இலங்கை தேசிய காங்கிரஸ் நிறுவப்படல்

1920 — தோட்டப் பகுதியில் கட்டாய கல்வியை புகுத்த கல்விச் சட்டம் கொண்டு வரப்படல்

'தேச நேசன்' என்ற தமிழ் செய்தித்தாழ் நடேச ஐயரால் தொடங்கப்பட்டது. எம். ஏ. அருளானந்தம், ஈ.வி. ரட்ணம் இதன் உரிமையாளர்களாயிருந்தனர்.

சேர் பொன்னம்பலம் அருணாசலத்தின் தலைமையில் பல அரசியல் குழுக்கள் ஒன்றிணைந்து இலங்கை தேசிய காங்கிரஸ் என இயங்குதல்

மனிங் அரசியலமைப்பு கொண்டு வரப்படல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1921 — துண்டு முறை. கங்கானி தனது ''காங்கை'' (Gang) தனது விருப்பப்படி வேறொரு தோட்டத்திற்கு மாற்றும் முறை ஒழிக்கப்படல்

— ஆங்கில செய்தித்தாழ், ''சிற்றிஸன்'' பௌறின் முத்து கிருஸ்ணா என்பவரால் தொடங்கப்பட்டு, அதன் உரிமையாளராக நடேச ஐயர் நியமிக்கப்படல்

— அக்டோபர் டீ. எம். மணிலால் இலங்கை வருதல்

1922— காலனி அரசபிரதிநிதியை சந்திக்க ஒரு தூதுக்குழு இலங்கையிலிருந்து இந்தியா சென்று, இந்திய குடிபெயர்வு ஒழுங்குகள் பற்றி பேசுதல்

1923 — மார்ச் 27, புதிய தொழிற் சட்டம், சட்டசபையில் நிறைவேற்றப்படல்

— டிசம்பர் 13 புதிய கடவுச்சீட்டு சட்டம் நிறைவேற்றப்படல் அக்டோபர் 1 குடியேற்ற நிதி நிறுவப்படல்

— எஸ். ரங்கராஜன் குடிபெயர்ந்த மக்களுக்கு பொறுப்பாக இந்திய அரசின் பிரதிநிதியாதல்

— தோட்ட அலுவலர்களையும்,மேற்பார்வையாளர்களையும் பிரதிநிதித்துவப்படுத்த கருத்தரங்கு நடைபெறல்

1924 — மார்ச் 14- பெருந்தோட்டத்துறை நிர்வாகிகளின் 17வது கூட்டமும் ஆளுநரின் உரையும்

— புதிய அரசியலமைப்பு கொண்டு வரப்படல்

1925 — அக்டோபர் 8-தேயிலை ஆராய்ச்சி சட்டம் நிறைவேற்றபடல்.

— தேயிலை ஆராய்ச்சி நிறுவனம் தொடங்கப்படல்.

1927 — மகாத்மா காந்தி இலங்கைக்கு விஜயம் செய்தல்

— குறைந்த அளவு சம்பளம் பற்றிய சட்டமும், சம்பள பணத்தை தொழிலாளர்களிடம் நேரிடையாக வளர்க்கும் ஒழுங்கும்

— டொனமூர் ஆணைக்குழு நியமனம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1927 — அக்டோபர் - புதிய தொழில் முகாம் திருச்சியில் முடிவடைதல்.

— நவம்பர்-9-இலங்கை பெருந்தோட்டத்துறை நிர்வாகிகள் சபை எஸ்ரேற் சிற்றுண்டிச் சாலைகள் அமைக்க முடிவெடுத்தல்.

— டிசம்பர் 9-இந்திய தொழிலாளர் பற்றிய சட்டத்திருத்தம் சட்டசபையில் நிறைவேற்றப்படல்.

1928 — பெப்ரவரி-மாவட்ட சம்பள மன்றம், தோட்டமாவட்டங்களில் கொண்டுவரப்படல்.

— செப்டம்பர்-தோட்ட தொழிலாளருக்கு வாக்குரிமைச் சட்டம்

— பிரித்தானியாவில் வாக்குரிமைச் சட்டம்.

— ஏ.ஈ. குணசிங்கா அகில இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் கட்சியை நிறுவுதல்

1929 — டொனமூர் கமிஷன் சர்வசன வாக்குரிமையின்படி சட்டசபை தேர்ந்தெடுக்கப்பட்டதும், அமைச்சர் சபை நிர்மாணிக்கப்பட்டதும்.

1931 — சிங்கள அரசியல்வாதிகளிடமிருந்து வந்த வற்புறுத்தலினால் தோட்ட தொழிலாளரின் வாக்குரிமை மட்டுப்படுத்தப்படல்.

— ஹட்டன் பெரிய சுந்தரம், தலவாக்கொல்லை வைத்திய லிங்கம் பண்டாரவளை ஏ. பெலோஸ் கோர்டன் சட்டசபைக்கு தெரிவு செய்யப்படல்.

— பெரிய சுந்தரம் கைத்தொழில் வாணிப அமைச்சராதல்

— நடேச ஐயரால் ஹட்டனில் தொழிலாளர் சமஷ்டி ஆரம்பித்தல்.

— முதலாம் அரசசபைத் தேர்தல்

— இன்டியன் எஸ்றேற் லேபரர்' என்ற ஆங்கில ஏடு தொடங்கப்படல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1931 — அரிசிவிலைக் குறைப்பால் குறைந்த சம்பளம் மேலும் குறைக்கப்படல்.

— சர்வசன வாக்குரிமை கொடுக்கப்படல்.

1933 — 'ஊழியன்' என்ற தமிழ்வாரப்பத்திரிகை அச்சிடப்படல்

— சமூக கலாச்சார குழுக்களின் தோற்றம் (1938 வரை நீடித்தல்)

— தொழிற்சங்கங்கள் பதிவு செய்யப்படுதலும், கட்டுப்படுத்தப்படுதலும் பற்றிய ஆணை 1935ல் அனுமதிக்கப்படல்

1935 — கலாநிதி கொல்வின் ஆர். டி. சில்வா லங்கா சமசமாஜக் கட்சியை நிறுவி அதன் தலைவராதல்,

1936 — மார்க் அந்தனி பெஸ்ரர் பிறேகேடிங் கொழும்பு வரல் கலாநிதி கொல்வின் ஆர். டி. சில்வாவை சந்தித்து சமசமாஜ கட்சி அங்கத்தவராதல்

— இரண்டாம் அரச சபைத் தேர்தல்.

1937 — எஸ். டபிலியு. ஆர். டி. பண்டாரநாயக்கா சிங்கள மகா சபையை தொடங்குதல்

— ஏப்ரல் 24-பிறேஸ் கேடிலை கைது செய்யும்படி ஆளுநர் கட்டளை பிறப்பித்தல், இவர் மே 7ல் கைதாகி மே 18ல் விடுதலையானார்.

— அகில இலங்கை தலைமை கங்காணிமார் சங்கம் 648 அங்கத்த வருடன் நிறுவப்படல்

— ஜவஹர்லால்நேரு இலங்கைக்கு விஜயம் செய்தல்

1939 — தோட்டப் பாடசாலைகளில் பாடத்திட்டம், சுதேச மொழிக் கல்விக்கு அப்பாலும் நடத்துவதற்கான சட்டம்

— ஜூலை 25-இலங்கை-இந்திய காங்கிரஸ் நிறுவப்படல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1940 — ஜனவரி 19 - இலங்கை இந்திய சமஷ்டி நடேச ஐயரால் நடத்தப்படல்

— ஜுன் 22 லங்கா சமசமாஜக் கட்சியால் 'இலங்கை தோட்டத் தொழிலாளர் ஒன்றியம்' நிறுவப்படல்.

— சம்பள உயர்வு, வீட்டு லசதி கேட்டு வேலை நிறுத்தம், முல்லோயா பகுதியில் நடைபெறல். சங்கத்தின் செயலர் வேலுசாமி கைது செய்யப்படல். கோவிந்தன் என்ற தோட்ட தொழிலாளி சுடப்பட்டு இறத்தல்.

— ஜுலை 15 மேற்குறிப்பிட்ட சம்பவத்தால் ஏழு அம்சக் கோரிக்கைக்கு வழிபிறத்தல்

— லங்கா சமசமாஜக்கட்சி தலைவர்களான கலாநிதி என். எம். பெரேரா, பிலிப் குணவர்த்தனா கலாநிதி கொல்வின் ஆர். டி சில்வா, எட்மன்ட் சமரகொடி, போன்றோர் கைது செய்யப்படலும், கட்சி தலை மறைவாதலும்.

1943 — இலங்கை கம்யூனிஸ்ட்கட்சி (CP) தொடங்கப்பட்டது.

1944 — ஜி. ஜி. பொன்னம்பலத்தால் தமிழ் காங்கிரஸ் (T.C) நிறுவப்படல்.

— சிங்களமும், தமிழும் உத்தியோக மொழிகளாக சட்ட சபை ஏற்றுக் கொண்டது.

— 1944-1945—சோல்பரி கமிஷன்

1946 — இலங்கையிலுள்ள பிரிட்டிஷ் பிரஜை, 6 மாதங்களுக்கு மேற்பட்டு இருக்கும் பட்சத்தில் தேர்தலில் வாக்களிக்கும் உரிமையை பெறுகிறார் என்ற சட்டம் அமுலாக்கபபடல்

— சோல்பரி அரசியல் யாப்பு

— ஐக்கிய தேசியக்கட்சி (U.N.P) தொடங்கப்பட்டது.

1948 — செப்டெம்பர்-பிரஜாவுரிமை சட்டமானது. மரபுவழிப் பதிவு பிரஜை என இருவகை சட்டங்களை அமுல் படுத்தியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1949 — ஜி. ஜி. பொன்னம்பலம் சேனநாயக்காவின் அமைச்சர் சபையில் சேர்ந்து கொண்டது. எஸ். ஜே. வி செல்வ நாயகம் சமஷ்டி கட்சியை (F.P) தொடங்கினார். இந்தியர் பாகிஸ்தானியருக்கு பிரஜாவுரிமை சட்டம் கொண்டு வரப்படல்.

— தேர்தல் பட்டியலில் ஒருவரின் பெயர் இடம் பெற வேண்டு மாயின் அவர் இலங்கையராக இருக்க வேண்டும் என்ற பாராளுமன்ற சட்டம் [நெ. 48 of 1949)

1950 — இலங்கை-இந்திய காங்கிரஸ், இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் என வத்தளையில் நடந்த 10வது அமர்வில் பெயர் மாற்றம் செய்யப்படல்.

1951 — இலங்கை-இந்திய காங்கிரஸ் பாராளுமன்றத் தேர்தல் சட்டத்தை [48 of1949) பகிஸ்கரித்தல்

— ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து எஸ். டபிள்யு. ஆர். டி• பண்டாரநாயக்கா இராஜினாமாச் செய்தல்.

— சிறிலங்கா சுதந்திரக்கட்சி உதயமாதல்

1952 — இலங்கை-இந்திய காங்கிரஸ் பிரஜாவுரிமை சட்டத்திற் கெதிராக சத்தியாக்கிரகத்தில் இறங்கல்.

— டட்லி செனநாயக்காவின் தலையீட்டால் சத்தியாக்கிர கம் கைவிடப்படல்

1956 — ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸிலும், இலங்கை தொழி லாளர் காங்கிரஸிலும் விரிசல் ஏற்படல்.

— கொத்தலாவலை 'சிங்களம் மட்டும்' ஐ. தே. கட்சியின் உத் தியோக மொழிக் கொள்கையென தெரிவித்தார்.

— பண்டாரநாயக்கா பிரதமரானார்,

— சிங்களம் மட்டும் மசோதா நிறைவேறியது· தமிழருக் கெதிரான வன்செயல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1957 — ஜூலை தமிழர் நலன்களை பாதுகாக்க, பண்டாரநாயக்கா-செல்வநாயகம் ஒப்பந்தம் கைசாத்திடப்பட்டது.

— இந்த ஒப்பந்தத்தை எதிர்த்து ஜே. ஆர் ஜயவர்த்தனா கண்டிக்கு பாதயாத்திரை மேற்கொள்ளல்

1958 — செப்டம்பர் - பண்டாரநாயக்கா, 'பண்டா-செல்வா ஒப்பந்தத்தை வாபஸ் வாங்கிக் கொண்டார்

— மே-தமிழருக்கெதிரான வன்செயல்கள்-அவசரகால சட்டம் நிறைவேறி 1959 வரை நீடித்தல்

1963 — இந்திய, பாகிஸ்தானியருக்கான பிரஜாவுரிமை பதிவுச் சட்டம் முடிவடைதல்

1964 — ஜூன் ல.ச.ச.கட்சி, ஸ்ரீ ல சு கட்சி அரசாங்கத்தோடு கூட்டு சேர்ந்து சிறிமா-சாஸ்திரி ஒப்பந்தம் கைச்சாத்திடல்

1971 — நவம்பர் 9- சி.வி வேலுப்பிள்ளை தனது 71வது வயதில் காலமாதல்

— டிசம்பர் 2-ஹற்றனில் வெள்ளையன் 51வது வயதில் காலமாதல்

1974 — சிறிமா-இந்திரா ஒப்பந்தம்

— யாழ்ப்பாணத்தில் உலகத்தமிழ் ஆராய்ச்சி மாநாட்டில் போலிசாரின் அட்டூழியம்

— தரப்படுத்தலும் மாவட்ட கோட்டாக்களும்

9977 — ஜூலை பொதுத்தேர்தலில் ஜே. ஆர். ஜயவர்த்தனா தலைமையில் ஐ. தே. க வெற்றி பெற்றது.

— ஆகஸ்ட், தமிழருக்கெதிரான வன் செயல்கள்

1978 — ஸ்ரீ லங்கா ஜனநாயக சோஷலிச குடியரசின் புதிய அரசியல் யாப்பு நிறைவேற்றப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1978 — ஜனாதிபதி முறை நடைமுறைப்படுத்தப்பட்டது ஜே ஆர் ஜயவர்த்தனா ஜனாதிபதியாதல்

— தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கம் சட்ட விரோதமாக்கப் பட்டது.

1979 — பயங்கரவாத தடுப்புச் சட்டம் நிறைவேறியது.

— தமிழ்ப்பகுதிகளில் அவசரகால நிலை

— யாழ்ப்பாண மாவட்டத்தில் இராணுவம்

— யாழ்ப்பாணத்தில் அப்பாவி தமிழ் இளைஞர்கள் இராணுவத்தினரால் கொல்லப்படுதல்

1981 — ஜூன் யாழ்ப்பாணத்தில் பொலீஸ் இராணுவ வெறியாட்டம்

— யாழ்ப்பாணத்திலுள்ள பல கட்டிடங்களுக்கு இராணுவம் தீ மூட்டியது

— ஜூன்-ஆகஸ்ட் இலங்கையிலுள்ள தமிழருக்கெதிரான வன் செயல்கள். யாழ்ப்பாணம் பொது நூலகம் எரிக்கப்பட்டது

1982 — ஜூன்-புதிய விடுதலை இயக்கங்கள் புரட்சிகர சபையை அமைத்து ஈழம் அமைப்பதற்கு இராணுவ போராட்டத்தையே கையாள வேண்டுமென்றனர்.

— அக்டோபர்-ஜே. ஆர். ஜயவர்த்தனா மீண்டும் ஜனாதிபதியாதல்

— நவம்பர்-பயங்கரவாத சட்டத்தின் கீழ் தமிழ் புத்தி ஜீவிகளும் கத்தோலிக்க குருமாரும் தடுப்பு காவலில் வைக்கப் படல்

— தேர்தல் மீதான சர்வசன வாக்கெடுப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1982 — மே-28 தோட்டத் தொழிலாளர்களின் முன்னேற்றத்திற்காக எவ்வித வேற்றுமையுமின்றி உன்னத பணியாற்றிய பதுளை ஆயர் லீயோ நாணயக்கார காலமாதல்

1983 — மே-யாழ்ப்பாண நகரை மீண்டும் இராணுவம் எரித்தது.

— சடல பரிசோதனை, மரண விசாரணை எதுவுமின்றி சுட்டு கொன்று புதைக்க இராணுவத்திற்கு அதிகாரம் கொடுக்கப்படல்

— தமிழருக்கெதிரான வன்செயல்கள், கொலைகள், அட்டூழியங்கள்

— தென்னிலங்கையிலிருந்தும் மலையக பகுதிகளிலிருந்தும் தமிழர் வடக்கே தப்பியோடல்

— ஜூலை இரத்தக்களம் (இருண்ட ஜூலை 1983)

— இந்திய வெளிவிவகார அமைச்சர் நரசிம்மராவ் இலங்கை வரல்

— ஆகஸ்ட் எச். டபிள்யு. ஜயவர்த்தனா இந்தியா விஜயம்

— இந்திராகாந்தி - ஜே. ஆர். ஜெயவர்த்தனா சந்திப்பு

1984 — ஜனவரி-டிசம்பர் -சர்வகட்சி மாநாடு

அக்டோபர் 31- இந்திராகாந்தி படுகொலை

1986 — ஜனவரி-திருமதி பண்டாரநாயக்காவின் குடியுரிமை மீட்பு 95,000 மலையகத் தமிழருக்கு பிரஜாவுரிமை வழங்க சம்மதம்

— ஜூன் அரசியற் கட்சிகளின் மாநாடு ஆரம்பம்

— டிசம்பர் 19-சிதம்பரம் குழுவின் பேச்சுவார்த்தைக்குப் பின், 19 பிரேரணைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1988 — முதலாவது மாகாண சபைத் தேர்தல்

— டிசம்பர் 19-ஜனாதிபதித் தேர்தல் நாடற்றவர் பிரஜாவுரிமைச்சட்டம் (Act 39 of 1988)

1989 — தேர்தல் பதிவுச் சட்டதிருத்தம் கொண்டுவரல் ஏற்கனவே இந்திய பிரஜாவுரிமைக்கு விண்ணப்பித்தவர்களின்பெயரை நிராகரிக்கும் சட்டம்

— பெப்ரவரி 15-பொதுத்தேர்தல்.

1991 — மே.21-ராஜீவ்காந்தி ஸ்ரீபெரும்புத்தூரில் கொலைசெய்யப்படல்

— மே-உள்ளூராட்சித் தேர்தல்

1993 — ஏப்ரல் 24-அத்துலத் முதலி கொல்லப்படுதல்

— மே 1-ஜனாதிபதி பிரேமதாச கொலை செய்யப்படல்

— மே 18 இரண்டாவது மாகாணசபை தேர்தல்

1994 — ஆகஸ்ட் 16- பத்தாவது பொதுத்தேர்தல்.
அக்டோபர் 24-காமினிதிசனாயக்கா கொழும்பில் குண்டு வெடிப்பினால் இறத்தல்.

— நவம்பர் 9 ஜனாதிபதித் தேர்தலில் சந்திரிகா குமாரதுங்க, முதல் பெண் ஜனாதிபதியாக தெரிவு செய்யப்படல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளுரை


| | | | பக்கம் |
|---|---|---|---|
| அணிந்துரை | | | IV |
| நூன்முகம் | | | XI |
| காலவரிசை | | | IX |
| உள்ளுரை | | | XXII |
| அட்டவணை | | | XXX |
| முன்னுரை | | | 1-04 |
| **அத்தியாயம் 1 :** | | **மலையகத் தமிழர் தேசிய இனம்** | 05-15 |
| | 1.1 | மலையகத் தமிழரின் வருகை | 06 |
| | 1.2 | தோட்டத்திற்கு புறம்பாக மலையகத் தமிழர் | 08 |
| | 1.3 | ஆரம் பவாழ்க்கை கண்டி இராச்சியத்தில் | |
| | 1.4 | இலங்கையின் சனத்தொகை | 09 |
| | 1.5 | மலையகத் தமிழர் | 11 |
| | 1.6 | மலையகத் தமிழர் தனித் தேசிய இனமே | 12 |
| **அத்தியாயம் 2 ·** | | **அரசியலும் ஜனநாயகமும்** | 16-24 |
| | 1.1 | அரசியற் கொள்கை | 17 |
| | 2.2 | மக்களாட்சி | 18 |
| | 2.2.1 | மறைமுக மக்களாட்சி முறை | 19 |
| | 2.2.2. | மக்களாட்சியின் நிறை குறைகள் | 19 |
| | 2.3 | இலங்கையின் ஜனநாயகம் | 20 |
| | 2.3.1 | ஜனநாயக பிரதிபலிப்புகள் | 21 |
| **அத்தியாயம் 3 :** | | **இலங்கையின் அரசியல் வரலாறு** | 25-34 |
| | 3.1 | பிரித்தானியர் காலம் | 25 |
| | 3.2 | கண்டி இராச்சியம் | 26 |
| | 3.3 | கோல்புறூக் கமிஷன் | 27 |
| | 3 4 | இருபதாம் நூற்றாண்டின் ஆரம்ப காலம் | 28 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| 3.5 | சிறுபான்மையினரின் பங்களிப்பு | 30 |
| 3.6 | 1924ல் பதிவு செய்யப்பட்ட வாக்காளர் | 31 |
| **அத்தியாயம் 4 :** | **சர்வசன வாக்குரிமை** | **35-39** |
| 4.1. | தேர்தல் | 36 |
| 4.2. | இலங்கைத் தமிழர் நிலை | 37 |
| **அத்தியாயம் 5 :** | **அரச சபைகள் 1931—1947** | **40-43** |
| 5.1. | டொனமூர் ஆணைக் குழு | 40 |
| 5.2. | அரச சபைத் தேர்தல் 1931-1936 | 45 |
| **அத்தியாயம் 6 :** | **உள்ளூராட்சி அமைப்புமுறை** | **44-59** |
| 6.1. | அதிகார பரவலாக்கல் | 44 |
| 6.2. | மாவட்ட அபிவிருத்தி சபைகள் | 45 |
| 6.3. | பிரேதச சபைகள் | 47 |
| 6.4. | பிரதேச சபைத் தேர்தல் 1987 | 49 |
| 6.5. | உள்ளூராட்சித் தேர்தல் 1991 | 51 |
| 6.5.1 | இளைஞர் பிரதிநிதித்துவம் | 52 |
| 6.5.2 | தேர்தல் முறைகள் | 53 |
| 6.6 | உள்ளூராட்சி தேர்தலும் சர்வசன வாக்குரிமையும் | 56 |
| 6.7 | உள்ளூராட்சி தேர்தலும் மலையக பிரதிநிதிகளும் | 57 |
| **அத்தியாயம் 7 :** | **பொதுத்தேர்தல் 1947 முதல்-1994 வரை** | **60-112** |
| 7.1 | அரசியல் யாப்பும் பொதுத் தேர்தல்களும் | 62 |
| 7.2 | அரசியல் யாப்பும் சிறுபான்மையினரும் | 62 |
| 7.2.1 | 29 வது சரத்து | 62 |
| 7.2.2 | நியமன அங்கத்தவர்கள் | 63 |
| 7.2.3 | பல அங்கத்தவர் தொகுதி | 63 |
| 7.3 | தேர்தல் விதிகளும் அங்கத்தவர் தொகையும் | 63 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| 7.4 | பாராளுமன்றத்தின் கடமைகள் | 65 |
| 7.5 | முதலாவது பாராளுமன்ற தேர்தல்-1947 | 65 |
| 7.5.1 | தேர்தலும் மலையகத் தமிழரும் | 66 |
| 7.5.2 | இலங்கை இந்திய காங்கிரஸ் | 67 |
| 7.5.3 | புதிய பிரஜாவுரிமைச் சட்டம் | 68 |
| 7.6. | இரண்டாவது பொதுத்தேர்தல்-1952 | 71 |
| 7.7. | மூன்றாவது பொதுத்தேர்தல்-1956 | 74 |
| 7.8. | நாலாவது பொதுத்தேர்தல்-1960 மார்ச் 19ம் திகதி | 77 |
| 7.9 | ஐந்தாவது பொதுத்தேர்தல்-1960 ஜூலை | 79 |
| 7.10 | ஆறாவது பொதுத் தேர்தல்-1965 | 81 |
| 7.11 | ஏழாவது பொதுத் தேர்தல் | 83 |
| 7.11.1. | 1972 குடியரசு அரசியலமைப்பு | 85 |
| 7.11.2. | பெருந்தோட்டத்துறை தேசிய மயமாக்கப்படல் | 87 |
| 7.12. | எட்டாவதுபொதுத்தேர்தல்-1977 | 88 |
| 7.12.1 | 1978ம் ஆண்டு இலங்கை ஜனநாயக குடியரசு அரசியலமைப்பு | 93 |
| 7.13 | ஒன்பதாவது பொதுத் தேர்தல் 1989 | 95 |
| 7.13.1 | தேர்தல் ஒரு கண்ணோட்டம் | 97 |
| 7.13.2 | புதிய பாராளுமன்ற தேர்தல் முறை | 99 |
| 7.13.3 | மலையக வேட்பாளர் | 101 |
| 7.14 | பத்தாவது பொதுத் தேர்தல்-1994 | 104 |
| 7.14.1 | நுவரேலியா மாவட்டம் | 105 |
| 7.14.2 | பதுளை மாவட்டம் | 106 |
| 7.14.3 | கண்டி மாவட்டம் | 107 |
| 7.14.4 | இரத்தினபுரி மாவட்டம் | 107 |
| 7.14.5 | மாத்தளை மாவட்டம் | 108 |
| 7.14.6 | கேகாலை மாவட்டம் | 109 |
| 7.14.7 | களுத்துறை மாவட்டம் | 109 |
| 7.14.8 | ஏனைய மாவட்டங்கள் | 109 |
| 7.14.9 | தேர்தலில் பின்னடைவு | 110 |
| 7.14.10 | தேர்தல் பிரச்சாரங்கள் | 112 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அத்தியாயம் 8 : ஜனாதிபதித் தேர்தல்—1978 1982, 1988, 1994** 133

| | | |
|---|---|---|
| 8.1 | முதலாவது ஜனாதிபதி | 115 |
| 8.2 | முதலாவது ஜனாதிபதித் தேர்தல்-1982 | 117 |
| 8.3 | பொதுஜன தொடர்பு சாதனங்களின் பங்கு | 118 |
| 8.4 | வாக்களிப்பு முறை | 119 |
| 8.5 | இரண்டாவது ஜனாதிபதித் தேர்தல்-1988 | 121 |
| 8.6 | மூன்றாவது ஜனாதிபதித் தேர்தல்-1994 | 122 |
| 8.6.1. | இலங்கையின் தேசிய மேதகை | 123 |
| 8.6.2. | ஐக்கிய தேசியக் கட்சி | 126 |
| 8.6.3. | மலையகத் தமிழர் | 129 |
| 8.6.4. | தேர்தல் முடிவுகள் | 130 |
| 8.6.5. | புதிய ஜனாதிபதியின் பங்களிப்பு | 131 |

**அத்தியாயம் : மக்கள் தீர்ப்பு—1992** 134-147

| | | |
|---|---|---|
| 9.1. | ஜனநாயகம் | 134 |
| 9.2. | மலையகத்தில் பிரச்சாரம் | 135 |
| 9.3. | மக்களின் நிலைமை | 139 |
| 9.4. | மலையக மக்கள் ஆதரவு | 142 |
| 9.5. | சர்வசன வாக்கெடுப்பின் நோக்கம் | 143 |
| 9.6. | சர்வசன வாக்கெடுப்பின் வரலாறு | 145 |

**அத்தியாயம் 10: மாகாணசபைத்தேர்தல் 1988-1993** 148-16-

| | | |
|---|---|---|
| 10.1 | மாகாண சபைச்சட்டம் | 148 |
| 10.1.1. | வெட்டுப்புள்ளி முறை | 149 |
| 10.1.2. | தேர்தலும் விகிதாசார முறையும் | 151 |
| 10.2. | மாகாண சபைத் தேர்தல்-1988 | 153 |
| 10.3. | தேர்தல் முடிவுகள் | 155 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10.4. மாகாணசபைத் தேர்தல்-1993 157
10.4.1. மலையக மக்களின் பங்களிப்பு 158
10.4.1.1. நுவரேலியா மாவட்டம் 159
10.4.1.2. பதுளை மாவட்டம் 159
10.4.1.3. கண்டி மாவட்டம் 160
10.4.1.4. மாத்தளை மாவட்டம் 161
10.4.1.5. கொழும்பு மாவட்டம் 161
10.4.1.6. இரத்தினபுரி மாவட்டம் 161
10.4.2. தேர்தல் வாக்குறுதிகள்—ஆய்வு 163
10.4.3. மலையக மக்களின் எதிர்பார்ப்பு 165

அத்தியாயம் 11 : அரசியல்அமைப்பு தேர்தல்முறைகளும் 169

11.1. தேர்தல் சட்டங்கள் 169
11.2. அரசியல் அமைப்புகள் 171
11.3. தேர்தலும் வரையறை ஆணைக்குழுவும் 172
11.3.1. பல அங்கத்தினர் கொண்ட தொகுதிகள் 174
11.4. விகிதாசார முறை 175
11.4.1 இலங்கையில் ஹமில்டன் முறை 177
11.4.2 வெட்டுப் புள்ளி முறை 177
11.5 ஆசனங்கள் தெரிவு செய்யும் முறை 178
11.5.1 கணித முறை 179

அத்தியாயம் 12 : இலங்கை ஒரு தேர்தல் நாடு 181

12.1 அரசியல்வாதிகள் தொழிற்சாலை 182
12.2 இலங்கை அரசியலின் கின்னஸ் சாதனை 184
12.3 சிறுபான்மை மக்களும் 10 பொதுத் தேர்தல்களும் 187
12.4 வெஸ்ட் மினிஸ்டர் முறையும் விகிதாசார முறையும் 190
12.5 புதிய அணுகு முறை 193

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்தியாயம் 13 : அரசியலில் பெண்கள் 199

13.1 தேர்தலும் பெண்களும் 199
13.2 மலையகப் பெண்கள். 201

அத்தியாயம் 14 : மக்கள் தொடர்பு சாதனங்கள் 204

14.1 தமிழ் மக்களும் மாகாண சபைத் தேர்தலும் 204
14.2 சிறு பான்மை மக்கள் தேர்தலை ஒன்றிணைந்து சந்திக்க வேண்டும் 210
14.3 வாக்குரிமையுடன் வீடு, காணி உரிமைகளும் வழங்கப் பட வேண்டும் 217

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அட்டவணை


| | | பக்கம் |
|---|---|---|
| 1.1. | பெருந்தோட்டங்களின் சனத்தொகை | 07 |
| 1.2. | புகையிரதத் திணைக்களத்தில் தோட்டத் தொழிலாளர் | 08 |
| 1.3. | பொது வேலைத் திணைக்களத்தில் தோட்டத் தொழிலாளர் | 10 |
| 1.4. | இலங்கையின் பிரதபன இடங்கள் (1901-1981) | 10 |
| 3.1. | சட்டசபை அங்கத்தினர் | 29 |
| 3 2. | திருத்தப்பட்ட சட்டசபை அங்கத்தினர் | 21 |
| 3.3. | அங்கத்தவர், வாக்காளர் சொத்துரிமை | 30 |
| 3.4. | சட்டசபையில் இடம் பெற்றவர் எண்ணிக்கை (1102-1931) | 32 |
| 5.1. | பிரதேசவாரி தேர்தல் பிரதுநிதித்துவம் 1931, 1936 | 42 |
| 6.1. | உள்ளூராட்சித் தேர்தல்-மலையக அங்கத்தவர் (1991) | 51 |
| 7.1. | மலையக பாராளுமன்ற அங்கத்தவர்கள் | 67 |
| 7.2. | முதலாவது பாராளுமன்ற தேர்தல்-1947 | 70 |
| 7.3. | இரண்டாவது பாராளுமன்றத் தேர்தல்-1952 | 73 |
| 7.4. | மூன்றாவது பாராளுமன்றத் தேர்தல்-1956 | 76 |
| 7.5. | நாலாவது பாராளுமன்றத் தேர்தல், மார்ச் 1960 | 78 |
| 7.6. | ஐந்தாவது பாராளுமன்றத் தேர்தல்-ஜூலை 1960 | 80 |
| 7.7. | ஆறாவது பாராளுமன்றத் தேர்தல்-1965 | 82 |
| 7.8. | ஏழாவது பாராளுமன்றத் தேர்தல்-1970 | 84 |
| 7.9. | எட்டாவது பாராளுமன்றத் தேர்தல்-1977 | 92 |
| 7.10. | ஒன்பதாவது பாராளுமன்றத் தேர்தல்-1989 | 98 |
| 7.11. | பாராளுமன்ற தேர்தல் முடிவுகள்-1989-கட்சிகளின் நிலை | 100 |
| 7.12 | பொதுத்தேர்தல்-1989-மலையக மாவட்டங்கள் | 103 |
| 7.13 | பத்தாவது பாராளுமன்றத் தேர்தல்-1994 | 114 |
| 8.1 | ஜனாதிபதித் தேர்தல் முடிவுகள்-1982 | 120 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8 2 ஜனாதிபதித் தேர்தல் - 1988 122

8. ஜனாதிபதி மூவரும் பெற்ற வாக்குகள் 125

8 4 மலையக வாக்குகள் - 1982 - 1994 129

8 5 ஜனாதிபதித் தேர்தல் முடிவுகள் - 1994 131

9.1. தோட்டப்பகுதி மாவட்டங்கள் -1982 142

11.1 மாகாணங்களுக்கு ஒதுக்கப்பட்ட ஆசனங்கள் 154

10.2. மாகாண சபைத் தேர்தல்-1988 155

11.3 மாகாண சபைத் தேர்தலில் மலையக மக்களின் பிரதிநிதித்துவம்-1911 159

11.4. மாகாண சபை அங்கத்தவர்கள்-நுவரேலியா 159

10 5. மாகாண சபை அங்கத்தவர்கள்-பதுளை 160

10.6. மாகாண சபை அங்கத்தவர்கள்-கண்டி 160

10 7. மாகாண சபைத்தேர்தலில் மலையக அங்கத்தவர்-1913 161

10.1. மாகாண சபை அங்கத்தவர்கள்-இரத்தினபுரி 161

11.1. தேர்தல் தொகுதிகள் 1131-1 10 163

12 1 அங்கத்தவர் தொகை 183

12.2. அண்மை நாடுகளின் அங்கத்தவர் 184

12. , பத்து பொது தேர்தல்கள் -சிறுபான்மையினரின் நிலை 187

12.4. இருமுறைகள்-ஒரு ஒப்பீடு 190

12 5 வெஸ்ட் மினிஸ்டர் விகிதாசார முறை ஆசனங்கள் 192

இறுதியுரை 222

பார்வைக் குறிப்புகள் 226

பின்னிணைப்புகள்

இணைப்பு—1 235

இணைப்பு — 2 242

இணைப்பு— 3 245

துணை நூல் பட்டியல்

தமிழ் நூல்கள் 247

ஆங்கில நூல்கள் 248

திருத்தங்கள் 255


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

''கண்டனத்திற்குரிய அரசியல் ஆட்சிமுறைகள் சிலவிடங்களில் இருந்து கொண்டுதான் வருகின்றன; இவை குடிமை உரிமைக்கு அல்லது மறைச் சுதந்திரத்திற்கு தடை போடுகின்றன; அரசியல் ஆதாயம் சார்ந்த கட்டுக்கடங்காப் பேராசைக்கும் இழிச் செயல்களுக்கும் பலரை பலியாக்குகின்றன; அதிகாரத்தை பொது நலனுக்கெனப் பயன் படுத்தாமல் ஒரு சில குறிப்பிட்ட பிரிவினருடைய அல்லது ஆட்சியாளருடைய வசதிக்கெனவே தரித்து விடுகின்றன''.

(இரண்டாம் வத்திக்கான் சங்கம் / ''இன்றைய உலகில் திருச் சபை'' எண் 73)

''ஒரு நாட்டு மக்கள்தான் ஒரு நாட்டின் முக்கிய சொத்து'' அத்தகைய முக்கியத்துவத்தை பெறுகின்ற மக்கள், தாம் வாழுகின்றநாட்டுடன் பின்னிப்பிணைந்துஉணர்வு பூர்வமாக ஐக்கியப்பட ஆதாரமாக விளங்குவது அரசியல். அரசியலற்ற சமுதாயம் இல்லை என்ற நிலை ஏற்பட்டுள்ள இந்த காலகட்டத்தில், இன்று நமது நாட்டில் நிலவுகின்ற அரசியலானது எமக்குள் இத்தகைய உணர்வு பூர்வமான ஐக்கியத்தை ஏற்படுத்தியுள்ளதா என்பது கேள்விக்குறி. மாறாக அது ஜனநாயகப் போர்வையின் கீழ் பெருப்பான்மை இனத்தின் ஆதிக்கத்தை வளர்க்கின்ற, விளம்பரப் பிரியர்களும் சுயநலமிகளும் மலிந்த ஒரு வியாபார ஸ்தலமாக செயற்படுகிறதென்றே கூறலாம்.

இன்று எல்லோரும் எதற்கும் அரசியலைப்பற்றியே பேசுகிறார்கள். அந்த அளவிற்கு அரசியல் மனித வாழ்வுடன் இரண்டறக் கலந்துள்ளது. இந்த அரசியல் வாழ்வில் மலையக மக்கள் முழுமையாக பங்கு பெறாதிருப்பதற்கு முக்கிய காரணம் இவர்கள் தங்களை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு தேசிய இனம் என்று ஏற்று அதற்காக தங்களை தயார் படுத்தாமல் இருந்ததே காரணம்.

''தமிழன் என்றோர் இனமுண்டு, தனியே அவர்க்கொரு குணமுண்டு'' என நாமக்கல் கவிஞர் பாடியுள்ளார். எந்த தமிழனும் தன் உரிமையை கேட்பது பாவமில்லை. (ராஜாஜி). உரிமைகளை கேட்பதற்கு பயப்படுவோர், பின்வாங்குவோர், கோழைகள், தங்களைக் காத்துக்கொள்ள முடியாத மனித இனம். முடிவில் பூண்டற்றுப் போய்விடுவார்கள் என்பது பரிணாம உண்மை. இந்தக் கோட்பாட்டை மலையகத் தமிழர் நன்கு உணர்ந்து தாங்கள் ஒரு தேசிய இனம் என்ற கொள்கையை உறுதிப்படுத்தினால்தான் அவர்களும் இந்த நாட்டின் அரசியலில் இரண்டறக் கலக்க முடியும்.

அரசியல் அரங்கில் தேர்தல் முக்கியமான பங்கை பெறுகின்றது ''மக்களாட்சியில் பிரிக்க முடியாத அம்சம் தேர்தல். ஆனால் தேர்தல் மனிதர்களின் உள்ளிருக்கும் கெட்ட மனப்பான்மையை வெளிக்கொணருகிறது. முரட்டு மனிதர்களின் விளையாட்டுக்களம்தானா மக்களாட்சி?'', (ஜவஹர்லால் நேரு).

இன்று நமது நாடு எத்தனையோ தேர்தல்களை சந்திக்கின்றது ஏழைகள் அதிகம் வாழுகின்ற வளர்ந்துவரும் மூன்றாம் மண்டல நாடு தம் இலங்கை என்பதை பொய்யாக்கும் வண்ணம் ஏராளமான பணம் இத்தேர்தல்கள் மூலமாக விரயமாக்கப் படுகின்றது. நமது நாட்டில் தேர்தல், இரகசிய வாக்களிப்பு, ஜனநாயகம் இவையெல்லாம் வன்முறைகள், அட்டகாச ஆரவாரங்கள், ஆகியவற்றிற்கு கடந்த 17 வருடங்களாக பலியாகியுள்ளதை நாம் காண முடிகின்றது. இன்று தேர்தல் முடிவுகள் அரசியல் வாதிகளின் நிதி நிலைமையையும், அவர்களின் ஆடம்பர ஆர்ப்பாட்டங்களையும் தான் நிர்ணயிக்கின்றன.

''தெரிந்த பூமியை பார்க்க மறந்தும், தெரியாத கடவுளைத் தேடி அலைந்தும், பசித்தவன் காதில் வேதாந்தம் ஓதியும் காலத்தை கடத்துபவர்கள் இன்றைய அரசியல்வாதிகள்'' (கவிஞர்வைரமுத்து). இப்படியான நிலையை உருவாக்குவது அந்த நாட்டில் வாழும் மக்களின் அரசியல் அறிவீனம். மலையக மக்களின் அரசியல் சரித்திரத்தை பொறுத்த வரையில் 1931-1948ம் ஆண்டு வரையும் அவர்கள் அரசியலில் முழுமையாக ஈடுபட்டதுமல்லாமல் தொழிலாளர் வர்க்கம் என்ற ரீதியில் ஒன்றிணைந்து இடதுசாரிக் கட்சிகளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதரித்தது ஒரு ஆரோக்கியமான செயலாகும். ஆனால் இலங்கை சுதந்திரம் அடைந்தபின்பு இடதுசாரிக்கட்சிகளின் மத்தியிலும் இனவாதம் படிப்படியாக வேரூன்றத் தொடங்கியதால் மலையகத் தொழிலாளர்கள் வாக்குரிமையை, புதுமையான வாக்குரிமைச் சட்டங்களின் மூலம் பறித்ததனால் இவர்களது துணிச்சல் ஆர்வம் கொஞ்சம் கொஞ்சமாக மங்கிப்போய்விட்டது. இதற்குப்பின் இவர்களை முதலாளித்துவ சிந்தனை கொண்ட தலைவர்கள் வழி நடத்த முன்வந்தார்கள். இதனால் இவர்கள் மத்தியில் இருந்த இன உணர்வும், வர்க்க உணர்வும் படிப்படியாக மறைந்து, ஈற்றில் நாடற்றவர்கள் நிலைக்கு கொண்டுவரப்பட்டார்கள். இதன் காரணமாக இவர்கள் அரசியல் அநாதைகளாக விடப்பட்டனர். அன்று மறைந்துபோன அந்த அரசியல் உணர்வு திரும்பவும், இன்று ஒரு சிலர் மத்தியில் தலைதூக்கத் தொடங்கியுள்ளது என்பதை கடந்தகால தேர்தல்கள் மூலமாக நாம் அறியமுடிகிறது. எந்தவொரு நாட்டின் அரசியலையும் ஆய்வு செய்யும் பொழுது அந்த நாட்டில் உள்ள முழு அரசியல் கண்ணோட்டத்திலேயே ஆய்வு செய்ய வேண்டும். அப்போது தான் அதிலுள்ள குறை நிறைகளை முழுமையாக ஆய்வு செய்ய முடியும். அந்த கண்ணோட்டத்தில்தான் இந்நூலின் மலையகத் தமிழ் அரசியல் வாழ்வு, நாட்டில் வாழும் மற்றைய இனங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கப்பட்டுள்ளது. மேலும் விசேஷமாக இந்நாட்டிலுள்ள ஏனைய சிறுபான்மை மக்களுடைய நிலைமையோடும் ஒப்பிட்டுப் பார்க்கப்பட்டுள்ளது. இதன் காரணமாகவே இந்நூல், மலையக மக்கள் பிரதிநிதிகளின் அரசியல் பிரவேச கால கட்டத்திலிருந்து (1920 ம் ஆண்டு) இன்றுவரை அவர்களது வாழ்வை ஆய்வு செய்துள்ளது. மலையக மக்கள் பங்கு பற்றிய எல்லா தேர்தல்களும் இதில் இடம் பெறுகிறது. எமதுநாடு தேர்தல் நாடாக இருந்தும் கூட நம்மக்கள் தங்களது சனத் தொகைக்கேற்ப பிரதிநிதிகளை தெரிவுசெய்யக்கூடிய தேர்தல்முறை உருவாக்கப்படவில்லை. இது ஒரு கவலைக்குரிய விஷயமாகும்.

மலையக மக்கள் ஒவ்வொரு முறையும் வீறு கொண்டு எழமாட்டார்கள். இது உண்மை. ஆனால் ஒரு போதுமே எழமாட்டார்கள் என்று நம்புவது மடமை. இதற்கேற்ப, இன்று மலையகத்தில் புதிய பல இளம் தலைவர்கள் தோன்றும் சாத்தியக் கூறுகள் காணக் கூடியதாக இருப்பது, இம்மக்களின் வருங்கால சந்ததியானது முழுமையாக அரசியலில் பங்கு பெறக்கூடிய ஒரு சூழ்நிலையை தோற்றுவிக்கும் என்பதன் அறிகுறியே என்று நம்பலாம். ஆனால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த மக்கள் மத்தியில் உண்மையான தொழிலாளர் கல்வியும்' குறிப்பாக பெண்கள் மத்தியில் அரசியற்கல்வியும் பரவாவிடில் இவர்களது அரசியல் வாழ்வில் துரித முன்னேற்றம் காணமுடியாது.

இன்றைய சமுதாய மாற்றங்களுக்கேற்ப அரசியல் அமைப்புகள் மாறாவிடில், இது ஒரு புரட்சிக்கு இட்டுச்செல்லும் என்பது பல அரசியல் வல்லுனர்களின் கருத்தாகும். இன்று எமது நாட்டுக்கு தேவையானது ஐக்கிய அமெரிக்கா நாட்டின் ஜனாதிபதி பில் கிளின்டன் தனது பதவியேற்பு ஆரம்ப உரையில்(21.1.1993) கூறிய வார்த்தைகளே: ''எது தவறாக உள்ளதோ, அதைத் திருத்துவதே, அமெரிக்காவிற்கு ஏற்புடையதாகும்''. இவ்வார்த்தைகளை நமது நாட்டிற்கு பொருந்தும் வகையில் கூறுவதாக இருந்தால், ''எதுதவறாக உள்ளதோ அதைதிருத்துவதே, இலங்கைக்கு ஏற்புடையதாகும்''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலாம் அத்தியாயம்

# மலையகத் தமிழர் தேசிய இனம்

தேசியம் என்ற வார்த்தை முதன்முதலாக மேற்கத்திய நாடுகளிலேயே உருவாக்கப்பட்டது. இது படிப்படியாக ஏனைய நாடுகளுக்கும் பரவியது. ஆனால் இதன் அர்த்தம் நாட்டிற்கு நாடு வித்தியாசமாக காணப்படுகின்றது. இலங்கை பல இன மக்கள் வாழுகின்ற ஒரு நாடு. இலங்கையின் பூர்வீக குடிகள் நாகர், இயக்கர், வேடர் எனப்படுவோர் ஆவர். இன்று இலங்கையில் வாழும் சிங்களவர், தமிழர், முஸ்லிம்கள், அண்மைக்கால இந்திய வம்சாவழியினர் ஆகிய அனைவரும் இந்தியாவிலிருந்தே இங்கு வந்து குடியேறியவர்கள். இலங்கையில் முதன் முதலாக தேசியம் என்ற கொள்கை 1833ம் ஆண்டுக்கு பிறகு ஆங்கிலேயரால் ஒரு நாடாக்கப்பட்ட பின்பு உருவானதாகும். முதலில் 1910ம் ஆண்டளவில் நாட்டின் சுதந்திரத்திற்காக நாட்டுப் பற்று என்ற கோட்பாட்டின் கீழ் இலங்கையில் வாழ்ந்த பல இன மக்களும் ஒரு தேசிய இனமாகவே கணிக்கப்பட்டனர். ஆனால் இதே காலகட்டத்தில் அதுவரை காணப்படாத சிங்கள பௌத்தர் என்ற கொள்கை ஒரு சிலரால் உருவாக்கப்பட்டதனால் இவர்களே இம்மண்ணின் மைந்தர்கள் என்ற உணர்வை வேரூன்றச் செய்தார்கள். இந்தக் கொள்கையை சுதந்திரமடைந்த பின்பு அரசியல் ரீதியில் 80 வீதத்திற்கு மேற்பட்ட ஆசனங்களைப் பெற்றதனால் சட்டங்களை அமைத்து இந்த கொள்கையை உறுதிப்படுத்திக் கொண்டார்கள். [1] இலங்கை தமிழரும் சிங்கள மக்களுடன் சேர்ந்து இலங்கையின் சுதந்திரத்திற்காக பாடுபட்டுள்ளனர். ஆனால் இவர்களது பௌத்த சிங்களவர் என்ற கொள்கையினால் இலங்கை தமிழரும் தாமும் ஒரு தனி தேசிய இனம் என்ற கொள்கையை அமுல் படுத்தினார்கள். முஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லீம்களும் தமது தனித்துவத்தை ஸ்திரப்படுத்தினார்கள். ஆனால் தனிச்சிங்கள கொள்கையை பரப்பியவர்கள் மலையக தமிழர்களை அன்னியர் என்றும் நாட்டில் இருக்க உரிமை அற்றவர்கள் என்றும் பிரச்சாரம் செய்து இவர்களைப் படிப்படியாக நாடு கடத்துவதற் காக 1931ம்ஆண்டிலிருந்து பலதிட்டங்களை செயற்படுத்தினுர்கள். ஆனால் மலையக மக்களும் முழு உரிமையோடு இலங்கை சுதந்திரம் அடையும் வரை வாழ்ந்து வந்துள்ளார்கள் என்பதை அவர்களது பெயர்கள் 1931ம் ஆண்டிலிருந்து தேர்தல் இடாப்பில் பதியப்பட் டிருப்பதும் தமது பிரதிநிதிகளை தெரிவு செய்து அரச சபைக்கு அனுப்பியுள்ளதும் சான்று பகர்கின்றன. இவர்கள் இலங்கையில் நெடுங்காலமாக வாழ்ந்தவர்கள் என்பதை இவ்வத்தியாயம் விளங் கப்படுத்துகிறது.

## 1.1. மலையகத் தமிழரின் வருகை

கண்டித் தமிழர் என அழைக்கப்படும் இவர்கள் 1828ம் ஆண்டு தொடக்கம் 1944ம் ஆண்டுவரையும் அரசாங்கத்தினால் இலங்கைக்கு வரவழைக்கப்பட்டு குடியேற்றப்பட்டவர்களே. அன்னிய காலணித்துவ ஆட்சி ஆரம்பமாவதற்கு முன்பாகவே இவர் கள் இலங்கைக்கு வந்துள்ளனர். வியாபாரநிமித்தமாக இவர்கள் இலங்கைக்கு அடிக்கடி விஜயம் செய்துள்ளனர். ஒல்லாந்தர் ஆட்சிக் காலத்திலேயே பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட இந்திய தமிழர்கள் வாசனைத்திரவிய தோட்டங்களில் பணிபுரிய வந்துள்ளனர் என்பதற்கு சரித்திர ஆதாரமுண்டு. ஆயினும் ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில்தான் பெருந்தோட்டங்களின் அதிகரிப்புக்கு ஏற்ப தொழிலாளர்களின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளது என்பதை கீழ்காணும் அட்டவணைவிளக்குகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அட்டவணை 1.1 பெருந்தோட்டங்களின் சனத்தொகை[2]

| வருடம் | தோட்டங்களின் எண்ணிக்கை | தோட்டங்களில் உள்ள சகல இனமக்கள் | ஆண்கள் | பெண்கள் | தோட்டங்களில் வேலைக்கமர்த்தப் பட்ட இந்திய மக்கள் | தோ.இ. மக்கள் விகிதம் |
|---|---|---|---|---|---|---|
| 1871 | 995 | 123,643 | 81,362 | 42,292 | 109,444 | 88.5 |
| 1901 | 1,857 | 441,601 | 246,922 | 194,679 | 436,622 | 98 |
| 1911 | 1,833 | 513,467 | 278,558 | 234,909 | 440,285 | 85 |
| 1921 | 2,367 | 568,850 | 300,867 | 267,983 | 493,944 | 86 |
| 1931 | 3,288 | 768,934 | 416,387 | 373,547 | 692,540 | 87 |
| 1946 | | 851,359 | | | 665,853 | 78 |
| 1953 | | 1,008,653 | | | 809,084 | 79 |
| 1963 | | 1,146,297 | | | 943,793 | 82 |
| 1971 | | 1,161,611 | | | 951,785 | 82 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 1.2. தோட்டத்திற்கு புறம்பாக மலையகத்தமிழர்.

மலையகப் பிரதேசங்களில் தோட்டங்களை உருவாக்கியதுடன், இலங்கையின் புகையிரதப் பாதைகளை அமைப்பதிலும் பெரும் பங்காற்றியவர்கள் இவர்கள்தான். இலங்கை அரசாங்கத்தின் பொதுவேலைத் திணைக்களத்திலும் வேலை செய்ய இந்தியத்தொழிலாளர்கள் பயன் படுத்தப்பட்டுள்ளார்கள் என்பதை கீழ்காணும் அட்டவணை உறுதிப்படுத்துகின்றது.

**அட்டவணை 1.2 புகையிரதத் திணைக்களத்தில் தோட்டத் தொழிலாளர்[3]**

| 1901 | 1902 | 1903 | 1904 | 1905 | 1906 | 1907 |
|---|---|---|---|---|---|---|
| — | — | 2,804 | — | 1,941 | 4,274 | 1,873 |

**அட்டவணை 1.3 பொது வேலைத்திணைக்களத்தில் தோட்டத்தொழிலாளர்[4]**

| மாகாணம் | 1901 | 1902 | 1903 | 1904 | 1905 | 1906 | 1907 |
|---|---|---|---|---|---|---|---|
| மத்திய மாகாணம் | 4,648 | 12,470 | 6,750 | 7,398 | 12,368 | 20,175 | 21,651 |
| ஊவா மாகாணம் | 45 | 362 | 941 | 533 | 1,479 | 2,664 | 2,463 |
| சப்ரகமுவ மாகாணம் | 86 | 86 | 156 | 3,640 | 86 | 1,528 | 3,126 |
| மேல் மாகாணம் | — | 75 | — | — | — | 21 | — |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 1.3 ஆரம்ப வாழ்க்கை கண்டி இராச்சியத்தில்

ஆரம்பத்திலிருந்தே இம்மக்களின் பெரும்பான்மையினர் கண்டி இராச்சியத்தின் மலைப்பிரதேசத்திலிருந்த காடுகளிலேயே குடியேற்றப்பட்டனர். இலங்கையின் கண்டிய சிங்களவர் 3000ம் அடிக்கு கீழேயே குடியிருந்தனர்.[5] அக்காலத்தில் கண்டிஇராச்சியம் தற்போதைய மத்திய ஊவா, சப்ரகமுவ மாகாணங்களின் பெரும் பகுதியை உள்ளடக்கியதாக இருந்தது. இப்பிரதேசங்களில் பெருந் தோட்ட பயிர் செய்கைகளும் ஆரம்பிக்கப்பட்டன என்பதையும் நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். கண்டிய மேட்டு நிலங்கள் மத்திய, சப்ரகமுவ ஊவா மாகாணங்களின் பெரும் பகுதிளை உள்ளடக்கியதாக இருந்தன. மத்திய மேட்டு நிலங்கள் தென்மேற்கு ஈரவலையத்தைச் சேர்ந்ததாகவும் 100 தொடக்கம் 200 அங்குல சராசரி வருட மழைவீழ்ச்சியை கொண்டதாகவும் இருந்தன. இந்த மேட்டு நிலங்களின் தென்மேற்கு எல்லையானது தீவின் வரட்சி வலையத்தை சேர்ந்ததாகவும் சராசரி மழைவீழ்ச்சியானது 50 தொடக்கம் 75 அங்குல மழை வீழ்ச்சியை கொண்டதாகவும் இருந்தது. உள்ளே இருந்த மலைத் தொடர்கள் 5000 தொடக்கம் 6000 அடிவரை உயரம் உள்ளதாகவும் காடுகள் நிறைந்ததாகவும் இருந்தன. கண்டிய இராச்சியத்தின் முக்கிய சிறப்பியல்பாக விளங்கியது அதனுடைய நெருக்கமில்லாத சனத் தொகையாகும். இதற்கும் காரணங்கள் பல உண்டு. போர்த்துக்கேயருக்கும் கண்டியருக்குமிடையில் நடந்த போர், அதைத் தொடர்ந்து ஒல்லாந்தருக்கும் கண்டியருக்குமிடையில் நடந்த போர். மரணத்தை உண்டுபண்ணக் கூடிய தொற்று நோய் பரவியமை, பல கணவர்களை மணந்து கொள்ளும் முறை, குறைந்த மட்டத்திலான கல்வியும் பொருளாதார உற்பத்தியும் இவர்கள் சனத்தொகை குறைந்ததற்கு காரணமாகஅமைந்தன. பிரித்தானிய குடிசன மதிப்பீட்டு அறிக்கையின்படி 1824ல் கண்டிய இராச்சியத்தில் 256, 835 மக்களே வாழ்ந்தனர். கண்டிய இராயச்சியத்தின் தலைநகராகிய கண்டியில் 1818ல் 3000 பேரே இருந்தனர்.[6]

## 1.4 இலங்கையின் சனத்தொகை

மலையகத் தமிழரை சமீபகால இந்தியவம்சாவழித் தமிழர் என்று அரசியல் சட்டத்தில் இடம்பெற்றாலும் 1946ம் ஆண்டு வரையும் இலங்கைத் தமிழராகத்தான் கணிக்கப்பட்டார்கள் என்பதை கீழே உள்ள அட்டவணைதெளிவாக சுட்டிக்காட்டுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் 1900ம் ஆண்டு இவர்கள் கண்டியத் தமிழர் என்று அழைக்கப்பட்டதற்கு சரித்திர வரலாறு இருக்கின்றது. அதுமட்டுமன்று 1953ம் ஆண்டுவரை பெரும்பான்மை இனத்தவருக்கு அடுத்தபடியாக சிறு பான்மைஇனத்தவருள் முதலிடத்தை வகித்துவந்தவர்கள் என்பதற்கும் கீழே உள்ள அட்டவணை சான்று பகரும் ஆனால் 1881ம் ஆண்டளவில் சிறுபான்மை இனத்தவருள் மூன்றாவது இடத்திற்கு இவர்கள் தள்ளப்பட்டார்கள் என்பதையும் அட்டவணை தெளிவாக எடுத்துக்காட்டுகிறது.

## அட்டவணை 1.4 இலங்கையின் பிரதான இனங்கள்[7] (1901-1981)

| வருடம் | சிங்களவர் | இலங்கைத் தமிழர் | இந்திய வம்சாவழி தமிழர் | முஸ்லிம்கள் |
|---|---|---|---|---|
| 1901 | 65.4 % | 26.7 % | — | 6.4% |
| 1946 | 69.2 % | 11.01 % | 11.7 % | 5.6% |
| 1953 | 69.3 % | 10.9 % | 12.0 % | 5.7% |
| 1963 | 71.2 % | 11 1 % | 10.6 % | 6.3% |
| 1971 | 71.2 % | 11.1 % | 9.4 % | 6 5% |
| 1981 | 73.98 % | 12.6 % | 5.56 % | 7.12% |

அட்டவணை 1.4ல் காட்டப்பட்டுள்ள இலங்கைத்தமிழர் என்ற தலைப்பின் கீழ் உள்ள விகிதாசாரத்திற்கான சில குறிப்புகள் 1.4.(1) 1948ம் ஆண்டு கொண்டுவரப்பட்ட பிரஜாவுரிமைச் சட்டத்தின் பயனாக இலங்கையில் வாழ்ந்த பெரும்பான்மை இந்திய வம்சாவழியினர் தமது குடியுரிமையும், வாக்குரிமையும் இழந்தனர். இன்றுவரை பலபிரஜாவுரிமை சட்டங்கள் நிறைவேற்றப்பட்டாலும் பலர் அடிமை நிலையிலேயே வாழ்கின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

— முதலாவது சிறுபான்மையினர் 1953ம் ஆண்டு கணக்கெடுப்பின் படி இந்திய வம்சா வழித்தமிழர், சிங்கள மக்களுக்கு அடுத்த பெரும்பான்மை இனமாக வாழ்ந்து வருகின்றனர்.

— ஆனால் 1981ம் ஆண்டு கணக்கெடுப்பின்படி இந்திய வம்சா வழித்தமிழர் மூன்றும் இடத்திற்கு தள்ளப்பட்டுள்ளனர். இதற்குரிய காரணங்கள் பின்வருமாறு:

— பலதிட்டமிடப்பட்ட ஆட்கடத்தல் ஒப்பந்தங்கள்.

— மலையக மக்களுக்கென விசேஷமாக அமுலாக்கப்பட்ட ஊக்கு விப்புபணத்துடன் கூடிய குடும்பகட்டுப்பாடு திட்டநடவடிக்கைகள்.

— பற்பல கால கட்டங்களில் நடைபெற்ற வன்செயல்களின் காரணமாக இடம் பெயர்ந்தமையும். சிதறடிக்கப்பட்டமையும்.

— சனத்தொகை புள்ளிவிபரம் எடுக்கப்பட்ட போது முறையாக எடுக்கப்படாமை. புள்ளி விபர அலுவலர்கள் சகலதோட்டங்களையும் தரிசிக்க வில்லை. தரிசித்த தோட்டங்களிலும் அந்த நேரத்தில் இருந்தவர்களை மட்டுமே பதிவு செய்தமை.

— தோட்டங்களிலிருந்து பிற இடங்களுக்கு குடி பெயர்ந்தவர்கள் (நகரங்கள், கிராமங்கள்) இலங்கை தமிழரென்று கருதப்பட்டமை.

— குடிசன மதிப்பீட்டு முறைகள் ஒரு மதிப்பீடே தவிர அது முழுமையானதாக இருக்க முடியாமை.

— சிறுபான்மையினரை மேலும் சிறுபான்மையினராக்கும் கொள்கைகளும் கருத்தில் கொள்ளப்படவேண்டியது.

## 1.5 மலையகத்தமிழர்

இவர்களை நான்கு பிரிவுகளாக பிரிக்கலாம்[8]

— வர்த்தகப் பிரிவினர்
— உயர்நுட்பத் தொழிலாளர்
— தோட்டத் தொழிலாளர்
— தோட்டம் சேரா தொழிலாளர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர்களிற் பெரும்பாலானோர் (70%க்கும் அதிகமானோர்) தேயிலை, இரப்பர், தென்னைத் தோட்டங்களில் பணிபுரிபவர்களாகவே இருக்கின்றனர். இத்தோட்டத் தொழிலாளர்கள் தான் ஏறக்குறைய 3000 அடிக்கு மேலுள்ள மலைப்பிரதேசங்களில் முதன் முதலாக குடியேறியவர்கள் என்பதை நாம் விசேடமாக கவனிக்க வேண்டும். கொடிய மிருகங்கள் வாழும் காடுகளை அழித்து கழனிகளாக்கியது மட்டுமல்ல, இலங்கையின் புகையிரதப் பாதைகளை அமைப்பதிலும் பெரும் பங்காற்றியவர்களும் இவர்கள் தான்.பெண் தொழிலாளர்களை அதிகமாகக் கொண்டுள்ளதுடன், இலங்கைத் தொழிலாளர் வர்க்கத்தின் பெரும்பான்மையானவர்களாக இருப்பதும் இவர்கள்தான். அண்மைக்காலம் வரை அன்னிய செலாவணியின் 70% இலங்கைக்கு தேடிக் கொடுத்தவர்களும் இவர்கள்தான். இன்றும் கூடுதலான அளவு அன்னிய செலாவணியை கொடுப்பவர்களும் இவர்கள்தான்.

## 1.6 மலையகத் தமிழர் தனித் தேசிய இனம்

கடந்த 175 வருடங்களாக இருந்த மக்கள் பல்வேறு பெயர்களில் அழைக்கப்பட்டு வந்துள்ளனர், 1900 ம் வருடம் வரை இவர்கள் கண்டியத்தமிழர் என்று அழைக்கப்பட்டனர். 1901 ம் ஆண்டிற்கும் 1946ம் ஆண்டிற்கும் இடைப்பட்ட காலகட்டத்தில் இலங்கைத் தமிழர்களென்று இலங்கை சனத்தொகை கணக்கின்படி அழைக்கப்பட்டனர். இலங்கை அரசின் யாப்பின்படி 1946ம் ஆண்டிற்குப்பின் அண்மைக் கால இந்தியவம்சாவழியினர் என்று அழைக்கப்படுகின்றனர்.

ஆனால் நடைமுறையில் மலையகத் தமிழ் மக்கள் பெரும்பான்மை இனத்தவரின் அரசியல்வாதிகளாலும், பல்வேறு பெயர்களால், குறிப்பாக நாட்டின் முதுகெலும்பாக திகழ்ந்த இந்த மக்களை, அவர்களின் மாண்பை குறைத்து கணிக்கும் விதமாக இழிவான பெயர்களைச்சூட்டி அழைக்கின்றனர். உதாரணமாக, 175 வருடங்களாக இலங்கையில் வாழும் இவர்களை இந்தியத் தமிழர் எனவும், அவர்கள் மனம் புண்படும்படியாக அவர்கள் சமூக அந்தஸ்த்தை தாழ்த்தி கூலியர் என்றும், முறையற்ற விதமாக நாட்டில் புகுந்தவர்களென்று இழிவுபடுத்த கள்ளத் தோணியென்றும், அவர்கள் பண்பாட்டை ஏளனம் செய்யும் வண்ணம் தோட்டக் காட்டான் எனவும் அழைக்கப்படுகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதற்குமுன் நாட்டினை ஆட்சி செய்து கொண்டிருந்த கட்சி யின் ஒரு பிரபலமான அரசியல் வாதி, இலங்கை நாட்டின் பொருளாதாரத்தின் ஜீவநாடி போல் விளங்கிய இவர்களை நாயுண்ணி என குறிப்பிட்டார். அதாவது ஒரு நாயில் உள்ள உண்ணிக்கு ஒப்பிட்டார். அவரை விட ஒரு படிமேல் சென்று அதே கட்சியைச் சேர்ந்தவரும், நாட்டின் ஜனாதிபதியாக விளங்கிய வருமான டீ.பீ. விஜயதுங்க எல்லா சிறுபான்மை மக்களுமே செடி கொடி, (ஒட்டுண்ணி) என்றும் கூறி இனவாதத்தை வளர்த்ததை இங்கே நினைவு கூர்வது முக்கியமாகும்.

இம்மக்கள் கடந்த 175 வருடங்களாக ஒரு குறிப்பிட்ட பிரதே சத்தில் செறிந்து வாழ்கின்றனர். தமக்கென ஒருமொழி, பொருளா தார வாழ்வு, தனித்துவமான கலாச்சார பாரம்பரிய பிரதேசம் இவற்றை கொண்டுவாழ்கின்றனர். எனவே மலையக மக்கள் ஒரு குறிப்பிட்ட பிரதேசத்தில் செறிவாக வாழும் தனியான வரலாற்றுப் பின்னணியை கொண்ட ஒரு தேசிய இனமாகும். இம்மக்கள் கடந்த 175 வருடங்களாக உழைக்கும் பாட்டாளி வர்க்கமாகவே இருந்து வருகின்றனர். இவர்களை தனித்தேசிய இனமாக ஏற்றுக் கொள்வதால் பிரச்சனைகள் உருவாகும் என சிலர் எண்ணக்கூடும். 1958ம் ஆண்டு சமீபகால இந்திய வம்சாவழியினர் ஒரு தேசிய இன மாக ஏற்றுக் கொள்ளப்பட்டனர். மேலும் வேற்றுமைகள் பிளவுக் கல்ல வளர்ச்சிக்கே வழிவகுக்கும் என்பதை நாம் மறக்கக் கூடாது, தனித்துவமான வேற்றுமைகள் இல்லாவிட்டால் வலுவான ஒற்றுமை இருக்கமுடியாது. ஒவ்வொரு வரிடமும் உள்ள தனித்துவ மான வேற்றுமைகளை நாம் மதிக்கப் பழகவேண்டும். இதன் மூலம் தான் நிலையானதும், உயர்ந்ததுமான ஒற்றுமையை கண்டடைய முடியும். எனவே பல்லாண்டு காலம் நமது நாட்டில் வாழ்ந்துவரும் மலையக மக்களை ஒரு தேசிய இனமாக ஏற்றுக் கொள்ளவேண்டும். இந்த கருத்து மலையகத்தோடு சம்பந்தப்பட்ட பல புத்தி ஜீவிக ளுடைய கருத்தாகும். இதையொட்டிய பல சிந்தனைகள் பத்திரிகை களிலும் வெளியாகியுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

இலங்கையின் பாரம்பரிய தமிழ்மக்களிடமிருந்து மாறுபட்ட கலை கலாச்சாரத்தை கொண்டுள்ள மலைநாட்டு தமிழர்கள் பிரஜாவுரிமைச்சட்டம் நிறைவேறும் வரை இந்நாட்டுப் பிரஜைகளாக சகல உரிமைகளுடனும் வாழ்ந்து வந்தனர் என்பதை நாம் மறந்து விடக்கூடாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகவே மலையகத் தமிழ் மக்களும், மலையகத் தமிழரின் நலனில் ஆர்வமுள்ளவர்களும் பின்வரும் கருத்துக்களில் தீவிர கவனம் செலுத்தி செயற்படுவது மலையக மக்களின் வருங் காலத்தை வளம்படுத்துவதாக அமையும் என நம்பப்படுகிறது.

— ஏறக்குறைய 7 தலை முறைகளைக் கண்டு 175 வருடங்களுக்கு மேலாக இந்நாட்டில் வாழ்ந்துவருகின்ற மலையகத் தமிழரை இந்தியர் என்ற அடைமொழியில் அழைப்பதை தவிர்க்கவேண்டும்.
— இவர்களின் கலை, கலாச்சாரம், மொழி, மரபு, வாழும் பிரதேசம் யாவும் பாதுகாக்கப்பட வேண்டிய அதே வேளையில் இவர்களை ஒரு தனி இனமாக அங்கீகரிக்க வேண்டும்.

— இவர்கள் ஒரு தனி அரசியல் சக்தியாக உருவாக வேண்டும். ஏனைய பிரஜைகளைப்போல் இவர்களும் இந்நாட்டில் சரி சமனாக நடத்தப்பட வழி அமைக்க வேண்டும்.

— இவர்களை இலங்கை-மலையகதமிழர் என்றோ வேறு பொருத்தமான பெயரிலோ அழைக்கவேண்டும். (இது பற்றிய அபிப்பிராயங்கள், ஆலோசனைகள் வரவேற்கப்படும்)

## முடிவுரை

மலையக மக்கள் தனித் தேசிய இனம் என்று ஏற்றுக் கொள்வதை எவரும் மறுக்க முடியாது. ஆனால் இன்னமும் பெருந் தோட்டத்துறை அமைப்பின் கீழேயே இவர்களின் நாளாந்த நடவடிக்கைகள் நடை பெறுகின்றன. இவர் இன்னமும் தேசிய ரீதியாக சரிசமனாக கணக்கெடுக்கப்பட வில்லை. இப்போதும் இவர்களிற் சிலர் நாடற்றவர் என்ற ரீதியில் கணிக்கப்படுவதும் கவலைக்குரிய விடயமாகும்.

1935ம் ஆண்டு தொடக்கம், குறிப்பாக 1948ம் ஆண்டிற்கு பிறகு தமிழ் மக்கள் வாழ்ந்த பிரதேசங்களில் அரசாங்கம் பெரும் பான்மை இனத்தை சேர்ந்தவர்களை குடியேற்றி அவர்களுடைய மொழி, இனம், மதம், கலாச்சாரம் யாவும் பாதிக்கப்படாமல் விசேஷ பாதுகாப்புக் கொடுத்து வந்ததோடு அவர்களுக்காக புதிய தேர்தல் தொகுதிகள், உபஅரசாங்கப்பிரிவுகள், கிராம சேவகர்கள், பாடசாலைகள் போன்றவற்றை அரசாங்கமே கொடுத்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்துள்ளது. ஆனால் மலையகத் தமிழருக்கென்று இன்னமும் உப அரசாங்கப்பிரிவுகளோ, கிராம சேவகர்களோ, அவர்களது மொழி, இனம், மதம், கலை கலாச்சாரம் போன்றவற்றை பேணிக்காத்து வளர்க்க எவ்விதத்திலும் முன் வராதது இந்த மக்களை இன்னும் ஒரு தனி இனமாக நடைமுறையில் ஏற்றுக்கொள்ளவில்லையென்றே கூற வேண்டும்.

கண்டி கண்டி ஏங்காதீங்க
கண்டி பேச்சு பேசாதீங்க
கண்டி படும் சீரழிவே
கண்ட பேரு சொல்லுவாங்க.

அட்டே கடியும்
அரிய வழி நடையும்
கட்டே எடறுவதும்
காணலாம் கண்டியிலே *

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரண்டாம் அத்தியாயம்

## அரசியலும் ஜனநாயகமும்

தற்கால அரசியல் தந்தையென வர்ணிக்கப்படும் மக்கியாவலி (1469—1527) முதன் முதலாக அரசியலை நன்கு ஆராய்ந்து ஒரு புதிய விளக்கத்தை கொடுத்துள்ளார். அதாவது கடந்த காலங்களில் இருந்த முறையைவிட ஒழுக்கம் சமயம் என்பவற்றின் துணை இல்லாமல் அரச அறிவியலை தனது சொந்தக் காலிலே இருக்கும்படி செய்தார். அரசியல் அதிகாரம் ஒரு இலக்கை அடைவதற்கான கருவியாக அல்லது வழியாகவே கொள்ளப்பட்டது. மனிதனுடைய நன்மைக்காக ஏற்படுத்தப்பட்ட அதிகார நிருவாக ஸ்தாபனமே அரசாங்கமாகும்.[1]

இன்று எமது நாட்டில் அரசியல் மயமான இறைமை என்ற கொள்கையின் கீழ் சமஷ்டி அரசையும், அதிகாரம் பரவலாக்களையும் தவறாகவே கருதுவதால் ஒற்றையாட்சியையே வலுப்படுத்துகிறார்கள். இந்த கொள்கையை நடைமுறைப் படுத்துவதற்கு உலகில் அரசியல் கொள்கைகளிடையே முக்கியத்துவம் பெற்றுத் திகழும் மக்களாட்சி முறையை எமதுநாடு கடைப்பிடிக்கின்றது. மக்களாட்சி முறையை கடைப்பிடிப்பவர்கள் ஒரே விதமாக செயற்படுவதில்லை.

ஜனநாயகம் என்பது மக்களாட்சியாகும். இது ''டிமொக்ரசி'' என்ற கிரேக்க வார்த்தையிலிந்தே பெறப்பட்டது.[2] ''டிமோஸ்'' என்பது கி.மு. 5ம் நூற்றாண்டிலே ''இக்னேசியர்'' என்னும் சந்தை கூடுமிடத்தில் குழுமிய ஏதென்ஸ் நகர் மக்களை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறித்தது. ''டிமொக்கிராசியர்'' (மக்களின் ஆட்சி அதிகாரம்) என்ற சொல் உருவாக்கப்பட்டதோடு, அதற்கு காரணமாயிருந்த வர்கள் கிரேக்க நாட்டின் ஒரு நகரை சேர்ந்த மக்களாவர். அந்த நகரத்தவர் நெருக்கமாக வாழ்ந்த ஒரு சிறு சமூகத்தவர். உடனுக் குடன் செயற்படுத்தக்கூடிய கருமங்களைப்பற்றி அவர்கள் கூட்டாக தீர்மானம் செய்து வந்தனர்.

எந்த ஜனநாயகமும் மக்கள் இறைமை, சமத்துவம் சுயாட்சி என்ற அடிப்படையிலேயே அமைய வேண்டும். இதனால் தான் ஆபிரகாம் லிங்கன் ''மக்களால், மக்களுக்காக நடத்தப்படும் மக்களின் அரசாங்காமே, மக்களாட்சி'' என வருணிக்கிறார்.

## 2.1 அரசியற் கொள்கை

இன்றைய கால கட்டத்தில் ஒரு நாட்டின் கட்டுப்பாடான வாழ்கைக்கு அரசியல்முறை இன்றியமையாத ஒன்றாகும். ஒவ்வொரு அரசியல் அமைப்பு முறையும் ஒரு அரசியற்கொள் கையை ஆதாரமாக கொண்டிருக்கின்றது. அரசியற்கொள்கை என்பது அரசியல் சிந்தனையாளர்களின் கருத்திற்கு கொடுக்கப்படும் வடிவமாகும். இதுவே அரசியல் முறையின் குறிக்கோளாகவும், கலங்கரை விளக்காகவும் திகழ்கிறது. அதுமட்டுமன்று, ஒரு நாட்டின் அரசியல் முறையை பாதுகாக்கவோ, மாற்றவோ, அத்தகைய மாற்றங்களை நியாயப்படுத்தவோ, அரசியல் கொள்கை அவசியமாகிறது. மேலும் அரசியலின் செயற் திட்டங்களையும், அவைகளின் விளைவையும் அளக்கும் அளவுகோலாகவும் அரசியல் கொள்கை பயன்படுகிறது.

தற்கால அரசியற்கொள்கை பலதரப்பட்டவையாகும் லிபரலிசம், மக்களாட்சி, சோஷலிசம், ஜனநாயக சோஷலிசம், சின்டிகலிசம், கில்டுசோஷலிசம், மார்க்ஷிசம், லெனினிசம், மாவோ யிசம், திருத்தல்வாதம், பன்முகக்கொள்கை, பாசிசம், நாசிசம் போன் றவை, அவற்றுள் சிலவாகும். ஒரு அரசியல் கொள்கை ஒரு அரசியல் முறையுடன் எவ்வாறு தொடர்பு கொண்டுள்ளது என்ற அடிப் படையில் அரசியற்கொள்கைகளை வகைப்படுத்தலாம். வலது சாரி, இடதுசாரி, முற்போக்கு, பிற்போக்கு, பழமைவாதம், புதுமைவாதம் என பல கொள்கைகள் உண்டு. இத்தகையகொள்கை கள் மீதுதான் கட்சி அமைப்புகள் உருவாகின்றன. ஆகையால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசியல் குழுக்களுக்கு அல்லது கட்சிகளுக்கு தத்தமது அரசியல் கொள்கை தெளிவாகத் தெரிந்திருப்பது முக்கியமானதாகும்.

ஆட்சிபீடம் ஏறும் அரசியற்கட்சி எத்தகையசெயல்முறைகளை நடைமுறைப்படுத்தும் என்பதை அக்கட்சியின் கொள்கை தான் தெளிவாக்குகின்றது. சுருங்கக் கூறின் அரசியற் கொள்கை என்பது ஒரு அரசியல் முறையை நியாயப்படுத்துவதற்காக வகுக்கப்படும் கருத்துக்களின் தொகுப்பு எனக் கூறலாம். அரசியற் கொள்கையானது சிலநடைமுறை உண்மைகளுக்கேற்ப மாற்றமடைய வேண்டியது இன்றியமையாதது என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

## 2.2. மக்களாட்சி

முதலாம் உலகப்போரின் முடிவில் மக்களாட்சிக் கொள்கை உலகெங்கும் விரைவாகப்பரவியது, வரலாற்றில் ஒரு முக்கியமான கட்டமாக அமைந்தது. ஆனால் முதலாம் உலகப்போருக்கும் இரண்டாம் உலகப் போருக்கும் இடைப்பட்ட காலத்தில் மக்களாட்சிக்கு எதிரான கருத்துக்கள் வலுப்பெற்றன. வலிமையுடையோன் செய்வதே சரியெனக் கருதிய முசலோனி, ஹிட்லர் போன்றவர்கள் துப்பாக்கி ஓசைகளை பூபாளமாக ரசித்தனர். மரண ஓலங்களை மங்கள ஓசைகளாக கருதினர்.[3] முசலோனியும் ஹிட்லரும் மறைந்ததும் மக்களாட்சி என்னும் புறாவை வட்டமிட்ட வல்லூறுகள் மறைந்தன என மகிழ்ந்தனர் மக்கள். இரண்டாம் உலகப்போர் முடிவில் பொதுவுடமைக் கொள்கை வலுவடைந்தது. முதலாளித்துவத்தோடு பொதுவுடமை மோதியதால் ''பணிப்போர்'' என்னும் புதியதோர் போர்முறை உருவாகியது. முதாளித்துவ நாடுகள், ''மக்களாட்சியை பாதுகாக்க வேண்டுமாயின் பொதுவுடமைச் சக்திகளை தடுக்க வேண்டும்'' எனக் கூறின. ஆனால் ''மக்களாட்சி என்னும் போர்வையின் கீழ் முதலாளித்துவ நாடுகள் மக்களை ஏமாற்றுகின்றன'' எனப்பொதுவுடமை வாதிகள் கோஷமிட்டனர். இரண்டாம் உலகப் போரின் முடிவில் பல ஆசிய, ஆபிரிக்க நாடுகள் சுதந்திரம் பெற்று மக்களாட்சியை பின்பற்றின. இவற்றில் குறிப்பிடக்கூடியது, இந்தியா சுதந்திர மடைந்ததும் உலகின் மிகப் பெரிய மக்களாட்சி நாடாக மாறியதுமாகும். இலங்கையும், சுதந்திரமடைந்ததும் இந்த அடிச்சுவட்டைப் பின்பற்றியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 2 2.1 மறைமுக மக்களாட்சி முறை

மக்களாட்சி என்று கூறிக்கொண்டாலும், இன்று எமது நாடு உட்பட இம்மக்களாட்சி முறையில் அடி எடுத்து வைத்த மற்ற நாடுகளிலும் செயற்படுத்தப்படுவது மறைமுக மக்களாட்சிமுறையே யாகும். மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளே அரசாங்க செயல்முறைகள் அனைத்திலும் பங்கு பெறும் வண்ணம் அமைந்துள்ள முறை மறைமுக மக்களாட்சி முறை அல்லது பிரதிநிதித்துவ மக்களாட்சி முறை எனப்படும். தேர்தலில் வாக்களிப்பது தவிர மற்றைய காரியங்களில் மக்கள் நேரடியாகப் பங்குபெறும் வாய்ப்புகள் கிடைப்பதில்லை. மறைமுக மக்களாட்சியில் அரசியல் காரியங்களில் மக்கள் மிகக்குறைவான பங்கினைப் பெறுகின்றன. அரசாங்கத்தின் செயல் முறைகளைப் பற்றி பெரும்பாலான மக்கள் அறிந்திருப்பதில்லை. ஆட்சிப் பொறுப்பில் இருப்போரும் கட்சித் தலைவர்களும் அதிகமான செல்வாக்கைப் பெறுகின்றனர். இம்முறை மூலம் நாயக வழிபாடு வளர்வதற்கு இடமுண்டு என்பதை கடந்தகால அரசியல் வரலாறு நிரூபித்திருக்கின்றது.

### 2 2 2. மக்களாட்சியின் நிறை குறைகள்

இம்முறை உயர்ந்த தேசிய குண நலனை வளர்க்கிறது. மக்களாட்சியின் சிறப்பைப்பற்றி ஜே.பி.மில் என்பவர் பின்வருமாறு கூறுகிறார். ''பெரும்பான்மையினரின் விருப்பத்திற்கு சிறுபான்மையினரும், சிறுபான்மையினரின் நலனுக்காக பெரும்பான்மையினரும் விட்டுக்கொடுக்க வேண்டிய அவசியத்தை உருவாக்குகின்றது.[4] ''ஒவ்வொரு தனிமனிதனும் தனது ஆளுமையை வளர்த்துக் கொள்ள முடிவதுடன் மக்களைப் பாதிக்கின்ற அரசியல் முடிவுகளை எதிர்க்கும் வாய்ப்புகளைக் கொடுக்கின்றது. மக்களிடம் கல்வி, சுய உதவி, பொறுப்பு ஆகியவற்றை வளர்க்கிறது. அதிகாரத்தை துர்ப்பிரயோகம் செய்யவும், அதிகார மமதையில் தவறு செய்யவும் வாய்புகள் கிடைப்பது அதிகரிக்கின்றது என்ற நிலை இதன் குறையுள்ள அம்சமாக எடுத்துக்கொள்ளலாம். அத்துடன் ஆட்சிப் பொறுப்பை ஏற்கும் சந்தர்ப்பம் அனைவருக்கும் இருப்பதால், தகுதியற்றவர்களால் ஆளப்படும் அபாயமும் உண்டு. இம்முறை தரத்தைப்பார்க்கிலும் எண்ணிக்கைக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கிறது. அதே வேளையில் கட்சியின் முக்கியத்துவமும் அதிக வலியுறுத்தலைப் பெறுவதால் கட்சியின்றி அரசு அமைக்க முடியாது. ஆகவே கட்சியின் நலனுக்காக [illegible]ளின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நலன் புறக்கணிக்கப்படுவதும், அரசாங்கத்தை கட்சியின் நலனுக்காக பயன்படுத்துவதும் சர்வசாதாரணமாக நடைபெறும் நிகழ்ச்சிகளாகும். வாக்காளர்களை மட்டுமல்ல, சட்டமன்ற உறுப்பினர்களையும் விலைக்கு வாங்கும் வாய்ப்புண்டு. ஆட்சித்துறை நிர்வாகத்தில் அரசியல் வாதிகளின் தலையீடு தோன்றுவதால், அரசின் செயற்பாடுகள் தடை பட வாய்ப்பு ஏற்படுகிறது. மக்களாட்சி செலவு மிக்க முறையாகும். தேர்தலில் செலவிடப்படும் பணத்தை எப்படியாவது சேர்த்துவிட வேண்டும் என்ற எண்ணம் அரசியல் வாதிகளுக்கு ஏற்படுவதால், அவர்கள் பல குறுக்கு வழிகளில் பணம் திரட்ட முயல்கின்றனர். அரசியல் கட்சிகளின் ஊடாகவே சகல பிரச்சினைகளுக்கும் தீர்வுகாண மக்கள் விழைகிறபடியால், அவர்களது சுய சிந்தனை, ஆளுமை, தலைமைத்துவம் ஆகியன பாதிப்படைகின்றன. இதன்காரணமாக மனிதனுடைய இயல்பான சுதந்திர நிலைக்கு கேடு விளைகிறது.

## 2.3. இலங்கையின் ஜனநாயகம்

"ஒரு நாட்டில் எத்தனை தடவைகள் தேர்தல் நடைபெறுகின்றது என்பது அந்நாட்டின் ஜனநாயகத் தன்மைக்கு ஒரு எடுத்துக்காட்டு" என்று மறைந்த ஜனாதிபதி ஆர். பிரேமதாச அவர்கள் டாக்காவில் நடந்த சார்க் மகா நாட்டில் பேசுகையில் கூறினார். மேலும், "இலங்கை ஒரு வாழும் ஜனநாயகத்தை கொண்டுள்ள நாடு. அது சுதந்திரம் பெற்றதன்பின் இன்று வரை பல தேர்தல்களை கண்டுள்ளது" என்றும் கூறினார். இப்படி கூறிய அவரையே, அவர் பெருமையாக சிலாகித்த ஜனநாயக அமைப்பினால் காப்பாற்ற முடியாமல் போய் விட்டது. இந்த வாழும் ஜனநாயகத்தை, பொது மக்களின் வாக்களிக்கும் சந்தர்ப்பத்தை இலங்கையின் ஆளும் கட்சி நடைமுறைப்படுத்தாது விட்டுவிடுமோ என்று எதிர்க்கட்சியினர் பல முறை குரல் கொடுத்துள்ளனர். பல முறைகள் தேர்தல்கள் பின் போடப்பட்டமையும், தேர்தலை ரத்து செய்வதற்காக சர்வசன வாக்கெடுப்பு நடத்தப்பட்டதையும் இதற்கு உதாரணமாக கூறலாம்.[5]

இலங்கை ஜனநாயக சோஷலிச குடியரசின் அரசியல் யாப்பே பொதுமக்களுக்கு இந்த வாக்களிக்கும் உரிமையை வழங்குகிறது. இந்த அரசியல் யாப்பு வழங்கும் ஜனநாயகம்தான் என்ன? இலங்கையின் அரசியல் அமைப்புகட்கு பிரதிநிதிகளை தெரிவு செய்வதற்கான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உரிமை இலங்கைப் பிரசைகளில் பதினெட்டு வயதிற்கு மேற்பட்டோருக்கு உண்டு என்பதுதான் இதன் அடிப்படை. இத்தகைய அமைப்புகளுக்கான தெரிவு அரசியல் அமைப்புச் சட்டத்தால் வழங்கப்பட்டுள்ள கால எல்லைக்கு மேற்படாதவாறு நடத்தப்படுவதும், பிரதிநிதிகளைத் தெரிவதற்கு யாருடைய நிர்ப்பந்தமும் இல்லாது வாக்காளர்கள் சுதந்திரமாக இயங்கி, பிரதிநிதிகளைத் தெரிவு செய்ய வேண்டும் என்பதும் இந்த ஜனநாயகத்தின் பிற முக்கிய அம்சங்களாகும்.

இவ்வாறு சுதந்திரமாகத் தெரிவு செய்யப்படும் பிரதிநிதிகள், "மக்களுக்காக நடத்தும் மக்களாட்சி" மூலம் ஜனநாயகம் செழித்தோங்கும், மக்கள் தங்களைத் தாங்களே ஆளும் குடியாட்சி நிலவும், மக்களே மன்னர்கள், என்று பலவிதமாக சிறப்பித்து கூறப்படும் கூற்றுக்கள் மூலமாக இந்த ஜனநாயகம் தொடர்ந்து வாழவழி செய்கின்றனர்.

## 2 3.1 ஜனநாயக பிரதிபலிப்புகள்

இன்று நமது நாட்டில் நிலவும் உண்மை நிலை என்ன? நடைமுறையில் இருக்கும் ஜனநாயக முறை ஒரு போலித்தனமானது, வஞ்சகம் நிறைந்தது என பல காரணங்களால் வெளிப்படையாக தெரியவருகின்றது. அக்காரணங்களாவன:

—மக்களுக்கான பிரிதிநிதிகள் தொகுதிவாரியாகதெரிவு செய்யப் படுகிறார்கள். ஒரு தொகுதியில் பல்வேறு வர்க்கங்களைச் சேர்ந்த மக்கள் இருக்கிறார்கள். இந்த மக்கள் தங்கள் பிரிதிநிதிகளைத் தெரிவு செய்யும் வாய்ப்பு இல்லாது போகின்றது. இந்த உண்மை கவனத்தில் எடுபடுவதில்லை. பெரும்பான்மையான மக்களை அல்லது பெரும்பான்மையான மக்களை விலைக்கு வாங்கவோ அல்லது ஏமாற்றவோ முடிந்த பகுதியினரின் பிரிதிநிதிகள் தெரிவு செய்யப்படும் வாய்ப்பு இதில் உண்டு.

—பிரிதிநிதிகள் தெரிவு செய்யப்படுவதற்கு முன் நடாத்தப்படும் பிரசார முறைகள் பற்றியது மற்றக் காரணமாகும். நவீன சமூக தொடர்பு சாதனங்கள் பெரும்பாலும் ஆளும் கட்சியினராலும் பணம் படைத்தோராலுமே பாவிக்கப்படுகின்றன. நவீன பிரச்சார உத்திகளும் இவர்களாலேயே உபயோகிக்கப்படுகின்றன. இதனால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்களின்பெறுமதிமிக்க வாக்கு விலைபேசப்படும் சந்தைப்பொருளாகிறது. ஆகவே பொருளாதார ரீதியில் வசதிப்படைத்தோரால் மட்டுமே இவை பாவிக்கப்படும் சாத்தியங்கள் ஏற்படுகின்றன. இதன் காரணமாக மக்களின் சுதந்திரமாக, நிதானமாக சிந்தித்து தீர்மானிக்கும் உரிமை திட்டமிட்டு பறிக்கப்படுகிறது.

—மக்கள் இந்த ஜனநாயக முறைப்பற்றியும் அதன்முக்கியத்துவம் பற்றியும் முழுமையாக உணர்ந்துகொள்ளும் பயிற்சி கொடுக்கப்படவில்லை. மாறாக பொய்யான வாக்குறுதிகளாலும், வஞ்சகத்தனமான ஏமாற்று பேச்சுக்களாலும் மக்கள் தவறான பாதைகளில் வழிநடத்தப்படுகிறார்கள். உணர்ச்சிவசமான சிந்தனைகள் (இன,மத,மொழி சம்பத்தமான) விதைக்கப்படுவதால் மககள் நிலைதடுமாறி விடுகிறார்கள்.

—பிரதிநிதிகளை தெரிவு செய்யும் மக்களுக்கு அவர்களுடைய பதவிக்காலத்தில் அவர்களைக் கட்டுப்படுத்தும் எந்த நடைமுறை வாய்ப்புகளும கிட்டுவதில்லை. இப்பிரதிநிதிகள் தங்களைத் தெரிவு செய்த மக்களின் நலன்களுக்கு முரணாகவோ அல்லது எதிராகவோ செயல்படவும் முடியும, தீர்மானங்களை எடுக்கவும் முடியும். ஆனால் மக்களால் இவர்களைக் கண்டிக்கவோ பதவி இறக்கம் செய்யவோ முடியாது. இப்பிரதிநிதிகள் யாருக்கும் விலைபோகும் வாய்ப்புகளும் உண்டு. இத்தகைய நிலைமைகளினால்தான் இன்று எமது நாட்டில் துப்பாக்கி கலாச்சாரம் தலைதூக்கியுள்ளது.

—இவையனைத்திற்கும் மேலாக ஆளும் கட்சியின் அபரிதமான அதிகார குவிப்புக் காரணமாக தேர்தலில் தங்களுக்குச் சார்பான மோசடிகளை செய்யக்கூடிய வாய்ப்புகள் உண்டு. 1993ம் ஆண்டு நடை பெற்ற மட்டக்களப்பு உள்ளூராட்சி சபைத் தேர்தல் குறித்த தேர்தல் ஆணையாளரின் பகிரங்க அறிக்கை இதற்கு, உதாரணமாகும் இத்தகைய சூழ்நிலைகள் ஜனநயாக ரீதியலான, சுதந்திரமான தேர்தல்களின் உண்மையான தாற்ப்பரியங்களை இல்லாமற் செய்து விடுகின்றன.

— பிரதிநிதிகள் மக்களுக்கு அளித்த வாக்குறுதிகள், மக்கள் முன் வைத்த கொள்கைகள் தவிர்த்த பிற விடயங்கள் தொடர்பாகவும் முடிவுகள் எடுக்கும் அதிகாரம் உள்ளவர்களாகமாறுகிறார்கள்.உண்மையில் மக்கள் முன் வைத்த கொள்கைகளை விட பிறவற்றிற்கே முக்கியத்துவம் கொடுத்து அவற்றையே எமது பிரிதிநிதிகளின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜனநாயக அரசு நிறைவேற்றியும் வருகின்றது. இதுவே நமது நாட்டின் கடந்த கால அனுபவமாகும். உதாரணத்திற்கு சுதந்திரத்திற்குப்பின் மலையக மக்களின் அரசியல் வலிமையை குறைத்தது,[6] 1978ல் கொண்டுவரப்பட்ட அரசியல் யாப்பு 1982ல் நடத்தப்பட்ட சர்வசனவாக்கெடுப்பு, 'மக்கள் மயமாக்கல்' என அழகாக அழைக்கப்படும் தனியார் மயமாக்கல் நடவடிக்கைகளை குறிப்பிடலாம்.

ஆளும் கட்சி தலைமைப் பீடத்தினால் பல திட்டங்கள் மக்கள் மீது திணிக்கப்படுகின்றன. சில சந்தர்ப்பங்களில் பொருட்களின் விலை ஏற்றங்கள் முதலாய் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளால் தீர்மானிக்கப்படுவதில்லை.

மக்களாட்சி என்பது வெறும் பேச்சளவிலேயே இருக்கின்றது. உதாரணமாக தமிழ் மொழி, உத்தியோக பூர்வ மொழியாக பிரகடனப்படுத்தப்பட்டபின்பும் அது நடை முறைப்படுத்தப்படுவதை கண்காணிக்க ஒரு குழு நியமிக்கப்பட்டபின்னும், 1993ல் நடைபெற்ற மாகாணசபைத் தேர்தலில் வாக்காளர் இடாப்புகள் தமிழ் மொழியில் தயாரிக்கப்பட்டிருக்கவில்லைஎன்பது குறிப்பிடத்தக்கது.

இம்முறையில் மிகவும் குறைந்த எண்ணிக்கையான மக்கள் வாக்களித்தால், வாக்களிக்கப்பட்ட வாக்குகளில் கூடுதல் வாக்குகளைப் பெறும் ஒருவர் பிரிதிநிதியாக தெரிவு செய்யப் படலாம். உதாரணமாக ஒரு பிரதேசத்தில் 50,000 வாக்காளர் இருந்தும் 2000 பேரே வாக்களிக்கிறார்கள் எனக் கொள்வோம்: இந்த 2000 வாக்குகளில் பெரும்பான்மையை பெற்றவர் பிரிதிநிதியாகத் தெரிவு செய்யப்படுகிறார்.

இதனால்தான் சில நூறு வாக்குகளைப் பெற்றவர்களும் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் என்றதகுதியை பெறுகிறார்கள். இந்த ஜனநாயகமுறை இலங்கை நாட்டில் மட்டுமல்ல, ஏனைய மூன்றாம் மண்டல நாடுகளிலும், தெற்காசிய நாடுகளிலும், இன்று நடைமுறையிலுள்ளது. இன்று ஜன நாயகத்தின் மகிமை வளர்வதற்கு பதிலாகஅதிலுள்ள குறைபாடுகளே,முன்னணியில் நிற்பதை காண்கிறோம்.

எமது நாட்டில் 1952ம் ஆண்டுக்குப் பின் நடைபெற்ற தேர்தல்கள் யாவும் மக்களை ஜனநாயக முறையில் சிந்திக்க விட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வில்லை. இதற்குப்பதிலாக மக்களின் சிந்தனை வேறு விடயங்களில் திசைதிருப்பப்பட்டு வந்துள்ளது. இந்த விடயங்களே, தீர்மானிக்கும் அம்சங்களாக மாறுகின்றன. ஆகவே எமது நாட்டின் ஜனநாயக முறையை மறுசீரமைப்பு செய்ய புத்தி ஜீவிகளும், நலன் விரும்பிகளும் முன்வரவேண்டும். எமது நாட்டின் அரசியலில் இன்று ஜனநாயகம் என்ற போர்வையின் கீழ் மதவாதமும், இனவாதமுமே மேலோங்கி நிற்கின்றன. ஒருசில பெரும்பான்மை அரசியல் வாதிகளும், பெரும்பான்மை மதத்தலைவர்களும், இந்நாட்டில் பல்வேறு இனமக்கள் வாழ்வதை மறந்து, தனியே சிங்கள பௌத்த மக்களே வாழ்கின்றனர் என்ற ரீதியில் நாட்டை நிர்வகிப்பதால் ஜனநாயகமே இன்று இங்கு ஒரு கேள்விக்குறியாக மாறிவிட்டது.

'பலரிடம் எல்லா அதிகாரத்தையும் ஒப்படை, அவர்கள் பலரை நசுக்குவதற்கு முயல்வர். சிலரிடமோ,பலரிடமோ எல்லா அதிகாரத்தையும் ஒப்படைக்காமல், அதனை மாறி, மாறி கூட்டாகவும் முன்னவரிடமும்,பின்னவரிடமும் பகிர்ந்தளிப்பதிலேதான் ஜனநாயகத்தின் இரகசியமே தங்கியுள்ளது''-கமில்டன்.[7]

# மூன்றாம் அத்தியாயம்

# இலங்கையின் அரசியல் வரலாறு

மேற்கு ஐரோப்பா நிலப்பண்ணை முறையிலிருந்து முதலாளித்துவ முறைக்கு மாறியதிலிருந்து ஐரோப்பிய சந்தை முறையானது இலங்கையில் மாற்றங்களையுடைய தாக்கத்தை ஏற்படுத்தியது.

இலங்கை முதலில் போர்துக்கேயராலும் (1505-1666) பின்ன ஒல்லாந்தராலும் (1666-1796) கடைசியாக பிரித்தானியராலும் (1796-1948) ஆளப்பட்டது.[1] இந்தியத்தமிழர்கள் போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், பிரித்தானியர் காலத்தில் மாத்திர மல்ல அதற்கு முன்பும் சர்வ சாதாரணமாக இலங்கைக்கும், இந்தியாவுக்கு மிடையில் பிரயாணம் செய்தும், இலங்கையில் தங்கி தங்கள் வாணிபத்தை நடத்தியுமுள்ளனர். இந்நிலை 1944ம் ஆண்டு வரை எவ்வித இடையூறுமின்றி நடந்து கொண்டிருந்ததற்கு வரலாற்றுச் சான்றுகள் ஏராளமாக இருக்கின்றன. அது மட்டு மின்றி இலங்கையில் முதல் குடியேறியவர்கள் இந்தியர்களே என்று புத்தமத நூலான மகாவம்சமே சான்று பகர்கின்றது. இங்கு குடியேறியவர்களில் முக்கியமானவர்கள் இந்திய தென்புலத்தில் இருந்து வந்த தமிழர்களே.

## 3.1 பிரித்தானியர் காலம்

1796ல் பிரித்தானியர் இலங்கையின் கரையோரப் பகுதிகளை கைப்பற்றினர். பிரிட்டிஷார் இலங்கையை கைப்பற்றுவதற்கு முதல் காரணமாயிருந்தது உலகில் அது வகிக்கும் கேந்திர இடமாகும். இலங்கை கிழக்கு மேற்கு வாணிபப் பாதையில் ஒரு முக்கிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடத்தை வகிப்பதையும், பிரித்தானிய இந்திய சாம்ராச்சியத்திற்கு ஒரு கடற்படைத்தளமாக அமைய சிறந்த இடமாக திருகோண மலை இருந்தமையுமே அவர்கள் இலங்கையை கைப்பற்ற காரணமா யிருந்தது. இங்கிருந்து மலயார், இந்தியாவின் கார்மெண்டல் கரை ஆகியவற்றை கட்டுப்படுத்த முடியும் என்பதால் 1782ல் திரு கோணமலையை கைப்பற்றினர். ஆனால் பிரான்சிய புரட்சிக் காலத்தில் ஐரோப்பாவில் ஏற்பட்ட மாற்றங்களே இலங்கையின் கரையோரங்களை, 1796ல் ஒல்லாந்தரை விரட்டியபின், பிரிட்டிஷ் சாம்ராச்சியத்துடன் இணைப்பதற்கு வழிவகுக்கும் காரணிகளாக அமைந்தன. இலங்கை முதலில் சென்னையில் இருந்த ஈஸ்ட் இந்திய கம்பெனியின் தலைமையிலேயே பரிபாலிக்கப்பட்டு வந்தது.[2] ஆனால் திறமையுள்ள அரசாங்கத்தை அமைக்கவும். நிரந்தரமாக இலங்கையை தம்வசம் வைத்திருக்கும் சாத்தியக் கூறுகளை அதி கரிக்கவும் 1802ல் இலங்கையை ஒரு பிரித்தானிய அரசு குடியேற்ற நாடாக மாற்றினார்கள். அதே வருடத்தில் இங்கிலாந்திற்கும் பிரான்சுக்குமிடையே ஏற்பட்ட சமாதான உடன்படிக்கையும் இலங்கையின் கரையோரங்களை பிரிட்டிஷார் கைப்பற்றியதை உறுதி செய்தது.

## 3.2 கண்டி இராச்சியம்

1802க்கும் 1815க்கும் இடையில் கண்டி இராச்சியத்தையும் இணைத்துக்கொள்ள பிரிட்டிஷார் முனைந்தனர். ஆயினும் தோல்வியடைந்தனர். கண்டி இராச்சியத்தின் கொரில்லா யுத்த முறையே அவர்கள் தோல்வியடையக் காரணமாயிருந்தது. எனினும், ஈற்றில் கண்டி இராச்சியம் தானாக விட்டுக் கொடுத்த காரணத்தினால் பிரிட்டிஷார் அதனை கைப்பற்றமுடிந்தது. இதற்கு பிரிட்டிஷாரின இராணுவ பலத்தைவிட அவர்களின் அரசியல் மதி நுட்பமே காரணம் எனக் கூறலாம். 1815ம் ஆண்டு மார்ச் மாதம் 2ம் திகதி பிரிட்டிஷாருக்கும் கண்டிய நிலப் பிரபுத்துவ பரிபாலன வர்க்கத்தினருக்குமிடையே கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்தத்தினால் கண்டிய இராச்சியம் பிரிட்டிஷாரின் குடியேற்றப் பகுதியாக மாறி யது.

1818ல் நடைபெற்ற புரட்சிக்குப்பின் பிரிட்டிஷார் இந்த ஒப் பந்தத்தையும் ஏனைய ஒப்பந்தங்கள்போல், பின்னர் கொண்டுவர இருக்கும் சட்டங்களால் திருத்தப்படக்கூடிய ஒன்றாக மாற்றினர். 1818ல் பிரிட்டிஷார் ஒரு புதிய சட்டத்தை கொண்டுவந்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதன்படி பிரிட்டிஷ் அலுவலர்கள் சிலர் அரசாங்க அதிபர்களாக நியமிக்கப்பட்டனர். 19ம் நூற்றாண்டின் மூன்றாவது தசாப்தமளவில் பெருந்தோட்டப் பொருளாதாரம் அறிமுகப்படுத்தப்பட்டது. இதன் காரணமாக நாட்டின் உள் பகுதிகளை கரையோரப் பகுதிகளுடன் இணைக்க பாதைகள் அமைக்கப்பட்டன. வெளிநாட்டுச் செல்வாக்கு அதிகரிக்க பெருந்தோட்டப் பயிர்ச் செய்கைக்காக கண்டிய மலைப் பிரதேசங்கள் திறக்கப்பட்டன. இந்நிலையில் எஞ்சி இருந்த கண்டிய இராச்சிய செல்வாக்கும் வலுவிழந்தது.

## 3.3 கோல்புறூக் கமிஷன்

வாணிப முதலாளித்துவம், தொழில்துறை முதலாளித்துவமாக மாற்றப்பட்டதாலும், 1833ல் கோல்புறூக் கமறோன் ஆணைக்குழு அறிமுகப்படுத்தப்பட்டதாலும், பின்வரும் சீர்திருத்தங்கள் கொண்டு வரப்பட்டன:-

— பரிபாலன இணைப்புக்காக இலங்கை கிழக்கு, மேற்கு, வடக்கு, தெற்கு, மத்திய மாகாணங்கள் என்று ஐந்து மாகாணங்களாக பிரிக்கப்பட்டது. ஒவ்வொரு மாகாணமும் ஒரு பிரித்தானிய அரசாங்க அதிபரின் பரிபாலனத்தில் இருந்தது.

— ஒருங்கிணைக்கப்பட்ட நீதித்துறை அறிமுகப்படுத்தப்பட்டது. நவீன மேற்கு நாடுகளின் சட்டங்கள் புராதன கிராம சட்டங்களுக்கு மேலாக புகுத்தப்பட்டன.

— அரசாங்க நிறைவேற்றுச்சபைகள், சட்டசபைகள் ஆகியவை அறிமுகப்படுத்தப்பட்டன. இவை ஆளுநருக்கு ஆலோசனைகள் வழங்கவும், அதன் மூலம் அவருடைய அதிகாரங்களைக் குறைக்கவுமே அமைக்கப்பட்டன.

சட்ட சபையின் உத்தியோகப் பற்றற்ற அங்கத்தவர்களின் வெற்றிடங்கள் இலங்கையிலுள்ள ஐரோப்பிய தோட்டத்துரைமார் சமூகத்தினரால் நிரப்பப்பட்டன. பின்னர் ஐரோப்பிய மோகம் கொண்ட உள்ளூர் மேல் வர்க்கத்தினர் சிறிது சிறிதாக சேர்க்கப்பட்டனர்.

தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதித்துவத்திற்கான கிளர்ச்சி 1833ல் ஸ்தாபிக்கப்பட்ட சபைகளோடு ஆரம்பமாகிறது. இந்தச்சபைகள் ஏறக்குறைய 80 ஆண்டுகள் நிலைத்திருந்தன. இந்த முறையில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆளுநரே ஒரு கூட்டுச் சட்ட அமைப்பாகச் செயலாற்றினார். இதில் 16 அங்கத்தினர் இருந்தனர். இவர்களில் பெரும்பான்மை யாக எண்ணிக்கை கொண்ட 10 பேர் வெளிநாட்டவராக இருந் தனர். இவர்கள் ஆளுநரோடு இணைந்து குடியேற்ற நாட்டின் அரச நிர்வாகத்தை நடத்தினர். உத்தியோகப் பற்றற்ற பிரதி நிதிகள் ஆளுநராலேயே நியமிக்கப்பட்டனர். இந்நியமனங்கள் இன அடிப்படையிலேயே இடம் பெற்றன. மூன்று ஐரோப்பியர் கள், ஒரு சிங்களவர், ஒரு தமிழர், ஒரு பறங்கியர் என்ற விகிதா சாரத்திலேயே இந்த நியமனம் இடம் பெற்றது.[3] ஆனால் அனேக முறைகளில் இந்த விகிதாசாரம் நடைமுறைப்படுத்தப்படவில்லை. பலதடவைகளில் சிங்களவர், தமிழர் அல்லது பறங்கியர் தவிர்க்கப் பட்டனர். 1837ல் ஆரம்பிக்கப்பட்ட வாணிபக்குழுவுடன் 1854ல் தொடங்கப்பட்ட தோட்டத்துரைமார் சங்கத்துடனும், ஆளுநர் கலந்தாலோசித்தே இந்த நியமனங்களும் வழங்கப்பட்டன. எப் பொழுதும் இந்த அங்கத்தினர்கள் நியமிக்கப்பட்டே வந்தனர். தெரிவு செய்யப்பட்ட அங்கத்தினர்கள் வேண்டுமென்ற கோரிக்கை முதலாவதாகவும் சக்தி வாய்ந்ததுமாக எழுதப்பட்டது டாக்டர் கிறிஸ்தோபர் எளியற் என்பவராலாகும்.[4] இவர் ஒரு டாக்டரும் எழுத்தாளருமாவார். எமது நாட்டில் அரசியல் சீர்திருத்தத்திற் காக கிளர்ச்சிசெய்யும் ஒரு சபையாக ''இலங்கையின் நண்பர்கள்'' என்ற இயக்கத்தை ஆரம்பித்தவரும் டாக்டர் எலியற்தான்.

## 3.4 இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பகாலம்

இருபதாம் நூற்றாண்டின் முதல் பத்து ஆண்டுகளில் பலதரப் பட்ட சட்டசீர்திருத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இந்த நடவடிக்கைகள் மூன்று முக்கியமான தலைப்புகளின் கீழ் வந்தன: இனரீதியானவை, மாகாண ரீதியானவை, திறந்த முறை என்பனவே. குடியேற்றவாத அலுவலர்கள் சிறிது சிறிதாக உள்ளூர்ப் பிரதிநித்துவத்தை மாகாண திறந்த முறைகளில் அதி கரித்தனர். இதே கால கட்டத்தில் நியமன முறைக்குப்பதிலாக தெரிந்தெடுக்கப்படும் முறைக்கான கிளர்ச்சி ஆரம்பமாகியது.

1920 ம் ஆண்டு ஆகஸ்ட் 13ம் திகதி சட்டசபைக்கான சட்ட மூலம் அறிமுகப்படுத்தப்பட்டது. இது சிறிதுகாலமே நடைமுறை யில் இருந்தது. இதன் மூலம் உத்தியோக பூர்வமற்ற 23 பேர் இச் சட்டசபையில் அங்கம் வகித்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அட்டவணை 3.1 சட்டசபை அங்கத்தினர்[5]

| | | அங்கத்தினர் தொகை | |
|---|---|---|---|
| உத்தியோக பூர்வமான | அலுவலர் சார்ந்தோர் | 4 | |
| | நியமிக்கப்பட்டோர் | 10 | 14 |
| உத். யோக பூர்வமற்ற | பிரதேசவாரியாக தெரிவு செய்யப்பட்டோர் | 11 | |
| | சமூகத்தால் தெரிவு செய்யப்பட்டோர் | 3 | |
| | இரண்டு கூட்டு சபைகள் | 2 | |
| | நியமிக்கப்பட்டோர் | 7 | 23 |

இந்த சட்ட மூலம் 1924ம் ஆண்டு பெப்ருவரி மாதம் 19ம் திகதி திருத்தப்பட்டது. இதன்படி அங்கத்துவம் பெற்றோர் விபரத்தை கீழ்வரும் அட்டவணையை பார்த்து தெரிந்து கொள்ளலாம்.

## அட்டவணை 3.2. திருத்தப்பட்ட சட்டசபை அங்கத்தினர்[6]

| | | அங்கத்தினர் தொகை | |
|---|---|---|---|
| உத்தியோக பூர்வமான | அலுவல் சார்ந்தோர் | 5 | |
| | நியமிக்கப்பட்டோர் | 7 | 12 |
| உத்தியோக பூர்வமற்ற | நியமிக்கப்பட்டோர் | 3 | |
| | சமூகத்தால் தெரிவு செய்யப்பட்டோர் | 11 | |
| | பிரதேசவாரியாக தெரிவு செய்யப்பட்டோர் | 23 | 37 |

சபையின் அங்கத்தவராக இருக்கக்கூடியவரின் தகமைகள் தெரிவு செய்வோரின் தகமைகளைவிட சற்று வித்தியாசமானதாக இருந்தது. உதாரணமாக ஒரு அங்கத்தவர் அரசாங்க உத்தியோ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கஸ்தராக இருக்ககூடாது, 25 வயதிற்கு மேற் பட்டவராகவும் ஆங்கிலம் கற்றவராகவும் இருக்க வேண்டும். ஆனால் வாக்களிக்கும் ஒருவர் அரசாங்க அலுவலராக இருக்கலாம், 21 வயதை உடையவராக இருக்கவேண்டும், ஆங்கிலம், சிங்களம் அல்லது தமிழ் கற்றிருக்க வேண்டும்.

சொத்துத்தகமை பின்வருபவற்றில் ஒன்றாக இருக்கலாம்:- நிலச் சொந்தம், வருமானத் தொழில், அங்கத்தவர், வாக்காளர் ஆகியோரின் வரையறுக்கப்பட்ட தொகை பின்வரும் அட்டவணையில் இருந்து தெரிந்து கொள்ளலாம்.

**அட்டவணை 3 3 அங்கத்தவர் வாக்காளர் சொத்துரிமை[7]**

| | அங்கத்தவர் | வாக்காளர் |
|---|---|---|
| நிலச்சொந்தம் | ரூபா 6000/- | ரூபா 1500 |
| வருடாந்த வருமானம் | ரூபா 1500/- | ரூபா 600 |
| தொழில் - பட்டணம் | ரூபா 500/- | ரூபா 400 |
| தொழில் - கிராமம் | ரூபா 400/- | ரூபா 200 |

## 3.5 சிறுபான்மையினரின் பங்களிப்பு

இந்த நூற்றாண்டின் முதல் இரண்டு பத்து வருடங்களும் சிங்கள தமிழ் தலைவர்கள் மத்தியில் ஒற்றுமை நிலவிய காலமாகும். அரசியல் அரங்கில் பேசப்பட்ட வார்த்தைகள் இலங்கை நாட்டில் சிங்களவர், தமிழர் என இரு இனங்கள் உண்டென்பதேயாகும். சிறுபான்மையினராக ஏனைய சிறு குழுக்களே கருதப்பட்டன. 1922ல் இந்நிலை அடிப்படையிலேயே மாற்றம் கண்டது.[8] அதாவது இரண்டு பெரும் பான்மை இனங்கள் உண்டென்று கருதப்பட்டது மாறி ஒரு பெரும் பான்மை இனமே தான் உண்டு, அது சிங்கள இனம் தான் என்ற நிலைப்பாடு வந்தது. தமிழர் சிறு பாண்மையினர் என்ற நிலைக்கு தள்ளப்பட்டனர். அது இன்று வரை நிலைத்துள்ளது.

பிரித்தானிய ஆட்சியின் கீழ் வாழும் எந்தவொரு பிரஜையும் தன் வாக்குரிமையை தான் வாழும் பகுதியில் பதித்துக் கொள்ள தகுதியுள்ளவராகிறார், இதை இடரீதியாக பெறும் வாக்குரிமை என்றும், இதை தவிர்த்து தனது இனத்தின் நன்மைக்காக பணி புரியும் பிரதிநிதியை தெரிவு செய்யும் இனரீதியான வாக்குரிமையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற தகுதியுள்ளவராகிறார். இந்த இன ரீதியான வாக்குரிமை பெறும் வாக்காளர் என்பது பிரிட்டிஷ், இந்தியாவில் அல்லது, அதன் எல்லைக்குள்ளடங்கிய பகுதியில் பிரிட்டிஷ் மன்னரின் அதிகாரம் பெற்று இயங்கும் ஆளுநர் அல்லது அவருக்கு சமனான ஒருவரின் கீழ் வாழும் ஒரு பிரஜையையே குறிக்கிறது.

இலங்கையிலுள்ள எல்லா தோட்ட தொழிலாளர்களையும் இலங்கை பிரஜைகளாகவே இந்திய அரசு கருதியது. ஆனால் இலங்கை அரசாங்கம் இதை ஏற்காததோடு இலங்கை சுதந்திரம் பெற்றபின் தனது எதிர்ப்பை இது விசயத்தில் இன்னமும் வலுப் படுத்தியது.

1921ம் ஆண்டு நடைபெற்ற மாநாட்டில் இந்திய அரசு, இலங்கையின் சட்டப்படி வாழும் இந்தியர்களை எவ்வித பார பட்சமுமின்றி நடத்தவேண்டுமென்று கொண்டுவந்த தீர்மானம் ஏற்றுக்கொள்ளப்பட்டது. அதே வருடம் இந்த முடிவை பரிசீலனை செய்தபின், இலங்கை ஒரு பிரிட்டிஷ் காலனி என்ற ரீதியில் இலங் கையில் வாழும் இந்தியர்களுக்கு பிரஜாவுரிமை வழங்கலாம் ஆனால் முதலில் அவர்கள் தங்கள் வாக்குரிமையை உபயோகிக்க கூடிய விதமாக தங்கள் சொத்துரிமையை நிரூபிக்க வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டது. இதன் காரணமாக பெருந்தொகை யான இந்தியர்கள் அரசியல் உரிமைகளை பெற தகுதியற்றவரா னார்கள்.

## 3.6. 1924ல் பதிவு செய்யப்பட்ட வாக்காளர்

| | |
|---|---|
| இடரீதியான வாக்காளர் | 172, 583 |
| இனரீதியான வாக்காளர் | 32, 498 |

1924ல் முழு இலங்கையிலும் குடியேறிய இந்தியரின் தொகை 786,000 ஆகவும் மலையகத் தோட்டங்களில் மாத்திரம் 6 0,000 ஆகவும் இருந்தது. இந்திய இனரீதியான வாக்காளர் தொகை 12,901 ஆக இருந்தது. இலங்கையில் குடியேறிய பெரும் தொகை யான தோட்டத் தொழிலாளர் வாக்குரிமை அளிப்பதற்கு தேவை யான சொத்துரிமை கொண்டிருக்கவில்லை. அதனால் பல தோட்டங்களில் கங்காணிமாரும் மற்ற சிறு உத்தியோகஸ்தரும் தங்கள் பெயர்களை பதிவு செய்திருந்தனர். நகர்ப்புறங்களில் ளசித்த ஏனைய வாக்காளர்கள் பெரும்பாலும் வியாபாரிகளே. இந்திய தேர்தல் தொகுதிகளில் வாழ்ந்துக் கொண்டிருந்த அனைவரும் தங்கள் பெயர்களை பதிவு செய்து கொண்டதுடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தங்கள்வாக்குரிமையும் உபயோகித்தனர். இச்சட்டத்திற்கமைய 4 சதவீதமான வாக்காளர்களே பதிவு செய்யப்பட்டிருந்தனர்.

1923ம் ஆண்டு டிசம்பர் 19ம் திகதி விடுக்கப்பட்ட கட்டளை படி மூன்று முஸ்லிம்களும், இரண்டு இந்தியத்தமிழரும் நியமிக்கப் பட வேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது. இவர்கள் தெரிவு செய்யப்படலாம் என ஆளுநர் தீர்மானிக்கும் வரை, இந்நிலை அமுலில் இருக்குமெனவும் தீர்மானிக்கப்பட்டது. 1924ல் கொண்டு வரப்பட்ட சீர்திருத்தங்களுக்கமைய இலங்கை சட்ட சபையில் தேர்ந்தெடுக்கப்பட்ட அங்கத்தினர் இடம் பெறலாம்.

## அட்டவணை 3.4-சட்டசபையில் இடம் பெற்றவர் எண்ணிக்கை(1802-1391)[9]

| ஆண்டு | அலுவலர்கள் | நியமிக்கப் பட்டோர் | இனரீதி | இடரீதி |
|---|---|---|---|---|
| 1802—1834 | 5 | — | — | — |
| 1834—1911 | 9 | 6/8 | — | — |
| 1911—1921 | 11 | 6 | 4 | — |
| 1921—1924 | 14 | 7 | 16 | — |
| 1924—1931 | 12 | 3 | 11 | 23 |

இந்த கால கட்டத்தில் (1802-1931) ஏற்படுத்தப்பட்ட சட்ட சபையில் முதன்முதல் இந்திய அங்கத்தவருக்கென 1925ம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 27ம் திகதி நடைபெற்ற தேர்தலில் ஆறு அங்கத்தவர் போட்டியிட்டனர். இந்திய அங்கத்தவருக்கென ஒதுக்கப்பட்ட தேர்தல் தொகுதி 130,000 மக்களைக் கொண்டிருந் தது. முதன் முதல் 1924ல் நடைபெற்ற போட்டியில் கலந்து கொண்ட 6 அங்கத்தினரின் பெயர்கள் பின்வருமாறு; ஐ. எக்ஸ். பெரேரா, மொகமட்சுல்தான், என். ஐயர், எஸ். பீ. சான்ஸ், ஐ. டேவிட், ஆர். ரஸ்ரமூர்த்தி. இந்த ஆறு நபர்களிலிருந்து ஐ. எக்ஸ், பெரேரா முதலாவதாகவும், மொகமட் சுல்தான் இரண்டாவதாகவும் 1924ம் ஆண்டும், ஐ.எக்ஸ், பெரேரா முதலா வதாகவும், கே. நல்லையா நடேச ஐயர் இரண்டாவதாகவும் 1925ம் ஆண்டிலும் தெரிவு செய்யப்பட்டனர்.[10]

1910ம் ஆண்டுக்குப் பின் இங்கிலாந்தில் பெண்களுக்கும் வாக் குரிமைகொடுக்கப்பட வேண்டும்என்று பிரித்தானியாவில் பெண்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கள் வாதாடினார்கள். ஆனால் பல எதிர்ப்புகள் மத்தியிலும் பெண்கள் ஆர்ப்பாட்டம் செய்து அதுவுமில்லாமல் ஒரு பெண் எமில டிவிசன் ஆர்ப்பாட்ட நேரத்தில் தன்னை போலிஸ் படைக்கு முன் விழுந்து (டர்பி என்னும் இடத்தில்) தற்கொலை செய்து கொண் டார். இதன் காரணமாக பிரிட்டனில் 1918ம் ஆண்டு 30வயதிற்கு மேற்பட்ட பெண்களுக்கு வாக்குரிமை கொடுக்கப்பட்டது.

இலங்கையில் முதன் முதலாக 1923ம் ஆண்டு ஈ.ஆர் தர்பி முத்து கிழக்கு மாகாணத்தின் சட்டசபையில் அங்கத்தவராக இருந்த போது பெண்களுக்கு வாக்குரிமை கொடுக்கப்பட வேண்டும் என்று குரல் கொடுத்தார். ஆனால் இது இலங்கை தேசிய காங்கிரசினால் ஏற்றுக் கொள்ளப்படவில்லை. 1925ம் ஆண்டிற்குப் பிறகு பெண்கள் குழுக்கள் ஆரம்பித்து வாக்குரிமைக்காக வாதாடினார் கள். இந்த குழுக்களின் ஆர்ப்பாட்டங்களுக்கும் வேண்டு கோளுக் கும் இணங்க 1926ம் ஆண்டு வரையறுக்கப்பட்ட பெண்வாக்குரிமை அளிக்கப்பட்டது. இவர்கள் 25 வயதிற்கு மேற்பட்டவர்களாக இருக்கவேண்டும், 10,000/ ரூபாவிற்கு மேற்பட்ட பெறுமதி வாய்ந்த சொத்துக்கள் இருக்க வேண்டும். பெண்களில் 21.2 வீத மானோரே படித்திருந்தார்கள். 2 சதவீதமானோரே ஆங்கில அறிவு பெற்றிருந்தார்கள். இதன் மூலம் முதன் முதலாக சட்ட சபைக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் தமிழ் பெண் நேசம் சரவண முத்து ஆவார்.

## முடிவுரை

இக்கால கட்டத்தில் சில தெரிந்தெடுக்கப்பட்ட பிரிதிநிதிகள் ஆரம்பத்தில் கிளர்ச்சி செய்தனர். முதலாம் உலக மகாயுத்தத்தில் (1914-1918) பிரித்தானியர் ஜேர்மனியரோடு யுத்தத்தில் ஈடுபட் டிருந்தபோது இலங்கை அரசியல்வாதிகள் அதை நல்ல தருண மெனக் கருதி அரசியல் அமைப்பில் சீர்திருத்தம் கொண்டு வருவ தற்கு முயன்றனர். 1915 மார்ச் 2ம் திகதி "இலங்கை இளம் குழு வினர்" என்ற ஒரு சங்கத்தை தொடங்கினர். நூறு வருடங் களுக்கு முன்பு இதே நாளில் தான் பிரித்தானியர் கண்டி இராச் சியத்தை தங்கள் காலனித்துவ அரசுடன் இணைத்தனர். 1915-ம் ஆண்டு மே மாதம் சிங்களவருக்கும் முஸ்லிம்களுக்குமிடையில் குழப்பம் ஏற்பட்டது. இந்த குழப்பத்தில் அநேக முஸ்லிம்களுக்கு இந்திய தமிழரே அடைக்கலம் கொடுத்து உதவினர். அதே வேளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யில் பிரித்தானிய அரசும் சிங்களவருக்கெதிராக கடுமையான நடவடிக்கை எடுத்தது.

முதலாம் உலக யுத்தத்தில் ஜேர்மனி தோற்றாலும், பிரித்தானியருடைய பழைய செல்வாக்கு மிகவும் கீழிறங்கியது. இந்த சந்தர்ப்பத்தில் ஐக்கிய அமெரிக்க நாடு 1917ல் உலகில் மிகவும் பலம் வாய்ந்த நாடாக யுத்தத்தில் இறங்கியது. இந்த யுத்தத்திற்காக 10 லட்சம் இந்திய மக்களும், 10 கோடி பவுனும் இந்தியாவிலிருந்து கொடுக்கப்பட்டன. இதை தொடர்ந்து இந்தயாவில் அரசியலமைப்பு மாற்றங்களை பிரித்தானியர்கள் கொண்டு வருவார்கள் என எதிர்பார்த்தார்கள். ஆனால் அந்த எதிர்பார்ப்பு நிறைவேறாததினால் பிரிட்டிஷாருக்கு எதிராக இந்திய அரசியல் வாதிகள் குரல் கொடுக்க ஆரம்பித்தார்கள். தொடக்கத்தில் இதை எதிர்த்த பிரிட்டிஷார் படிப்படியாக அரசியல் யாப்பு முறையில் மாற்றங்களை ஏற்படுத்தினர். இதை தொடர்ந்து இலங்கையிலும் இந்த மாற்றங்கள் நிகழத் தொடங்கின.

இதன் காரணமாக படிப்படியாக அங்கத்தவர்களின் தொகை கூடியது. ஆரம்பத்தில் ஆளுநரே தனிச்சட்ட அதிகாரியாக இருந்து ஆட்சி செலுத்தினார். இம்முறை காலக்கிரமத்தில் மாற்றப்பட்டு கூட்டுச்சட்ட அதிகாரத்திற்கு வழிவகுத்தது. இச்சட்டசபை ஏற்படுத்தப்பட்டதின் முக்கிய நோக்கம் படிப்படியாக நாட்டின் குடிமக்களுக்கு பிரதிநிதித்துவம் வழங்குவதாகும். இந்த சட்டசபை கடைசியாக 1931ம் ஆண்டுக்குப் பின்பு அரச சபை உருவாவதற்கு வழி வகுத்தது.

> ஒரு தனி மனிதன், அளவுக்கு மீறிய அதிகாரங்களைப் படைத்தவனாயிருப்பது எப்படி எதேச்சாதிகாரத்துக்கு வழி வகுக்குமோ, அதே போல அரசியல் சாசனத்தின் மூலமாக ஒரே இடத்தில் அதிகாரங்கள் குவிந்திருப்பதும் எதேச்சாதிகாரத்தில் கொண்டு போய் விட்டுவிடும்.[11]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான்காம் அத்தியாயம்

## சர்வசன வாக்குரிமை

சர்வசன வாக்குரிமை வாக்களிப்பதற்கான உரிமையாகும். 1931ம் ஆண்டுதான் இலங்கையில் இது அங்கீகரிக்கப்பட்டது. இதற்கு முன் வாக்குப் போடும் உரிமை சில விசேஷ தகைமைகளுடைய ஒரு வகுப்பினருக்கே இருந்தது. பிரிட்டிஷ் நிர்வாகத்தின் கீழ் இருக்கும் பொழுதே இலங்கை சர்வசன வாக்குரிமையை பெற்றது. பிரிட்டிஷ் காலனித்துவ நாடுகளில் இந்த உரிமையைப் பெற்ற முதல் நாடு இலங்கையாகும்.

பிரிட்டனில் சர்வசன வாக்குரிமையின் கீழ் தேர்தல் நடத்தப்பட்டு இரண்டு ஆண்டுகளின் பின்னரே இலங்கையில் தேர்தல் நடத்தப்பட்டது. எனினும் ஏனைய நாடுகளுக்கு முன்னதாகவே இலங்கையில் தேர்தல் தொகுதிகள் நிர்ணயிக்கப்பட்டன. முன்னேற்றமடைந்த ஐரோப்பிய நாடுகளைவிட இலங்கையிலேயே 1931ம் ஆண்டில் 21வயதிற்கு மேற்பட்ட பெண்கள் வாக்களிக்கும் உரிமை பெற்றிருந்தனர். பிரான்ஸ் நாட்டில் 1945ல் தான் பெண்கள் முதன் முதலாக வாக்களித்தனர்.[1] இத்துடன் கல்வி, சொத்து ஆகிய அம்சங்களும் கணிக்கப்பட்டன. 1931ம் ஆண்டு பெண்களுக்கு வாக்களிக்கும் உரிமையும், சர்வசன வாக்குரிமையும் வழங்கப்பட்டதும், வாக்காளர் இடாப்பு தயாரிக்கும் வேலையும் ஆரம்பமாகியது. இதற்கேற்ப 1931ல் 1,598,610 வாக்காளர்களும், 1936ல் நடைபெற்ற இரண்டாவது பொதுதேர்தலில் 2,453,353 பேரும் வாக்களிக்கத் தகுதியுடையோராக இருந்தனர். ஆரம்பத்தில் மக்கள் வாக்களிப்புப் பத்திரத்தில் புள்ளியிட்டு வாக்களிக்கவில்லை. மாறாக நிறப் பெட்டிகளின் நிறத்தைப் பார்த்தே வாக்களித்தனர். காரணம் ஏராளமான மக்கள் வாக்களிக்கும் முறையை அறிந்திருக்கவில்லை. அத்துடன் அதிகமானோர் கல்வி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவு அற்றவர்களாகவே இருந்தனர். அக்காலத்தில், ''பச்சைப் பெட்டியை பார்த்துப்போடு'' என்று ஒரு சாராரும், ''நீலப் பெட்டியைக் கேட்டுப் போடு' என்று மற்றொரு சாராரும் கூறியப் படியே பிரச்சாரம் செய்தனர்.

## 4.1. தேர்தல்

1931ம் ஆண்டிற்கும், 1978ம் ஆண்டிற்கும் இடைப்பட்ட காலத்தில் இலங்கை அரசியல் வரலாற்றில் இரண்டு முக்கிய திருப்பங்கள் ஏற்பட்டன. அவையாவன;

— 1931, 1936, 1947 ஆகிய ஆண்டுகளில் நடைப்பெற்ற தேர்தல்கள் ஏறக்குறைய ஒரு வாரம் நீடித்தது. இது ஆளும் கட்சிக்கு பெரும் சாதகமாக அமைந்தது. ஆனால் 1960ம் ஆண்டு தொடக்கம் தேர்தல், நாடு முழுவதற்கும் ஒரே நாளிலேயே நடைபெற ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டன.

— இலங்கைதான் உலக நாடுகளிலேயே முதலாவது நாடாக வாக்களிக்கும் வயதெல்லையை 21 வயதிலிருந்து 18 வயதாக குறைத்த பெருமையை பெறுகின்றது.[2]

இன்று இரண்டாவது சனநாயக சோஷலிஷ குடியரசின் அரசியல் யாப்பின் 4 (e) சரத்து பின்வரும் மூன்று நோக்கங்களுக்காக வாக்காளர் ஒருவர் வாக்களிக்க முடியும் எனக் கூறுகிறது.

— குடியரசின் சனாதிபதியை தெரிவுசெய்ய.

— ஒவ்வொரு சர்வசன வாக்கெடுப்பிலும் தங்கள் அபிப்பிராயத்தை பதிவு செய்ய.

— பாராளுமன்ற அங்கத்தினரை தெரிவு செய்ய,

வாக்களிக்கும் உரிமையுடையோர் பின்வருவோராவர்;

— இலங்கை பிரஜையாக இருப்போர்.

— 18 வயதை அடைந்தோர்.

— வாக்காளர் இடாப்பில் பதிவு செய்யப்பட்டோர்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 4.2. இலங்கைத் தமிழர் நிலை

1928ம் ஆண்டு ஜுலை மாதம் டொனமூர் விசாரணைக்குழு, வாக்குரிமை பற்றி வெளியிட்ட முடிவுகளில், இலங்கையருக்கு முழுமையான வாக்குரிமையை அனுமதித்த அதே வேளையில் இந்தியருக்கு மட்டும் மட்டுப்படுத்தப்பட்ட வாக்குரிமையை வழங்கத் தீர்மானித்தது. அதன்படி இலங்கையில் குடியேறிய ஒரு இந்தியர் குறைந்தது ஐந்து வருடங்கள் நாட்டில் வாழ்ந்த தற்கான சான்றுகளைக் காட்ட வேண்டும் என்றும், இந்த ஐந்து வருட இடைவெளியில் அவர் எட்டு மாதங்களுக்கு மேல் நாட்டிற்கு வெளியே இருந்திருக்கக் கூடாதென்றும் பணித்தது. நாட்டின் நன்மைக் கருதி இந்தத் தீர்மானம் கொண்டு வரப்பட்டதென்றும், கல்வித் தேவை, சொத்துரிமை இரண்டும் வாக்கு நிலையை பயன்படுத்த அவசிய மில்லையென்றும் கூறப்பட்டது. இந்த டொனமூர் விசாரணைக் குழுவின் தீர்மானம் 1929ம் ஆண்டில் இலங்கைச் சட்டசபையில் பல சிங்கள அரசியல் பிரமுகர்களால் எதிர்க்கப் பட்டது.[8] எனவே முக்கிய நிபந்தனையாக, பதிவுச் செய்யப்போகும் இந்தியரின் கல்வித் தகுதியில் அவர்கள் தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மூன்றிலும் எழுதவும் வாசிக்கவும் வேண்டும் என்று வலியுறுத் தினர். மேலும் இலங்கையில் வசிப்பதை நிரூபிப்பது முக்கியமான நிபந்தனையாக இருக்க வேண்டுமென்று வலியுறுத்தப்பட்டது. ஆளுநர், சிங்கள அங்கத்தினர்கள் கொண்டு வந்த இந்தக் கோரிக் கையை ஏற்றுக்கொண்டனர். ஆனால் இந்த முடிவை இலங்கையில் வாழ்ந்த இந்திய மக்களும், இந்திய அரசும் எதிர்த்தன. இந்தியருக் கான வாக்குரிமை பற்றிய முடிவு 1930ம் ஆண்டு ஜுன் 14ம் திகதி தெரிவிக்கப்பட்டது. பெருந்தொகையான இலங்கை வாழ் இந்தியர்கள் பிரஜா உரிமை பெற விண்ணப்பிப்பதற்குப் பதிலாக குடியேறிய வருடங்களின் பலத்தை வைத்து வாக்குரிமை பெற தங்கள் பெயர்களைப் பதிவு செய்தனர். இப்படி பதிவு செய்ய முன் வந்த பல இந்தியரை சிங்களவர் பலர் தடை செய்தனர். அத்துடன் பல தவறான செய்திகளையும், வதந்திகளையும், பத்திரிகை, துண்டுப் பிரசுரங்கள் மூலம் பரப்பி பதிவு செய்ய முற்பட்ட இந்தியரின் மனதில் சந்தேகத்தையும், பயத்தையும் உண்டு பண்ணினர். குறிப்பாக, இந்தியர்கள் குடியேறிய காலத்தை சான்றாக வைத்து பதிவு செய்வார்களேயாகில், இந்தியர்கள் என்ற உரிமையை அவர்கள் இழந்துவிடுவதோடு, அவர்களுக்கு கிடைக்கும் சலுகைகள், உரிமைகள் யாவற்றையும் இழக்க நேரிடும் என்றும், வேலைக்கேற்ற நியாயமான சம்பளம், இலவச மருத்துவ வசதிகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகியவற்றை இழப்பதோடு, தங்கள் நாடான இந்தியாவிற்கு எந்தத் தருணத்திலும் போகும் சுதந்திரத்தையும் இழந்துவிடுவார்கள் என்ற பொய் பிரச்சாரத்தையும் பரப்பினர்.

அந்தக் காலகட்டத்தில் இலங்கையிலிருந்த இந்திய அரசின் பிரதிநிதி எவ்வித ஆதாரமுமற்ற இந்தப் பத்திரிகை, துண்டுப் பிரசுர பிரச்சாரம், பொய் என்பதை நாட்டில் வாழ்ந்த இந்திய மக்களுக்கு விளக்கி, அவர்கள் மத்தியில் நிலவிய வீண் அச்சத்தைப் போக்க வேண்டியதாயிற்று. இப்படி இந்திய மக்கள் மத்தியில் வீண் புரளியைப் பரப்பி அவர்களைப் பதிவு செய்வதில் இருந்து தடுக்க எத்தனித்த நபர்களில், இயக்கங்களில் ஒரு இந்திய நிறுவனமும் சிங்கள வருடன் இணைந்து செயற்பட்டதை அவதானித்த இந்தியப் பிரதிநிதி மிகவும் ஆச்சரியப் பட்டார்.

ஹற்றன் பகுதியைச் சேர்ந்த சட்டத்தரணி திரு. பெரிய சுந்தரம் ஒருவர் மட்டும இந்திய மக்கள் தங்களைப் பதிவு செய்யும் படி ஊக்குவித்ததோடு சில உதவிகளையும் செய்து வந்தார். அந்தக் காலகட்டத்தில எடுக்கப்பட்ட கணக்கின்படி 1931ம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் ஜூலை மாதம் வரை 100, 574 இந்தியர்கள் தங்கள் பெயர்களை பிரஜாவுரிமை பெறக்கோரி பதிவு செய்திருந்தனர். இது நாட்டில் அன்று வாழ்ந்த வயது வந்தோர் தொகையில 21 வீதமாகும். பெரும்பான்மையானோர் தாங்கள் குடியேறிய கால அளவை வைத்துச் செய்த பதிவு இது-வாகும். பதிவு செய்யும் இந்தியரின் தொகை அதிகரிக்க, அதுகாரக பிரஜாவுரிமைக் கோரி பதிவு செய்வதற்கான எதிர்ப்பும் வலுவடைந்தது. எனவே, இந்தக் கால கட்டத்தில் புதியதொரு நிபந்தனை கொண்டுவரப்பட்டது. அதாவது பதிவு செய்யும இந்தியா தாங்கள நாட்டில வாழ்ந்த கால அளவை நிரூபிக்கத் தேவையான விளக்கங்களை பதிவு செய்யும் அலுவலர், அல்லது கண்காணிப்பாளர் மூலமாக பதிவு செய்தால்தான் பதிவு செல்லுபடியாகுமென்றும, அவர் சரியான முறையில் பரிசோதனைக்கு உட்படுததப்பட வேண்டுமென்றும் நிபந்தனை போடப்பட்டது, இந்தக் கட்டுப்பாடுகள் காரணமாக பதிவு செய்யப்படும் தொகையில் பெரும் வீழ்ச்சி ஏற்பட்டது.

### முடிவுரை

1948ம் ஆண்டுவரையும மலையக மக்கள் சர்வசன வாக்குரிமையை பெற்றிருந்தனர். அன்று ஐ. தே. க ஒரு நூதனமான

பிரஜாவுரிமை சட்டத்தை உருவாக்கி இவர்களது வாக்குரிமையை பறித்தது. 1981ம் ஆண்டு இலங்கை சர்வசன வாக்குரிமை பெற்ற 50 ஆண்டு நிறைவு செய்த பொன் விழாவை கோலாகலமாக கொண்டாடியது. ஆனால் அன்றும் கூட எமது நாட்டில் வாக்குரிமை பெறாத மலையகத் தமிழர் இருந்திருக்கின்றார்கள். இன்னும் இந்த பிரச்சினை தீராமல் கிட்டத்தட்ட 3 லட்சத்திற்கு மேற்பட்ட மலையகத் தமிழர் வாக்குரிமை அற்றிருப்பது எமது நாட்டின் ஜனநாயகம் ஒரு பகுதி மக்களுக்கு மறுக்கப்பட்டுள்ளதை எடுத்துக் காட்டுகின்றது.

'ஜனநாயகம் ஒரு தராசு போல, ஒரு பக்கம் தலைவன், மற்றொரு பக்கம் மக்கள், "தலைவனைத் தேர்ந்தெடுத்து விட்டோம் இனி அவன் பொறுப்பு" என்று மக்கள் விட்டு விடுவார்களானால், தலைவன் தானே நாட்டின் நிரந்தரத் தலைவனாக தன்னை ஆக்கிக் கொள்ள முடியும், இந்தோனேஷியாவில் சுகர்ணோவும், கானாவில் என்க்ருமாவும் இப்படித்தான் சர்வாதிகாரிகளாக மாறினார்கள், அரசியல் விழிப்பில்லாத நாட்டில், தங்கள் வாக்குரிமையின் வலிமையை உணராத மக்கள் வாழும் நாட்டில் தலைவன் தான் தோன்றியாய்ப் போக வாய்ப்பு உண்டு.'[5]

★★★

அரசாங்கச் செயல்கள் அனைத்தும் பொது நலம் கருதியே அமைதல் வேண்டும், தனி மனிதனின் அதிகாரத்திற்குட்பட்டுச் செயல்படக் கூடாது சுய நலமில்லாமல் உழைக்க முன் வருதல் வேண்டும்.[6]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐந்தாம் அத்தியாயம்

# அரச சபைகள்-1931-1947

1833ம் ஆண்டு கோல்புரூக் விசாரணைக் குழுவினர் ஏற்படுத்திய அரசியல் யாப்பு 1931ம் ஆண்டு டொனமூர் விசாரணைக் குழுவினர் ஏற்படுத்திய அரசியல் யாப்பு நடை முறைக்கு வரும் வரையும் அமுலில் இருந்தது. இதற்கு 1910, 1920, 1924ம் ஆண்டுகளில் அந்தந்தக் காலகட்டத்தில் இருந்த தேசாதிபதிகளால் மாற்றங்கள் கொண்டுவரப்பட்டன. ஆனால் அடிப்படையில் எவ்வித மாற்றங்களும் செய்யப்படவில்லை.

## 5.1. டொனமூர் ஆணைக்குழு.

இலங்கைக்குப் பூரண பொறுப்பாட்சி வழங்கப்பட வேண்டுமென்ற கோரிக்கை வலுப்பெற்று வந்தது. இலங்கைக்கு வந்த டொனமூர் குழுவினர் முழுமையான பொறுப்பாட்சியை வழங்குவதற்கு இன்னமும் அரசியல் முதிர்ச்சி அடையவில்லையென்றும், உள்நாட்டு நிர்வாகப் பொறுப்புகள் சிலவற்றை இலங்கையரிடம் ஒப்படைக்கலாம் எனவும் கூறினர். இதற்கமையவே டொனமூரின் சீர்த்திருத்தங்கள் அமைந்திருந்தன. இவற்றுள் சர்வசன வாக்குரிமையே ஏனைய திருத்தங்களைவிட முற்போக்கானதாகும்.

ஆங்கிலேயருக்கு சொந்தமான குடியேற்ற நாடுகளில் இலங்கைக்கே முதன்முதலாக சர்வசன வாக்குரிமை வழங்கப்பட்டது. நீண்டகால ஜனநாயக வளர்ச்சியுடைய பிரித்தானியாவில் கூட படிப்படியாகவே வாக்குரிமை அளிக்கப்பட்டு 1928ம் ஆண்டிலேயே சர்வசன வாக்குரிமை அளிக்கப்பட்டது. பிரித்தானியருடன் ஒப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிடும்போது இலங்கைக்கு மிக விரைவாகவே சர்வசன வாக்குரிமை வழங்கப்பட்டதெனலாம். டொனமூர் குழுவினர் 1931ல் 21 வயதிற்கு மேற்பட்ட சகல இலங்கைப் பிரஜைக்கும் வாக்குரிமை வழங்கினார்கள்.

1833ம் ஆண்டு தொடக்கம் ஆங்கிலேயர் இலங்கையருக்கு சட்டபூர்வமாகப் பயிற்சியை வழங்கினார்கள். ஆனால் நிர்வாகப் பயிற்சி வழங்கப்படவில்லை. டொனமூர் குழுவினர் உள்நாட்டு நிர்வாகப் பொறுப்புகள் சிலவற்றை மாத்திரமே இலங்கையரிடம் ஒப்படைக்க முன்வந்தனர், அரசாங்க சபை அங்கத்தவர்களை 7 நிர்வாகக் குழுக்களாகப் பிரித்தனர். அந்நிர்வாகக் குழுக்களிடம் உள்நாட்டு நிர்வாகம், சுகாதாரம், கல்வி, விவசாயம், போக்குவரத்துப் போன்ற பொறுப்புகள் ஒப்படைக்கப்பட்டன. மேற்படி விடயங்கள் சம்பந்தமாக அரசாங்க சபைகள் உருவாக்கும் சட்டங்களை நடைமுறைப்படுத்துவதே நிர்வாகக் குழுக்களின் கடமையாகும்.

## 5.2 அரசசபைத் தேர்தல்-1931, 1936

1931ம் ஆண்டு நடைமுறைக்கு வந்த டொனமூர் சீர்திருத்தம் சுமார் 100 வருடங்களின் பின் இலங்கை அரசியலில் பாரிய மாற்றங்களை ஏற்படுத்தியது. சர்வசன வாக்குரிமை, பிரதேசவாரிப் பிரதிநிதித்துவம், அரசாங்கசபை, நிர்வாகக்குழுமுறை, மந்திரி சபை என்பன போன்றவற்றை குறிப்பிடலாம். அரசாங்க சபையில் சர்வசன வாக்குரிமை மூலம் தெரிவு செய்யப்பட்ட மக்கள் பிரதிநிதிகள் 50 பேர் இடம் பெற்றார்கள். முதன் முதலாக மக்கள் பிரதிநிதிகளைக் கொண்ட அரசாங்க சபையை டொனமூர் ஏற்படுத்தினார். நிதி, நீதி, வெளிநாட்டு விவகாரம், பாதுகாப்பு போன்றவற்றை தவிர்த்த ஏனைய உள்நாட்டு விடயங்கள் தொடர்பாக சட்டமூலங்களைக் கொண்டுவரும் அதிகாரம் மக்கள் பிரதிநிதிகளுக்கு வழங்கப்பட்டது. அரசாங்க சபையிலிருந்து 7 நிர்வாகக் குழுக்கள் உருவாக்கப்பட்டன.

டொனமூரின் பிரதேசவாரிப் பிரதிநிதித்துவம் அவர் கூறியது போல ஜனநாயக ரீதியில் பொருத்தமானதாகவே இருந்தது. ஆனால் மக்கள் இன அடிப்படையிலேயே வாக்களித்தார்கள் என்பதை யாரும் மறுக்க முடியாது. இதை பின்வரும் அட்டவணையில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அட்டவணை 5.1- பிரதேசவாரி தேர்தல் பிரதிநிதித்துவம் 1931-1936[1]**

| வருடம் | சிங்களவர் | இலங்கைத் தமிழர் | இந்தியத் தமிழர் | ஏனையோர் | சிறுபான்மையினர் தொகை | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| 1931 | 38 | 4 | 2 | 2 | 8 (19.56%) | 46 |
| 1936 | 38 | 8 | 2 | 2 | 12 (22.%) | 50 |

1931ம் ஆண்டுத் தேர்தலில் யாழ்ப்பாணத்தில் 4 இலங்கைத் தமிழர் செய்த பகிஸ்கரிப்பின் காரணமாக பிரதிநிதிகள் தெரிவு செய்யப்படவில்லை.

இரண்டு தேர்தல்களின் முடிவுகளும் மக்கள் இன அடிப்படையிலேயே வாக்களித்துள்ளனர் என்பதை எடுத்துக் காட்டின. இனவாரிப் பிரதிநிதித்துவம் இருந்த காலத்தில் 3:2 என்று இருந்த பிரதிநித்துவம் (சிங்கள-தமிழ் பிரதிநிதித்துவம்) பிரதேசவாரிப் பிரதிநிதித்துவ காலத்தில் 5:2 என மாறியது. எனவே ஓர் இனம் இன்னோர் இனத்தை ஆளுகின்ற நிலையை இது ஏற்படுத்தியது.

1931ம் ஆண்டு நடைபெற்ற அரசாங்க சபைத்தேர்தலில் மலையக மக்கள் சார்பாக 5 தேர்தல் தொகுதிகளில் போட்டியிட்டு 3 தொகுதிகளில் வெற்றி பெற்றனர். பண்டாரவளைத் தொகுதியில் ஏ. கோடன் ஃபலோஸ் என்ற தோட்ட அதிகாரி தெரிவு செய்யப்பட்டார்.

1931ம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் மொத்தம் 100,000 தோட்டத் தொழிலாளர்கள் வாக்களித்துள்ளனர். ஹற்றன் பகுதிக்கு போட்டியின்றித் தெரிவுசெய்யப்பட்ட திரு. பெரிய சுந்தரம் 1931 மே 4ம் தேதி தொடங்கி 1935 டிசம்பர் 7ம் திகதி வரை கைத்தொழில் வர்த்தக அமைச்சராக கடமையாற்றியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.[2] 1931ம் ஆண்டு ஜுன் 18ல் நடைபெற்ற தேர்தலில் தலவாக்கொல்லையில் 3,975 அதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கப்படியான வாக்குகளால் திரு. எஸ். பி. வைத்தியலிங்கம் வெற்றி பெற்றார். மாத்தளையில் திரு. சுப்பையா மூன்றாவது இடத்தை யும், நுவரேலியாவில் திரு. கே. பி. இரத்தினம் இரண்டாவது இடத்தையும் பெற்றனர். ஏனைய தொகுதிகளில் மலையக மக்கள் இடது சாரிகளையே ஆதரித்தனர்.

1936ல் நடைபெற்ற இரண்டாம் சட்டசபைத் தேர்தலில் தோட்டத் தொழிலாளர் பிரதிநிதிகள் இரண்டு ஆசனங்களைப் பெற்றனர். தலவாக்கொல்லையில் 12,866 அதிகப்படியான வாக்குகளால் திரு. கே. நடேச ஐயரும், ஹற்றனில் 8,708 அதிகப்படியான வாக்குகளால் திரு. எஸ். வைத்தியலிங்கமும் வெற்றி பெற்று தெரிவு செய்யப்பட்டனர்.[3] இத்தேர்தலில் பதுளை, பலாங்கொடை, நுவரேலியாத் தொகுதிகளில் முறையே வீ. ஏ. சோமசுந்தரம். சி. வேலுப்பிள்ளை, எஸ். இராமையா ஆகியோர் போட்டியிட்டு, சொற்பவாக்குகளால் தோல்வியுற்று இரண்டாம் இடத்தை பெற்றனர். வாக்களிக்கத் தகுதி பெற்ற 145,000 தொழிலாளர்கள் அப்போதிருந்தனர். இடது சாரித் தலைவர்களான ஆர். எஸ். குணவர்த்தனாவும், என். எம். பெரே ராவும் தெரிவானதற்கு இத்தோட்டத் தொழிலாளரின் ஆதரவே காரணமாக இருநதது. 1941ம் ஆண்டு 225,000 தோட்டத் தொழிலாளர் வாக்களிக்கும் உரிமை பெற்றிருந்தும் இரண்டாம் உலக யுத்தம் காரணமாக அந்த ஆண்டு நடைபெற வேண்டிய தேர்தல் நடைபெறவில்லை.

1947ம் ஆண்டு பிரித்தானிய அமைப்பை பின்பற்றும், வெஸ்ட் மினிஸ்டர் அரசியலமைப்பு அறிமுகப்படுத்தப்பட்டது. சட்ட சபையில் பெரும்பான்மை உறுப்பினர்களுக்குத் தலைமை தாங் கும் பிரதம மந்திரி ஆளுநர் நாயகத்தால் நியமிக்கப்பட்டார். 1948ல பிரித்தானிய 'கொமன்ஸ்' சபையின் சுதந்திர சட்டம் அறிமுகப்படுத்தப்பட்டு இலங்கை ''டொமீனியன்'' அந்தஸ்து உடைய சுதந்திர நாடாகியது. அத்துடன் பொது நலவாய நாடு களில் சுதந்திர நாடாக உறுப்புரிமை பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆறாம் அத்தியாயம்

# உள்ளூராட்சி அமைப்புமுறை

இலங்கையின் உள்ளூராட்சிமுறை பிரித்தானியர் ஆட்சிக் காலத்தில் புதுப்பிக்கப்பட்டாலும், அது எமது தீவின் பழங்காலந் தொட்டு மரபில் இருந்த உள்ளூராட்சி முறையிலிருந்தே எண்ணங்களைப் பெற்றது. பிரித்தானியர் முறையிலான உள்ளூராட்சி போன்று 1865ல் ஸ்தாபிக்கப் பட்டது. அது 1972 வரை நடைமுறையில் இருந்தது. கிராம மட்டத்திலான உள்ளூர்ப் பரிபாலனம் 1938ல் ஒரு குறிப்பிடத்தக்க மாற்றத்தை கண்டது. சர்வசன வாக்குரிமை வழங்கப்பட்டதையடுத்து, உள்ளூர் விவகார முகாமைத்துவத்தில் மக்கள் பங்கேற்கத் தொடங்கினர். மக்களால் தெரிவு செய்யப்பட்ட சபையின் மூலம், அரசியல் தீர்மானங்களை எடுக்கும் சந்தர்ப்பங்கள் அடிமட்டமக்களுக்கும் கொடுக்கப்பட்டதால் இந்த முறை வளர்ச்சியடைய விடப்பட்டது. இந்த முறை பரிபாலன சௌகரியத்திற்காகப் புகுத்தப்பட்டு அரசாங்க அதிபர்களால் கட்டுப்படுத்தப்பட்டது. 1930லும், 1940லும் மாநகர சபைகள், பட்டினசபைகள், கிராமசபைகள், நகர சபைகள் ஆகிய நான்கு சபைகளும் உள்ளூர் அதிகாரிகள் தெரிவு செய்யப்பட்டு மட்டுப்படுத்தப்பட்ட செயற்பாடுகளுடன் உள்ளூராட்சி இலாகாவினால் கட்டுப்படுத்தப்பட்டன.

## 6.1 அதிகார பரவலாக்கல்

சட்ட அதிகாரங்களையும், நிர்வாக அதிகாரங்களையும் பரவலாக்கும் ஒரு முறை மூலம் ஒன்பது மாகாணங்களில் அரசாங்கத்தின் புதிய நிறுவனங்களாக மாகாண சபைகள் ஏற்படுத்தப்பட்ட போதிலும், கடந்த தசாப்தத்தில் மறுசீரமைப்புக்குட்பட்ட உள்ளூராட்சி மன்றங்கள், மாநகரசபைகள், நகரசபைகள், பிரதேச

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சபைகள் என்ற மூன்றையும் உள்ளடக்கியதாகவே இருக்கின்றன. நகர்ப்புறங்களில் உள்ளூராட்சி அமைப்பானது 12 மாநகர சபைகளையும், 38 நகர சபைகளையும் கொண்டிருக்கிறது[1] இவை உள்ளூராட்சி இலாகாவின் கட்டுப்பாட்டின் கீழும் மேற்பார்வையிலுமே இயங்குகின்றன. இந்த இரு உள்ளூராட்சி நிறுவனங்களினதும் அதிகாரங்களும், பணிகளும் 1947ம் ஆண்டின் 29ம் இலக்க மாநகரசபை சட்டம் 1939ம் ஆண்டின் 61ம் இலக்க நகரசபை சட்டம் ஆகியவற்றிற்கு அமையவே இருக்கின்றன. இவர்களின் பணிகள் பொதுமக்களின் சுகாதாரம், சுத்தம், பொதுமக்கள் உபயோகிக்கும் சிறு பாதைகள் அல்லது வழிகள் போன்றவற்றை உள்ளடக்கியதாக இருந்தன. 1948ம் ஆண்டு நமது நாடு சுதந்திரமடைந்தது முதல் பன்முகப்படுத்தலும், அதிகாரப்பரவலாக்கலும் ஒரு விவாதப் பொருளாகவும், பரீட்சார்த்த விடயமாகவுமே இருக்கின்றது. இலங்கை நாட்டில் இந்த அதிகாரம் தொடர்பான ஆட்சி முறையின் தலைவராக ஒவ்வொரு மாகாணத்திலும் உள்ள அரசுப் பிரதிநிதியான அரசு அதிபர் செயற்படுவார்.

இந்த முறை கச்சேரி முறை என அறியப்பட்டது. பின்பு இது மாவட்ட பரிபாலனம் எனப்பட்டது. ஆரம்பத்தில் சகல அரசாங்க இலாகாக்களும் அரசாங்க அதிபர் மூலமே இயங்கின. அதைத் தொடர்ந்து அரசாங்க இலாகாக்கள் கொழும்பிலுள்ள தலைமை அலுவலகங்களுக்கு ஊடாக இயங்கின. அரசாங்க அதிபர் உள்நாட்டுஅலுவல்கள் அமைச்சுக்கே பொறுப்புடையவராக இருந்தார். மாவட்ட சபைகள் அமைக்கும் யோசனை 1968ம் ஆண்டு முன்வைக்கப்பட்டது.[2]

## 6.2 மாவட்ட அபிவிருத்தி சபைகள்

மாவட்ட அரசியல் அதிகார முறையும், பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டமும் 1973-1974ல் அறிமுகப்படுத்தப்பட்டன. 1979-1980ல் அபிவிருத்தி சபைகள் மாவட்ட மந்திரிமார் ஆகியன அறிமுகப்படுத்தப்பட்டன. இவற்றின் நோக்கம் பன்முகப்படுத்தலாகும். ஆனால் இது யதார்த்தத்தில் ஒரு முகப்படுத்தலையே உயர் நிலைக்கு கொண்டு சென்றது. அதாவது ஒவ்வொரு மாவட்டத்திலும் மத்திய அரசியல் தலைமைத்துவத்தையே ஏற்படுத்தியது. பன்முகப்படுத்தலானது மத்திய அரசியல்வாதிகளை ஒரங்கட்டும் ஒரு அபிவிருத்தி எனக் கருதப் பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1979ல் இந்த முறையை மாற்றியமைக்க அரசாங்கம் தீர் மானித்தது. பாரம்பரிய நான்கு மட்ட உள்ளூராட்சி முறையை (மாநகர, நகர, பட்டின, கிராமசபைகள்) மூன்று மட்ட சபைகளாக அதாவது மாநகர சபைகள், நகரசபைகள், மாவட்ட சபைகள் என மாற்றியமைத்தது. 1978ல் எமது நாட்டில் 632 பட்டின சபை களும், கிராம சபைகளும் இருந்தன. இவை ஒழிக்கப்பட்டு அவற் றிற்கு பதிலாக 269 சபைகள் ஏற்படுத்தப்பட்டன. இந்த முறையின் கீழ் அமைக்கப்பட்ட அபிவிருத்திச் சபைகள் அந்தந்த மாவட்டங் களில் தனியாக ஒரு உள்ளூர் அதிகார சபையாக அமைந்தது. அதனுடைய சட்ட ஆட்சிப்பரப்பு, அதிகாரங்கள் இவற்றை நோக் கும்போது அது இலங்கையில் மாவட்ட மட்டத்தில் முதல் முதலாக அமைக்கப்பட்ட ஒரு நவீன அமைப்பாகவே தோன்றியது.

1980 அமைக்கப்பட் மாவட்ட அபிவிருத்திச் சபைகள் ஒரு மாவட்டத்தில் உள்ள சகல கிராமப் பிரதேசங்களையும் தனது அதி காரத்திற்கு உள்ளடக்கியது.[4] இதற்குப் பிரதிநிதிகள் விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறையிலேயே தெரிவுசெய்யப்பட்டனர். அந்த மாவட்டத்திலுள்ள பாராளுமன்ற உறுப்பினர்கள் இந்த சபைகளில் அங்கத்துவம் வகிக்க முடிந்தது. பொதுவாக பாராளுமன்ற அங்கத்தவர் தொகையானது தெரிவு செய்யப்பட்ட அங்கத் தவர் தொகையை விட கூடுதலாக இருந்தமையால், நடை முறையில் பாராளுமன்ற அங்கத்தவர்களே இந்த சபையை கட்டுப்படுத்தும் சந்தர்ப்பங்களும் இருந்தன. இந்த முறையில் அபி விருத்திச் சபையில் இருவித அங்கத்தவர்கள் இருப்பதை காட்டு கிறது. இந்த சபைகளின் அதிகார செயற்பாடுகளாக அபிவிருத்தி வேலைகளும், பாரம்பரிய உள்ளூராட்சி அலுவல்களும் இருந்தன. அபிவிருத்தி அலுவல்களுக்கு அதிக கவனம் செலுத்தப்பட்டதால் ஏனைய செயற்பாடுகள் பின்னடைவு அடைந்தன. 1981 ஜூலை மாதத்தில் அறிவிக்கப்பட்ட கிராமோதய சபை சட்டங்கள் இந்தச் சபைகள் எப்படி மேல் வர்க்கத்தினரால் ஆதிக்கம் செலுத்தப் பட்டது எனக் காட்டிற்று. செல்வமும் செல்வாக்கும் உள்ளவர் கள் சபைக்குள் புகுந்தனர். இவர்கள் உதவி அரசாங்க அதிபர் களால் பிரதிநிதிகளாக அனுப்பப்படக்கூடியவர்கள் என அடை யாளம் காணப்பட்டவர்கள். தேர்தல் முறை ஒழிப்பு மூலமாகவே இது சாத்தியமாயிற்று. கிராம மட்டத்திலான விழிப்புணர்வை மழுங்கடிப்பதே இதன் நோக்கமாகும். கிராமோதய சபையின் செயலாளர் ஒரு விசேட சேவை அலுவலராக இருந்தார். இவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தப் பகுதியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பாராளுமன்ற உறுப்பினரின் சிபார்சின் பேரில் திட்ட அமுலாக்கல் அமைச்சினால் நியமிக்கப்பட்டார். இந்த விசேஷ சேவை அலுவலர் பாராளுமன்ற உறுப்பினரின் அரசியல் பிரதிநிதியாக இருந்தார்.

கிராமோதய சபைகளை இயங்கும் பாராளுமன்ற உறுப்பினரின் செல்வாக்கு விசேஷ சேவை அலுவலர் மூலமாகவே நடைமுறைப்படுத்தப்பட்டது. பாராளுமன்ற உறுப்பினரோடு ஏற்பட்ட தொடர்பினால் அதிகளவு அரசியல் மயமாக்கப்பட்ட கிராமோதய சபை உறுப்பினர்கள் அதிகமாக ஆட்சியிலிருக்கும் கட்சியின் ஆதரவாளர்களாக மாறினர். இதன் காரணமாகவும், கிராமத்திலுள்ள அரசியல் போட்டி காரணமாகவும், கிராம மக்களில் பெரும் பகுதியினர் ஒதுக்கி வைக்கப்பட்டனர். கிராம அபிவிருத்திச் சபைகளின் அடிப்படையில், உள்ளூராட்சித் திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட கிராமோதய சபைகளே அபிவிருத்தியை நோக்கமாகக் கொண்ட அமைப்பில் ஆக அடிமட்ட அமைப்பாக இருந்தன. அத்துடன் இம்முறையின் கீழ் பழைய கிராமக் குழுக்கள் ஈடுபட்டிருந்த பொது வசதிகளை வழங்குதல், பராமரித்தல் ஆகியன இரண்டாம் இடத்தைப் பெற்றன. கிராம அபிவிருத்தித் திட்டமொன்றைத் தயாரிப்பதுதான் கிராமோதய சபையின் முக்கிய பணியாக இருந்தது. சபை நடத்திய வளங்கள் சம்பந்தமான ஆய்வின் அடிப்படையிலேயே இவை தீட்டப்பட்டன. சில விடயங்களில், மாவட்ட அபிவிருத்திச் சபையின் முகவர்களாக இது செயற்படும் என எதிர்பார்க்கப்பட்டது.

## 6.3 பிரதேச சபைகள்

1987ல் உருவாக்கப்பட்ட பிரதேச சபைகள், நாட்டின் கிராமப்புற பிரதேசங்களை உள்ளடக்கியதாகவும், உள்ளூராட்சி முறையில் ஒரு புதுப் பரீட்சையாகவும் அமைந்துள்ளது. இலங்கையின் முழுப்பரப்பையும் உள்ளடக்கக்கூடியதாக உள்ளூராட்சி மன்றங்கள் விஸ்தரிக்கப்பட்டமையானது, அப்பகுதி பாராளுமன்ற அங்கத்தவர் முழுமையாக ஈடுபாடு கொண்டுள்ள அபிவிருத்திப் பணிகளில் ஈடுபடவேயாகும். பிரதேச சபைகளை அறிமுகப்படுத்தியதன் நோக்கமே இதுதான் என உள்ளூராட்சி வீடமைப்பு, நிர்மாணத்துறை அமைச்சர் கூறியுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தச் சபைகள் அப்பகுதி அபிவிருத்திப் பணிகள் மட்டில் பாராளுமன்ற உறுப்பினருக்குள்ள சுமைகளைக் குறைக்க உதவும் என வலியுறுத்தப்பட்டது. ஆயினும் பிறிதொரு நோக்கமும் இருந்தது. தெரிவு செய்யபட்டப் அங்கத்தினர்களைக் கொண்ட சபைகளில் நுளைவதன் மூலம் அபிவிருத்திப் பணிகளில் இளைஞர்களுக்கு வாய்ப்பளிப்பதே அந்த நோக்கமாகும், 1935ல் எம்பிலிப்பிட்டியாவில்நடைபெற்ற'கம்முதாவ'நிகழ்ச்சியில்கிராமத் தலைவர்களுக்குப் பயிற்சியளிக்கும் சர்வதேச நிலையம் நிறுவப் பட்டது. இது பிரதேச சபைகளை அமைப்பதற்கான முதற்படி அல்லது பீடிகை எனவும் கருதப்பட்டது. இப்பயிற்சியின் மூலம் ஒரு புதிய கிராம தலைமைத்துவம் உதயமாகும் என்றும், இது கிராமப்புற அபிவிருத்திப் பணிகளுக்காக மக்களின் பங்களிப்பை முன்னெடுத்துச் செல்லும் என்று கருதப்பட்டது.

1987ம் ஆண்டுடன் 15வது இலக்க பிரதேச சபைகள் சட்டம் கொண்டு வரப்பட்டு அதன் முன்னுரையில் பின்வருமாறு கூறப் பட்டது. ''உள்ளூர் மட்டத்தில் அபிவிருத்திப் பணிகளோடு சம்பந் தப்பட்ட தீர்மானம் எடுத்தல், அமுல்படுத்துதல், நிர்வாகம் செய் தல், ஆகியவற்றில் மக்கள் பங்களிப்பிற்கு அதிகளவு சந்தர்ப்பங்கள் அளிக்கும் நோக்குடனேயே இச்சபைகள் நிறுவப்பட்டன'' இச் சபையின் ஆளுமைக்குட்பட்ட நிலப்பரப்பானது உதவி அரசாங்க அதிபரின் எல்லைகளோடு இணைந்திருக்க வேண்டுமென்றும் தீர் மானிக்கப்பட்டது. ஆகவே இச்சபைகளின் பிரதேசமானது பழைய தேர்தல் எல்லைகளையே, அதாவது பாராளுமன்ற தேர்தல் தொகுதிகளையே கொண்டிருந்தன என்பது கருத்தாகும். இவை இன்றும் தேர்தல் நிர்வாகத்திற்காக பாதுகாக்கப்படுகின்றன.

பிரதேச சபையின் பிரதேசத்தில் மாநகர சபை அல்லது நகர சபை இருப்பின், இந்த இரு சபைகளுக்குட்பட்ட பிரதேசங்கள், பிரதேச சபையின் ஆளுமைப் பிரதேசங்களிலிருந்து நீக்கப்பட்டன. இந்த சபைகளுக்கான பணிகளை ஒதுக்கும்போது, உள்ளூராட்சி பற்றிய பாரம்பரிய கருத்துகளும், கடந்த நூற்றாண்டு கால சரித்திர அனுபவங்களும் கருத்தில் கொள்ளப்பட்டன. ஒரு குறிப் பிட்ட பிரதேசத்திற்கென அமைக்கப்பட்ட பிரதேச சபையானது, பொதுச் சுகாதாரம், பொது வசதிகள் வழங்கல், மக்களின் நலன் களை அதிகரித்தல் போன்றவற்றில் சகல காரியங்களிலும் கட்டுப் பாட்டையும் நிர்வாகத்தையும் பேணும் அதிகாரங்களைக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டிருக்கும். ஒரு குறிப்பிட்ட பிரதேசத்தில் இயங்கும் பிரதேச சபைக்குரிய சட்டயாப்பை இயற்றும் போது, அப்பகுதியிலுள்ள மக்கள் தொகை, அபிவிருத்தி மட்டம் ஆகியவற்றிற்கு உரிய கவனம் செலுத்தப்பட்டது. அதாவது அப்பிரதேசத்தில் அபிவிருத்தி சார்பான சமூக சேவைகள் சம்பந்தமான விடயங்கள் கவனத்திற்கெடுக்கப்பட்டன. நாட்டின் உள்ளூராட்சியில் முதல் படியில் பிரதேச சபைகள் இருப்பதனால் மக்களுடன் இணைந்துசெயல்படும் என்றும் குறிப்பிட்ட பணிகளை ஆற்றும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. ஆகவே பிரதேசசபைகள் புதிய அமைப்பின்படி பிரதேச மட்டத்தில் ஒரு பிரதிநித்துவ சபையாக இருப்பதால் கொள்கைகளைத் தீட்டும் அதிகாரம், அபிவிருத்திக்கு ஏற்ற திட்டங்களை, நிகழ்ச்சிகளை அதிகரிப்பது, பிரதேசத்தை தாக்கும் விடயத்தில் சட்டமியற்றுதல், இச்சட்டங்களின் தாக்கத்தை மீளாய்வு செய்தல் ஆகியன அதன் அதிகாரத்திற்குட்பட்டதாக இருக்கும்.

ஒரு பிரதேச சபை அபிவிருத்திப் பணியில் எந்த அளவுக்கு ஈடுபடலாம் என்பதை இது காட்டுகிறது. நாட்டில் அதிகாரப் பரவலாக்கல் முறையில் எழும் புதிய அரசியல் நிர்வாகத் துறை அமைப்புகளை கண்முன் வைத்தே பிரதேச சபைகள் செயற்பட வேண்டும். புதிய பிரதேச சபையானது பாரம்பரிய உள்ளூராட்சி முறையிலிருந்து பல தரப்பட்ட விதத்தில் வேறுபட்டிருக்கிறது. இதனால் நமது நாட்டின் பரிபாலனத்தில் ஒரு தனித்துவமான இடத்தை பிரதேச சபைகள் பெற்றிருக்கின்றன.

## 6.4 பிரதேச சபை தேர்தல் 1987?

1987ம் வருட 15ம் இலக்க பிரதேச சபைகள் சட்டம் நிறைவேற்றப்பட்டதோடு ஒரு புதிய உள்ளூராட்சிச் சபை முறை அமுலுக்கு வந்தது. எமது நாட்டில் உள்ளூராட்சி முறையை ஜனநாயகப்படுத்தும் ஒரு நடவடிக்கையாக இது கருதப்பட்டது. அப்போதைய உள்ளூராட்சி, வீடமைப்பு, நிர்மாணத்துறை அமைச்சராகவிருந்து பின் ஜனாதிபதியாக வந்த மறைந்த ரணசிங்க பிரேமதாசா அவர்கள் நாட்டில் இயங்கிவந்த 51 மாநகர சபைகள், நகரசபைகள் ஆகியவற்றிற்கு அப்பாற்பட்ட பிரதேசங்களில், 257 பிரதேச சபைகளை அமைக்கும் உத்தரவைப் பிறப்பித்தார்.[5] புதிய சபைகள் 1988 ஜனவரி 1ம் திகதி பதவியேற்க வேண்டுமென்றும் பணிக்கப்பட்டது. இதற்கமைய 1987 ஜூலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

12ந் திகதி நியமனப் பத்திரங்கள் கோரப்பட்டன. இரண்டு மாநகர சபைகள், 5 நகரசபைகள், 68 பிரதேச சபைகள் ஆகியவற்றின் உறுப்பினர்கள் போட்டியின்றித் தெரிவு செய்யப்பட்டனர். எட்டு மாநகர சபைகள், 30 நகர சபைகள், 152 பிரதேச சபைகள் ஆகியவற்றிற்குப் போட்டிகள் நடைபெற்றன. வடக்கு, கிழக்கு மாகாணங்களிலுள்ள 2 மாநகர சபைகள், 4 நகர சபைகள், 36 பிரதேச சபைகளுக்கான நியமனங்கள் தாக்கல் செய்யப்படவில்லை. தேர்தலுக்கான திகதி 1987 ஆகஸ்ட் 15 என நிர்ணயிக்கப்பட்ட போதிலும், 1987 ஜூலையில் கைச்சாத்திடப்பட்ட இலங்கை இந்திய ஒப்பந்தத்தின் பின் ஏற்பட்ட அரசியல் பிரச்சனைகள், நாடளாவிய தேர்தலை நடத்தக்கூடிய சூழ்நிலையைக் கொடுக்கவில்லை. ஆனால் எதிரணியைச் சேர்ந்த அரசியல் கட்சிகள் உள்ளூராட்சித் தேர்தல்களை நடத்த வேண்டாமென எதிர்ப்புத் தெரிவித்து, நாட்டின் அப்போதைய தேவை பாராளுமன்றப் பொதுத் தேர்தல் தானென பிரச்சாரம் செய்தனர். எதிரணியிலிருந்த பிரதான கட்சிகளாக சிறீலங்கா சுதந்திரக் கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி, சிறீலங்கா மகாஜனக் கட்சி, மக்கள் ஐக்கிய முன்னணி, புதிய லங்கா சமசமாஜக் கட்சி ஆகியன உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களைப் பகிஷ்கரிக்கத் தீர்மானித்தன. அக்கட்சிகள், அரசாங்கம் உள்ளூராட்சித் தேர்தல்களை நடத்துவதன் மூலம் பாராளுமன்றப் பொதுத் தேர்தல்களைப் பின்தள்ளிப் போட முனைகிறது எனக் குற்றம் சாட்டினர்.

ஆரம்ப கட்டத்திலேயே இச்சூழ் நிலைகள் தேர்தல்களை நடத்தத் தடையாக இருந்தன. சற்றும் எதிர்பாராத முறையில் நாட்டில் நடைபெற்ற அரசியல் வன்முறைகள் சட்டத்தையும் ஒழுங்கையும் சீர்குலையச் செய்தது. இது அரசாங்கத்தின் வலுவற்ற தன்மையை வெளிக்காட்டியதுடன் உள்ளூராட்சித் தேர்தல்களைக் காலவரையறையின்றித் தள்ளிப் போடச் செய்தது. இலங்கை — இந்திய ஒப்பந்தத்தின் பின் ஜனதா விமுக்திப் பெரமுண என்ற மக்கள் விடுதலை முன்னணி இந்த ஒப்பந்தத்தை ரத்துச் செய்யக்கோரி வன் முறைகளில் இறங்கியது. இவர்கள் உள்ளூராட்சி மன்ற அபேட்சகர்களை மிரட்டிப் பயங்காட்டினர். விசேடமாக மாகாண சபை அங்கத்தவர்களும், பிரதேச சபைகளுக்குப் போட்டியின்றித் தெரிவானோரும் இவர்களின் மிரட்டல்களுக்குட்பட்டனர். அநேக உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களை இராஜினாமாச் செய்யத்தூண்டிற்று. இக்காலகட்டத்தில் 7 மாநகர

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சபை உறுப்பினர்கள், 21 நகர சபை உறுப்பினர்கள், 138 பிரதேச சபை உறுப்பினர்கள் இராஜிநாமாச் செய்தனர். இந்த உறுப்பினர்கள் அனைவரும் ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்தவர்களாயிருந்தனர். இந்த நடவடிக்கைகள் தங்களை முற்றும் செயலற்றதாக்கிவிட்டதெனத் தேர்தல் ஆணையாளர் தமது 1989ம் ஆண்டறிக்கையில்[8] குறிப்பிட்டுள்ளார்.

1988ல் சிறீலங்கா சுதந்தரக் கட்சி மக்கள் முன்வைத்த தேர்தல் விஞ்ஞாபனத்தில், முன்பிருந்த ஜனநாயக அமைப்புக்களான உள்ளூராட்சி நிறுவனங்களை பாதுகாக்கத் தன்னை அர்ப்பணிப்பதாகவும், கிராம சபை முறையைத் திரும்பவும் கொண்டுவரத் தாம் முயல்வதாகவும் தெரிவித்தனர். நாட்டில் உள்ளூராட்சி நிறுவனங்களை மீண்டும் இயங்கச் செய்ய வேண்டுமென்ற எண்ணம், பரவலாக அரசியல் வட்டாரங்களில் இருந்தது. அத்துடன் நாட்டில் ஏற்பட்ட அரசியல் வன்முறைகளை சர்வாதிகார முறையில் அடக்கிய பிற்பாடு பிரேமதாசாவின் அரசு தனக்கு மக்கள் மத்தியில் ஆதரவு உண்டா என்பதைப் பரீட்சிக்கும் ஒரு களமாகவும் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களைப் பாவிக்க வேண்டிய தேவையும் இருந்தது. அரசாங்கத்தின் அபிவிருத்தி அணுகு முறையானது கிராம வளங்களை அதி உச்ச கட்ட பாவனைக்கு உட்படுத்துவதைக் கோரியது இதற்குக் கிராம மக்களை அரசியல் ரீதியில் ஒழுங்குபடுத்த வேண்டிய தேவையும் இருந்தது. அத்துடன் விம்மி, வெதும்பி வெடிக்கும் தருவாயில் இருக்கும் இளைஞர்களுக்கு பிரதிநிதித்துவம் கொடுக்க வேண்டிய அவசியமும் இருந்தது. இந்தப் பின்னணியிலேயே தான் அரசாங்கம் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களை நடத்தத் தீர்மானித்தது.

## 6.5 உள்ளூராட்சித் தேர்தல் 1991

1991ம் ஆண்டு நடைபெற்ற உள்ளூராட்சித் தேர்தலில் வடகிழக்கைத் தவிர்ந்த 17 மாவட்டங்களில் 239 உள்ளூராட்சி அமைப்புகளுக்கு மூன்று மட்டத்தில் தேர்தல்கள் நடைபெற்றன இவற்றில் 197 பிரதேச சபைகளும் 32 நகர சபைகளும், 10 மாநகர சபைகளும் அடங்கும். பிரதேச சபைகளில் மட்டும் 3542 பிரதிநிதிகள் இடம் பெற்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1977ம் ஆண்டிற்கு முன் வேட்பு மனுத்தாக்கலுக்கென்று ஒரு குறிக்கப்பட்ட காலம் இருக்கவில்லை; மாறாக ஒரு குறிப்பிட்ட தினத்தில் வேட்பாளர்கள் வேட்பு மனு தாக்கல் செய்து வந்தனர், இது 1978ம் ஆண்டு தேர்தல் சட்டத்தின்படி தேர்தல் ஆணைக்குழுவின் பரிந்துரையின் பேரில் வேட்பு மனுத்தாக்கல் செய்ய ஒரு குறிப்பிட்ட காலம் குறிக்கப்பட்டது. உள்ளூர் ஆட்சித்தேர்தலில் எல்லா உள்ளூராட்சித் தொகுதிகளுக்கும் ஒருநாள் தேர்தல் என்பது கடந்த காலத்தில் நடைபெறவில்லை. 1991ம் ஆண்டு மே மாதத்தில் நடைபெற்ற உள்ளூராட்சித் தேர்தலே முதன் முதலில் நாட்டில் நடைபெற்ற ஒரு நாள் தேர்தலாகும். இதில் நாட்டில் உள்ள அரசியல் கட்சிகளுக்கிடையில் மாபெரும் போட்டி நிலவியது. பாராளுமன்ற தேர்தல் போன்று இந்தத் தேர்தலும் அனுமதி பெற்ற எல்லா கட்சிகளும் பங்கு பற்ற கூடியதாயிருந்தது. இந்த அரசியல் கட்சிகளின் அனுமதி பாராளுமன்ற தேர்தல் சட்டத்தில் 7வது சரத்தின்படி அமைந்து, 29 அரசியல் கட்சிகள் அன்று அனுமதி பெற்றிருந்தனர்.

## 6.5.1 இளைஞர் பிரதிநிதித்துவம்

இளைஞருக்கு விசேஷ பிரதிநிதித்துவம் வழங்கும்படி அரசியல் கட்சிகள் கேட்கப்பட்டிருந்தன.[7] 1987ல் உள்ளூராட்சி வீடமைப்பு மந்திரியாகவிருந்த அதிபர் பிரேமதாசா, இளைஞருக்கு தேர்தலில் போட்டியிட அதிக சந்தர்ப்பங்களை கொடுக்கும்படியான சட்டத்தை அமுல்படுத்த முயற்சி செய்தார். இந்தச் சட்டத்தின் படி ஒரு குறிக்கப்பட்ட தேர்தலில் வேட்பு மனு தாக்கல் செய்யும் வேட்பாளர்களில் 40% வேட்பாளர் இளைஞராயிருக்க வேண்டும். எனவே அவர்கள் தங்கள் வேட்பு மனுக்களுடன் அவர்களது பிறப்பு சான்றிதழின் ஒரு பிரதியும் இணைக்கப்பட்டிருக்க வேண்டும்[8] எனவும், இந்தச் சட்டம் ஏனைய கட்சிகளின் ஆதரவுடன் நிறைவேற்றப்பட்டு உள்ளூர் தேர்தல் அதிகாரிகளின் (இல. 25, 1990) சட்டத்தில் இடம் பெற்றது.

இளம் வேட்பாளரின் வயது 18க்கும் 35க்குமிடையில் இருக்க வேண்டும் என்பதே, இந்த பிறப்பு சான்றிதழ் இணைக்கும் விசயம் வேட்பு மனுதாக்கல் செய்யும் சரித்திரத்தின் ஒரு புதுமையான அம்சம் என்பது குறிப்பிடத்தக்கது. தேர்தல் கட்டு பணம் அந்தந்த தொகுதியில் உள்ள வேட்பாளரின் தொகை பொறுத்து மாற்றமடைந்திருந்தது. 236 உள்ளூராட்சி அமைப்புகளில் 10

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாநகர சபைகளும் 32 நகர சபைகளும் 194 பிரதேச சபைகளும் 29 அனுமதிக்கப்பட்ட கட்சிகளில் இருந்து தங்கள் வேட்பு மனுக்களை சமர்ப்பித்த 11 கட்சிகளின் வேட்பு மனுக்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டன.

கட்சிப்பட்டியல் முறை, விகிதசமப் பிரதிநிதித்துவ முறையின் கீழ் கொண்டுவரப்பட்ட ஒரு தேர்தல்முறை, இது சுயேச்சை குழுக்களின் நிலைப்பாட்டை வரவேற்பதில்லை; காரணம்; சுயேச்சை குழுக்கள் ஒரு பட்டியலின் கீழ் வருவது சாத்தியமில்லாததே; ஆனால் விகிதசமப் பிரதித்துவ முறையின்படி அமைக்கப்பட்ட தேர்தல் சட்டங்கள் சுயேச்சைகளின் நிலைப்பாட்டை ஒத்துக்கொள்ளுகிறது. இது குறிக்கப்பட்ட சட்டத்தில் காணப்படும் ஒரு முரண்பாடு எனலாம். உதாரணமாக 1991ம் ஆண்டு மார்ச் மாதம் 10ம் திகதி 112 சுயேச்சை குழுக்கள் உள்ளூராட்சி தேர்தலில் போட்டியிட வேட்பு மனு கொடுக்க வந்தன. ஆனால் 100 வேட்பு மனுக்கள் தான் ஏற்றுக்கொள்ளப்பட்டன. இவற்றில் 82 குழுக்கள் தான் போட்டியில் பங்குபற்றின. ஏறக்குறைய மூன்றில் ஒரு பகுதி உள்ளூராட்சி தேர்தல் தொகுதிகளில், 75 மன்றங்களில் இவர்கள் போட்டியிட்டனர். கலைக்கப்பட்ட அரசியற்கட்சிகளில் இருந்து வந்த சிலர் சுயேச்சைக் குழுவென்ற பெயரில் போட்டியிட்டனர். முக்கியமாக சிதறிய அங்கத்தவர் மத்தியில் ஒரு ஒற்றுமையை கொண்டு வரும்.

### 6.5.2 தேர்தல் முறைகள்

1977 ம் ஆண்டிலிருந்து ஐக்கிய தேசியக் கட்சி, இலங்கை தொழிலாளர் காங்கிரசுடன் ஒரு அரசியல் தேர்தல் உறவை நிலை நாட்டி வந்தது. இதன் காரணமாக ஐ. தே. க. வும் இ. தொ. க வும் ஒரே சின்னத்தின் கீழ் போட்டியிட்டன. அதே பிரகாரம் சிறீலங்கா சுதந்திரக் கட்சியும், லங்கா சமசமாஜக் கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி போன்றவற்றுடன் ஒரு சில தொகுதிகளில் ஒரே சின்னத்தின் கீழ் போட்டியிட்டும், பெரும்பான்மையான பகுதிகளில் தனித்து தங்கள் தங்கள் சின்னத்தின் கீழ் போட்டியிட்டும் வந்தன.

1991ம் ஆண்டு நடந்த உள்ளூராட்சி தேர்தல் அதற்கு முன் நடந்தேறிய தேர்தல்களைப் போலல்லாது, 17 மாவட்டங்களிலும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரே நாளில் நடந்த தேசிய தேர்தலாகும். ஏறக்குறைய ஒரு பாராளுமன்ற தேர்தலுக்குரிய எல்லா அம்சமும் இந்த தேர்தலில் காணக் கூடியதாகவிருந்தது. இதில் அதிபர் பிரேமதாசா, ஒரு கட்சி தலைவர் என்பதைவிட ஒரு நாட்டின் அதிபர் என்ற ரீதியிலேயே பிரச்சாரம் செய்தார். இதில் எதிர் கட்சியான சிறீலங்கா சுதந்திரக் கட்சி, பெரிய கூட்டங்களை ஒழுங்கு செய்வதற்கு பதிலாக மலையக மக்கள் முன்னணியுடன் இணைந்து மலையக மக்களை கவரும் நோக்குடன் தோட்டப் பகுதிகளிலேயே சிறு சிறு கூட்டங்களை நடத்தியது. தொழிற்சங்கங்களும், தொழிற்கிளை ஸ்தாபன செயலர்களும் இப்படிப்பட்ட கூட்டங்களில் முக்கிய பங்காற்றினர். எல்லா கட்சிகளும், உள்ளூராட்சி அங்கத்தினர்களும் இந்த மாவட்டத்திலுள்ள இந்திய தொழிலாளர்களின் வாக்குச் சீட்டைப் பெற எல்லா முயற்சிகளையும் செய்தனர். எனவே தேர்தல் வெற்றிக்கு மிக அவசியமாக திகழ்ந்த இந்த இன மக்களின் ஆதரவை பெற இப்படிப்பட்ட கூட்டங்கள் மிகவும் உதவியாக இருந்தது.

உள்ளூராட்சி தேர்தலின் விதிப்படி 6038 இளைஞர்கள் வேட்பாளராக ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்க வேண்டும். நாட்டிலுள்ள எல்லா உள்ளூராட்சி தேர்தல் குழுக்களும் தகுதி பெற இந்த நிபந்தனையை எல்லா அரசியற்கட்சிகளும் நிறைவேற்றினாலும், வேட்பாளரை தெரிவு செய்வதில் ஒரு சில கட்டுப்பாடுகளை விதித்தன. பிரதேச சபையினதும், பாராளுமன்றத்தினதும் தேர்தல் முறைகள் ஏறக்குறைய ஒரே மாதிரியே இருந்தது. 1977ம் ஆண்டு நடந்த உள்ளூராட்சி தேர்தல் அதிகாரிகளினது மோசமான ஜனநாயக விரோத செயல்கள் 69ம் சரத்தில் குறிப்பிடப் பட்டுள்ளன, இதன்படி வேட்பு மனுப்பட்டியலில் முதலாவதாகவும் இரண்டாவதாகவும் பதியப்பட்டுள்ளவர்கள் தவிசாளராகவும். துணை தவிசரளராகவும் தெரியப்படுவார்கள். இதன்படி ஒரு தவிசாளரோ, துணை தவிசாளரோ அதிகப்படியான வாக்குகள் பெற்றுத் தெரியப்படவேண்டிய அவசியமில்லை. மன்ற உறுப்பினர்கள் ஒன்றுபட்டு முயற்சித்தால் கூட இந்த தவிசாளரையோ அல்லது துணை தவிசாளரையோ வெளியேற்றமுடியாது.எனவே இதன் மூலமாக உள்ளூராட்சிக்கு தேவையான மூலக்கோட்பாடு ஒன்று மறுக்கப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தவிதமாக வேட்பாளர் மனுவில் முதல் இரண்டு இடங்களிலும் இடம் பெற்று, பெரும் சலுகை பெறும் நிலைக்கு காரணமான ஏற்பாட்டை ஆளும் கட்சியும், எதிர்கட்சியும் மிகவும் கடுமையாக குறை கூறியது. இதன் விளைவாக 1987ம் ஆண்டு தவிசாளரும், துணைத்தவிசாளரும் குறிப்பிட்ட கட்சியின் செயலரால் மட்டும் நியமிக்கப்படலாம் என்ற ஒரு தீர்மானம் கொண்டுவரப்பட்டது. 1989ம் ஆண்டு தேர்தலுக்குமுன் 12.5% ஆக இருந்த வெட்டுப் புள்ளிமுறை 5% ஆக மாற்றப்பட்டது. இந்த முறை சட்ட விதிகளில் 15வது அரசியல் யாப்பு திருத்த சட்டமாக இடம் பெற்றது. உள்ளூராட்சி தேர்தல் ஆணையின்படி ஏற்கனவே 1/8 பங்காக இருந்த வெட்டுப்புள்ளிமுறை (பிரிவு 65(2)-அ) இப்போது மாற்றப்பட்டு ஜனநாயக விரோத சட்டம் அகற்றப்பட்டது.

தொடக்க காலத்தில் விகிதாசாரப்பிரதிநித்துவ முறையின்படி கட்சிப் பட்டியல்முறை பாராளுமன்றத்திலும், உள்ளூராட்சி மன்றத்திலும் நடைபெறும் தேர்தல்களில் அனுமதிக்கப்பட்டது, கட்சிகள் தங்கள் நோக்கத்திற்கேற்ப தங்கள் வேட்பாளரை பட்டியலிட்டன. எனவே விகிதாசாரபிரதிநித்துவ முறையிலுள்ள இந்த குறைபாடுகள் நிவர்த்தி செய்யப்படவேண்டி இன்னொரு சட்டம் கொண்டுவரப்பட வேண்டியிருந்தது, இதன்படி வாக்காளர் தாங்கள் வாக்களிக்க விரும்பும் வேட்பாளரின் பெயருக்கெதிராக குறியிட வேண்டும். ஒரு வாக்காளர் தான் விரும்பும் கட்சிக்கு தனது வாக்கை அளிப்பதோடு அவருக்கு விருப்பமான மூன்று வேட்பாளருக்கு தனது வாக்கை அளிக்கக்கூடும். இந்த வாக்களிக்கும் முறை, உள்ளூராட்சி தேர்தல் விசயத்தில் மாற்றப்பட்டது. இந்த தேர்தலில் ஒரு வாக்காளர் தனது மூன்று வாக்குகளையும் தான் விரும்பும் ஒரே வேட்பாளருக்கு கொடுக்கலாம். இதன் மூலமாக வசதியற்ற கட்சிகள் பல தங்கள் வேட்பாளர்களை உள்ளூராட்சி மன்றங்களுக்கு தெரிவு செய்யும் சந்தர்ப்பத்தை பெறுகின்றன. இந்தமுறை அரசியல் கட்சிகளுக்கும், வேட்பாளருக்கும் பல பிரச்சினைகளைக் கொண்டு வந்தது. முக்கியமாக தேர்தல் பிரச்சாரத்தை பொறுத்தமட்டிலும், வாக்காளரைப் பொறுத்தமட்டிலும் சோர்வுறச் செய்யும் விளைவுகளைக் கொண்டுவந்தன. அத்துடன் வாக்காளரை பொறுத்தமட்டில் அவர்களுக்கு இது விசயத்தில் தேவையான விளக்கங்களை கொடுக்க எடுத்த முயற்சிகள் எல்லா மக்களையும் சென்றடையவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசியல் கட்சிகளும் இது விடயத்தில் கவனமெடுக்காத படியால் வாக்காளர்களே பல தவறுகள் பிரச்சினைகள் மத்தியில் இந்த முறையை அறியவேண்டியதாயுள்ளது.

உள்ளூராட்சி தேர்தல் அதிகாரிகள் ஆணை (இல,15 1987) முதல் முறை கொண்டு வரப்பட்ட போது மூன்று வேறு வேறான வேட்பாளருக்கு வாக்களிப்பதோடு ஒரு கட்சிக்கும் வாக்களிக்கலாம் என்ற முறையும், இலங்கையில் உள்ள விகிதாசார முறையில் ஒரு தனித்தன்மையான முறை என்பதை எடுத்துக் காட்டுகிறது. இந்த முறையைக் கொண்டு வந்தவர்கள்,சிறுபான்மை குழுக்களுக்கு பிரதிநிதித்துவம் கொடுக்கும் நோக்கமாக கொண்டுவரப்பட்ட ஒரு முயற்சியே என்று ஒத்துக்கொள்கின்றனர்.

## 6.6 உள்ளூராட்சி தேர்தலும் சர்வசன வாக்குரிமையும்

கிராமசபையின் வாக்குரிமைபற்றிய விடயம் அரசசபையில் மிகவும் சர்ச்சைக்குரியதாக எடுக்கப்பட்டு காரசாரமாக விவாதிக்கப்பட்டது. உள்ளூராட்சி அமைப்பில் கடை நிலையில் உள்ளதுதான் கிராமசபை. இந்த ஆணையின்படி (இல3,1889) ஐரோப்பியர், பறங்கியர், இந்தியத் தொழிலாளர் கிராமசபையில் இடம் பெற தகுதியற்றிருந்தனர். காரணம் இவர்கள் கிராமக்குழு உறுப்பில் இடம் பெறாததும், கிராமவரி செலுத்தாததுமே. 1924ம் ஆண்டு இந்த ஆணை திருத்தியமைக்கப்பட்ட போது மேலே குறிப்பிட்ட இனத்தவர் பெயர்கள் நீக்கப்படாமல் ஏற்றுக்கொள்ளப்பட்டது. ஆனால், 1937ல் எஸ். டபிள்யூ. ஆர். டீ. பண்டாரநாயக்கா உள்ளூராட்சி நிர்வாக மந்திரியாக இருந்தபோது 1924ல் கொண்டு வரப்பட்ட ஆணை திரும்பவும் திருத்தம் பெற்றது. இதன்படி கிராம எல்லைகளுக்கு உட்பட்ட தோட்ட நிலங்களுக்கு நிலவரி விதித்து, ஐரோப்பியருக்கும் பறங்கியருக்கும் வாக்குரிமை வழங்கி, இந்திய தோட்டத் தொழிலாளரை மட்டும் கிராமசபை வாக்குரிமையில் இருந்து தடுத்து வைத்தது. இந்திய தொழிலாருக்கெதிராக கொண்டுவரப்பட்ட அப்பட்டமான பாகுபாடு, அரச சபையில் இருந்த இந்திய அங்கத்தவர், இந்திய நிறுவனங்கள், இலங்கையிலுள்ள இந்திய பிரதிநிதிகள் மத்தியில் மட்டுமன்றி, சிங்கள முற்போக்கு அரசியல் வாதிகளிடமிருந்தும் முக்கியமாக லங்கா சமசமாஜக் கட்சியினரிடமிருந்தும் எதிர்ப்பை கொண்டு வந்தது கலாநிதி என். எம். பெரேரா இந்த தவறைக் கண்டித்து தனது எதிர்ப்பை முக்கியமாக மந்திரி சபை மீது காட்டினார். ஏழை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்களை சுரண்டி வாழும் ஐரோப்பிய தோட்ட முதலாளிமாருக்கு வாக்குரிமை அளித்து எந்தவொரு நிலத்தையும் உடைமையாகக் கொண்டிராத ஏழை இந்தியத் தொழிலாளிக்கு வாக்குரிமை கொடாதது மாபெரும் அநீதியென்றும், எந்தவொரு விவசாய தொழிலாளியை போன்றவன்தான், தேயிலைத் தோட்டத் தொழிலாளியும் என்றும்; இந்தியரோ, இலங்கையரோ நமது எதிர்ப்பு முதலாளித்துவத்துக்கு எதிராகத்தான இருக்க வேண்டுமே தவிர ஏழைத் தொழிலாளிக்கு எதிராக இருக்கக் கூடாதென்று தனது எதிர்ப்பைக் காட்டினர். ஆனாலும் இவ் வெதிர்ப்புகளையெல்லாம் அலட்சியம் செய்து இச்சட்டம் இன வேறுபாடின்றி எல்லா தோட்டத் தொழிலாளர்களின் வாக்குரி மைமையும் பறித்தது. எனவே 1938ம் ஆண்டு நடைமுறைப்படுத் தப்பட்ட ஆணையின்படி இந்திய தொழிலாளர் மட்டுமின்றி தோட்டங்களில் வாழ்ந்த எல்லா சிங்களத் தொழிலாளர்களும் தங்கள் கிராமசபை வாக்குரிமையை இழந்தனர்.

## 6.7 உள்ளூராட்சி தேர்தலும் மலையக பிரதிநிதிகளும்

கடந்த பல தசாப்தங்களுக்குப் பின் முதன் முதலாக மலையக மக்கள் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் (மாநகர, நகர, பிரதேச சபை) பங்கு கொண்டு வாக்களித்தது மட்டுமல்ல பெருமளவில் தமது பிரதிநிதிகளையும் தெரிவு செய்துள்ளனர். மலையக மக்கள் வாழும் எல்லா மாவட்டங்களிலும் தமது வாக்குகள் மூலம் பலரை தெரிவு செய்துள்ளனர். இ. தொ. கா. சார்பில் சேவல் சின்னத்தில் போட்டியிட்ட 2 பிரதேச சபை தொகுதிகளிலும் (அம்பேகம்புவ, நுவரெலியா) மொத்த ஆசனங்களான 49ல் 26ஐ கைப்பற்றினர். ஏனைய பிரதேசங்களில் இ தொ.கா., ஐ.தே.க, யுடன் இணைந்து போட்டியிட்டதில் மலையகத்தைச் சார்ந்த சுமார் 70 பேர் தெரிவுசெய்யப்பட்டனர். இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் சார்பில் 16 பேரும், இலங் கைத்தோட்டத் தொழிலாளர் செங்கொடி சங்கத்தின் சார்பில் ஒருவரும், நவ சமசமாஜ கட்சியின் சார்பில் ஒருவரும், தெரிந் தெடுக்கப்பட்டனர்.

மலையக மக்கள் கடந்தகால ஏமாற்றங்கள், புறக்கணிப்புகள், போன்றவற்றை சுமந்து விரக்தியின் விளிம்பில் நின்றவர்கள், அனைத்தையும் மறந்து இ.தொ.கா., ஐ.தே.க, கூட்டுக்கு தமது ஆதரவை நல்கியுள்ளனர். மலையக மக்கள் முன்னணி,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நுவரெலியா - அம்பேகமுவ, தலவாக்கொல்லை-லிந்துல ஆகிய இடங்களில் சுயேச்சையாக போட்டியிட்டது. நுவரெலியாவில் சுதந்திரக் கட்சியுடன் கூட்டுச் சேர்ந்தும், ஏனைய இடங்களில் தனித்தும் போட்டியிட்டு 8 தமிழர்களை வெற்றிப்பெறச் செய் துள்ளது. கண்டி மாநகர சபைக்கு 1 தமிழரும், நகர சபைக்கு 4 தமிழர்களும், பிரதேச சபைக்கு 16 தமிழர்களும் தெரிவுசெய்யப் பட்டனர். இது போன்று, எட்டியாந்தோட்டை, பதுளை போன்ற பகுதிகளிலும் பல மலையகத் தமிழர்கள் தெரிவாகியுள்ளனர். இதிலிருந்து இன்று மலையக மக்களிடையே இனரீதியான சிந்தனை முனைப்பு பெற்றுள்ளது தெளிவாகின்றது, ஏனெனில் பல இடங்களில் தமிழ் வேட்பாளர்களே கூடுதலான வாக்குகளை பெற்றுள்ளனர். மலையகப் பகுதிகளில் 75% அளவில் வாக்களிப்பு நடைபெற்றிருப்பது அவர்களின் ஆர்வத்தை வெளிப்படுத்துகின்றது. இருப்பினும் இத்தேர்தலில் முழு அங்கத்தவர் தொகையான 3.542ல் மலையகப் பிரதிநிதிகளின் தொகை 136 மட்டுமே, இது 3,84 சத வீதமாகும், மலையக மக்களின் சனத்தொகை இன்று ஏறக்குறைய 7சத வீதமாகும். ஆனால் இவர்களது சனத்தொகைக்கு ஏற்ப பிரதிநிதித்துவ படுத்தப்படவில்லை. இதன் காரணம் மலையக வாக்காளர்கள் பதியப்படாமையும், சில சபைகளில் போட்டியி டாமையுமாகும்.

**அட்டவணை 6.1 உள்ளூராட்சித் தேர்தல்—மலையகஅங்கத் தவர் (1991)[8]**

| சபைகளும் தொகையும் | | பங்கு பற்றிய சபைகள் | முதல் வர் / தவிசாளர் | பிரதிமுதல் வர் / பிரதி தவிசாளர் | அங் கத்தி னர் | தொகை |
|---|---|---|---|---|---|---|
| மாநகரசபை | 10 | 5 | — | 3 (பி.மு) | 4 | 7 |
| நகரசபை | 33 | 6 | — | 3 (பி.த) | 14 | 17 |
| பிரதேசசபை | 214 | 39 | 2(த) | 18 (பி.த) | 18 | 121 |

இத்தேர்தலில் வெற்றி பெற்ற மலையக அங்கத்தவர்களின் முழு விபரமும் பின்னிணைப்பு ஒன்றில் கொடுக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முடிவுரை

தோட்டத் தொழிலாளர்கள் பல்வேறு வழிகளிலும் உள்ளூராட்சி சபைகளுக்கு வருமானத்தை ஈட்டித் தருகின்ற போதிலும் இன்றும் இந்தச் சபைகள் மூலமாக மலையக மக்களுக்கு எவ்வித உதவிகளும் கிடைப்பதில்லை. இந்தத் தேர்தல் மலையக மக்களின் தீவிரமான அரசியல் ஈடுபாட்டிற்கு ஒரு கால்கோல் விழாவாக அமைந்துள்ளது.

இன்று வரையும் உள்ளூராட்சி சபைகள் இயங்குவதற்கு நிதியையும், வரியையும் கொடுத்துக் கொண்டிருக்கும் தோட்டங்களுக்கு இச்சபையினால் என்ன நன்மை கிடைக்கப்போகின்றது என்பது சரியாக தெரியவில்லை. மலையகப் பிரதிநிதிகள் இச்சபைகளில் இருப்பதனால் என்ன பலன் என்று வாக்காளர்கள் சிந்திக்கிறார்கள். இதற்கு காரணம் இன்னும் பெருந்தோட்டத் துறை ஒரு தனி அமைப்பாக இருக்கின்றதே தவிர இச்சபைக்குள் வருவதற்கான சட்ட மாற்றங்கள் இடம் பெறவில்லை. இதனால் மலையக மக்கள் வெறும் வாக்குகள் வழங்கும் இயந்திரங்களாகவே பயன்படுத்தப்படுகின்றனர். இந்தத் தேர்தலுக்குப் பின்பு திரு தொண்டமான் கூறியதாவது, ''இன்று எமது கரங்கள் பலப்பட்டுள்ளதால் நமது அடிப்படை தேவைகளையும், அன்றாட அவசியமான தேவைகளையும் நிறைவேற்றிக் கொள்ள முடியும்'' என்பதாகும். ஆனால் இந்த எதிர்பார்ப்புகள் அனைத்தும் ஏமாற்றத்தில் முடிந்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏழாம் அத்தியாயம்

# பொதுத்தேர்தல்- 1947 முதல் 1994

இலங்கை சுதந்திரமடைந்த காலம் தொட்டு 1977 ஆம் ஆண்டு வரை இருவகை தேர்தல்களை சந்தித்து வந்துள்ளது. இதில் பொதுத் தேர்தலே அதிக முக்கியத்துவம் பெற்றதாக இருந்தது.

ஒவ்வொரு நாட்டிலும் தேர்தல் தொடர்பான பொதுச் சட்டங்கள் இயற்றப்படும். எமது நாட்டிலும் தேர்தல் தொடர்பான சட்டங்கள் இயற்றப்பட்டு அரசியலமைப்பில் இடம் பெறச் செய்யப் பட்டுள்ளது. உதாரணமாக 1978ம் ஆண்டு உருவாக்கப்பட்ட இலங்கை ஜனநாயக சோசலிஷ குடியரசு அரசியமைப்புச்சட்டத்திற் கமைய இன்று இலங்கையில் நான்கு வகையான தேர்தல்கள் நடத் தப்பட்டு வருகின்றன. 1979 ம் ஆண்டு முதல் இன்று வரையும் இலங்கையில் 10 தேர்தல்கள் நடைபெற்றுள்ளன. இதில் ஜனாதி பதித்தேர்தலுக்கு அடுத்து முக்கிய இடத்தை பெறுவது பொதுத் தேர்தலாகும்.

இந்த அத்தியாயம் 1947ம் ஆண்டு தொடக்கம் 1994ம் ஆண்டு வரை நடைபெற்ற இந்த 10 தேர்தல்களில் சிறுபான்மை மக்களின், குறிப்பாக மலையகத் தமிழர்களின் பங்களிப்பு எத்தகையது, அவர் கள் சார்ந்த கட்சிகளின் நிலைபாடு, அவர்களின் பிரதிநிதிகள் போன்ற அம்சங்களை ஆராய்கின்றதாக உள்ளது. இத்தேர்தல்கள் மலையக மக்களுக்கு ஆற்றியுள்ள நன்மைகள், தீமைகள், அவர் கள் மீது ஏற்படுத்திய தாக்கங்கள் பற்றிய ஒரு முழுமையான கண் ணோட்டத்தை செலுத்துவதே இதன் நோக்கம். தேர்தல் சட்டங்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கள் ஜனநாயக கோட்பாடுகளை பாதுகாக்கும் ஒரு சாதனமாக இருக்கின்றது. எமது நாட்டின் தேர்தல் சட்டங்கள், அவற்றை நடைமுறைப்படுத்தும் போது மலையக மக்களுக்கு அது எந்த அளவு சாதகமானதாக உள்ளது என்பது பற்றியெல்லாம் இந்த அத்தியாயம் விபரமாக கூறுகின்றது.

## 7.1 அரசியல் யாப்பும் பொதுத்தேர்தல்களும்

1931ம் ஆண்டு டொனமூர் அரசியல் யாப்பு நடைமுறைக்கு வந்த காலம் முதல், மேலும் அரசியல் திருத்தங்கள் கொண்டு வரப்பட வேண்டும் என்ற கோரிக்கைகள் எழுந்தன. யாப்புத் திருத்தத்திற்கான முயற்சிகள் மேற் கொள்ளப்பட்ட போதிலும் மாற்றங்கள் எதுவும் நடைபெற வில்லை.

அக்கால கட்டத்தில் 2ம் உலகயுத்தம் ஆரம்பித்திருந்த படியால், யுத்தத்தில் தமக்கு ஒத்துழைப்பு வழங்குமாறும், யுத்தம் முடிந்தபின் வேண்டிய சீர்திருத்தங்கள் செய்யப்படுமென்றும் அரச அதிகாரிகள் கூறினர். அதன் பிரகாரம் 1945ல் சோல்பரி பிரபு தலைமையில் விசாரணைக் குழு ஒன்று அமைக்கப்பட்டது. 1947ல் அந்த அரசியலமைப்பு முறை நடைமுறைக்கு வந்தது. மகா தேசாதிபதி முறை, இரண்டு சபைகளைக் கொண்ட பாராளுமன்ற முறை, மந்திரி சபை (கபினற்) முறை போன்றவற்றை ஏற்படுத்துதல்; நீதிச்சேவை, அரசாங்க சேவை தொடர்பான ஏற்பாடுகள் என்பன அரசியல் யாப்பின் அடிப்படைப் பண்புகளாகும். பாராளுமன்ற ஜனநாயக முறையைப் படிப்படியாக இலங்கையில் ஏற்படுத்துவது ஆங்கிலேயருடைய குறிக்கோளாக இருந்தது. இலங்கைக்குச் சுதந்திரம் வழங்க வேண்டிய காலம் நெருங்கிவிட்டதென சோல்பரி பிரபு கூறியபடியால் இங்கிலாந்தில் இருப்பது போன்ற பாராளுமன்ற முறையை ஏற்படுத்தினால், அது முடிக்குரிய நிர்வாகமாக அமையும் என்றும், ஆகையினால் பிரித்தானிய அரசின் பிரதிநிதியாக மகா தேசாதிபதி ஒருவர் நியமிக்கப்படலாம் என்றும் சோல்பரிப் பிரபு சிபார்சு செய்தார். சனப்பிரதிநிதிகள் சபை, செனற்சபை என்ற இருவகை சபைகளைக் கொண்டதாக பாராளுமன்றம் அமையும் எனவும் சிபாரிசு செய்யப்பட்டது. உலகின் பல நாடுகளில் இரண்டாம் சபை இருப்பதனாலும், அது சிறுபான்மையினரது உரிமைகளைப் பாதுகாக்க உதவும் என்பதாலும் இரண்டாம் சபைகளைச் சிபாரிசு செய்தார். அரசசேவை: நிதிச் சேவை தொடர்பாக பிரித்தானியாவில் இரண்டு ஆணைக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழுக்கள் இருந்தன. அதே போன்ற முறையை சோல்பரி இங்கும் ஏற்படுத்தினார். எனவே பிரித்தானிய அரசியல் முறையைப் பின்பற்றி (வெஸ்ற்மினிஸ்ரர் முறை) இங்கும் அரசியல் யாப்பைத் தயாரித்து அளிப்பது ஆங்கிலேயரின் நோக்கமாக இருந்தது.

சோல்பரியாப்பிலுள்ள ஜனநாயக ஒழுங்கு முறைகளும், பிரதேசவாரிப் பிரதிநிதித்துவமும்[1] இலங்கையிலுள்ள சிறுபான்மையினரை அச்சதுக்குள்ளாக்குவதாக சோல்பரி ஆணைக்குழு முன் சாட்சியம் கூறப்பட்டது. சிறுபான்மையினரின் இந்தப்பயம் நியாயமானது என சோல்பரி ஏற்றுக் கொண்டாராயினும் இனவாரி முறையை ஏற்படுத்த அவர் இணங்கவில்லை.

## 7.2 அரசியல் யாப்பும் சிறுபான்மையினரும்

அரசியல் யாப்பில் சிறுபான்மையினரின் உரிமைகளைப் பாதுகாக்கும் நோக்கத்துடன் செய்யப்பட்ட ஒழுங்குகள் பின்வருமாறு:

—நியமன அங்கத்துவ முறை,

—பல அங்கத்தவர் தொகுதிகள்,

—செனற் சபை,

—நீதிச் சேவையும், அரசாங்க சேவையும்.

—29வது சரத்து.

### 7.2.1 29வது சரத்து

மேற்கூறப்பட்ட காப்பீடுகள் நடைமுறையில் விவாதத்திற்குரியனவாகும். நடைமுறையில் மிக உயர்ந்த காப்பீடாகக் கருதப்பட்ட 29வது சரத்துக்கூட அவ்வாறு அமையவில்லை. அவ்விதியின்படி குறிப்பிட்ட ஒருசமூகத்தினருக்கு விசேட சலுகைகள் வழங்குதல் அல்லது குறிப்பிட்ட ஒரு சமூகத்தினரைப் பாதிக்கக் கூடிய மசோதாக்களைப் பாராளுமன்றம் நிறைவேற்றாமல் பார்த்துக் கொள்ளுதல் ஆகியன முக்கிய இடம் பெறுகின்றன. ஆனால் அப்படியான மசோதாக்களைப் பாராளுமன்றம் நிறைவேற்றினால் மகாதேசாதிபதி அதற்குக் கைச்சாத்திட மறுத்து அதனை மன்னரின்கையெழுத்திற்கு அனுப்பிவைக்கலாம். உதாரணமாக 194 மல் நிறைவேற்றப்பட்ட இலங்கைப் பிரஜா உரிமைச் சட்டத்தையும், 1949ம் ஆண்டு காண்டுவரப்பட்ட இந்திய பாகிஸ்தானிய (பிரஜா உரிமைச்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சட்டத்தையும், 1949ம் ஆண்டு பாராளுமன்றம் கொண்டு வந்த 8வது சரத்தையும் குறிப்பிடலாம். இவற்றின் மூலம் அன்றைய அரசாங்கம் இலங்கையின் சனத்தொகையில் 12 வீதமானோரை நாடற்றவர்களாக்கியது. 1956ல் கொண்டுவரப்பட்ட தனிச் சிங்கள மசோதாவும் இலங்கையில் ஒரு குறிப்பிட்ட சமூகத்தினரைப் பாதிக்கும் ஒரு நடவடிக்கையாக அமைந்தது. புத்த சமயத்துக்கு விசேட சலுகை வழங்கியதும், அதற்கு மகாதேசாதிபதியின் கையொப்பம் பெற்று, அதைச் சட்டமாக்கியதும் குறிப்பிடப்பட வேண்டிய தொன்றாகும். இவற்றின் மூலம் சோல்பரி யாப்பு சிறுபான்மையினரின் கொள்கைகளைப் பாதுகாப்பதற்குப்பதிலாக அவர்களை இரண்டாந்தரப் பிரசைகளாக்கியது.

## 7.2.2 நியமன அங்கத்தவர்கள்

நியமன அங்கத்துவ முறையில் 6 ஆசனங்களை ஒதுக்கி அதில் சிறுபான்மை அங்கத்தினரை நியமித்தாலும் அவர்கள் நடைமுறையில் சிறுபான்மையினருடைய கொள்கைகளை ஆதரிப்பதற்குப் பதிலாக தமக்கு நியமனம் கொடுத்த அங்கத்தவருடைய அபிப்பிராயத்தையே ஏற்றுக் கொண்டனர். இவர்களுள் அநேகர் பறங்கியரும் ஆங்கிலேயரும் ஆவர்.

## 7.2.3 பல அங்கத்தவர் தொகுதி

இந்த மட்டத்திலும் சிறுபான்மையினர் நன்மையை அடையவில்லை, சிறுபான்மையினருக்கு உதவும் நோக்குடன் சோல்பரி விசாரணைக்குழுசிபாரிசு செய்து ஏற்படுத்திய இந்தஏற்பாடு எதிர்பார்த்த நன்மையை சிறுபான்மையினருக்குக்கொண்டு வருவதற்குப் பதிலாக மென்மேலும் பாதிப்பையே ஏற்படுத்தியது. உதாரணமாக சிறுபான்மையினர் அங்கத்துவம் பெறும் நோக்குடன் ஏற்படுத்தப்பட்ட நான்கு இரட்டை அங்கத்தவர் தொகுதியிலும், ஒரு மூன்று அங்கத்தவர் தொகுதியிலும் 1977வரை ஒரு தமிழ் அங்கத்தவரும் தெரியப்படாமல் சிங்கள, முஸ்லிம் அங்கத்தவர்களாகவே தெரியப்பட்டமை குறிப்பிடத்தக்கது, இதன் மூலம் பாராளுமன்றத்தில் சிங்களப் பிரதிநிதிகளின் தொகை அதிகரிக்கத் தொடங்கியது.

## 7 3 தேர்தல் விதிகளும் அங்கத்தவர் தொகையும்.

1946ல் சோல்பரி யாப்பு ஏற்படுத்திய தேர்தல் ஒழுங்கு முறையின்படி 1000 சதுரமைலுக்கு ஒரு தொகுதி அல்லது 75,000

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்களுக்கு ஒரு தொகுதி என்ற அடிப்படையில் 10 வருடங்களுக்கு ஒரு முறை தேர்தல் தொகுதி நிர்ணயக் குழு தொகுதிகளை வரையறை செய்ய வேண்டும். வேண்டிய இடங்களில் பல அங்கத்துவ தொகுதிகளையும் உருவாக்கலாம்.

1947ம் ஆண்டு அரசியல் யாப்பின்படி பாராளுமன்றத்தில் 101 அங்கத்தினர்கள் இடம் பெற்றனர். இவர்களில் 95 பேர் தொகுதி அடிப்படையில் ஒவ்வொரு 5 வருடங்களுக்கு ஒரு முறை மக்களால் தெரிவு செய்யப்பட்டனர். 6 பேர் நியமன அங்கத்தவர்களாக நியமிக்கப்பட்டனர். ஆனால் உறுப்பினர் தொகை 10 வருடங்களுக்கு ஒருமுறை சனத்தொகைக் கேற்ப மாற்றம் பெற்றது. இந்தயாப்பின்படி இலங்கையில் சனப்பிரதி நிதிகள் சபை, செனற்சபை என இரு சபைகள் இருந்தன. செனற்சபையில் 30 அங்கத்தினர் இடம் பெற்றனர். இவர்களில் 15 பேர் பிரதம மந்திரியின் பரிந்துறையின் பேரில் நியமிக்கப்பட்டனர். மீதிப் 15 பேரில் சனப்பிரதிநிதிகள் சபையில் ஒற்றை மாற்று முறையில் தெரிவு செய்யப்பட்டனர். இதில் 1/3 பங்கினர் மூன்று ஆண்டுகளுக்கு ஒருமுறை பதவி விலகி, புதியவர்களுக்கு இடம் கொடுக்க வேண்டும். நீதிமந்திரி உட்பட குறைந்து இரண்டு மந்திரி மார் செனற்சபையிலிருந்து நியமிக்கப்பட வேண்டும். செனற்சபை தனக்கெனத் தலைவரைத் தெரிவு செய்து கொள்ள வேண்டும். இச்சபையில் கூடுதலானோர் அரசாங்கக் கட்சிக்குச் சார்பானவர்களே இருந்தனர். இதனால் சிறுபான்மையினருக்கு எதிர்பார்த்த நன்மைகள் கிட்டவில்லை.

இச்சபை முதலாம் சட்ட மன்றத்தில் கொண்டுவரப்படும் நிதி மசோதாவைத் தவிர ஏனைய மசோதக்களை விவாதிக்கும் அதிகாரத்தைப் பெற்றிருந்தது. மேலும் அத்தகைய மசோதாக்களைக் காலதாமதம் செய்வதற்கும் அதிகாரம் பெற்றிருந்தது. சிறுபான்மையினரைப் பாதிக்கும் சட்ட மூலங்கள் சனப்பிரதிநிதிகள் சபையில் நிறைவேற்றப்பட்டாலும், சிறுபான்மையினரைப் பாதுகாக்கும் கடமை செனற்சபைக்கு இருந்தது. ஆனால் நடைமுறையில் இது எதிர்மாறாகத் தான் செயற்பட்டது. எனவே இரண்டாம் மன்றமான செனற்சபை மேலதிகமான சட்டமன்றமாக விளங்கியதேயன்றி சிறுபான்மையினரைப் பாதுகாக்கும் மன்றமாக விளங்கவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 7.4 பாராளுமன்றத்தின் கடமைகள்

பாராளுமன்றம் மக்களால் தெரிவு செய்யப்படும் சட்டவாக்க மன்றமாகும். எனவே மக்களால் தெரிவு செய்யப்படும் உறுப்பினர் மக்களின் பிரதிநிதிகள் ஆவார். அவர் தன்னைத் தெரிவு செய்த மக்களின் பிரதேசத்தில் உள்ள குறைபாடுகளை நிவர்த்தி செய்ய வேண்டும். எனவே பாராளுமன்ற உறுப்பினர்களின் கடமைகள் பின்வருமாறு:-

— சட்ட உருவாக்கத்தில் பங்கு கொள்ளுதல்,

— அரசாங்கத்திடமிருந்து வேண்டிய உதவிகளைப் பெற்றுக் கொடுத்தல்.

— அரசாங்கம் செய்யும் தவறுகளைச் சுட்டிக்காட்டுதல்.

— மக்களுடைய குறைபாடுகளை விசாரித்தல்.

— அவற்றை நிவர்த்தி செய்ய நடவடிக்கை எடுத்தல்.

— தான் செய்யும் காரியங்கள் சரியானவை என மக்களுக்குத் தெரிய வைத்தல்.

— மேற்கூறியவற்றின் மூலம் தனது பதவியைத் தொடர்ந்து காப்பாற்றிக் கொள்ளல்.

## 7.5 முதலாவது பாராளுமன்றத் தேர்தல்-1947

வெஸ்ற்மினிஸ்ரர் பாணியில் அமைந்த சோல்பரி அரசியல் யாப்பானது முதலாவது பாராளுமன்றத் தேர்தல் தொடக்கம் 1972 வரை நடை முறையில் இருந்து வந்தது குறிப்பிடத்தக்கது. இவர்களால் நியமிக்கப்பட்ட தொகுதி நிர்ணய ஆணைக்குழு நிர்ணயித்த தொகுதிகளின் அடிப்படையில் தேர்தல் நடத்தப் பட்டது. ஆயினும் சிறுபான்மையினரைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அங்கத்தினர் தொகையைப் பொறுத்த மட்டில் எதிர்பார்த்த முடிவுகள் கிடைக்கவில்லை.

1947ல் நடத்தப்பட்ட முதலாவது பொதுத் தேர்தலில் 95 பேர் பிரதேச வாரியாகத் தெரிவு செய்யப்பட்டனர். மகா தேசாதிபதியால் 6 பேர் நியமிக்கப்பட்டனர். செனற்சபை 30 அங்கத்தினர்களைக் கொண்டு இயங்கியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் பிரித்தானிய மந்திரி சபையை ஒத்த மந்திரி சபையும் அறிமுகப் படுத்தி வைக்கப்பட்டது. அமைச்சர்களையும் பிரதிநிதிகளையும் மகா தேசாதிபதியே தெரிவு செய்யும் நிலையும் உருவாக்கப்பட்டது. நாட்டு நிர்வாகத்திற்குப் பொறுப்பாகவுள்ள இந்த மந்திரி சபையின் பிரதான உறுப்பினராகவுள்ள பிரதமர் முக்கியமாக பாதுகாப்பு, வெளிவிவகாரம் ஆகியவற்றிற்குப் பொறுப்பாக இருந்தார்.

## 7.5.1 தேர்தலும் மலையகத் தமிழரும்

சோல்பரி யாப்பின் படி இலங்கைத்தேர்தலில் கட்சி முறைக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது. மலையகத் தமிழரைப் பொறுத்தவரை இலங்கை-இந்திய காங்கிரஸ் என்ற அமைப்பு 1939ம் ஆண்டு ஜூலை 25 திகதியில் மலையக மக்களின் நலன் கருதி ஆரம்பித்து வைக்கப்பட்டது.[2] இதை ஆரம்பித்தவர்கள் பண்டிற் ஜவகர்லால் நேருவின் ஆலோசனைப்படி அன்றைய இந்திய மக்கள் மத்தியில் இருந்த பல்வேறு அமைப்புகளை (ஜாதி அடிப்படையில் இயங்கிய பாரத சேவா சங்கம், நாடார் மகா ஜன சங்கம், பாண்டிய வேளாளர் சங்கம், ஹரியானா சேவா சங்கம் போன்றவை) ஒன்று சேர்ந்து செயற்பட வைத்தனர். இலங்கை - இந்திய காங்கிரசின் தலைமைத்துவமும், அதன் முக்கிய அங்கத்தினரும் இந்திய தொழிலாளர் மட்டில் அவ்வளவு ஆர்வம் கொண்டிருக்கவில்லை. இதன் முதல்வராக இலட்சுமணன் செட்டியாரும், இணைச் செயலாளர்களாக ஏ. அசீஸ், எச். எம். தேசாய் ஆகிய இருவரும், பொருளாளராக டி. எம். வோறாவும் தெரிவு செய்யப்பட்டனர்.

ஆரம்பத்தில் மலையகத் தொழிலாளர் இது விடயத்தில் அவ்வளவு ஆர்வம் காட்டவில்லை. காரணம் ஏற்கனவே நடேச ஐயரால் உருவாக்கப்பட்ட தொழிற் சங்கங்களுடனும், இடதுசாரிக் கட்சிகளுடனும் (லங்கா சமசமாஜக் கட்சி) கூடிய தொடர்பு கொண்டிருந்ததே. நடேச ஐயரின் இலங்கை இந்திய தொழிலாளரின் சம்மேளனம் ஏற்கனவே செயலாற்றத் தொடங்கியிருந்ததாலும், 1940ம் ஆண்டு ஜனவரி மாதத்தில் பதிவு செய்யப்பட்டதாலும் தொழிலாளர் இச் சம்மேளனத்துடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தனர். தொழிலாளர்களுடன் மேலும் அதிக தொடர்பை ஏற்படுத்தும் பொருட்டு 1940ம் ஆண்டு ஜூன் 25ந்திகதி இலங்கை இந்திய காங்கிரஸ் தொழிலாளர் சங்கம் எனப் பெயர் மாற்றப்

பட்டது. இதில் கங்காணி மாரின் பிள்ளைகளும், ஆங்கில அறிவு படைத்தவர்களும் ஆர்வம் காட்டி தொழிலாளர்களை அங்கத்தினர் களாகச் சேர்த்தனர். 1941ம் ஆண்டு இச்சங்கத்தில் 1, 30, 395 பேர் அங்கத்துவம் வகித்தனர். இலங்கை-இந்திய காங்கிரஸ் பின்னர் இலங்கை ஜனநாயக காங்கிரசாக மாறியது.

## 7.5.2. இலங்கை இந்திய காங்கிரஸ்

முதல் பாராளுமன்றத் தேர்தலில் இலங்கை-இந்திய காங்கிரஸ் என்ற பெயரின் கீழ் மலையக மக்கள் ஒன்று சேர்ந்து போட்டியிட் டனர். 1947ம் ஆண்டு ஆரம்பத்தில் ஐக்கிய தேசியக் கட்சி 42 ஆசனங்களையும், இடதுசாரிக் கட்சிகள் 18 ஆசனங்களையும் பெற்றனர். அதே வேளையில் இலங்கை-இந்திய காங்கிரஸ் மலைய கத்தில் 6 ஆசனங்களையும், அவர்கள் சார்பில் போட்டியிட்ட சுயேட்சைக் கட்சிகள் இரண்டு ஆசனங்களையும் பெற்றனர். ஐ.தே. கட்சி ஆட்சியை 6 நியமன அங்கத்தினருடனும் 1 சுயேட்சை அங்கத் தவருடனும் அமைத்தது. எதிர்க்கட்சியானது மூன்று மார்க்சீய அங்கத்தவர்களையும் 7 இலங்கை-இந்திய காங்கிரஸ் அங்கத்தவர் களையும், ஒரு சுயேட்சை அங்கத்தினரையும் கொண்டிருந்தது.

### அட்டவணை 7.1. மலையக பாராளுமன்ற அங்கத்தவர்கள்[8]

| அபேட்சகர் பெயர் | தேர்தல்தொகுதி | தமிழ் வாக்காளர் வீதம் | அதிகப்படியான வாக்கு |
|---|---|---|---|
| எஸ்.எஸ், சுப்பையா | பதுளை | 56% | 11,467 |
| குமாரவேலு | கொட்டகலை | 73.3% | 3,543 |
| சீ. ஆர். மோத்தா | மஸ்கெலியா | 73.4% | 5,137 |
| ஆர். இராசலிங்கம் | நாவலப்பிட்டி | 65% | 1,442 |
| ஆர். எஸ். தொண்டமான் | நூரளை | 68% | 6,136 |
| சி.வி. வேலுப்பிள்ளை | தலவாக் கொல்லை | 88.7% | 9,170 |
| கே. வி. நடராஜா (சுயேச்சை) | பண்டாரவளை | 35% | 2,195 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தேர்தலில் இந்தக் கட்சி சார்பாக அப்புத்தளை தேர்தல் தொகுதியில் போட்டியிட்ட ஆர். ஏ. நடேசன் 373 வாக்குகளினால் தோல்வியுற்றார். 1950ம் ஆண்டு திரு. சீ. ஆர். மோத்தா இறந்த பிற்பாடு நடந்த இடைத் தேர்தலில் இந்தக் கட்சி சார்பாக ஏ. அசீஸ் தெரிவு செய்யப்பட்டார். இத்தேர்தலுக்கு முன்பு அமைச்சர் சபைத்திட்டத்தின் படி இந்திய வம்சாவழி மக்களுக்கென ஒதுக்கப்பட்ட முழு ஆசனங்கள் 14. தொகுதி நிர்ணய கமிஷன் அகில இலங்கை ரீதியாக இந்திய வம்சாவழி மக்களுக்கு ஒதுக்கப்பட்ட ஆசனங்கள் 10. ஆனால் இவை இரண்டிற்கும் மாறாக அவர்களுக்கு இத்தேர்தல் மூலம் கிடைக்கப்பட்ட ஆசனங்கள் 7.

### 7.5.3 புதிய பிரஜாவுரிமைச் சட்டம்

1947ம் ஆண்டு நடைபெற்ற முதலாவது பொதுத் தேர்தலைத் தொடர்ந்து 1948ம் ஆண்டு பெப்ருவரி மாதம் 4ந் திகதி பிரிட்டிஸ் அரசிடமிருந்து இலங்கை சுதந்திரமடைந்தது. இலங்கை சுதந்தரமடைந்தபின் அன்றைய பிரதமர் டி. எஸ். சேனாநாயக்கா அவர்கள் இலங்கைப் பிரஜா உரிமைச் சட்டங்களைக் கொண்டுவந்தார். 1944ம் ஆண்டு சோல்பரி விசாரணைக்குழு நாட்டின் சட்ட திட்டம் பற்றி நடத்திய ஆய்வில் இலங்கை இந்திய பிரஜா உரிமைக்கு முதலிடம் கொடுத்தது. இந்தச் சோல்பரி விசாரனைக் குழு ஏற்கனவே டொனமூர் விசாரனைக்குழு கொண்டுவந்த தீர்மானங்களை அப்படியே அநுமதித்தாலும் இந்தியர்களைப்பற்றிய பிரச்சனை தொடர்பாக வேறுபட்ட எண்ணத்தையே கொண்டிருந்தது. 1945 ஜூலை மாதம் டி. எஸ். சேனநாயக்கா இலண்டன் சென்றபோது, ''இந்தியர் பிரச்சனை உங்கள் உள் நாட்டுப் பிரச்சனை, அதை வருங்காலத்தில் நீங்களே தீர்த்துக் கொள்ளுங்கள்''[4] என்று கூறப்பட்டது. இந்த ஆலோசனையின் அடிப்படையில்தான், நாடு சுதந்திரம் பெற்ற பின்பு ஐக்கிய தேசியக் கட்சி தான் அரசாங்கம் அமைப்பதற்குப் போதிய அங்கத்துவ பலம் கிடைக்காததற்கு மலையக மக்கள் இடதுசாரிக் கட்சிகளை ஆதரித்ததே காரணம் என்பதை அறிந்து, சிறுபான்மையினரான மலையக மக்களை மேலும் தேசிய சிறுபான்மையினராக்க முயற்சிகளை மேற்கொண்டது. இதற்காக ஒருபோதும் நடைமுறைப்படுத்தப்படாத ஒரு புதுவிதமான பிரஜா உரிமைச் சட்டத்தை நடை முறைப்படுத்த முற்பட்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்கனவே 1931ல் அதிக சிங்களவர்களைக் கொண்டு அமைக்கப்பட்ட சட்டசபையில், இந்தியர்களின் பிரஜா உரிமைபற்றி விவாதிக்கப்பட்டது. ஆனால் தங்களின் எண்ணங்களை இலங்கை சுதந்தரமடையும் வரை அமுலாக்க அவர்களால் முடியவில்லை. 1948ம் ஆண்டு சுதந்திர இலங்கையின் அரசாங்கம் சோல்பரி யாப்பு விதித்திருந்த சிறுபான்மையினரின் காப்பீடுகளுக்கு எதிராகத் தீர்மானங்களைப் பாராளுமன்றத்தில் நிறைவேற்றியது. இதற்கு உதாரணமாக 1948ம் ஆண்டு 18ம் இலக்கச் சட்டத்தைக் குறிப்பிடலாம். இதைத் தொடர்ந்து பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட சட்டங்கள் மலையகத் தமிழ் மக்களின் பிரஜா உரிமையைப் பறித்ததோடு அவர்களுடைய வாக்குரிமையையும் பறித்தது. இதனால் மலையக மக்கள் நாடற்றவர்களாகியதுடன் அரசியல் அனாதைகளும் ஆனார்கள். ஆனால் மலையக மக்கள் பிரதிநிதிகள் 1952ல் முதல் பாராளுமன்றம் கலைக்கப்படும் வரை தொடர்ந்து பாராளுமன்றத்தில் அங்கம் வகித்தார்கள்.

> ''போராட்டமே வாழ்க்கை, ஆம், மனிதனும் மனிதகுலமும் இயற்கையின் மூலாதார சக்திகளை எதிர்த்து நடத்தும் போராட்டமாக அது இருக்க வேண்டும். இந்ததலைசிறந்த போராட்டத்தை வர்க்க அரசாங்கமானது மனிதனைஅடிமைப்படுத்துவதற்கான, மனிதனின் உழைப்பின் மீது ஆதிக்கம் செலுத்துவதற்கான, அருவருக்கத்தக்க, போராட்டமாக மாற்றிவிட்டது.''[30]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அட்டவணை-7.2 முதலாவது பாராளுமன்ற தேர்தல் முடிவுகள் - 1947[5]

| | கட்சிகள் | போட்டியிட்டோர் | வெற்றி பெற்றோர் | தோல்வியுற்றோர் | வாக்களிக்கப்பட்ட வாக்குகள் தொகை |
|---|---|---|---|---|---|
| 1 | ஐக்கிய தேசியக் கட்சி | 98 | 42 | 56 | 751,432 |
| 2 | லங்கா சமசமாஜ கட்சி | 28 | 10 | 18 | 204,020 |
| 3 | தமிழ் காங்கிரஸ் | 9 | 7 | 2 | 82,499 |
| 4 | இலங்கை இந்திய காங்கிரஸ் | 7 | 6 | 1 | 72,230 |
| 5 | லெனினிஸ்ட் கட்சி | 10 | 5 | 5 | 113,193 |
| 6 | கொம்யூனிஸ்ட் கட்சி | 13 | 3 | 10 | 70,331 |
| 7 | லேபர் கட்சி | 9 | 1 | 8 | 38,932 |
| 8 | ஐக்கிய இலங்கை காங்கிரஸ் | 2 | 0 | 2 | 3,953 |
| 9 | சுவராஜ் கட்சி | 3 | 0 | 3 | 1,393 |
| 10 | சுயேட்சை குழுக்கள் | 181 | 21 | 160 | 549,381 |
| | கூட்டுத்தொகை | 361 | 95 | 26[illegible] | 1,887,364 |

★ இத்தேர்தல் ஆகஸ்ட் 23, 25, 26, 27, 28, 30, செப்டெம்பர் 1, 4, 6, 8, 9, 10, 11, 13, 15, 16, 17, 18, 20 ஆகிய திகதிகளில் நடைபெற்றது.

★ புத்தளம் மாவட்டத்தில் எச்.எஸ் இஸ்மாயில் (ஐ.தே.க) போட்டியின்றி தெரிவு.

★ பதிவு செய்யப்பட்ட வாக்குகளின் தொகை 3, 048, 145.

★ வாக்களிக்கப்பட்டவாக்குகளின் வீதம் 61.3

## 7.6 இரண்டாவது பொதுத் தேர்தல்-1952

1952ல்நடைபெற்ற இரண்டாவது பொதுத் தேர்தலில் அங்கத்தவர் தொகையில் எவ்வித மாற்றமும் செய்யப்படவில்லை. ஆனால் இந்திய வம்சாவழி மக்களின் வாக்குரிமை பறிக்கப்பட்டிருந்தபடியால் அவர்களால் தங்களுக்கெனப் பிரதிநிதிகளைத் தெரிவு செய்ய முடியவில்லை. அன்று புதிய சட்டத்தின் படி 8000 இந்தியர் மட்டுமே பிரஜா உரிமை பெற்று வாக்களிக்கத் தகுதி பெற்றிருந்தனர்.[6] இத்தொகை 1947ல் வாக்களித்த இந்தியர் தொகையின் 1/20பங்காகும். பழைய தொகையுடன் 5 வருடங்களின் பின் ஏறக்குறைய 200,000 மக்கள் வாக்களிக்கத் தகுதி பெற வேண்டிய நிலையில் 8000 பேரே தகுதி பெற்றிருந்தனர். இது இந்திய மக்களின் நியாயமான உரிமைகளில் கைவைத்த செயலாகும். இதற்கெதிராக மலையக மக்கள் தங்கள் பிரதிநிதிகளைத் தேர்தலுக்கு அனுப்ப முடியாதென்று 1952ம்ஆண்டு சத்தியாக்கிரகம் செய்தனர். ஆனால் இச்சத்தியாக்கிரகம் ஐக்கிய தேசியக் கட்சியின் கொள்கைகளில் எதுவித மாற்றத்தையும் ஏற்படுத்தவில்லை. மேலும் இச்சத்தியாக்கிரகம் கொழும்பில் நடைபெற்றபடியால் மலையக மக்கள் மத்தியில் எந்தவித விழிப்புணர்வையோ தாக்கத்தையோ கொண்டு வரவில்லை. இந்தச் சத்தியாக்கிரகம் 1952 ஏப்ரல் 25ந்திகதி தொடங்கி செப்டெம்பர்16ந்திகதி திடீரென முடிவுற்றது.

சோல்பரி அரசியல் யாப்பின்படி 14 அங்கத்தவர்கள் தெரிவதற்கென ஒதுக்கப்பட்ட பிரதேசங்களில் உள்ள அங்கத்தினர் தேர்தலில் பங்குபற்றாதபடியால் அந்த 14 ஆசனங்களும் குறைக்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால் அந்த இடங்களும் ஐக்கிய தேசியக் கட்சி சார்பாக போட்டியிட்ட சிங்கள அங்கத்தவர்களுக்குக் கொடுக்கப்பட்டது. அதேவேளை இடது சாரிக் கட்சிகளின் ஆசனங்களின் தொகையும் 18ல் இருந்து 13 ஆகக் குறைக்கப்பட்டது. இத்தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி 54 ஆசனங்களைப் பெற்றது, ஆட்சியையும் அமைத்தது. இதற்குக் காரணம் மலையக மக்களின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாக்குகள் பறிக்கப் பட்டதேயாகும். இது முதலாவது தேர்தலை விட மேலதிகமாக 12 ஆசனங்களை ஐ. தே. கட்சிக்கு ஈட்டிக் கொடுத்தது.

ஆனால் தேர்தல் முடிவடைந்த பின்பும் சத்தியாக்கிரகம் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருந்த படியால் இரண்டாவது பிரதமரான டட்லி சேனநாயக்கா, முன்னாள் அரசசபை அங்கத்து வரும், பெருந் தோட்டத்துறை சொந்தக் காரருமான எஸ். டீ.வைத் திலிங்கத்தை மலையக மக்கள் சார்பாக, நியமன அங்கத்தவராக பாராளுமன்றத்துக்கு நியமித்தார்.

"இக்கால அரசியல் பெரிதும் கட்சி வழியேஇயங்குவது. பெரும்பான்மை சிறுபான்மை வழி இயங்கும் கட்சி அரசியலில் மனச்சான்றுக்கு இடம் ஏது? அறம் கட்சியின் பாற்பட்டு நிற்கிறது. சில போது கட்சிஅரசியல் பெருந்தீங்கு விளைக்கவும் உறுத்தெழும். அவ்வேளையில் மனச்சான்று உடைய அறவோர் என் செய்தல் கூடும்? அவர் கட்சியினின்றும் விலகுதல் வேண்டும்; அல்லது மனச்சான்றை விற்று அடிமையாய் உழலல் வேண்டும். கட்சி அரசியலின் கொடுமையை-சிறுமையை-கயமையை என் வாழ்க்கை நன்கு அநுபவித்தது. ஆபாசக்கட்சி அரசியல் முறை மேல் நாட்டினின்றும் வந்து இறங்கிய சரக்குகளுள் ஒன்று. அது வாழ்க்கையில் போராட்டத்தை விளைவிப்பது.[31]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அட்டவணை-7.3 இரண்டாவது பாராளுமன்றத் தேர்தல்-1952[7]

| | கட்சிகள் | போட்டியிட்டோர் | வெற்றி பெற்றோர் | தோல்வியுற்றோர் | வாக்களிக்கப்பட்ட வாக்குகள் தொகை |
|---|---|---|---|---|---|
| 1 | ஐக்கிய தேசிய கட்சி | 81 | 54 | 27 | 1,026,005 |
| 2 | ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி | 48 | 9 | 39 | 361,250 |
| 3 | லங்கா சமசமாஜ கட்சி | 39 | 9 | 30 | 305,133 |
| 4 | கொம்யூனிஸ்ட் கட்சி | 19 | 4 | 15 | 134.528 |
| 5 | தமிழ் காங்கிரஸ் | 7 | 4 | 3 | 64,512 |
| 6 | தமிழ்அரசு கட்சி | 7 | 2 | 5 | 45,331 |
| 7 | லேபர் கட்சி | 5 | 1 | 4 | 27,096 |
| 8 | குடியரசுக் கட்சி | 9 | 0 | 9 | 33,001 |
| 9 | புத்த குடியரசு கட்சி | 3 | 0 | 3 | 3,987 |
| 10 | சுயேச்சை குழுக்கள் | 85 | 12 | 76 | 326,783 |
| | முழுத்தொகை | 305 | 95 | 211 | 2,327,626 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★ இத் தேர்தல் 1952ம் ஆண்டு மே மாதம் 24, 26, 28, 30 திகதி களில் நடைபெற்றது.

★ பதிவு செய்யப்பட்ட வாக்குகளின் தொகை 2, 990, 912

★ வாக்களிக்கப்பட்ட வாக்குகளின் வீதம் 74

## 7.7 மூன்றாவது பொதுத் தேர்தல்—1956

மலையக மக்களின் பிரஜா உரிமை பற்றிய வாக்கு வாதங்களும் அவர்களுடைய பிரதிநிதிகள் பற்றிய விவாதங்களும் நேரு-கொத் தலாவலை ஒப்பந்தம் உருவாகக் காரணமாயிருந்தன. இந்த ஒப்பந்தத்தின் படி இந்திய ஒப்பந்த பிரஜா உரிமையின் கீழ் பதிவு செய்யப்படும் மக்கள் ஒரு தனிப் பட்ட தேர்தல் இடாப்பில் பதிவு செய்யப்படுவார்கள். இந்த நிலைப்பாடு 10 வருடங்களுக்கு நீடிக் கும். எந்த ஒரு தேர்தல் தொகுதியிலும் 250 பேருக்கு மேல் இல்லாவிடில் அவர்களின் பெயர்கள் தேசிய தேர்தல் இடாப்பில் பதியப்படும். இந்த விசேஷ தேர்தல் இடாப்பில் பதிவு செய்யப் படும் மலையக மக்கள் பாரளுமன்றத்திற்கு அங்கத்தினரைத் தெரிவு செய்யும் தகுதி பெறுவர். ஆனால் இந்த அங்கத்தினர் தொகை இந்திய அரசாங்கத்தின் ஆலோசனையுடன் தான் நிர்ணயிக்கப்படும். இம்முறையை இலங்கை அரசாங்கம் நாலாவது தேர்தலை நடத்துவதற்கு முன் பூர்த்தி செய்ய வேண்டும். இந்த விசேஷ இடாப்புக்கெதிராக வீரகேசரிப் பத்திரிகை ஒன்று தான் எதிர்ப்புக்குரல் எழுப்பியது.[8]

ஆனால் இந்த விசேஷ ஒப்பந்தம் நடைமுறைப் படுத்தப் படு வதற்கு முன் மலையக மக்களுக்கு பல்வேறு பிரச்சனைகள் வந்தன. உதாரணமாக 1954ம் ஆண்டு மார்ச் மாதம் முதலாம் திகதி தற் காலிக இருப்பிட வசதி, அடையாள அட்டை போன்றவை நிறுத்தி வைக்கப் பட்டன; பிரஜா உரிமை இல்லாதவர்களுக்கு வேலை கொடுப்பது தடுக்கப்பட்டது; ஓய்வூதியம் நிறுத்தப்பட்டது. தற்கால இருப்பிட அநுமதி நிறுத்தி வைக்கப்பட்டபின், அது காலாவதியான பின் நாட்டில் நடமாடியவர்கள் கைது செய்யப் பட்டு தடுப்பு முகாம்களில் அடைக்கப்பட்டு நாடு கடத்தப் பட்டார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1954ம் ஆண்டு ஜுலை மாதம் இலங்கை அரசியல் அமைப்பில் உள்ள விசேஷ சட்டப் பிரிவு இல 35 இன்படி பாராளுமன்றத்தில் பிரதிநிதித்துவம் பெற இலங்கை பிரஜைகளாக பதிவு செய்யப்பட்டோர் பற்றிய விதிமுறைகள் பிரகடனப் படுத்தப்பட்டன. பாராளுமன்றத்திற்கு தெரிவு செய்யப்படும் அங்கத்தவர் தொகை 101இல் இருந்து 105 ஆக உயர்ந்தது. மேலதிகமான இந்த நான்கு அங்கத்தினரும் நாட்டில் உள்ள இந்திய, பாகிஸ்தானியர் தொகுதியை உருவாக்குவதற்காக கொண்டு வரப்பட்டனர். (Act 36 of 1954). ஏற்கனவே சம்மதித்ததின்படி இந்த முடிவு இந்திய பிரதமரின் அனுமதியை பெற வேண்டியதாக இருந்தது. ஆனால் இலங்கை அரசாங்கம் இந்தியப் பிரதமரின் ஆலோசனையையும், அனுமதியையும் கேட்காமல் விட்டதோடு மட்டுமின்றி, 1977ம் ஆண்டு தேர்தல் வரை தெரிவு செய்யப்பட்ட இந்திய பிரதிநிதித்துவமின்றியும் விடப்பட்டனர். 1956ல் நடந்த தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி 8இடங்களை மட்டும் பெற்றது. அவ்வருடம் எஸ். டபிலியூ. ஆர். டீ பண்டாரநாயக்கா 51 இடங்களைப் பெற்று மக்கள் ஐக்கிய கட்சியை ஆட்சிக்கு கொண்டுவந்தார். இவர் மலையக மக்களுடைய பிரத்தியேக தேர்தல் பதிவுச் சட்டத்தை ரத்து செய்தார். நியமன அங்கத்தவர்கள் கூட மலையக மக்கள் மத்தியிலிருந்து தெரிவு செய்யப்படவில்லை.

> "அரசியலில் பிறர் மீது வெறுப்புணர்ச்சி கொள்தல் வெட்கக் கேடானதும் இழிவானதுமான பங்கையே ஆற்றுகிறது."[32]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அட்டவணை-7.4 மூன்றாவது பாராளுமன்றத் தேர்தல்-1956[9]

| | கட்சிகள் | போட்டியிட்டோர் | வெற்றி பெற்றோர் | தோல்வியுற்றோர் | வாக்களிக்கப்பட்ட வாக்குகள் தொகை | வீதம் |
|---|---|---|---|---|---|---|
| 1 | மஹஜன எக்சத் பெரமுன | 60 | 51 | 9 | 1,046,277 | 39.5 |
| 2 | லங்கா சமசமாஜக் கட்சி | 21 | 14 | 7 | 274.204 | 10.4 |
| 3 | தமிழ் அரசுக் கட்சி | 14 | 10 | 4 | 142,758 | 5.4 |
| 4 | ஐக்கிய தேசிய கட்சி | 76 | 8 | 68 | 738,810 | 27.9 |
| 5 | கொம்யூனிஸ்ட் கட்சி | 9 | 3 | 6 | 119,715 | 4.5 |
| 6 | தமிழ் காங்கிரஸ் | 1 | 1 | 0 | 8,914 | 0.3 |
| 7 | சுயேட்சை குழுக்கள் (லேபர் கட்சி உட்பட) | 68 | 8 | 60 | 316,569 | 12.0 |
| | முழுத்தொகை | 249 | 95 | 162 | 2,391.538 | 69.0 |

★ இத்தேர்தல் 1956ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 5, 7, 10 திகதிகளில் நடைபெற்றது.

★ கட்டுப் பணம் இழந்தவர்கள் பற்றிய விபரம் கொடுக்கப்பட வில்லை.

★ பதிவு செய்யப்பட்ட வாக்குகளின் தொகை 3, 464, 159.

## 7.8 நாலாவது பொதுத்தேர்தல் 1960 மார்ச் 19ம் திகதி

இலங்கைச் சரித்திரத்தில், இத்தேர்தல் தான் ஒரே நாளில் நடைபெற்ற தேர்தல். இத்தேர்தலில் முன்பிருந்த 89 தேர்தல் தொகுதியை மாற்றி 145 ஆக தேர்தல் நிர்ணயக்குழு உயர்த்தியது. அத்தோடு முன்பிருந்த ஆறு நியமன அங்கத்தவர் முறையும் இருந்தது.

மலையக மக்களைப்பொறுத்தவரையில் இவர்களுடைய பிரஜாவுரிமை பறிக்கப்பட்ட பின்பு புதிதாக உருவாக்கப் பட்ட பிரஜாவுரிமைச் சட்டத்தின் பொதுத்தேர்தல் இடாப்பில் 50,000 மலையக வாக்காளர் பதிவு செய்யப்பட்டிருந்தனர். இத்தேர்தலில் இலங்கை ஜனநாயக காங்கிரஸ் (C.D.C) என்ற கட்சியின் கீழ் மலையகத் தமிழர் போட்டியிட்டனர். எஸ். தொண்டமான் நுவரேலியாவிலும், வீ.கே. வெள்ளையன் மஸ்கெலியாவிலும், ஏ. அசீஸ் கொழும்பிலும் போட்டியிட்டனர். ஆனால் எவரும் இத்தேர்தலில் வெற்றி பெற வில்லை. இவர்கள் மூவரும் பெற்ற மொத்த வாக்குகள் 8877 ஆகும். இது தேர்தலில் கிடைத்த மொத்த வாக்குகளின் .29 வீதமாகும். இவர்கள் தங்கள் தொழிற் சங்கம் மூலமாக ஆதரவு திரட்டினர். மலையக பிரதிநிதிகள் போட்டியிடாத இடங்களில் மலையக மக்கள் ஸ்ரீ.ல.சு.கட்சியை ஆதரித்தனர். இத் தேர்தலில் ஐ.தே.க சார்பில் போட்டியிட்ட 127 வேட்பாளருள் 50 பேர் தெரிவாயினர். எந்தவொரு கட்சிக்கும் ஆட்சியமைக்க போதுமான பெரும்பான்மை இல்லாதபடியால் 1960ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 23ம் திகதி நடைபெற்ற முதல் பாராளுமன்றத்தில், முறைப்படி வாக்கெடுப்பிற்கு விடப்பட்டபோது அவ்வாக்கெடுப்பில் தோற்கடிக்கப்பட்டதால் பாராளுமன்றம் கலைக்கப்பட்டு, திரும்பவும் பொதுத் தேர்தல் நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டது. இப் பாராளுமன்றத்திற்கு அன்றைய பிரதமராக டட்லி சேனநாயக்கா இருந்தார். இந்தத் தேர்தலிலும் மலையக பிரதிநிதிகளுக்கு நியமன அங்கத்துவம் கிடைக்க வில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அட்டவணை-7.5 நாலாவது பாராளுமன்ற தேர்தல் (மார்ச் 19ம்திகதி 1960)[10]

| | கட்சிகள் | போட்டி யிட்டோர் | தெரிவு செய்யப் பட்டோர் | தோல்வி யுற்றோர் | கட்டுப் பணம் இழந் தோர் | வாக்களித்த வாக்குகளின் முழுத் தொகை | வாக்கு களின் வீதம் |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | ஐக்கிய தேசிய கட்சி | 127 | 50 | 77 | 2 | 909,043 | 29.4 |
| 2 | ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி | 108 | 46 | 62 | 18 | 647,175 | 20.9 |
| 3 | தமிழரசுக் கட்சி | 19 | 15 | 4 | 1 | 176,444 | 5.5 |
| 4 | லங்கா சமசமாஜக் கட்சி | 101 | 10 | 91 | 56 | 325,286 | 10.5 |
| 5 | மஹஜன எக்சத் பெரமுன | 89 | 10 | 79 | 47 | 324,332 | 10.5 |
| 6 | இலங்கை ஜனநாயகக் கட்சி (எஸ்.பி.பி.) | 101 | 4 | 97 | 88 | 135,138 | 4.4 |
| 7 | கொம்யூனிஸ்ட் கட்சி | 53 | 3 | 50 | 39 | 147,612 | 4.8 |
| 8 | மக்கள் விடுதலை முன்னனி (ஜே.வி.பி.) | 2 | 2 | 0 | 0 | 11,201 | .3 |
| 9 | தமிழ் காங்கிரஸ் | 8 | 1 | 7 | 1 | 38,275 | 1.2 |
| 10 | போசத் பண்டாரநாயக்க பெரமுன | 1 | 1 | 0 | 0 | 9,749 | .32 |
| 11 | சமாஜவாதி மகஜன பெரமுன | 40 | 1 | 39 | தெரிய வில்லை | 23,253 | .75 |
| 12 | ஸ்ரீலங்கா ஜாதிக்க பெரமுன | 1 | 1 | 0 | 0 | 11,115 | .36 |
| 13 | சுயேட்சை குழுக்கள் | 167 | 7 | 160 | 125 | 282,797 | 9.1 |
| | கூட்டுத்தொகை | 899 | 151 | 666 | 377 | 2,889,282 | 77.6 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★ இத்தேர்தலில் எட்டு சிறிய கட்சிகள் போட்டியிட்டு, எதுவும் ஒரு தொகுதியில் தானும் வெற்றி பெறவில்லை.

★ பதிவு செய்யப்பட்ட வாக்குகளின் தொகை 3, 724, 507

## 7.9 ஐந்தாவது பொதுத் தேர்தல் 1960 ஜூலை

1960ல்நடை பெற்ற பொதுத் தேர்தலில் சிறிமாவோ பண்டார நாயக்கா ஆட்சியை அமைத்தபோது திரு. தொண்டமான் நியமன அங்கத்தினராக தெரிவு செய்யப்பட்டார். 1961ம் ஆண்டு வரை பல் வேறு சட்டங்கள் மூலமாக 132,572 இந்தியத் தமிழர் பிரஜாவுரிமை பெற்றிருந்தனர். 1960ம் ஆண்டு நடைபெற்ற பாரளுமன்றத் தேர் தலில் அங்கத்தினர் தொகை 145ஆக உயர்ந்தது. அந்த தேர்தலில் சிறீலங்கா சுதந்திரக் கட்சி 75 ஆசனங்களைப் பெற்று ஆட்சியை அமைத்தது. இத் தேர்தலில் தோட்டத் தொழிலாளர் தொழிற் சங்கம் சிறீலங்கா சுதந்திரக் கட்சியை ஆதரித்தபடியால் தொண்ட மானுக்கு நியமன அங்கத்துவம் கிடைத்தது. இந்த ஆட்சியின் போது தான் (1964) சிறிமாவோ-சாஸ்திரி ஒப்பந்தம், (இலங்கை வாழ் இந்திய மக்களின் நிலை பற்றியது) நிறைவேற்றப்பட்டது. இதற்குமுன் நாட்டில் 134, 188 இந்தியர் பிரஜாவுரிமை பெற்றிருந் தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அட்டவணை-7.6 ஐந்தாவது பாராளுமன்ற தேர்தல் 20.7.1960[11]

| | கட்சிகள் | போட்டியிட்டோர் | தெரிவு செய்யப்பட்டோர் | தோல்வியுற்றோர் | கட்டுப் பணமிழந்தோர் | வாக்களிக்கப்பட்ட வாக்குகள் | வீதம் |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி | 98 | 75 | 23 | 1 | 1,022,171 | 33.6 |
| 2 | ஐக்கிய தேசியக் கட்சி | 128 | 30 | 98 | 1 | 1,144,166 | 37.6 |
| 3 | தமிழரசுக் கட்சி | 21 | 16 | 5 | 2 | 213,733 | 7.0 |
| 4 | லங்கா சம சமாஜக்கட்சி | 21 | 12 | 9 | 0 | 224,995 | 7 4 |
| 5 | கொம்யூனிஸ்ட் கட்சி | 7 | 4 | 3 | 1 | 90,219 | 3.0 |
| 6 | மகஜன எச்சத் பெரமுன | 55 | 3 | 52 | 45 | 106,816 | 3 5 |
| 7 | ஜாதிக்க விமுக்தி பெரமுன | 2 | 2 | 0 | 0 | 14,030 | .4 |
| 8 | லங்கா பிரஜாதந்திரவாதி பக்ஷய | 6 | 2 | 4 | 4 | 30,207 | 1.0 |
| 9 | தமிழ் காங்கிரஸ் | 10 | 1 | 9 | 4 | 46,804 | 1.5 |
| 10 | சுயேட்சை குழுக்கள் | 45 | 7 | 38 | 25 | 83,728 | 6.04 |
| | கூட்டுத்தொகை | 393 | 151 | 245 | 83 | 2,827,085 | 7.58 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

✶ பதிவு செய்யப்பட்ட வாக்குகள் தொகை 3, 724, 507

## 7.10 ஆறாவது பொதுத் தேர்தல்—1965

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், இத் தேர்தலில் ஐக்கிய தேசிய கட்சியை ஆதரித்தபடியால் மலையக மக்கள் சார்பில் தொண்டமான், அண்ணாமலை இருவரும் நியமன அங்கத்தவராகவும் ஆர். ஜேசுதாஸ் செனற்றராகவும் டட்லி செனநாயக்காவின் ஆட்சியில் நியமிக்கப்பட்டனர். இத்தேர்தலில் ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸ், பெருந்தோட்ட இடது சாரி பொது சங்கங்கள், சிறீலங்கா சுதந்திரக்கட்சி, பொதுவுடமை கட்சிகளை ஆதரித்து எதிரணியில் இருந்தன. இதனால் நுவரேலியா, மஸ்கெலியா இரு தொகுதியிலும் சிறு தாக்கம் ஏற்பட்டது. எட்டியாந்தோட்டையில் என்.எம்.பெரேரா வெற்றி பெறுவதற்கு மலையக மக்களே காரண மாயிருந்தனர். இதே போன்று மற்றைய பகுதிகளிலும் எதிர் கட்சிகளின் சார்பாக மலையக மக்களின் வாக்குகள் இருந்தன.

> அரசியல் தரும் போதனை என்னவென்றால், மக்களின் பாதுகாப்பிற்கும் சௌகரியத்திற்காகவும் படைக்கப்பட்ட அரசாங்கம், மக்களுடைய பெரிய தடையாகவும் பெருந் தொல்லையாகவும் மாறிவிடுகிறது, நாம் எல்லாவிடங்களிலும் சந்திக்கும் ஏமாற்றுபவர்களும், தொல்லைக்காரர்களும் தீமை விளைவிப்பவர்களுமே அரசாங்கமாகும்.[22]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அட்டவணை-7.7 ஆறாவது பாராளுமன்றத் தேர்தல்—1965[12]**

| | கட்சிகள் | போட்டியிட்டோர் | தெரிவு செய்யப்பட்டோர் | தோல்வியுற்றோர் | கட்டுப்பணம் இழந்தோர் | வாக்களிக்கப்பட்ட வாக்குகள் | வீதம் |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | ஐக்கிய தேசியக் கட்சி | 116 | 69 | 50 | 2 | 1,590,929 | 39.3 |
| 2 | ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி | 101 | 41 | 60 | 1 | 1,221,437 | 30 2 |
| 3 | தமிழரசுக் கட்சி | 20 | 14 | 6 | 1 | 217,914 | 5.4 |
| 4 | லங்கா சமசமாஜக் கட்சி | 25 | 10 | 15 | 2 | 302,095 | 7.5 |
| 5 | ஸ்ரீலங்கா சுதந்திர சோஷலிஸ்ட் கட்சி | 32 | 5 | 27 | 22 | 130,429 | 3.2 |
| 6 | கொம்யூனிஸ்ட் கட்சி | 9 | 4 | 5 | 3 | 109,754 | 2.7 |
| 7 | தமிழ் காங்கிரஸ் | 15 | 3 | 12 | 1 | 98,746 | 2.4 |
| 8 | ஜாதிக்க விமுக்தி பெரமுன | 10 | 1 | 9 | 8 | 18,791 | .5 |
| 9 | மகஜன எக்சத் பெரமுன | 61 | 1 | 60 | 52 | 96,665 | 2.4 |
| 10 | சுயேட்சை குழுக்கள் | 106 | 6 | 100 | 77 | 259,960 | 6.4 |
| | கூட்டுத் தொகை | 495 | 151 | 344 | 169 | 3,821,918 | 82.1 |

(91ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 7.11 ஏழாவது பொதுத் தேர்தல் – 1970

1970ம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் 146 இடங்களில் 91 இடங்களை வென்று ஸ்ரீ.ல.சு.க.ஆட்சியை கைப்பற்றியது. இந்த தேர்தலில் ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸ் (D.W.C), இடது சாரி தொழிற் சங்கங்கள், ஐக்கிய தோட்ட தொழிலாளர், இலங்கை தோட்ட தொழிலாளர் சங்கங்கள், மக்கள் ஐக்கிய முன்னணியை ஆதரித்தன. ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸ் அங்கத்தவர் அப்துல் அசீஸ் நியமன அங்கத்தவரானார். இந்த கால கட்டத்தில்தான் கொல்வின் ஆர். டீ சில்வா பெருந்தோட்டத்துறை அமைச்சராக இருந்தார். அப்போது தான் தொழிலாளர் சங்க பிரதிநிதித்துவம் பற்றிய சட்டம் 1970ல் அமுல் படுத்தப்பட்டது. தோட்ட தொழிலாளர் வரலாற்றிலேயே முதல் முறையாக தொழிற் சங்க பிரதிநிதிகள் தோட்ட துரைமாரின் அனுமதியின்றி தோட்டத்தில் பிரவேசிக்கவும், தோட்ட தொழிலாளர்களை சந்தித்து பேசும் நிலையும் ஏற்பட்டது[13]

மற்ற முக்கியமான சட்டம் தோட்ட தொழிலாளர் பகுதி விசேஷ சட்டம்(Act No. 2 of1971)என்பதாகும். வேலையில் இருந்து நிறுத்தப்பட்ட ஒரு தொழிலாளி அவர் வசிக்கும் லயன் வீட்டில் இருந்தும் வெளியேற்றப்படலாம். அவர் வேலையிலிருந்து நிறுத்தப் படும் போது தொழில் விசாரணை மன்றத்தில் அவர் வழக்கு தாக்கல் செய்து அந்த வழக்கு காலவரையறையின்றி நீடிக்கும் போது அவர் லயனில் வாழும் உரிமையும் பெறமுடியாது. ஆனால் இந்த சட்டம் இப்படிப்பட்ட ஒரு நபர் குறிப்பிட்ட தனது தோட்ட லயனில் வாழ, ஒரு தகுதி பெற்ற நீதி மன்றத்தின் ஆணைமூலம் உதவிபெறமுடியும். தோட்டம் கைமாறும் நிலையில் புதிய தோட்ட உரிமையாளர் எற்கனவே உள்ள தொழிலாளியின் வேலையை முடிவுக்கு கொண்டு வரலாம். இந்த சந்தர்ப்பத்தில் இன்னொரு சட்டம் (Employment Of work Special Provision) உரிமையாளர், தொழில் விசாரணை மன்றத்தின் முன்னனுமதியின்றி தொழிலாளர் குறைப்பு செய்ய முடியாது. என்பதை வலியுறுத்துகிறது. ஆனால் இந்த முற்போக்குச் சட்டங்கள், தீர்மாணங்கள் எதுவும் அரசு, தனியார் தலைமைப் பீடத்தினால் அலட்சியம் செய்யப் பட்டு செயற்படுத்த முடியாத நிலைக்கு உள்ளாக்கிவிடுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அட்டவணை 7-8, ஏழாவது பாராமன்றத் தேர்தல்-1970[14]

| கட்சிகள் | போட்டியிட்டோர் | தெரிவு செய்யப்பட்டோர் | தோல்வியுற்றோர் | கட்டுப்பணம் இழந்தோர் | வாக்களிக்கப்பட்ட வாக்குகள் | விதம் |
|---|---|---|---|---|---|---|
| ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி | 108 | 91 | 17 | 5 | 1,839,979 | 36,9 |
| லங்கா சம சமாஜக் கட்சி | 23 | 19 | 4 | 4 | 433,224 | 8,7 |
| ஐக்கிய தேசியக் கட்சி | 130 | 17 | 113 | 0 | 1,892,525 | 37,9 |
| தமிழரசுக் கட்சி | 19 | 13 | 6 | 0 | 245 727 | 4,9 |
| கம்யூனிஸ்ட் கட்சி | 9 | 6 | 3 | 2 | 169,199 | 3,4 |
| தமிழ் காங்கிரஸ் | 12 | 3 | 9 | 2 | 115,567 | 2,3 |
| மகாஜன எக்சத் பெரமுன | 4 | 0 | 4 | 1 | 46,571 | .9 |
| சுயேட்சைக் குழுக்கள் | 136 | 2 | 134 | 121 | 249,006 | 5.0 |
| கூட்டுத் தொகை | 441 | 151 | 290 | 135 | 4,991,798 | 85.2 |

(91ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 7.11 1 குடியரசு அரசியலமைப்பு —1972

அரசியலமைப்பு என்பது ஒரு நாட்டின் மேல்வரிச்சட்டம் என்பதோடு மட்டுமல்லாமல் ஒரு நாட்டை மற்றொரு நாட்டுக்கு எடுத்துக்காட்டும் ஒரு புகைப்படம் என்று கூட கூறலாம். ஒரு நாட்டின் உயர் சட்டமான அரசியலமைப்பானது அந்நாட்டு அரசின் அமைப்பை இன்னதென்று தெளிவாக விளக்கி நிற்பது. இத்தகையை மாண்புடைய அரசியலமைப்பு கடந்த இரண்டு தசாப்தங்களிலும் அடைந்த பல மாற்றங்கள் மூலமாக அதன் மாண்பு ஒரு கேள்விக்குறியாகவும், ஆய்வுக்குரியதாகவும் மாறிவிட்டது. வெஸ்ட்மினிஸ்டர் ஆட்சி முறையை கொண்டிருந்த சோல்பரி அரசியலமைப்பானது இலங்கையின் சுதந்திரத்துடன் தொடங்குகிறது. 1918ம் ஆண்டு முதல் 1972ம் ஆண்டு மே மாதம் 21ம் திகதி வரை இலங்கையில் சோல்பரி ஆட்சி முறை நீடித்தது. ஏறக்குறைய இரண்டரை தசாப்த கால எல்லைக்குள் இதில் பல திருத்தங்களையும் செய்து வந்துள்ளது. மக்கள் பிரதி நிதிகள் சபை, செனற் சபை என இரு சபைகளைக் கொண்டிருந்த இலங்கை பாராளுமன்றமானது, 1971ம் ஆண்டு கொண்டுவரப்பட்ட திருத்தம் ஒன்றினால் செனற் சபையை இல்லாது செய்தது. இது ஒன்று தான் குறிப்பிட்டு சொல்லக் கூடிய மாற்றமாகும்.

1972ம் ஆண்டு மே மாதம் 22ம் திகதி தனக்கென புதிய அரசியலமைப்பை இயற்றி இலங்கை தன்னை ஒரு குடியரசு நாடாக்கிக் கொண்டது. இவ்வாறு புதிதாக அமைக்கப்பட்ட குடியரசு அரசியலமைப்பானது சோல்பரி அரசியலமைப்போடு மிகவும் ஒத்த அம்சங்களையே பெரும்பாலும் கொண்டிருந்தது. நாட்டின் வளர்ச்சிக்கு ஏதுவான எந்த அம்சங்களையும் இது கொண்டிருக்கவில்லை. மகாராணியின் பெயரால் நடத்தப்பட்ட ஆட்சி, இலங்கை மக்களால் நடத்தப்படும் குடியரசாக மாற்றப்பட்டது. இது ஒன்றுதான் இதில் குறிப்பிட்டு சொல்லக்கூடிய அம்சம். அத்துடன் பின்வரும் விடயங்களிலும் மாற்றம் செய்யப்பட்டிருந்தது:—

— அரசுத் தலைவர் என்ற பதவி ''மகா தேசாதிபதி'' என்ற பதத்திலிருந்து ''ஜனாதிபதி'' என்ற பதத்திற்கு மாறியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

— பாராளுமன்றம் என்ற பதம் தேசிய அரசுப் பேரவை என்று மாற்றப்பட்டது.

— செனற் சபை இல்லா தொழிக்கப்பட்டது.

— நியமன அங்கத்தவர் முறை இல்லா தொழிக்கப்பட்டது.

— சிறுபான்மையினரின் நலன்களைக் காப்பதற்கென சோல்பரி அரசியலமைப்பிலிருந்து வந்த 29வது சரத்து இல்லாதொழிக்கப் பட்டது.

— புதிய அரசியலமைப்பு தொடங்கும் வேளையிலிருந்து பாராளு மன்றமானது, புதிய அரசியலமைப்பின் கீழான புதிய பெயர் கொண்ட தேசிய அரசுப் பேரவையின் பதவிக்காலம் 1972ம் ஆண்டு மே மாதம் 22ம் திகதி தொடங்கி ஐந்து ஆண்டு காலத்தை கொண்டது என குறிப்பிட்டமை. இதன் மூலம் 1970ம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலின் 5 வருட பதவிக்காலத்தை 7 வருடங்களாக நீடித்தது.

சோல்பரி அரசியலமைப்பின் கீழ் சிறுபான்மையினரான தமிழ் மக்களுக்கு எதிராக இயற்றப்பட்ட சட்டங்கள் நீக்கப்பட்டு,முக்கிய மாக தமிழும் அரச கரும மொழியாக ஆக்கப்பட்ட தோடு பண்டா- செல்வா ஒப்பந்தம், டட்லி-செல்வா ஒப்பந்தம் போன்றவை கொண்டுவரப்பட்டன. இவற்றின் மூலமாக, தமிழ் மக்கள் பெரும் பான்மையாக வாழும் பிராந்தியங்களில் சுயாட்சிக்கு வழி வகுக்கக் கூடிய விதத்தில் புதிய அரசியலமைப்பு உருவாக்கப் படலாம் என்று நம்பியிருந்த தமிழ் மக்களது எண்ணங்களில் 1972ல் அமுல்படுத்தப்பட்ட குடியரசு அரசியல் அமைப்பு மண்ணைப் போட்டது.

அரசியல் ரீதியில் கூட ஒரு இனத்தில் விளங்கிய தனித்தன்மை கொண்ட இனப்பிரச்சினையை தீர்ப்பதற்கு ஒரு சிறு அடியைத் தானும் இவ்வரசியலமைப்பு முன்னெடுத்து வைக்கவில்லை. இதனால் இப்பிரச்சினையின் வேகம், தீவிரமாக மாறுவதற்கு வழி வகுத்த தோடு, அரசியல் ரீதியாக தமிழ்பேசும் மக்களை பிரதி நிதித்துவப்படுத்திய அரசியல் கட்சிகள், கொள்கை வேறு பாடுகளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறந்து ஒன்றிணைந்த தனி நாடு வேண்டும் என்று தீர்மானம் எடுக்கவேண்டிய நிர்ப்பந்தத்திற்கு இவ்வரசியலமைப்பு வழி வகுத்தது.[15]

## 7.11.2 பெருந்தோட்டத்துறை தேசிய மயமாக்கப்படல்

இந்த காலகட்டத்தில் பெருந்தோட்டத் துறையில் பாரிய மாற்றங்கள் உருவாக்கப்பட்டன. முதலாவதாக காணி சீர்திருத்த சட்டம் மூலமாக பெருந்தோட்டத்துறை தேசிய மயமாக்கப்பட்டது. இதன் முக்கியநோக்கமாக காணிகளை பகிர்ந்து கிராம மக்களுக்கு கொடுக்க அன்றைய அரசாங்கம் செயல்பட்டதால் தோட்ட மக்கள் மிகவும் பாதிக்கப்பட்டனர். அடுத்ததாக இக்காலகட்டத்தில் உலக ரீதியாக ஏற்பட்ட உணவுப் பொருட்களின் தட்டுப்பாட்டினாலும், எரிபொருள் விலை ஏற்றத்தாலும், இலங்கையிலும் பெரும் பாதிப்புகள் ஏற்பட்டன. உணவு பற்றாக் குறையினால் ஒரு சில தோட்டங்களில் மக்கள் வெகுவாக பாதிக்கப்பட்டனர். அநேகமானோர் போஷாக்கின்றி அல்லலுற்றனர்.

தோட்டங்கள் தேசியமயமாக்கப்பட்ட பின் அவசரகால சட்டம் இல 3-1975 (Reservation of Public order on Estates) காணி சீர்திருத்த ஆணையாளருக்கு கூடிய அதிகாரத்தை கொடுத்தது. அதாவது நிரந்தரமாக வேலைக்கமர்த்தப்பட்ட ஒரு தொழிலாளியை வேலையிலிருந்து நிறுத்தி, தோட்டத்திலிருந்து வெளியேற்ற அதிகாரம் கொடுக்கப்பட்டிருந்தது. இச்சட்டம் தொழிலாளருக்கு எதிராக இயற்றப்பட்டதொன்றாகும். அத்துடன் NADSA மூலமாகவும் தோட்டத் தொழிலாளர் பாதிக்கப்பட்டனர். தொழிலாளர்கள் இவற்றிற்கு எதிர்ப்பு காட்டியபோது, குறிப்பாக டெவன் சங்குவார் தோட்டங்களில், காவல் துறையினரின் அத்துமீறிய நடவடிக்கைகளினால் 11.05.1977 அன்று சிவணு லட்சுமணன் உயிரிழக்க நேரிட்டது இங்கு குறிப்பிடத்தக்கது. இவ்வுயிர் தியாகமானது தோட்டக்காணிகளை பகிர்ந்தளிப்பதை முழுமையாக எதிர்ப்பதற்கு அனைத்து மக்களையும் ஒன்று திரட்டியது. அன்றிருந்த விவசாய அமைச்சர் திரு. கொப்பேகடுவதான் இந்த சீரழிவுக்கு மூலகாரணமானவர்.[16]

இந்த காலகட்டத்தில்தான் மலையக மக்கள் கட்டாயகுடியகழ்விற்கு உட்படுத்தப்பட்டனர். இதில் கடைப்பிடிக்கப்பட்ட அடக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முறையினால் மக்கள் மிகவும் பாதிப்புக்குள்ளானார்கள்.இந்த கால கட்டத்தில் தான் சிறிமா-இந்திரா ஒப்பந்தம் செய்யப்பட்டதும்,கூடுதலான மலையக மக்களுக்கு இலங்கை பிரஜாவுரிமை கொடுக்கப் பட்டதும். ஆனால் அந்த வேளையில் இவர்களை பிரதிநிதித்துவப் படுத்துவதற்கு பாராளுமன்றத்தில் ஒருவர் மட்டுமே நியமன அங்கத்தவராக இருந்த காரணத்தால் இவர்களது பிரச்சினைக்கு பரிகாரம் காணமுடியவில்லை.

## 7.12 எட்டாவது பொதுத் தேர்தல்—1977

தேர்தல் தொகுதி நிர்ணயக் குழு 1977ம் ஆண்டு நிறைவேற்றிய குடியரசு யாப்பு பிரேரணையின்படி ஒவ்வொரு தொகுதிக்குரிய குடிசனத் தொகையை 75 000 லிருந்து 90,000 ஆக மாற்றியது. இதே குழு 1971ம் ஆண்டு மக்கள் தொகை அதிகரிப்புக்கேற்ப, தேர்தல் தொகுதிகளை 146லிருந்து 160 ஆக கூட்டியது. இதில் மூன்று அங்கத்தவர்களைக் கொண்ட மூன்று தொகுதிகளும் உருவாக்கப்பட்டு அங்கத்தவர் தொகையை மேலும் 168 ஆக உயர்த்தியது.

இத்தேர்தலுக்கு முன் (1972) இக்குழுவினால் 1971ம் ஆண்டு குடிசன மதிப்பீட்டு குறிப்பின்படி மலையக தமிழருக்கென வகுக்கப்பட்டவர்களின் 43.3 வீதம் இலங்கை பிரஜைகள் ஆவர் [17]

இத்தேர்தலுக்கு முன்னரே, இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் (இ.தொ.கா) தனது அரசியல் பிரிவை ஏற்படுத்தி அதை பதிவு செய்ததுடன் தனது தேர்தல் சின்னத்தை சேவல் எனவும் ஏற்றுக் கொண்டது. இந்த கட்சி அந்த தேர்தலில் (1977) மலையகத்தில் நுவரேலியா மஸ்கெலியா தொகுதியில் மட்டும் போட்டியிட்டு மற்ற தொகுதிகளில் உள்ள மலையக மக்கள் ஐ. தே. கட்சிக்கு ஆதரவு தரும் படி பிரச்சாரம் செய்தது.இதே தேர்தலில் மலையக மக்களில் சிலர் சுயேட்சையாகவும் போட்டியிட்டனர். 1977ம் ஆண்டு ஜூலை மாதம் 21ம் திகதி நடைபெற்ற இத்தேர்தலில் பதிவு செய்யப்பட்ட மலையக மக்களின் வாக்குகளின் தொகை 350,000 கூடுதலாக இருந்தது.

இத்தேர்தலில் ஐ. தே. கட்சி 139 ஆசனங்களையும், த. வி. கூட்டணி 18 ஆசனங்களையும், ஸ்ரீ.ல.சு.கட்சி 8 ஆசனங்களையும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இ.தொ.கா. ஒரு ஆசனத்தையும், ஏனைய கட்சிகள் இரண்டு, இரண்டு ஆசனங்களையும் பெற்றன. 1947ம் ஆண்டுக்குப் பிறகு இத்தேர்தலில்தான் இ.தொ.கா. மூன்று அங்கத்தவர்களைக் கொண்ட நுவரேலியா-மஸ்கெலியா தொகுதியில் மூன்றாவது அங்கத்தவராக தெரிவு செய்யப்பட்டது. இதன் வேட்பாளராக இருந்தவர் இ. தொ. கா. கட்சியின் தலைவர் தொண்டமான் ஆவார்.

இந்த தேர்தல் தொகுதியானது1946ம்ஆண்டு தேர்தல் நிர்ணய குழுவின் பரிந்துரையின்படி நுவரேலியா, தலவாகலொல்லை, கொட்டகலை, மஸ்கெலியா என நான்கு தனித் தொகுதிகளாக பிரிக்கப்பட்டிருந்தது. 1959ம் ஆண்டும் தேர்தல் தொகுதி நிர்ணய குழு இதனையே பரிந்துரை செய்தது. ஆனால் 1976ம் ஆண்டு இந்த ஆணைக்குழுவின் பரிந்துரையின் பேரில் நான்கு தொகுதிகள் மூன்று தொகுதிகளாக குறைக்கப்பட்டது. தமிழ் வாக்காளர் அதிகமாக உள்ள தலவாக்கொல்லை, கொட்டகலை தொகுதிகள் இதனால் இல்லாது போய்விட்டது. மூன்று அங்கத்துவ தொகுதிகளை கொண்ட நுவரேலியா-மஸ்கெலியா தேர்தல் தொகுதியாக இது மாற்றப்பட்டது.

இத்தொகுதியில் (நுவரேலியா-மஸ்கெலியா) பதிவு செய்யப் பட்ட வாக்காளர் தொகை 64,000 ஆகும். இதில் 22,000 மலையக மக்கள் வாக்குகளும், 2000 இலங்கைத் தமிழர் வாக்குகளும், 3000 முஸ்லிம் வாக்குகளும், மீதி 37,000 சிங்கள மக்களின் வாக்குகளும் அடங்கும். விருப்பு வாக்குகளாக ஒவ்வொருவரும் மூன்று வாக்குகளை பெறும் பட்சத்தில் மலையக மக்களின் வாக்குகள் தொகை 71, 000 எனலாம். இதில் முதலாவதாக வந்த காமினிதிசநாயக்கா 65,093 வாக்குகளையும்,இரண்டாவதாக தெரிவு செய்யப்பட்டஅனுரா பண்டாரநாயக்கா48,776 வாக்குகளையும்,மூன்றாவதாக வந்த தொண்டமான் 35,843 வாக்குகளையும் பெற்று இந்த தொகுதியில் இடம் பிடித்தனர். இத்தேர்தலில் நாம் கவனிக்க வேண்டியது யாதெனில், சிறுபான்மையினரும் தமிழ் பேசும் மக்களுமான மலையக, இலங்கை தமிழரினதும், முஸ்லீம்களினதும் வாக்குகளின் முழுத்தொகை, வாக்கு ரீதியில் 74,000. ஆனால் தமிழ் வேட்பாளரான தொண்டமானுக்கு கிடைத்ததோ 35,743 வாக்குகள். எனவே சிறுபான்மை மக்களின் வாக்குகளில் பாதி கூட அவருக்கு கிடைக்கவில்லை. மாறாக மற்றவர்களுக்கு அளிக்கப்பட்டிருக்கிறது.[15] இத்தேர்தலில் ஐ.தே.கட்சி5/6பெரும்பான்மையை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்று ஆட்சியை கைப்பற்றியது. அத்துடன் தேர்தல் வரலாற்றில் ஒருபோதும் நிகழாத விதமாக தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணி பாராளுமன்றத்தில் பிரதான எதிர்கட்சியாக அமைந்தது. இத்தேர்தல் நடைபெறுவதற்குமுன்பு, 1972ல் இலங்கை தமிழரசு கட்சி, தமிழ் காங்கிரஸ் கட்சி, இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் மூன்றும் இணைந்து செல்வநாயகம், ஜீ.ஜீ. பொன்னம்பலம், தொண்டமான் மூவரினதும் கூட்டுத் தலைமையில் தமிழர் ஐக்கிய முன்னணி (Tamilunited Front) என்ற கூட்டணி அமைக்கப்பட்டது. இந்த அமைப்பில் திரு தொண்டமான் இணைத் தலைவராகவும் திகழ்ந்தார். 1976ம் ஆண்டு இந்த அமைப்பு தமிழர் ஐக்கிய விடுதலை கூட்டணி என்ற பெயருடன் சுதந்திர இறைமை கொண்ட சோஷலிச தமிழ் ஈழம் என்ற கொள்கையை முன் வைத்தபோது, திரு தொண்டமானும் அவர் இ தொ. கா. கட்சியும் ஆதரவு தெரிவிக்கவில்லை. ஆனால் 1977ம் ஆண்டு தேர்தலுக்கு முன் திரு. செல்வநாயகம், திரு. பொன்னம்பலம் இருவரும் காலம் சென்றபடியால் திரு. தொண்டமானவர்களே தமிழர் ஐக்கிய விடுதலைக் கூட்டணிக்கு தலைமை வகித்தார். இந்த கால கட்டத்தில் தான் பிரித்தாளுவதில் வல்லவரான ஜே. ஆர். ஜயவர்த்தனா, தொண்டமானின் தொழிற் சங்கத்தை சேர்ந்த அண்ணாமலைக்கு ஜனவசம அதிபர் பதவியையும், ஏற்கனவே செனற்றர் பதவியில் இருந்த ஜேசுதாசன என்பவருக்கு மலையக கூட்டுறவு அபிவிருத்தி சங்கத்தின் (Udarata Cooperative Development Board) தலைவர் பதவியையும் அளித்து தொண்டமானை தன் பக்கம் இழுக்க முயற்சி செய்தார். அதில் அவர் வெற்றியும் பெற்றார். தன் இனத்தின் நன்மையைவிட ஒரு சில சுயநல ஆதாயங்களை விரும்பும் மலையக தலைமை விரைவில் ஜே ஆர். ஜயவர்த்தனாவின் சூழ்ச்சி வலையில் வீழ்ந்தது. இதன் விளைவை 1977ம் ஆண்டு தேர்தலுக்குப் பின் அரசியல் தலைவர்களாலேயே கட்டவிழ்த்துவிடப்பட்ட தமிழருக்கெதிரான வன்முறையில் தெளிவாக எல்லோரும் காண முடிந்தது.

1977ம் ஆண்டு தேர்தல் முடிந்து ஆகஸ்ட் மாதம் 13ம் திகதிக்கு பிறகு நாட்டில் கட்டவிழ்த்து விடப்பட்ட வன்செயல் மலையக தமிழர்களையே அதிகமாக பாதித்தது. அன்றிருந்த நாட்டின் தலைவர்கள் கலவரத்தை உருவாக்கியவர் மீது எந்த நடவடிக்கையும் எடுக்காமல் இருந்ததோடு, அவசரகாலச் சட்டத்தையும் உடனடியாக அமுல்படுத்தாது விட்டனர். இதன் காரணமாக வன்முறை அதிகரிக்கவும், தமிழ் மக்களில் எண்ணற்றவர் உயிரையும், உடமை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களையும் இழக்க நேரிட்டது. இதனால் மலையக மக்கள் மத்தியில் பெரும் பீதி ஏற்பட்டத்துடன் பெரும் பாலானோர் இந்தியாவிற்கும் இலங்கையின் வடகிழக்கு பகுதிகளுக்கு இடம் பெயரவும் தொடங்கினர்.[19] இதற்கு காரணம், அந்த காலகட்டத்தில் மலையக மக்களின் ஒரே ஆதரவான இ. தொ. கா. கட்சியிடம் ஒரு திடமான பிரஜாவுரிமை கொள்கை இல்லாததுடன் மலையக மக்கள் தங்கள் வாக்குகளை ஐ. தே. கட்சிக்கு அளித்து அதை அதிக அளவிலான பெரும் பான்மையுடன் ஆட்சியில் அமர வைப்பதற்கு முக்கிய காரணமாயிருந்ததே. தங்கள் ஆதரவைப்பெற்று ஆட்சிக்கு வந்த அதே கட்சி தங்கள் இனத்தை அழிக்க கங்கணம் கட்டிக் கொண்டு நின்றது ஒரு துரதிஷ்டமே என்பதை தமிழ் மக்கள் உணரத் தொடங்கினாலும், தலைவர்கள் அவர்களை அந்த நிலையில் நீடிக்க விடவில்லை. இதுதான் மலையகத் தமிழர்களின் வரலாற்றில் நிகழ்ந்த உண்மையான துரதிஸ்ட நிலை எனலாம்.

அட்டவணை 7.7

★ கொழும்பு வடக்கில் போட்டியிட்ட ஜே ஆர். ஜயவர்த்தனா (ஐ தே.க) பேர்னாட் சொய்சா (ல.ச.ச க) இருவரும் போட்டியின்றி தெரிவு செய்யப்பட்டனர்.

★ பதிவு செய்யப்பட்ட வாக்குகள் தொகை 4, 710, 8 7

7.8 அட்டவணை

★ வெலிமடை தொகுதி வேட்பாளர் ஆர். எம். பண்டார (ஸ்ரீ. ல. சு க.) போட்டியின்றி தெரிவு செய்யப்பட்டார்.

★ வாக்களிக்கப்பட்ட வாக்குகளின் எண்ணிக்கை. 5,505,023

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அட்டவணை-7.9. எட்டாவது பாராளுமன்றத் தேர்தல் 1977[20]

| | கட்சிகள் | போட்டியிட்டோர் | வெற்றி பெற்றோர் | தோல்வியுற்றோர் | கட்டுப்பணம் இழந்தோர் | வாக்களிக்கப்பட்ட வாக்குகள் | வீதம் |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | ஐக்கிய தேசியக் கட்சி | 154 | 140 | 14 | 5 | 3,179,221 | 50.9 |
| 2 | தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணி | 23 | 18 | 5 | 1 | 421,488 | 6.4 |
| 3 | ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி | 147 | 8 | 139 | 15 | 1.855,331 | 29.7 |
| 4 | இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் | 2 | 1 | 1 | 0 | 62,707 | 1.0 |
| 5 | லங்கா சமசமாஜக் கட்சி | 82 | 0 | 82 | 69 | 225,317 | 3.6 |
| 6 | மகஜன எக்சத் பெரமுன | 27 | 0 | 27 | 26 | 22,639 | .4 |
| 7 | கொம்யூனிஸ்ட் கட்சி | 25 | 0 | 25 | 19 | 123,856 | 2.0 |
| 8 | சுயேட்சை குழுக்கள் | 295 | 1 | 294 | 270 | 353,014 | 5.9 |
| | கூட்டுத்தொகை | 756 | 168 | 588 | 405 | 6,243,573 | 86.7 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★ இலங்கையின் அரசியல் வரலாற்றில் முதல் முறையாக சிறு பான்மைத் தமிழரின் கட்சி(தமிழர் ஐக்கிய விடுதலைமுன்னணி) எதிர் கட்சி தலைமையை பெற்ற ஒரே தேர்தல்

★ பதிவு செய்யப்பட்ட வாக்குகள் தொகை 6, 667, 589.

## 7 12.1 இலங்கை ஜனநாயக சோஷலிசகுடியரசு

## அரசியலமைப்பு1 978

தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிட்டிருந்தவாறு ஐ. தே. க. புதிய அரசியலமைப்பு ஒன்றை உருவாக்குவதற்கு முயற்சி எடுத்தது. அவ்வாறான புதிய அரசியலமைப்பை உருவாக்குவதற்கு முன்னரே நடைமுறையில் இருந்த குடியரசு அரசியலமைப்பில் திருத்தத்தை ஏற்படுத்தி, பிரதம மந்திரியாகவிருந்த ஜே.ஆர். ஜயவர்த்தனா இலங்கையின் நிறைவேற்று அதிகாரமுடைய முதலாவது ஜனாதிபதியாக பதவியேற்றார். இதுவே 1972ம் ஆண்டில் நடைமுறைக்கு கொண்டு வரப்பட்ட, அரசியலமைப்பில் செய்யப்பட்ட திருத்தங்களுக்கெல்லாம் சிகரமாக அமைந்த மாற்றம் எனலாம். ஜே. ஆர். ஜயவர்த்தனா இலங்கையின் முதலாவது நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதியாக 1978ம் ஆண்டு பெப்ரவரி மாதம் நாலாந் திகதி தன்னை பிரகடனப்படுத்திக் கொண்டார்.

தொடர்ந்து தெரிவுக்குழுவினால் விதந்துரைக்கப்பட்ட சிபார்சுகளை கொண்டதாக புதிய இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் அரசியலமைப்பு தேசிய அரசுப் பேரவையினால் அங்கீகரிக்கப்பட்டு 1978ம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 7ம் திகதி அமுலுக்கு கொண்டு வரப்பட்டது. இப்புதிய அரசியலமைப்பானது இலங்கை அரசியல் வரலாற்றில் பல புரட்சிகரமான மாற்றங்களை கொண்டிருந்தது. வெஸ்ட் மினிஸ்டர் ஆட்சிமுறையின் அம்சங்கள் பலவற்றை இதில் காணமுடியாதிருந்தது. வெஸ்ட் மினிஸ்டர் முறை, அமெரிக்க அரசியலமைப்பு, பிரான்சின் அரசியல் அமைப்பு முறைகளிலிருந்து பெறப்பட்ட பல அம்சங்கள் இலங்கை அரசியல் ஸ்திரத்தன்மையை காப்பதற்கு ஏதுவாக அமைக்கப்பட்டிருந்தன. இதில் உள்ளடக்கப்பட்டிருந்த பல புதிய அம்சங்கள் பின் வருமாறு.[21]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

— அரசுத் தலைவரே அரசாங்கத்தின் தலைவராகவும் செயற்படும் தன்மை.

— பிரதம மந்திரியுடன் கலந்தாலோசிக்காமல், ஜனாதிபதி பாராளுமன்றத்தை கலைக்கும் அதிகாரம் பெற்றுள்ளது.

— பிரதம மந்திரி, அமைச்சரவை உறுப்பினர்கள், மற்றும் அமைச்சரவை உறுப்பினரல்லாத அமைச்சுகளை நியமித்தல் முதலியன கூடிய ஜனாதிபதியின் அதிகாரங்கள்.

— பாராளு மன்றத்திற்கான தேர்தல் விகிதாசாரப் பிரதிநிதித்துவம் மூலம் நடத்தப்படல்.

— சர்வசன வாக்கெடுப்பிற்காக ஏற்பாடுகள் செய்தல்.

— ஐக்கிய நாடுகள் சாசனத்தின் படியான, அடிப்படை மனி உரிமைகளை கடைப்பிடித்தலுக்கான ஏற்பாடுகள் செய்தல்.

— அவசரகாலச் சட்டம் மாதாந்தம் பாராளுமன்றத்தால் அங்கீகரிக்கப்பட வேண்டுமென்ற ஏற்பாட்டை கொண்டுவரல்.

— பாராளுமன்ற உறுப்பினரின் கட்சி தாவலை தடுக்கும் ஏற்பாடுகளை ஏற்படுத்தல்.

— பாராளுமன்றத்தின் ஆயுட்காலத்தை 5 வருடத்திலிருந்து 6 வருட காலத்திற்கு கூட்டியமை.

— நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியின் பதவிக் காலம் 6 ஆண்டு காலம் என வரையறுக்கப்பட்டதோடு, அவர் இரண்டு பதவிக்காலத்துக்குமேல் பதவி வகிக்கமுடியாதென்ற ஏற்பாடுகள்.

— மக்களே ஜனாதிபதியை நேரடியான தேர்தல் மூலமாக தேர்ந்தெடுப்பதற்கான ஏற்பாடுகள்.

— தமிழும், சிங்களமும் தேசிய மொழிகள் என்ற பிரகடனம்.

— அமைச்சரவை பாராளுமன்றத்திற்கு மட்டுமல்ல, ஜனாதிபதிக்கும் பொறுப்பானது என்ற ஏற்பாடுகள்.

— நிதித்துறையை பொறுத்த வரை நியமனங்களை செய்வதற்கான ஜனாதிபதியின் அதிகாரங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

— பதவியிலிருக்கும் ஜனாதிபதியை, அப்பதவியிலிருந்து அகற்றுவதற்கான ஏற்பாடுகள்.

1989ம் ஆண்டு வரை மலையக மக்களுள் பிரஜாவுரிமை பெற்றவர்களையும், பெறாதவர்களையும் சமமாக மதிக்கப்படவேண்டும் என்று இந்த யாப்பில் கூறப்பட்டுள்ளது. ஆனால் இது நடைமுறைப் படுத்தப்படவில்லை. அதே யாப்பில் பிரஜாவுரிமை சட்டத்தின் 26 (4) பிரிவில் இந்த சலுகை நிராகரிக்கப்பட்டுள்ளது. இதனால் இந்த திருத்தச் சட்டத்தால் எவ்வித நன்மையும் ஏற்படவில்லை.[22] இதே ஆண்டில் உள்ளூராட்சி சபைகள் மாற்றியமைக்கப்பட்டதன் மூலமாக, முதன் முதல் மலையக தமிழர்களும் உள்ளூராட்சி சபைகளில் பங்கு பற்ற கூடியதாக இருந்தது.

## 7.13 ஒன்பதாவது பொதுத் தேர்தல் 1989

1983ம் ஆண்டு நடைபெற வேண்டிய பொதுத் தேர்தல் அந்த காலகட்டத்தில் சனாதிபதியாக இருந்த ஜே. ஆர். ஜயவர்த்தனா, தனது இயல்பான தந்திர யுக்தியை உபயோகித்து[23] 1982ம் ஆண்டு டிசம்பர் மாதம் ஒரு ஐயப்பாடான திட்டம் கொண்ட சர்வஜன வாக்கெடுப்பின் மூலமாக ஆறு வருடங்களுக்கு தள்ளிப்போட்டார். இந்தச் செயல் உலக அரசியல் அரங்கிலேயே ஒரு வரலாறு காணா சாதனை! இதன் விளைவாக 1983ம் ஆண்டு ஜூலை மாதம் 21ம் திகதி முடிவடைய வேண்டிய பாராளுமன்றம், 1989ம் ஆண்டு வரை இயங்கி முழுதாக பன்னிரண்டு வருடங்களைப் பூர்த்திச் செய்தது. மிக நீண்ட இந்த எட்டாவது பாராளுமன்றம் 1988ம் ஆண்டு டிசம்பர் மாதம் ஜே. ஆர். ஜயவர்த்தனாவால் கலைக்கப்பட்டு 1989ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 15ம் திகதி பொதுத் தேர்தலுக்கு வழி வகுக்கப்பட்டது. இத்தேர்தலில் வாக்களிக்க 9, 400, 000ம் வாக்காளர்கள் தகுதி பெற்றிருந்தனர். இது நடந்து முடிந்த கடைசி தேர்தலின் போது பதியப்பட்டிருந்த வாக்காளரின் எண்ணிக்கையை விட 2, 700, 000 வாக்காளர்களால் அதிகரித்திருந்தது. மொத்தம் 225 அங்கத்தினர்களைக் கொண்ட புதிய பாராளுமன்றத்தில் 196 அங்கத்தினர்களை வாக்களிப்பின் மூலமாகவும், மிகுதி 29 அங்கத்தினர்களை தேசிய பட்டியல் மூலமாகவும் தெரிவு செய்யப்பட்டனர்.

1989ம் ஆண்டு வேட்பு மனு தாக்கல் செய்வதற்கான காலக்கெடு முடிவடைந்த நேரத்தில், ஏழு சுயேச்சைக் குழுக்கள் உட்பட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்பது அரசியல் கட்சிகள் 1,396 வேட்பாளர்களின் பெயர்களை பதிவு செய்திருந்தன. இதில் சில கூட்டாகவும் சில தனித்தும் போட்டியிட்டிருந்தன. ஐ. தே. கட்சியுடன் இ. தொ. கா. வும், ஸ்ரீ. ல.சு கட்சியுடன் ஐ.தொ.கா.வும் லிபரல் கட்சியும், ஐ சோ. முன்னணியுடன் லங்கா சம சமாஜ கட்சி, நவசம சமாஜ கட்சி, கமியுனிஸ்ட் (மொஸ்கோ) கட்சியும், தமிழர் ஐக்கிய விடுதலை கூட்டணியுடன், ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி, ஈழ தேசிய ஜனநாயக விடுதலை முன்னணி, தமிழ் ஈழ விடுதலை அமைப்பு போன்ற அமைப்புகள் கூட்டாகச் சேர்ந்து தேர்தலில் போட்டியிட்டன. ஸ்ரீ ல. மு. காங்கிரஸ், எம். ஈ. பி, அ. இ தமிழ் காங்கிரஸ், ஜ. ம. வி. முன்னணி, ஈ. எல். ஜே. பி, இவற்றுடன் மேலும் 7 சுயேச்சை குழுக்கள் தனித் தனியே தேர்தலை சந்தித்தனர்.[24]

மலையகப் பகுதியில் ஐ.தே.க., ஸ்ரீ.ல.சு.க., எம்.ஈ.பி, ஜ ம. வி.மு, முதலிய கட்சிகள் போட்டியிட்டன. அத்துடன ஐ.தே கட்சியில் 12 பெண்களும், எம். ஈ. பி. கட்சியில் 8 பெண்களும் ஈ. எல். ஜே. பி. கட்சியில் 3 பெண்களும், ஸ்ரீ. ல. சு. க. இல் 4 பெண்களும், யு. எஸ். ஏ. கட்சியில் 2 பெண்களுமாக மொத்தம் 29 பெண்கள் இத் தேர்தலில் போட்டியிட்டனர்,விகிதாசார முறையின் படி வேட்பாளர்களை தெரிவுசெய்வதானது கடந்த 58 வருடங்களாக இருந்து வந்த நடைமுறையை மாற்றியமைத்துள்ளது. மேற்கு ஜெர்மனியிலும் இந்த விகிதாசார முறை அமுல்படுத்தப்பட்டு வந்துள்ளமை குறிப்பிடத் தக்கது.இந்த முறையின் கீழ் ஒருவர் தனக்கு விருப்பமான கட்சிக்கோ அல்லது குழுவுக்கோ தனது வாக்கை அளிப்பதுடன் தனக்கு கொடுக்கப்பட்டுள்ள மூன்று விருப்பு வாக்குகளையும் தமக்குப் பிடித்த விதத்தில் ஒருவருக்கு ஒரு வாக்கு விதம் மூவரை தெரிவு செய்யலாம். அல்லது ஒருவரை மட்டும் தெரிவு செய்யும் விதத்தில் ஒரு வாக்கை அளிக்கலாம். அல்லது ஒருவரையுமே விருப்பு வாக்குகளின் மூலம் தெரிவு செய்யாமலும் விடலாம். கொடுக்கப்பட்டிருக்கும் எண்களை நினைவில் இருத்திக் கொண்டால் மாத்திரமே தாம் யாருக்கு வாக்களித்துள்ளோம் என்பது வாக்காளருக்கு தெரிந்துக்கொள்ள முடியும்.

முன்பிருந்த சோல்பரி முறையின்படி தேர்தல் மாவட்டங்களின் சனத்தொகைக்கு ஏற்ப ஆசனங்கள் நிர்ணயிக்கப்பட்டன. ஆனால் தற்போதைய முறையின்படி 160 ஆசனங்களை 22 மாவட்டங்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களிலும் வாழும் மக்கள் தொகைக்கேற்ப நிர்ணயிக்கப்பட்டு மிகுதி 36 ஆசனங்களையும் ஒன்பது மாகாணங்களுக்கும் சரிசமனாக பிரித்துக் கொடுக்கப்படுகின்றது. ஒவ்வொரு தேர்தல் மாவட்டத்திலும் செல்லுபடியான மொத்த வாக்குகளில் 5% வாக்குகளை பெறத் தவறும் எந்த ஒரு கட்சியோ அல்லது குழுவோ நிராகரிக்கப்பட்டு விடுகின்றது. இந்த முறையில் வேட்பாளர் ஒரு தொகுதியில் மாத்திரமன்றி அந்த மாவட்டம் முழுவதிலுமே பிரச்சார வேலைகளில் ஈடுபட வேண்டியதாகின்றது. இந்த புதிய முறை கட்சிகளுக்கிடையே மட்டுமல்லாது கட்சிக்குள்ளும் பிரச்சனைகளை உருவாக்கக் கூடியதாக உள்ளது என்றே கூறவேண்டும்.

ஒரு மாவட்டத்தில் எல்லா கட்சிகளையும் விட அதிகமான வாக்குகளை பெறும் ஒரு கட்சியோ, அல்லது சுயேட்சை குழுவோ ஒரு வெகுமதி ஆசனத்தை (Bonus Seat) பெறுகிறது. தேசிய பட்டியல் முறையை பொறுத்தமட்டில் அரசியல் கட்சியோ அன்றேல் சுயேட்சை குழுவோ இனவாரியான விகிதாசார முறைப்படி ஆசனங்களை பெற தகுதியுடையவர்களாகின்றனர். ஆனால் இன விகிதாசாரத்தின் அடிப்படையில் இது கொடுக்கப்படவில்லை.

## 13.1 தேர்தல் ஒரு கண்ணோட்டம்

| | |
|---|---|
| பாராளுமன்றம் கலைக்கப்பட்ட நாள் | - 20.12.1988 |
| வேட்புமனு தாக்கலுக்கான காலம் | - 30.12.88 - 6.1.89 |
| பொதுத்தேர்தல் நடைபெற்ற தினம் | - 15. 2.1989 |
| பாராளுமன்றம் கூட்டப்பட்ட தினம் | - 9. 3.1989 |

அரசாங்கக் கலை என்பது விக்கிரக ஆராதனையின் அமைப்பே. அதிகார வர்க்கம் என்பது காரியஸ்தர்களைக் கொண்டது: பிரபுக்கள் வர்க்கமே விக்ரகங்கள்; ஜனநாயகம் என்பது விக்ரஹ ஆராதனைக் கூட்டம், பொது மக்களால் அதிகார வர்க்கத்தைப் புரிந்துக் கொள்ள முடியாது, அவர்களால் தேசத்தின் விக்ரகங்களை மட்டுமே ஆராதிக்க முடியும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அட்டவணை-7.10 ஒன்பதாவது பாராளுமன்ற தேர்தல்-1989[25]

| | தெரிவு செய்யப்பட்டவர்கள்தொகை | தேசியப் பட்டியல் | பெற்ற வாக்குகள் வீதம் | போட்டியிட்ட மாவட்டங்கள் | போட்டியிட்டவேட்பாளர் தொகை | போட்டியிட்ட பெண்கள் தொகை | பெற்ற வாக்குகள் தொகை | சிறுபான்மையின வேட்பாளர் தொகை |
|---|---|---|---|---|---|---|---|---|
| ஐ.தே.க. (இ.தொ.கா) | 110 | 15 | 50.71% | 22 | 226 | 12 | 2,838,005 | 14 |
| ஸ்ரீ.சு.க | 58 | 09 | 31.90% | 21 | 212 | 04 | 1,785,369 | 02 |
| த.வி.கூ | 09 | 01 | 3.37% | 05 | 46 | — | 188,594 | 10 |
| | 03 | 01 | 3.61% | 13 | 149 | — | 202,016 | 04 |
| ஐ.சோ.மு | 02 | 01 | 2.86% | 18 | 210 | 02 | 160,271 | [illegible] |
| ம.ஐ.மு | 02 | 01 | 1.63% | 11 | 144 | 08 | 91,128 | 0 |
| சுயே (1) | 12 | 01 | 4.11% | 08 | 73 | — | 235,169 | 13 |
| மொத்தம் | 196 | 29 | | | 1060 | 26 | | 43 |

அளிக்கப்பட்ட மொத்த வாக்குகள் - 5.962 031 (63.60%)
நிராகரிக்கப்பட்ட மொத்த வாக்குகள் - 365.563 (6.13%)
பதிவு செய்யப்பட்ட மொத்த வாக்குகள் - 9 374.164

[பி.கு.] இந்த தேர்தலுக்கு 48 மணித் தியாலங்களுக்கு முன் நாட்டில் இடம் பெற்ற வன்முறைச் சம்பவங்களில் 150க்கு மேற் பட்டோர் கொல்லப்பட்டுள்ளனர்.

## 7.13.2 புதிய பாராளுமன்ற தேர்தல் முறை

இலங்கை ஜனநாயக சோஷலிச குடியரசின் அரசியலமைப்பில் 95(1) தொடக்கம் 104 வரை இதன் முக்கிய அம்சமானது இத்தனைக் காலமிருந்த தேர்தல் நிர்ணய குழு 1978ல் மாற்றியமைக்கப்படுகின்றது. இக்குழுவிற்கு ஜனாதிபதி வரையறை ஆணைக்குழு என்ற பெயர் வழங்குகிறது. ஜனாதிபதியால் ஏற் படுத்தப்படும். இக்குழுவிற்கு ஒருவர் தவிசாலராக நியமிக்கப் படுவார். இந்த ஆணைக்குழு முழு இலங்கையையும் 20க்கு குறையாததும் 24க்கு மேற்படாததுமான மாவட்டங்களாக பிரித்து அவற்றிற்கு பெயர்களை குறிக்கும் வேலையை செய்யும். இலங் கையின் ஒன்பது மாகாணங்களிலும், ஒரு மாகாணம் அதன் விஸ் தாரணத்தை பொறுத்து இரண்டோ, அதற்கு மேலாகவோ தேர் தல் மாவட்டங்களை கொண்டிருக்கலாம். ஒவ்வொரு மாகா ணத்திலுமுள்ள தேர்தல் மாவட்டங்கள் ஒன்றிணைந்து 4 உறுப் பினர்களை தெரிந்தெடுத்தனுப்பும் உரிமையுடையது. இந்த வரையறை ஆணைக்குழுவே தேர்தல் மாவட்டங்களின் எண்ணிக்கை, பெயர்கள், மாவட்டங்களில் எத்தனை உறுப்பினர் களை தெரிந்தெடுக்கும் உரிமை உடையது என்ற விசயங்களை வெளிப்படுத்தும். ஒவ்வொரு தேர்தல் மாவட்டத்திலும் தேர்தல் இடாப்புகளை தயாரிப்பதும் அதன் வேலையாகும். ஜனாதிபதி வரையறை ஆணைக்குழு இலங்கை முழுவதையும் 22 மாவட்டங் களாக பிரித்து ஒவ்வொன்றிற்கும் ஒதுக்கிய ஆசனங்களின் விபரம் பின்வருமாறு.[26]—

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அட்டவணை 7.11 - பாராளுமன்ற தேர்தல் முடிவுகள் - 1989

| தேர்தல் மாவட்டம் | ஐ.தே.க | ஐ.சோ.மு | த.வி.கூ | எம்.ஈ.பி | ஸ்ரீ.க | மு.கா. | சுயே.-1 | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| கொழும்பு | 12 | 0 | — | 2 | 6 | 0 | — | 20 |
| கம்பஹா | 10 | 0 | — | — | 7 | | — | 17 |
| களுத்துறை | 6 | 0 | — | 0 | 5 | 0 | — | 11 |
| கண்டி | 8 | 0 | — | — | 4 | 0 | — | 12 |
| மாத்தளை | 4 | 0 | — | — | 1 | - | — | 5 |
| நுவரேலியா | 4 | 0 | — | — | 2 | 0 | — | 6 |
| காலி | 6 | 0 | — | 0 | 5 | 0 | — | 11 |
| மாத்தறை | 6 | 0 | — | 0 | 3 | — | — | 9 |
| அம்பாந்தோட்டை | 5 | 0 | — | 0 | 2 | 0 | — | 7 |
| யாழ்ப்பாணம் | 0 | - | 3 | - | — | 0 | 3 | 11 |
| வவுனியா | 1 | - | 2 | — | 0 | 1 | : | 5 |
| மட்டக்களப்பு | 0 | 0 | 3 | — | 0 | 1 | 1 | 5 |
| திகாமடுல்ல | 3 | 0 | 1 | — | 1 | 1 | — | 6 |
| திருகோணமலை | 1 | 0 | 0 | 0 | 1 | 0 | 2 | 4 |
| குருநாகல் | 10 | 0 | — | 0 | 5 | — | — | 15 |
| புத்தளம் | 5 | 0 | — | — | 2 | 0 | 0 | 7 |
| அனுராதபுரம் | 5 | 0 | — | 0 | 3 | — | 0 | 8 |
| பொலன்னறுவை | 4 | 0 | — | — | 1 | — | — | 5 |
| பதுளை | 5 | 0 | — | 0 | 3 | — | — | 8 |
| மொனராகலை | 3 | 0 | — | 0 | 2 | 0 | 0 | 5 |
| இரத்தினபுரி | 6 | 1 | — | — | 3 | — | 0 | 10 |
| கேகாலை | 6 | 1 | — | 0 | 2 | — | — | 9 |
| மொத்தம் | 110 | 2 | 9 | 2 | 58 | 3 | 12 | 196 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 7.13.3 மலையக வேட்பாளர்

இத்தேர்தலில் மலையக மக்களை பொறுத்த வரையில் அங்கு போட்டியிட்ட எந்த கட்சிகளோ, குழுக்களோ தங்கள் வேட்பாளர்களை தெரிவு செய்யவில்லை. தேசிய தொழிலாளர் சங்கம் நிதிக் காரியதரிசி பி. பெருமாள் ஐ சோ.மு. இல்போட்டியிட்டு 2.581 வாக்குகளை பெற்றார். திரு. சந்திரசேகரன் ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணியின் கீழ் போட்டியிட்டு 1,364 வாக்குகளைப் பெற்றார். இந்த ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணி முதன் முதலாக தொழிற் சங்க நடவடிக்கை எதுவுமின்றி நுவரேலியா தொகுதியில் 10.409 வாக்குகளை பெற்றது. இ.தொ.காவில் போட்டியிட்ட சிவலிங்கம் 23.882 வாக்குகளைப் பெற்றார். இத்தேர்தலில் மலையகத் தமிழர் தோல்வியுற்ற போதிலும், ஐ.தே. கட்சியின் மூலவாக தேசிய பட்டியலில் இடம் பிடித்து, திரு தொண்டமான், நெசவுத் தொழில், கிராம அபிவிருத்தி அமைச்சராகவும், திரு. தேவராஜன் இந்து சமய, கலாச்சார அமைச்சராகவும் பதவிகள் பெற்றனர். திரு. தொண்டமான் பத்திரிகை பேட்டியொன்றில் மலையக தமிழர் தோற்றதற்கு திரு. சந்திரசேகரனும். மலையகப் பாடசாலைகளில் கல்வி கற்பித்த யாழ்ப்பாண ஆசிரியர்களும்தான் காரணம் எனக் கூறியுள்ளது வேடிக்கையானது தான் செய்த தவறுகளை மறைக்க தேடிப்பிடித்த நொண்டி காரணங்கள் என்பது வெள்ளிடை மலை[28].

கொழும்பு மாவட்டத்தில் ஐ. தே. கட்சியில் போட்டியிட்ட திரு. செல்லச்சாமி வெற்றி பெற்றார். அன்று மலையக வாக்காளருள் 60 சதவீதமானோர் வாக்களித்தும், ஐ தே. கட்சி அதனால் பயனடைந்ததே தவிர மலையச மக்களில் எவரும் தேர்தலில் தெரிவு செய்யப்படவில்லை. உதாரணமாக இரத்தின புரியில் 17,323 வாக்குகளையும், கேகாலை மாவட்டத்தில் 15,163 வாக்குகளையும் பெற்ற ஐ.சோ.மு. கட்சிக்கு தலா ஒரு அங்கத்தவர் வீதம் இரண்டு அங்கத்தினர் கிடைத்துள்ளார்கள்.

1991ம் ஆண்டு செப்டெம்பர் மாதத்தில் ஐ.தே. கட்சியில் இருந்த அங்கத்தவர் சிலர் ஜனாதிபதிமீது நம்பிக்கையில்லா தீர்மானம் கொண்டு வந்ததன் காரணமாக ஐ.தே. கட்சியிலிருந்து சிலர் நீக்கப்பட்டனர். இதனால் ஏற்பட்ட வெற்றிடங்களை நிரப்ப இ.தொ கா. சேர்ந்த 2 அங்கத்தவர்களுக்கு, 1989ம் ஆண்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுத்த நிலையில் விருப்பு வாக்குகளைப் பெற்ற பதுளையை சேர்ந்த பி. சென்னன், நுவரேலியாவைச் சேர்ந்த சிவலிங்கம் ஆகியோர் தெரிவாயினர்.

இந்த காலகட்டத்தில் கூடுதலான மலையகத் தமிழர் பல்வேறு பிரஜாவுரிமைச் சட்டத்தின் கீழ் வாக்குரிமை பெற்றிருந்தனர். ஆனாலும் அனேகம் பேருடைய பெயர்கள் தேர்தல் இடாப்பில் பதியப்படாமல் இருந்தன. கட்சி ரீதியிலும், சுயேட்சையாகவும் 30 வேட்பாளர்கள் மலையக தமிழர் சார்பில் போட்டியிட்டனர். இ.தொ.கா, ஐ.தே.க. கூட்டணி பட்டியலில் பெருந்தோட்டத்துறையிலிருந்து 7 பேரையும், கொழும்பில் ஒருவரையும் நிறுத்தியது. ஆனால் வேட்பு மனுதாக்கல் செய்யும் தினத்தன்று இ.தொ.கா சேர்ந்த திரு. சந்திரசேகரன் [தலவாக்கொல்லை இ.தொ.க.அமைப்பாளர்] தனது கட்சியிலிருந்து விலகி உமா மகேஸ்வரனுடைய கட்சியான ஜனநாயக மக்கள் முன்னணியுடன் சேர்ந்து கொண்டார். இந்த தேர்தலில்தான் திரு. தொண்டமான் மலையக மக்களிடம் அவர்கள் விருப்பு வாக்குகளில் இரண்டை இ.தொ.காவிற்கும், ஒன்றை ஐ,தே, கட்சிக்கும் அளிக்கும்படி கேட்டிருந்தார். இதன் விளைவாக இ.தொ. கட்சியில் இருந்து எந்த அங்கத்தவரும் மலையகத்தில் தெரிவு செய்யப்படவில்லை. இதே வேளையில் மலையகத் தமிழர் நுவரேலியா மாவட்டத்தில் மற்ற கட்சிகளுடன் சேர்ந்து போட்டியிட்டனர். மாவட்ட ரீதியாக தேர்தலை நடத்தும் புதிய முறை சிறுபான்மை மக்களை பலவீனப்படுத்தியுள்ளது. மூன்று மாவட்டங்களில் உள்ள மலையக மக்கள் இதனால் பாதிக்கப்பட்டனர். மிக குறைந்த தொகையில் தமிழ் மக்கள் வாழும் வலப்பனை-கொத்மலை தொகுதியுடன் கண்டி மாவட்டத்தை சேர்ந்த ஹங்குரான்கெத்த [முழுச்சிங்கள பகுதி] நுவரேலியா மாவட்டத்துடன் இணைக்கப்பட்டதால், நுவரேலியா மாவட்டத்தில் சிங்களவர் தொகைக் கூடியது. இதே போன்று பதுளை மாவட்டத்தில் தமிழ் மக்கள் அதிகமாக வாழும் பகுதிகளை மொனராகலை மாவட்டத்துடன் இணைத்ததாலும், முழுச்சிங்களப் பகுதியான மஹியங்கனை பதுளை மாவட்டத்துடன் இணைக்கப்பட்டதாலும் பதுளையில் தமிழ் வாக்குகள் பலவீனப்படுத்தப்படுகிறது. மலையகத்தில் மட்டுமல்ல கிழக்கு மாகாணத்திலும் சிறுபான்மையினரின் நிலை இப்படி பலவீனப்படுத்தப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அட்டவணை-7.12 பொதுத் தேர்தல் - 1989 மலையக மாவட்டங்கள்[29]

| தேர்தல் மாவட்டம் | பதிவான வாககாளர் | செல்லுபடியான வாக்குகள் | நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | % | ஐ. தே. க பெற்ற வாக்குகள் | % | ஸ்ரீ ல.சு.க பெற்ற வாக்குகள் | % | ஐ. சோ. மு பெற்ற வாக்குகள் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 06-நுவரேலியா மஸ்கெலியா | 229,519 | 173,424 | 13,600 | 7.27 | 109, 853 | 63.35 | 47,128 | 27.18 | |
| 19-பதுளை | 329,321 | 229,094 | 19,704 | 7.92 | 135,089 | 58.97 | 81,011 | 35.36 | |
| 04-கண்டி | 628,317 | 332,109 | 22,374 | 6.31 | 204,973 | 61.72 | 105,973 | 31.91 | |
| 21-இரத்தினபுரி | 457,224 | 339,122 | 20,248 | 5.63 | 196,323 | 57.89 | 123,360 | 36.38 | 17, 323 5.11% |
| 2 -கேகாலை | 437,131 | 285,254 | 18,[illegible]62 | 6.05 | 174,334 | 61.12 | 80,668 | 28.28 | 15, 168 5 32% |
| 20-மொனறாகலை | 161,927 | 88,352 | 12,317 | 1224 | 46,313 | 52.4- | 38,640 | 43.73 | |
| 05-மாத்தளை | 214.938 | 139.280 | 11,927 | 7.89 | 88,869 | 63.81 | 45,717 | 32 87 | |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ௭.14 10 ஆவது பொதுத் தேர்தல்-1994

தேர்தல் முறையின்படி 1995ம் ஆண்டு ஆரம்பத்தில் இந்தப் பொதுத் தேர்தல் நடத்தப்பட்டிருக்க வேண்டும். இதற்கு முன் 1994ம் ஆண்டு நவம்பரில் ஜனாதிபதி தேர்தல் நடத்தப்பட வேண்டும். ஆனால் தனது அதிகாரத்தை பிரயோகித்து மக்கள் சற்றும் எதிர்பாராத தருணத்தில் ஜனாதிபதி பொதுத் தேர்தலை அறிவித்தார். அதனையடுத்து பாராளுமன்றம் ஜூன் மாதம் கலைக்கப்பட்டு வேட்பு மனு தாக்கல் செய்தவதற்கான காலக்கெடுவை ஜூலை மாதம் 4 முதல் 11 ஆக நிர்ணயித்தது. பொதுத்தேர்தல் ஆகஸ்ட் மாதம் 16ம் திகதி நடத்தப்படும் என பிரகடனம் செய்யப்பட்டது.

இத்தேர்தலில் 10 கட்சிகள் உட்பட 25 சுயேட்சைக் குழுக்கள் மூலம் 1,445 வேட்பாளர்கள் களத்தில் இறங்கினர். இதில் 45 பெண்களும் பல்வேறு அமைப்புகளைச் சார்ந்த 32 மலையத் வேட்பாளரும் இடம் பெற்றுள்ளனர். இத் தேர்தலில் பல திருப்பு முனைகள் ஏற்படக்கூடும் என்று பலரும் எதிர்பார்த்தனர். அதிலும் சிறுபான்மையினர் குறித்த நிலைபாடு முக்கியத்துவம் பெற்றிருந்தது.

தேர்தல் அறிவிப்புக்கு முன்னர் எழுந்த அரசியல் சர்ச்சைகள் இலங்கை அரசியலில் சிறுபான்மையினரின் முக்கியத்துவம் எள்ளி நகையாடப்படும், பின்தள்ளப்பட்டுவிடும் போன்ற சந்தேகங்களைக்கூட தோற்றுவித்திருந்தது. ஆனால், முற்றிலும் மாறுபட்ட விதத்தில் சிறுபான்மையினரின் முக்கியத்துவம் வலியுறுத்தப்படும் விதமாக தேர்தல் முடிவுகள் அமைந்து விட்டது.

வட-கிழக்கு சார்ந்த நான்கு தமிழ் பகுதிகளிலும், விசேடமாக யாழ்ப்பாணம், வன்னி தேர்தல் மாவட்டங்களில் இத்தேர்தல் நடைமுறைகள் ஜனநாயக கோட்பாட்டை எள்ளி நகையாடியுள்ளது. அறிவிக்கப்பட்ட தேர்தல் முடிவுகள் மக்களின் தீர்ப்பா அல்லது அதிகாரத்தின் தீர்ப்பா என்ற சந்தேகம் பலரது மனதிலும் தோன்றியுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நிலையில், மலையகத்தை பொறுத்தவரை சிறுபான்மை இன வாக்குகள் எவ்விதமாக வழி நடத்தப்பட்டன, அதன் மூலம் எவ்வாறான பலனை அளித்துள்ளன, என்பன குறித்து தெளிவாக தொகுதி வாரியாக ஆராய்வது மலையக மக்களின் எதிர்கால அரசியல் நடவடிக்கைகளுக்கு பயனளிப்பதாக இருக்கும்.

## 7.14.1 நுவரெலியா மாவட்டம்

எட்டு ஆசனங்களைக் கொண்ட இம்மாவட்டத்தில் பதிவு செய்யப்பட்ட மொத்த வாக்குகளின் எண்ணிக்கை 386, 669 ஆகும். அளிக்கப்பட்ட வாக்குகளின் எண்ணிக்கை 317, 644 ஆகவும் நிராகரிக்கப்பட்டவை 21,498 ஆகவும் இருந்தன. அதிலும் குறிப்பாக நுவரெலியா-மஸ்கெலியா தொகுதியில் மாத்திரம் 13,368 வாக்குகள் பழுதடைந்திருந்தன. இந்த மாவட்டத்தில் மொத்தம் 55 வேட்பாளர்கள் களத்தில் குதித்தனர். இவர்களுள் 17 பேர் தமிழ் வேட்பாளர்களாவர். இதில் 11 வேட்பாளர்கள் சுயேட்சையாக நின்றனர். ஐக்கிய தேசிய கட்சி சின்னத்தின் கீழ் இ.தொ.காவைச் சேர்ந்த மூவரும், பொ. ஐ. ஐ. மு. சின்னத்தின் கீழ் மூவரும் இடம் பெற்றனர். இ. தொ. கா. உறுப்பினர்கள் பெற்ற வாக்குகள் வருமாறு; முத்து சிவலிங்கம்-85 490. எஸ். சதாசிவம்-83.368. ஆறுமுகம் தொண்டமான்-75, 297. சுயேட்சை குழு ஒன்றில் பீ. சந்திரசேகரன் 23, 453 வாக்குகளை பெற்றிருந்தார். பொ. ஐ. ஐ. மு. சார்பில் போட்டியிட்ட வி. கந்தையா 9, 108 வாக்குகளையும், அருள்சாமி 8, 077 வாக்குகளையும், ஆ. ராமையா 8, 035 வாக்குகளையும் பெற்றனர். சுயேட்சை குழுவில் இடம் பெற்ற ஏனைய தமிழ் வேட்பாளர்கள் பெற்ற வாக்குகளின் விபரம் வருமாறு, ரீ. தர்மலிங்கம்-22,257, ஆர். ராமலிங்கம்-4,715, எஸ். கேசவமூர்த்தி 4,077, எஸ். அருளப்பன் 3, 245, என். இராதாகிருஷ்ணன் 2, 052, எஸ். தங்கராஜா-2, 634, ஆர். பிரெட்றிக் ரொசரி-2,514, எம். கே. காந்தி 1, 716, கே. செல்லதுரை—1,019, என். ராஜதுரை 945 வாக்குகளையும் பெற்றனர்.

இந்த மாவட்டத்தில் மலையக மக்களின் மொத்த வாக்குகள் 180,000ம் ஆகும். விருப்பு வாக்கு முறையின்படி இதன் எண்ணிக்கை மும்மடங்காக அதிகரிக்கின்றது, இதன்படி 540,000 மலையக தமிழ் விருப்பு வாக்குகள் இந்த மாவட்டத்தில் இருக்கின்றது. தமிழ் வேட்பாளர்கள் அனைவரும் பெற்ற மொத்த வாக்குகளின் எண்ணிக்கையோ 337, 897 ஆக இருக்கின்றது. இதன்படி மிகுதி தமிழ் வாக்

குகள் அளிக்கப்படாமல் இருக்கலாம். நிராகரிக்கப்பட்டிருக்கலாம். தமிழ் வேட்பாளர் அல்லாதோருக்கு சென்றிருக்கலாம். 1947 ஆம் ஆண்டு இந்தப் பகுதியில் 95 அங்கத்தவருக்கான தேர்தலில் ஐவரை தெரிந்தெடுத்து அனுப்ப முடிந்தவர்களால் இத்தனை ஆண்டுகளுக்குப் பின் 225 அங்கத்தவர்களுச்கான தேர்தலில் நான்கு பேரை தெரிவு செய்ய முடிந்துள்ளது. மலையக தமிழர் செறிந்து வாழும் இப்பகுதியில் குறைந்தது 5 அல்லது 6 பேரை தெரிவு செய்யும் வாய்ப்புள்ளது. ஆனால் வாக்குகள் கூறுபோடப்பட்டுள்ள காரணத்தால் இந்த நிலையை எய்த முடியவில்லை. இந்தத் தேர்தல் மாவட்டத்தில் எல்லாத் தொகுதிகளிலும் ஐ. தே. கட்சியே வெற்றிப் பெறுவதற்கு தமிழ் வாக்குகள் உதவியுள்ளன என்பது மறுக்க முடியாத உண்மை.

## 7.14.2 பதுளை மாவட்டம்

எட்டு ஆசனங்களைக் கொண்ட இந்த மாவட்டத்தில் மொத்த வாக்காளர் தொகை 435,260 ஆகும். போட்டியிட்ட 6 அமைப்புகளில், மூன்று அமைப்புகள் சார்பாக, அதாவது ஐ.தே. கட்சியில் இருவரும், சிறீலங்கா முற்போக்கு முன்னணியில் ஒருவரும், சுயேட்சை குழு (1)ல் இருவருமாக 5 தமிழர்கள் போட்டியிட்டனர். உத்தேச தமிழ் வாக்குகள் 85,000ம் ஆகின்றது. விருப்பு வாக்குகள் முறையில் இதன் எண்ணிக்கை 225,000 மாக உயர்கின்றது. எனினும் 5 தமிழ் வேட்பாளர்களும் மொத்தம் 81,394 வாக்குகளே பெற்றுள்ளனர். இங்கும் ஐ தே. கட்சி முன்னிலை பெறுவதற்கு தமிழர்களது வாக்குகளே பெருவாரியாக உதவியுள்ளது. மஹியாங்கன தொகுதியிலேயே ஐ. தே. க. அதிகமான வாக்குகளை பெற்றுள்ளது. பொ. ஐ. ஐ. முன்னணி இந்த மாவட்டத்தில் தங்கள் சார்ப்பாக ஒரு தமிழ் வேட்பாளரையும் நிறுத்தாதது குறிப்பிடத் தக்கது. ஐ. தே. கட்சி சின்னத்தின் கீழ் போட்டியிட்ட இ. தொ. கா. வேட்பாளர்களான வீரன் சென்னன் 41,683 வாக்குகளையும், எம். சுப்பையா 39,650 வாக்குகளையும் பெற்று திரு. சென்னன் வெற்றி பெற்றார். சுயேச்சை குழு (1)ல் போட்டியிட்ட கந்தன் செல்வராஜா, அரவிந்தன் ஆகியோர் முறையே 53, 27 வாக்குகளைப் பெற்றனர், ஸ்ரீ. ல. மு. மு. ல் போட்டியிட்ட சுப்பையா ரத்னசபாபதி 181வாக்குகளைபெற்றார். இங்கும் தமிழர் பெற்ற வாக்குகள் குறைவதற்கு தமிழ் வாக்குகள் சிதறுண்டு போயுள்ளதை காரணமாக கொள்ளலாம். கடந்த பொதுத் தேர்தலில் (1989) இந்த தேர்தல் மாவட்டத்தில் ஒரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரும் தெரிவாகவில்லை. 1947ல் நடந்த தேர்தலில் இந்த மாவட்டம் இரண்டு தமிழ் அங்கத்தினர்களைக் கொண்டிருந்தது. மூன்று தசாப்தங்களை கடந்து வந்தபின்னும் அன்றைய நிலையைக்கூட எட்ட முடியாதிருப்பது அரசியல் ரீதியாக தமிழர்கள் பின்னடைந்திருப்பதையே காட்டுகின்றது.

## 7.14.3 கண்டி மாவட்டம்

மலையகத் தமிழர் செறிந்து வாழும் பகுதிகளில் மூன்றாவது இடத்தை வகிக்கும் இந்த மாவட்டம் 12 ஆசனங்களைக் கொண்டுள்ளது. மொத்தம் 726, 182 வாக்குகள் பதிவு செய்யப் பட்டுள்ளன. இதில் தமிழ் வாக்காளரின் தொகை 72,000ம் ஆகும். ஒருவருக்கு 3 விருப்பு வாக்குகள் வீதம் இதன் எண்ணிக்கை 216,000 மாக உயர்கின்றது. ஆறு அமைப்புகள் இங்கு போட்டியிட்டன. இ.தொ.கா. வேட்பாளர் ஆர். பி. சிவசாமி 38,343 வாக்குகளைப் பெற்று வெற்றி பெற்றார். தவசி ஐயாதுரை 4,398 வாக்குகளையும் சுயேட்சை குழு (1)ல் போட்டியிட்ட சின்னக்கருப்பன் தேசவன் வெறும் 3 வாக்குகளையும் பெற்றனர். இவர்களது மொத்த வாக்குகளின் எண்ணிக்கை 42, 744 ஆகும். தமிழ் வாக்காளர் அதிகமாக இருந்தும் ஒருவரை மட்டுமே தெரிந்தெடுத்திருப்பதைப் பற்றி மலையகத் தமிழர் சிந்திக்க வேண்டும். இம்மாவட்டத்தில் 11 பிரிவுகளில் ஐ. தே. கட்சியும், இரண்டு பிரிவில் பொ. ஜ. ஐ முன்னணியும் வெற்றியீட்டி முறையே 7 ஆசனங்களையும், 5 ஆசனங்களையும் கைப்பற்றியுள்ளது.

## 7.14.4 இரத்தினபுரி மாவட்டம்

தமிழ் மக்கள் செறிந்து வாழும் தேர்தல் மாவட்டங்களில் அடுத்து குறிப்பிடத்தக்கது இரத்தினபுரியாகும். இந்த மாவட்டத்தின் தீர்புகள் ஏனைய மலையகத் தமிழர் வாழும் மாவட்டங்களுடன் ஒப்பிடும்போது ஒரு திருப்பு முனையாக தெரிகின்றது.

இங்கு மொத்தம் 554,607 வாக்குகள் பதியப்பட்டுள்ளது. பதியப்பட்ட தமிழ் வாக்காளர் எண்ணிக்கை 30,000ம் ஆகும். விருப்பு வாக்குகள் அடிப்படையில் 90,000 மாக இது அதிகரிக்கின்றது. இருந்தும் ஐ. தே. கட்சியின் கீழ் போட்டியிட்ட ஒரேயொரு தமிழ் வேட்பாளரால் கூட வெற்றிபெற முடியவில்லை. இ. தொ. கா. வைச் சேர்ந்த கே. ராமசந்திரன் என்ற இந்த வேட்பாளர் 19,848 வாக்குகளை மட்டுமே பெற்றிருந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொத்தம் 10 ஆசனங்களைக் கொண்ட இந்த மாவட்டத்தில் பொ. ஐ. ஐ. மு. 6 ஆசனங்களையும், ஐ. தே. க. 4 ஆசனங்களையும் கைப்பற்றியுள்ளன. இங்குள்ள 3 பிரிவுகளில் ஐ. தே. க. முன்னிலை வகித்தாலும் பெரும்பான்மையுடன் வெற்றிபெற முடியவில்லை.

பொ. ஐ. ஐ. மு. சார்பில் போட்டியிட்ட வேட்பாளர்களில் வாசுதேவ நாணயக்கார 62,989 வாக்குகளைப் பெற்று அந்தக் கட்சியில் மிகக் கூடுதலான வாக்குகளை பெற்றவராகின்றார். இது அவர்மீது அப்பகுதி மக்கள் கொண்ட நம்பிக்கையை காட்டுகின்றது. அவரது வெற்றிக்கு பின்னணியில் தமிழ் வாக்குகள் இருப்பதனால் தமிழ் மக்களை பொறுத்தவரை இதை ஒரு திருப்பு முனையாக கொள்ளலாம்.

## 7.14.5 மாத்தளை மாவட்டம்

இந்த மாவட்டத்தில் பதிவு செய்யப்பட்ட வாக்குகளின் மொத்த வாக்காளர் தொகை 259,271 ஆகும். பதியப்பட்ட தமிழ் வாக்குகளின் எண்ணிக்கை 25,000 ஆகும். விருப்பு வாக்கு முறையின்படி இது 75,000 ஆக அதிகரிக்கின்றது. நான்கு தேர்தல் பிரிவுகளைக் கொண்ட இந்த தேர்தல் மாவட்டத்திற்கு ஐந்து ஆசனங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. நடந்து முடிந்த இந்தத் தேர்தலில் 2 பிரிவுகளில் ஐ. தே. கட்சியும், 2 பிரிவுகளில் பொ.ஜ.ஐ முன்னணியும் வெற்றிப்பெற்று 3 ஆசனங்களை பொ. ஜ. ஐ. முன்னணியும், 2 ஆசனங்களை ஐ.தே.கட்சியும்பெற்றுள்ளன. இந்த மாவட்டத்தில் நான்கு அமைப்புகள் போட்டியிட்டன. இங்கு பொ. ஜ. ஐ. மு, ஐ.தே.க., சுயேச்சை குழு (1) ஆகியன சார்பாக தலா ஒருவர் வீதம் 3 தமிழ் வேட்பாளர்கள் போட்டியிட்டனர். இந்த மூவரும் பெற்ற மொத்த வாக்குகளின் எண்ணிக்கை 18,672 ஆகும். வெற்றி பெற்ற எம். சிவஞானம் 15,369 வாக்குகளை ஐ தே. கட்சி சார்பாக போட்டியிட்டு பெற்றுள்ளார். ல. தோ. தொ. யூனியனைச் சேர்ந்த எஸ். ராமநாதன் 2, 785 வாக்குகளையும், சுயேச்சை குழுவில் போட்டியிட்ட வீராய் மாணிக்கம் 518 வாக்குகளையும் பெற்றனர். முதன் முறையாக இந்த மாவட்டத்தில் ஒரு தமிழர் வெற்றி பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 7.14.6 கேகாலை மாவட்டம்

இங்கு பதியப்பட்ட மொத்த வாக்காளரின் தொகை 500,947 ஆகும். இதில் 30,000ம் பேர் தமிழ் வாக்காளராவர். விருப்பு வாக்கு அடிப்படையில் இது 90,000ம் ஆகின்றது. இதன் பிரகாரம் கேகாலை மாவட்டத்தில் தமிழ் வாக்காளரின் பலம் இரத்தினபுரி மாவட்டத்திற்கு சமனாக உள்ளது. ஒன்பது பிரிவுகளைக் கொண்ட இந்த மாவட்டத்தில் பொ.ஐ.ஐ.மு. 6 இடங்களையும், ஐ.தே.க. 4 இடங்களையும் கைபற்றியுள்ளன. இரண்டு கட்சிகள் சார்பிலும் தலா ஒரு தமிழ் அபேட்சகர் வீதம் போட்டியிட்டாலும் ஒருவர் தானும் வெற்றிபெற முடியவில்லை. ஐ.தே.கட்சியின் சின்னத்தில் போட்டியிட்ட இ.தொ.கா. அபேட்சகர் பி. பாலசுப்பிரமணியம் 12,862 வாக்குகளையும், பொ.ஐ.ஐ.மு. சார்பில் போட்டியிட்ட வீ.எஸ்.ராஜா 7,221 வாக்குகளையும் பெற்றனர். இதன்படி இவர்கள் பெற்ற மொத்த வாக்குகளின் எண்ணிக்கை 20,083 ஆகும்.

### 7.14.7 களுத்துறை மாவட்டம்

இந்த மாவட்டத்தில் 646,199 வாக்காளர்கள் பதியப்பட்டுள்ளனர். இவர்களுள் தமிழ் வாக்காளர் தொகை 30,000த்னை தொட்டு நிற்கின்றது. இதன் பிரகாரம் விருப்பு வாக்குகளின் எண்ணிக்கை 90,000ம் ஆகும். இ.தொ.கா. வேட்பாளர் பி. ராமலிங்கம் ஐ.தே.க. சின்னத்தின் கீழ் இந்த மாவட்டத்தில் போட்டியிட்டு 10,861 வாக்குகளைப் பெற்றார். எட்டு தேர்தல் பிரிவுகளை கொண்ட இந்த மாவட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட 10 ஆசனங்களில் பொ.ஐ.ஐ.மு 6 யும், ஐ.தே.க. 4 யும் கைபற்றியுள்ளன.

### 7.14.8 ஏனைய மாவட்டங்கள்

கம்பஹா மாவட்டத்தில் இ.தொ.கா. வேட்பாளர் ஆர்.திவ்யராஜன் ஐ.தே.க. சின்னத்தின் கீழ் போட்டியிட்டு 9,470 வாக்குகளை பெற்றுள்ளார். கொழும்பு மாவட்டத்தில் ஐ.தே.க. சின்னத்தில் போட்டியிட்ட இ.தொ.கா. வேட்பாளர்கள் பி. தேவராஜ், ஆர். யோகராஜன் ஆகியோர் முறையே 33,494 வாக்குகளும் 37,028 வாக்குகளும் பெற்றுள்ளனர். பொ.ஐ.ஐ.மு சார்பில் போட்டியிட்ட செல்லசாமி 12,474 வாக்குகளை பெற்

றுள்ளார். இந்த இரண்டு மாவட்டங்களிலும் மலையக மக்களை பிரதிநிதித்துவ படுத்திய இந்த நான்கு வேட்பாளர்களும் மொத்தம் 92,466 வாக்குகளைப் பெற்றும் ஒருவர்கூட தெரிவாக வில்லை. ஆனால் கடந்த அக்டோபர் மாதம் 24ம் திகதி ஐ.தே. கட்சியில் ஏற்பட்ட வெற்றிடத்தை நிரப்புவதற்காக ஆர். யோக ராஜன் தெரிவாகியுள்ளார்.

### 7.14.9 தேர்தலில் பின்னடைவு

தற்போது நடந்த முடிந்துள்ள பொதுத்தேர்தலின் பின்னர் அமைக்கப்பட்டுள்ள அமைச்சரவையில் மலையகத்தை பிரதிநிதித் துவப்படுத்தும் எவரும் இடம் பெறவில்லை. நுவரெலியா, பதுளை, கண்டி மாவட்டங்களில் இருந்து ஐ.தே.க. சார்பில் போட்டியிட்டு வெற்றிபெற்ற 5 அங்கத்தவரும், தேசிய பட்டிய லில் இருவரும், சுயேச்சைக் குழுவில் ஒருவருமாக மொத்தம் 8 பேர் மலையக மக்களை பிரதிநிதித்துவம் செய்த போதிலும் ஒட்டு மொத்தத்தில் இத் தேர்தல் முடிவுகள் மலையகத்தில் ஒரு பின்னடைவாக கருத வேண்டி இருப்பதுடன் ஒரு படிப்பினையாக வும் அமைந்து விட்டது என்றே கூற வேண்டும். இந்தப் பின் னடைவிற்கு அல்லது தேக்கத்திற்கு பின்வரும் காரணிகள் துணை புரிந்துள்ளன என்றே கூற வேண்டும்.

— ஏனைய மக்களுடன் ஒப்பிடும்போது மலையக மக்கள் மத்தி யில் போதிய கல்வி அறிவும், அரசியல் அறிவும் இல்லாத வர்களாக இருக்கின்றனர். சுதந்திரமாக சிந்தித்து முடி வெடுக்கும் திறன் அற்றவர்களாக, தங்களை வழி நடத்தும் தலைமைக்கே எப்போதும், எதிலும் கட்டுபட்டவர்களாக இருக்கும் இவர்களது மனோபாவம்.

— தோட்டங்கள் தனியார் மயமாக்கப்பட்டது உட்பட 1977 முதல் அடுத்தடுத்து ஏற்பட்ட இன ரீதியான வன் செயல் களால் ஏற்பட்ட துன்பங்கள், துயரங்கள் மலுங்கடிக்கப்பட்டு, 1973-1974 காலப்பகுதியில் ஏற்பட்ட உணவு பற்றாக் குறையை மலையக மக்கள் மத்தியில் பூதாகாரமாக்கி மாறா பீதியை ஏற்படுத்தியுள்ளமை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

— மலையக மக்களின் பணம் முழுவதுமாக ஐ.தே.க, இ.தொ.கா. ஆகிய இரண்டு அமைப்புகளிலும் அடக்கமாகியுள்ளது. ஆகவே அவர்களுக்கு மக்களின் கவனத்தை திசை திருப்புவதில் எதுவித சிரமும் இருக்கவில்லை. ஆனால் மலையக மக்கள் மத்தியில் மாற்று எண்ணங்களை பரப்ப முனைந்தவர்களுக்கு இந்த நிதி வசதியும், ஆள் பலமும் இல்லாதிருந்ததால் இந்த முயற்சி வெற்றியளிக்கவில்லை.

— இரத்தினபுரி தேர்தல் முடிவுகளை அவதானிக்கும் போது மலையக மக்கள் மத்தியிலுள்ள சிந்தனையாளர்கள் ஒரு மாற்றத்தைக் காணவிழைந்துள்ளனர் என்பது தெளிவாகிறது. ஆனால் அதனை ஏற்றுக்கொள்ளும் பக்குவம் மலையக மக்களுக்கு அதிலும் பெண்களுக்கு இன்னும் ஏற்படாதது.

— வாக்குரிமை பெற்றும் தேர்தல் இடாப்பில் பெயர் பதியப் படாமல் இருப்பதும் ஏற்கனவே பதியப்பட்ட பலரது பெயர் கள் நீக்கப்பட்டிருப்பதும்.

— நிராகரிக்கப்பட்ட வாக்குகளின் எண்ணிக்கையை அவ தானிக்கும்போது மலையக மக்களுக்கு புதிய தேர்தல் முறையை நன்கு தெளிவுபடுத்த சம்பந்தப்பட்டவர்கள் போதிய அக்கரை எடுத்துக் கொள்ளவில்லை என்பது புலனாகிறது.

— ஒரு சில பகுதிகளில் உதாரணமாக பதுளையில் ஏனைய கட்சிகளின் சார்பாக தமிழ் வேட்பாளர்களை நிறுத்தாமல் போனதுடன் மலையக மக்கள் மத்தியில் அதிக செல்வாக் கற்றவர்களை வேட்பாளர்களாக தெரிவு செய்தமை.

— தொழிற் சங்கத்துக்கும் மக்களுக்கும் இடையே இணைப்பு பாலமாக விளங்கும் தோட்ட சங்கத் தலைவர் மேலிடத் தில் இருந்து வரும் கருத்துகளை அப்படியே ஏற்றுக்கொண்டு ஏனைய மக்களையும் ஏற்கும்படிச் செய்யும் நிலையினால் இவர்களின் நலனை விரும்பும் சமூக ஸ்தாபனங்கள் யதார்த் நிலைகளை புரியவைக்க மேற்கொண்ட நடவடிக்கைகள் அதிக பலனைக் கொடுக்கவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

— பெரும்பான்மையான தொழிலாளர்கள் அங்கம் வகிக்கும் தொழிற்சங்க தலைமையின் சர்வாதிகார போக்கும், நாயக வழிபாட்டை வலியுறுத்தும் நடவடிக்கையும் தொழிலாளரது சிந்தனை வளர்ச்சியை தடுப்பதனால் அவர்களது அரசியல் வாழ்வை இருட்டடிக்கின்றது.

— மலையக மக்களின் அரசியல் அறிவின் தேக்க நிலைக்கு தொழிற் சங்கங்களும் முக்கிய காரணமாகின்றன.

## 7.14.10 தேர்தல் பிரச்சாரம்

— பாராளுமன்றம் கலைக்கப்பட்டப் பின்னர் வீடு சொந்த மாக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டு அதற்கான சான்றிதழ் களை வழங்கி ஐ. தே. க., இ. தொ. கா. கூட்டுக்கு தேர்தல் களத்தில் சாதகமான சூழ்நிலையை உருவாக்கி கொண்டது.

— தேர்தலுக்கு சரியாக மூன்று தினங்களுக்கு முன் கோவில் நிதியத்தின் பேரில் எழுதப்பட்ட பின் திகதியிடப்பட்ட காசோலைகளை, கோவில் அபிவிருத்திக்கென வழங்கி யிருப்பது.

— பிரச்சார காலம் முடிவடைந்தபின் பல கோவில்களில் வேட் பாளர்களின் பெயரில் ஏற்பாடு செய்யப்பட்ட, வழிபாட்டு வைபவங்களின் உள் நோக்கம் தேர்தல் பிரச்சாரமே என் பதை உறுதிபடுத்தும் விதத்தில் நடந்துக் கொண்டுள்ளது.

இவை அனைத்தும் தேர்தல் சட்ட விதிகளுக்கு முற்றிலும் எதிரானவையாகும். ஆனால் தோட்டத் தொழிலாளர்கள் எடுப் பார் கைப்பிள்ளைகளாகவே இருப்பதனால் இவற்றின் உள்ளர்த் தங்களை புரிந்துக் கொள்ள முடியவில்லை.

## முடிவுரை

இந்த தேர்தலை அவதானிக்கும் போது மலையக வாக்கு கள் கூறு போடப்பட்டுள்ளது தெளிவாகின்றது. பல இடங்களில் தமிழ் வேட்பாளர்கள் தெரிவாகும் சந்தர்ப்பமிருந்தும் இதனால் கைநழுவி போயுள்ளது. மலையக மக்களை பிரதிநிதித்துவம் செய்யும் 8 அங்கத்தினர்கள் இத்தேர்தலின் மூலம் தெரிவாகி யுள்ளனர். எனினும் இவர்களுள் 7 பேர் எதிர் கட்சியிலேயே இருக்க வேண்டியுள்ளதால் இவர்களால் மலையக மக்களுக்கு எதுவித நன்மையும் ஏற்படவழியில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த நிலைமை ஏற்படக்கூடும் என்ற காரணத்தால்தான் மலையகத் தமிழரின் அரசியல் வாழ்வில் உண்மையான அக்கரைக்கொண்ட பல புத்தி ஜீவிகள், சமூக நல அமைப்புகள்,வேறுபாடுகளை மறந்து அனைவரும் ஒரு சின்னத்தின் கீழ் சுதந்திரமாக தேர்தலை சந்தியுங்கள் என கோரிக்கை விடுத்தனர். ஒவ்வொரு தேர்தலின் போதும் கூட்டுச் சேர்வதா தனித்து போட்டியிடுவதா என்பது தீர்மானமாகவில்லை என்று கடைசிவரை கூறும் இ. தொ. கா. இறுதியில் ஐ. தே. கட்சியுடன் இணைந்து விடும். இதன் மூலம் ''தீர்மானிக்கும் வாக்குகளாக'' இருக்கும் மலையகத் தமிழரின் வாக்கு பலம் சிதறடிக்கப் படுவதைப் பற்றி எவரும் கவலைக் கொள்வதாக தெரிய வில்லை. காரணம் அவர்கள் தங்களுக்கு கிடைக்கப்போகும் புகழ், பதவி, ஆடம்பர வசதிகள் என்று சுயநலமான முறையிலேயே சிந்திப்பதால் ஒரு சமுதாயத்தின் பின்னடைவை கவனிக்க முடியாதவர்களாக இருக்கின்றனர். ஒரு பக்கமே சார்ந்திருப்பதன் விபரீதத்தை இந்த தேர்தல் மூலமாவது மக்கள் உணர்ந்துக் கொள்ள வேண்டும். தனித்துப் போட்டியிட்டிருந்தால் ஏறக்குறைய 15 அங்கத்தினர்களையாவது தெரிந்தெடுத்திருக்கலாம். அந்த பலத்துடன் வெற்றி பெறும் கட்சியுடன் இணைந்து பலையக மக்களின் அடிப்படை பிரச்சினைகளை தீர்க்க உதவியிருக்கலாம். பிரச்சினைகள் தீர்க்கப்படாத பட்சத்தில் இணைப்பைத் துண்டித்துக் கொள்ளலாம், அதே சமயம் ஒரு பக்கமே சாய்ந்திருப்பதால் ஏனைய பெரும்பான்மை மக்களின் தவறான கணிப்பீட்டிற்கும் மலையக மக்கள் உள்ளாகின்றனர். அதனால் கொலை கலாச்சாரம் மலிந்த இந்த நாட்டில் மலையகத் தமிழரின் பாதுகாப்பிற்கும் அச்சுறுத்தல் ஏற்படுகின்றது.

தனிப்பட்ட நபர்களின் தீர்மானங்கள் மலையகத் தமிழரை தவறான பாதையிலேயே இட்டுச் செல்கின்றது. எடுத்துக் காட்டாக அனைத்துக் கட்சிகளும் எதிர்புத் தெரிவித்த நிலையில் பொதுத் தேர்தலை தள்ளிப் போடுவதற்கு மலையக வாக்காளர்கள் ஆதரவளித்ததன் மூலம் ஜனநாயகத்திற்கு விரோதமாக செயல்பட்டுள்ளனர். இந்த தேர்தல் முடிவுகளில் இருந்து மலையத் தமிழர் தமக்கென்று ஓர் தனிக்கட்சி இருக்க வேண்டும் என்பதையும் சூகசமாக தெரிவித்திருப்பதையும் அவதானிக்க முடிகிறது. இதனை இன்றிருக்கும் தலைவர்கள் புரிந்துக் கொள்ள வேண்டும். புரிந்து செயல்பட வேண்டும். மாறாக சுய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நலன்களுக்காக இந்த எண்ணத்திற்கு உயிரூட்ட முயற்சிக்கா விட்டால் அது எதிர்காலத்தில் பல அனர்த்தங்களுக்கு வழி வகுக்கக்கூடும்.

ஆகவே மலையகத்தில் வாழுகின்ற புத்தி ஜீவிகள், சிந்தனை வாதிகள், நலன் விரும்பிகள் அனைவரும் மலைய அரசியலில் ஒரு விடியலைக் காண விரைந்து முழு மனதுடன் முழுமையாக செயற்பட வேண்டும். எதிர்காலத்தில் மலையகத் தமிழர் அரசி யல் அநாதைகளாவதை தவிர்க்க உறுதியான நடிவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

## அட்டவணை 7.15 பத்தாவது பாராளுமன்றத் தேர்தல் 1994[13]

| கட்சிகள் | வெற்றி தேர்தல் | பெற்றோர் பற்சிய பட்டியல் | மொத்த வேட் பாளர் |
|---|---|---|---|
| பொ. ஐ. ஐ. மு. | 91 | 14 | 105 |
| ஐ. தே. க, / இ. தொ. கா. | 81 | 13 | 94 |
| சுயேட்சை குழு - யாழ்ப்பாணம் | 09 | — | 09 |
| ஸ்ரீ. ல. முஸ்லிம் காங்கிரஸ் | 06 | 01 | 07 |
| த. வி. கூ. | 04 | 01 | 05 |
| ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணி | 03 | — | 03 |
| ஸ்ரீ. ல. முற்போர்கு முன்னணி | 01 | — | 01 |
| மலையக மக்கள் முன்னணி (சுயேட்சை) | 01 | — | 01 |
| மொத்தம் | 196 | 29 | 225 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எட்டாம் அத்தியாயம்

# ஜனாதிபதி தேர்தல் (1978 - 1994)

## ஜனாதிபதி தேர்தல்-(1978—1994)

இலங்கையின் யாப்பு முறை, 1972ம் ஆண்டு திருத்தப்பட்டு நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறை புகுத்தப் பட்டது. இந்த முறையானது பிரான்சின் டிகோல் முறை மாதிரியாக வும் கானா நாட்டு முறையின் சில அம்சங்களை கொண்டதாகவும் அமைந்திருந்தது. இலங்கை குடியரசின் ஜனாதிபதி அரசின் தலை வரும் அரசாங்கத்தினதும், ஆட்சித்துறையினதும் தலைவரும் ஆயுதப்படையினரது தலைவருமாவார்.

## 8.1 முதலாவது ஜனாதிபதி

இலங்கையின் முதலாவது ஜனாதிபதி மக்களால் தெரிவு செய்யப்படாமல், அன்று நாட்டின் பிரதம மந்திரியாகவிருந்த ஜே. ஆர். ஜயவர்த்தனா, 1972ம் ஆண்டு அரசியல் யாப்பில் ஒரு மாற்றத்தை உருவாக்கி தன்னைத்தானே நாட்டின் ஜனாதிபதி என்று 4.2.1978ல் பிரகடனம் செய்தார். இது அன்றைய பிரேஞ்சு வரலாற்றில் நெப்போலியன், பாப்பரசர் வந்து முடிசூட்டு வைப வகத்தை வைப்பதற்கு முன்பு, தானே தன்னை சக்ரவர்த்தியாக பிரகடனம் பண்ணி, கிரீடத்தை தனது தலையில் சூட்டியது போன்றதென்று வரலாற்றுவல்லுனர்கள் குறிப்பிடுகின்றனர். 1977ம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலில் ஐ.தே.க தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் ஜனாதிபதி முறைபற்றி எதுவும் கூறவில்லை. ஆனால் சட்டத்தில் மாற்றம் கொண்டு வரப்படும் என்று மட்டுமே கூறப்பட்டிருந்தது. அந்த தேர்தலில் ஐ தே கட்சிக்கு கிடைத்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5/6 அதிகப்படியான பலத்தை வைத்தே அன்றிருந்த பிரதம மந்திரி ஜே.ஆர் ஜயவர்த்தனா தனது அதிகாரத்தையும்|பலத்தையும் உயர்த்திக் கொள்ளும் நோக்கத்துடன் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதிமுறையை கொண்டுவந்தார். இந்த முறையானது ஒரு குறிப்பிட்ட நாட்டின் முறையை பின்பற்றியதாக இருக்கவில்லை. மாறாக பலநாடுகளிலிருந்து பல அம்சங்களை பொறுக்கி எடுத்து ஒன்றாக அமைத்து ஏற்படுத்திய முறையாகவும், ஒரு தனி நபரிடம் (ஜனாதிபதி) அளவுக்கதிகமான அதிகாரங்களை ஒப்படைத்து ஏறக்குறைய ஒரு சர்வதிகாரியாகவே இயங்கும் நிலைக்கு வழி செய்திருப்பதையும் கவனிக்கக் கூடியதாயிருக்கிறது. இந்த பதவியை வைத்து 1978ம் ஆண்டு இலங்கை அரசியல் அமைப்பு முறையில் ஒரு புதிய திருப்பத்தை கொண்டு வந்தார்.[1] இந்த மாற்றங்கள் பாராளுமன்றத்திற்கு ஏற்கனவே இருந்த மதிப்பையும், இயல்பான செயற்பாடுகளின் வேகத்தையும் குறைத்தது. இதற்கு உதாரணமாக 2ம் 3ம்[2] 4ம்அரசியமைப்புக்கான திருத்தங்களைஉதாரணமாக கூறலாம் இப்படிப்பட்ட ஒரு ஜனாதிபதி முறைக்கு ஜே.ஆர். ஜயவர்த்தனா கூறிய காரணம், ''தெரிவு செய்யப்பட்ட சபையினரால் மாற்றி அமைக்க முடியாத ஒன்றை மாற்றி அமைக்க நிறைவேற்று அதிகார முறை இலங்கைக்கு அவசியம்'' என்பதே புதியமுறை நிறைவேற்றப்பட்டு அதன் பின் நடைமுறைப்படுத்தப்பட்ட மாற்றங்களை அவதானிக்கும் போது ஒரு தனி நபருக்கும் அவரின் அதிகார ஆசைக்கும் இடையிலுள்ள அபரிதமான ஈடுபாட்டை துல்லியமாக எடுத்துக் காட்டுகிறது. எந்த விதமான எதிர்ப்பும் காட்ட முடியாத ஒரு நிலையை உருவாக்கி, பாராளுமன்றத்திற்குக்கூட எவ்வித பதிலும் சொல்ல வேண்டிய அவசியமின்றி, ஒரு தனித்துவமான அதிபர் பதவியை வகித்த ஜே. ஆர். ஜயவர்த்தனா, அமைச்சரவையை கூட தன்னில் சார்ந்து நிற்கச் செய்தார். பாராளுமன்றத்தின் பிரத மந்திரியோ, அமைச்சரவையோ சுதந்திரமாக எந்த செயற்பாட்டிலும் ஈடுபடமுடியவில்லை. யாவும் ஜனாதிபதியின் விருப்பு வெறுப்புக்கேற்பவே நடைபெற்றன. இந்த நிறைவேற்று அதிகார மிக்க ஜனாதிபதி முறைக்கு எதிரான ஒரே ஒரு அம்சம், ஜனாதிபதி பாராளுமன்றத்திற்கு விளக்கம் அளிக்க வேண்டுமென்பதே. ஆனாலும் இது கூட ஒரு கண் துடைப்பாகவே இருந்து வந்தது. பாராளுமன்ற அங்கத்தவர்களில் பெரும் பான்மையினர் ஜனாதிபதிக்கு எதிராக செயற்படும் ஒரு கட்டத்தில்தான் பிரச்சினைகள் ஜனாதிபதிக்கு எழலாம். எனவே இதையும் சமாளிக்க முதல் ஜனாதிபதி தனது கட்சியின் அங்கத்தினரின் பெரும்பான்மையை 5/6 ஆக தொடருவதற்கு வழி செய்தார். எனவே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவரின் ஆட்சிக் காலத்தில் ஏற்கனவே ஐ. தே. க. பெற்றிருந்த 5/6 பெரும் பான்மையை தக்க வைக்க எல்லாவித ஜனநாயக முறைகளையும் மீறி பதவி காலத்தை நீடிப்பதற்கு, சர்வசன வாக்கெடுப் பென்ற கண்துடைப்பு முறையை கையாண்டார்.

## 8.2. முதலாவது ஜனாதிபதித் தேர்தல் 1982

ஏற்கனவே உருவாக்கப்பட்ட அரசியலமைப்பின்படி ஜனாதிபதி 1978 பெப்ருவரி 4ம் திகதி தொடக்கம் 6 வருடங்களுக்கு நியமிக்கப்பட்டிருந்தார். ஆனால் 1982 ஜுலை 22ல் கொண்டு வரப்பட்ட அரசியலமைப்பின் திருத்தத்தின் படி 4 வருடமுடிவில் ஜனாதிபதி தேர்தலை நடத்தினார். இதன் மூலமாக தனது பதவியை மேலும் ஆறு வருடங்களாக நீடித்தார். ஜனநாயக உரிமைகளை பாதுகாப்பதற்கான இயக்கம் இச்சட்ட திருத்தத்தை எதிர்த்தும், அன்றிருந்த ஜனாதிபதி ஜே. ஆர். ஜயவர்த்தனா அமுத நடைமுறைப்படுத்தினார். இவருக்கு சாதகமாக இருந்த அம்சங்கள் அந்த காலகட்டத்தில் எதிர்கட்சிகள் பலமற்றதாக இருந்தது. திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவின் குடியுரிமை பறிக்கப்பட்டது. 1982ல் தேர்தலை நடத்தியதன் மூலம் 75,000 இளைஞர்களுடைய வாக்குகளை தவிர்த்தது போன்றவற்றை கூறலாம். பாராளுமன்றத்தை நீடிப்பதற்காக நடத்தப்பட்ட மக்கள் தீர்ப்பையும் மனதில் கொண்டு, தன்மீது மக்கள் அதிருப்தி கொள்ள இடமுண்டு என்பதையும் கருத்தில் கொண்டே அவர் இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளார் என்பது தெளிவாகின்றது. எனவே 27ம் திகதி ஆகஸ்ட் மாதம் 1982ல் இந்த சட்டம் பாராளுமன்றத்தில் நிறை வேற்றப்பட்டு அதே நாளில் தேர்தல் திகதியும் பிரகடனப் படுத்தப்பட்டது. அத்துடன் ஏற்கனவே நியமனத்தாக்கல் செய்யும் கால எல்லையை இரண்டு வாரத்திலிருந்து ஒரு வாரத்திற்கு குறுக்கியும், நியமனம் தாக்கல் செய்யப்பட்ட நாளிற்கும் தேர்தல் நடக்கும் நாளிற்குமிடையில் 3 இலிருந்து8 வாரங்கள் என்ற இடைவெளியை இரண்டிலிருந்து 4 வாரங்கள் என்று குறைத்தும் எதிர் கட்சியினரின் வெற்றி வாய்ப்பை குறைத்தார்.[4]

1982ல் நடந்த ஜனாதிபதி தேர்தலில் ஐ. தே. க சார்பில் ஜே. ஆர். ஜயவர்த்தனாவும்,சு.க.சார்பில் கொப்பேகடுவையும் போட்டியிட்டனர். அன்னியரின் நிர்வாகத்திலிருந்த தோட்டங்களை திரு. கொப்பேகடுவை தான் தேசிய மயமாக்கியவர். இதன் காரணமாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏராளமான தோட்ட தொழிலாளர் இடம் பெயர வேண்டி வந்தது. எனவே இதை ஒரு காரணமாக காட்டி இலங்கையின் தேர்தலில் வெற்றிக்கு முக்கிய காரணமான சிறுபான்மையினரான மலையக மக்களின் வாக்குகளை பெற முயன்றார். அத்துடன் 1970-1977 வரையலான காலகட்டத்தில் சுதந்திரக் கட்சியின் ஆட்சியில் நிலவிய பஞ்சத்தை சுட்டிக்காட்டி மக்கள் பட்ட கஷ்டங்களை பெரிது படுத்தி அவர்களை தனது பக்கம் இழுத்தார். மலையக மக்கள் ஆழ மான சிந்தனையற்றவர்களாயும், நிலையற்ற, நேற்மையற்ற தலை வர்களின் தவறான வழிகாட்டலால் ஏமாறுபவர்களாயும் இருந் தது ஜே.ஆர். ஜயவர்த்தனாவிற்கு பெரும் சாதகமாக அமைந்தது.

## 8.3 பொதுஜன தொடர்பு சாதனங்களின் பங்கு

இலங்கை வரலாற்றிலேயே இந்த தேர்தலின் போது தான் முதன் முறையாக தொலைகாட்சியும், வானொலியும் முக்கிய பங்கெடுத்தன.[5] அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி அங்கத்தின ருக்கு வானொலியிலும், தொலைக்காட்சியிலும் 45 நிமிடங்கள் கொடுக்கப்பட்டிருந்தது. இந்த நேரத்தை அங்கத்தினர் விரும் பினால் 15 நிமிட ரீதியாக மூன்று முறைகளில் அன்றேல் ஓரே முறை யில் 45நிமிடத்தையும் பிரச்சாரத்திற்குஉபயோகிக்க அனுமதி இருந் தது. இதற்கு கட்டணமாக தொலைக்காட்சியில் 15நிமிடம் பேச ரூபா 15,000 மும், வானொலியில் 15 நிமிடத்திற்கு ரூபாய் 2,100ம் வசூலிக்கப்பட்டது. அந்த காலகட்டத்தில் நாட்டில் 3லட்சம் வானொலிப்பெட்டிகளும், 60,000 தொலைக்காட்சிப் பெட்டிகளும் இருந்தன. இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சியை சேர்ந்த திரு குமார் பொன்னம்பலமும் நவசம சமாஜக் கட்சியைத் சேர்ந்த வாசதேவ நாணயக்காரவும் வானொலியில் அவர்களுக் கென்று ஒதுக்கப் கப்பட்ட 45 நிமிடத்தில் 15 நிமிடத்தையே பிரச்சாரத்திற்கு உப யோகித்தனர். மற்ற கட்சிகள் யாவும் வானொலிக்கு ஒதுக்கப் கட்ட 45 நிமிடத்தையும், தொலைக்காட்சிக்கு ஒதுக்கப்பட்ட 45 நிமிடத்தையும், சரியான முறையில் பயன்படுத்தின. இதில் ஐ தே. கட்சி அப்போது ஆட்சியில் இருந்த படியால், முழு மூச்சுட ன் தனது முழு செல்வாக்கையும் உபயோகித்து பிரச்சாரம் செய்தது. திரு. கொப்பேகடுவையின் செல்வாக்கு குறைவதற்கு இதுவும் ஒரு முக்கிய காரணம் என்பது குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 3.4 வாக்களிப்பு முறை

விருப்பு வாக்கு முறையை 1978ம் ஆண்டு திருத்தியமைக்கப் பட்ட அரசியலமைப்பு அறிமுகப்படுத்தியது. அப்போது இலங்கை மக்களுக்கு விகிதாசார பிரதிநிதித்துவமுறையும் புதிதாகவே இருந்தது. ஒரு தேர்தலில் அளிக்கப்பட்ட செல்லுபடியான வாக்குகளில் அரைவாசிக்கு மேல் எடுக்கும் வேட்பாளர் தெரிவு செய்யப் பட்டதாக அறிவிக்கப்படுவார். இதனை ஒருவர் பெறாவிட்டால் 2வது விருப்பு வாக்கும் சேர்க்கப்படும். மூன்றுக்கு மேற்பட்ட போட்டியாளர்கள் இருந்தால் 3வது விருப்பு வாக்கும் சேர்க்கப் படும்.

1981ம் ஆண்டு சட்டத்தின் படி (இல.15)[6] வாக்காளர் தனது முதல் விருப்பை அதற்கென இருக்கும் இடத்தில் 1எனவும், இரண்டாவது விருப்பு வாக்கை 2 என எழுதியும், மூன்றுக்கு மேற்பட்ட போட்டியாளர் இரும்பின் மூன்றாவது விருப்பு வாக்கை 3 என எழுதியும் தெரிவிக்க வேண்டும்.[7] கடந்த நான்கு தசாப்ங்தகளாக தேர்தல்களில் 'X' இப்படிப் புள்ளடியிட்டே பழக் கப்பட்ட மக்களுக்கு புதிய முறையான 1, 2, 3 என்பது, முக்கிய மாக படிப்பறிவற்ற பாமர மக்களுச்கு, மிகவும் சிரமமாகவே இருந் தது. ஆனால் தேர்தல் ஆணையாளரின் கருத்துப்படி இலக்கத் திற்குப் பதிலாக பெருக்கல் அடையாளம் (X) போட்டிருந்தாலும் கணக்கில் எடுக்கப்படும்.

1959ம் ஆண்டிலேயே தபால் மூலம் வாக்களிக்கும் முறை அறி முகப்படுத்தப்பட்டு, மக்கள் இம்முறையை மிக ஆர்வத்துடன் பின் பற்றி வந்தனர். இந்த ஜனாதிபதித் தேர்தலில் 120,000 தபால் வாக்குகள் இடம் பெற்றன. இதுவே இலங்கை தேர்தல் வரலாற் றில் தபால் வாக்களிப்பை பொறுத்தமட்டில் ஆக கூடிய தொகை யாகும். அத்துடன் 1982ம் ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதி தேர் தலில் 8,145,015 பேர்கள் வாக்களிக்கும் தகமை பெற்றிருந்தனர். இது 1981ம் ஆண்டு தயாரிக்கப்பட்ட தேர்தல் இடாப்பாகும். இதன் படி 1977ம் ஆண்டு தேர்தல் இடாப்பை விட 22 வீதம் கூடுதலாயுள் ளது தெரிய வருகிறது. இந்த தேர்தலில் திரு ஜெ. ஆர். ஜெய வர்த்தனா 52.91 விதமான வாக்குகளையும், திரு கொப்பேகடுவ 39.07 வீத வாக்குகளையும் பெற்றனர். இதன் விபரத்தை கீழுள்ள அட்டவணையில் பார்க்கவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அட்டவணை-8.1. ஜனாதிபதி தேர்தல் முடிவுகள் 1982[8]

| | பெயர்கள் | கட்சிகள் | பெற்ற வாக்குகள் | செல்லுபடியான வாக்கு வீதம் | பதியப்பட்ட வாக்கு வீதம் |
|---|---|---|---|---|---|
| 1 | ஜே. ஆர். ஜயவர்த்தனா | ஐ. தே. க. | 3, 450, 811 | 52. 909 | 42. 367 |
| 2 | ஹெக்ரர் கொப்பேகடுவ | சி. ல. சு. க. | 2,548, 438 | 39. 074 | 31. 288 |
| 3 | றோகன விஜயவீர | ஜே. வி. பி. | 273, 428 | 04. 192 | 03. 357 |
| 4 | குமார் பொன்னம்பலம் | அ. இ. த. கா. | 173, 934 | 02. 667 | 02. 136 |
| 5 | கொல்வின் ஆர். டி. சில்வா | ல. ச. ச. க. | 58, 531 | 00. 897 | 00. 719 |
| 6 | வாசுதேவ நாணயக்கார | ந. ச. ச. க | 17, 005 | 00. 261 | 00. 209 |
| | செல்லுபடியான வாக்குகள் | | 6, 522, 147 | 100. 00 | 80. 075 |
| | நிராகரிக்கப் பட்ட வாக்குகள் | | 80, 470 | | 00. 988 |
| | வாக்களிக்காதவர்கள் | | 1, 542, 398 | | 18. 937 |
| | வாக்களிக்கப்பட்ட தொகை | | 6, 602, 617 | | 81. 063 |
| | பதிவுசெய்யப்பட்டோர் தொகை | | 8, 145, 015 | | 100. 00 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 8.5. இரண்டாவது ஜனாதிபதித் தேர்தல்—1988

இரண்டாவது ஜனாதிபதித் தேர்தல் 1988ம் ஆண்டு டிசம்பர் மாதம் 19ம் திகதி நடை பெற்றது. இந்த தேர்தலில் அப்போதைய பிரதம மந்திரி ரணசிங்க பிரேமதாச ஐ. தே. கட்சி சார்பிலும் திருமதி சிறிமா பண்டாரநாயக்க ஸ்ரீ. ல. சு. கட்சி சார்பிலும், திரு ஒசீ அபேய குணவர்த்தனா ஸ்ரீல மஹஜன கட்சி சார்பிலும் போட்டியிட்டனர். இந்த தேர்தலை தமிழ் ஈழ விடுதலைப்புலிகளும், ஜே. வி. பி.யினரும் பகிஸ்கரித்தனர். இத்தேர்தல் பல வன் செயல்கள் மத்தியில் நடைபெற்றது. தேர்தல் தினத்தன்று 20 வாக்களிப்பு நிலையங்கள் தாக்கப்பட்டன. 10 பேர்கள் உயிர் இழந்தனர்

ஐ. தே. க. ஜனசவிய திட்டம், வறுமை ஒழிப்பு திட்டம் ஆகியவற்றை முன்வைத்தும், ஸ்ரீ.ல.சு.கட்சியுடன் இணைந்த 5 கட்சிகள் கொண்ட கூட்டு முன்னணி சிறுபான்மையினரின் உரிமைகள், தொழிலாளர் உரிமைகள் ஆகியவற்றை கருப்பொருளாக கொண்டும் பிரச்சாரம் செய்தன. ஸ்ரீ. ல. மஹஜன கட்சி கருப்பொருள் இல்லாமல் பொதுவாக பிரச்சாரம் செய்தது. இந்த தேர்தலில் இடதுசாரிக் கட்சிகள் திரு. ஒசீயை ஆதரிக்கும் நிலைக்கு தள்ளப்பட்டன. மலையகத்தில் திரு. தொண்டமான் ஐ. தே. கட்சியை சேர்ந்த திரு. பிரேமதாசாவை ஆதரித்தே பிரச்சாரம் செய்தார். அனைத்து பிரஜாவுரிமையற்ற இந்திய மக்களுக்கு பிரஜாவுரிமை அளிக்கப்படும் என்ற ரீதியில் பிரச்சாரம் செய்தார். இத்தேர்தலில் வாக்களிக்கக் கூடியதாக பதிவு செய்யப்பட்டிருந்த 9,375,742 பேரில் 5,186,233 பேரே வாக்களித்தனர். இது முழுத்தொகையின் 55.32 வீதமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அட்டவணை -8.2 ஜனாதிபதித் தேர்தல் -1988**[9]

| போட்டியிட்டோர் பெயர்கள் | போட்டியிட்ட கட்சிகள் | செல்லுபடியான வாக்குகள் வீதம் | பதியப்பட்டவாக்குகள்வீதம் |
|---|---|---|---|
| ஆர். பிரேமதாசா | ஐ.தே.க. | 2,569,199 | 50.43 |
| சிறிமாவோ பண்டார நாயக்கா | சி.ல சு.க. | 2,289,860 | 44.95 |
| ஓசி அபேயகுணசேகர | சி.ல.ம.மு. | 235,719 | 4.63 |
| வாக்களித்தோ தொகை | | 5,186,223 | |
| நிராகரிக்கப்பட்ட வாக்கு | | 91,445 | |
| மேலதிக வாக்குகள் | | 279,339 | |
| பதியப்பட்ட வாக்குகள் | | 9,375,742 | |

## 8.6. மூன்றாவது ஜனாதிபதித் தேர்தல்-1994

1994ம் ஆண்டு நவம்பர் மாதம் 9ம் திகதி நடைபெற்ற ஜனாதிபத் தேர்தல் இலங்கை வரலாற்றில் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்படவேண்டிய ஒரு நிகழ்ச்சியாகும் கடந்த 17 வருடங்களாக நடைபெற்று வந்த தேர்தல்களில் முக்கிய அம்சங்களாக திகழ்ந்தவை, அரச வன்செயல்கள், கொலைகள் என்பதை யாருமே மறுக்க முடியாது. அவற்றின் ஒரு தொடர்ச்சியாகவே அக்டோபர் மாதம் 24ம் திகதி அதிகாலையில் ஐ தே. கட்சியின் ஜனாதிபதித் தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் ஏற்பட்ட குண்டுவெடிப்பும் அதில் விளைந்த உயிர் சேதங்களும் எமக்கு நிரூபிக்கின்றன. எப்படியாவது ஒரு காரணத்தை காட்டி நாட்டில் குழப்பத்தை ஏற்படுத்த காத்திருந்த எதிர்க்கட்சியினர் இச்சம்பவம் மூலமாக திரும்பவும் 1983ம் ஆண்டு இநண்ட ஜூலையைக் கொண்டு வந்து நாட்டை இரத்தக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களரியாக்க முனைந்தார்கள் ஆகஸ்ட் மாதத்தில் பொது ஜன ஐக்கிய முன்னணி அரசாங்கத்தை அமைத்தப்பின், நாட்டில் ஏற் பட்ட அமைதியை நிர்மூலமாக்க அவர்கள் எடுத்த முயற்சிகள் யாவும், முக்கியமாக பிரதம மந்திரி திருமதி சந்திரிகா குமாரதுங்க, அவர்களுக்கு எதிராக செய்யப்பட்ட பொய் பிரச்சாரங்கள், ஆதார மற்ற வதந்திகள், தனிப்பட்ட முறையில் அள்ளி வீசப்பட்ட அபாண்டங்கள் நிறைந்த சுவரொட்டிகள், துண்டுப் பிரசுரங்கள், யாவும் அனைவரும் அறிந்ததே இப்படியான சூழ்நிலையிலும் நடந்து முடிந்த ஜனாதிபதித் தேர்தல் மூலமாக மக்கள் தங்கள் அரசியல் முதிர்ச்சியை பெரும்பான்மை, சிறுபான்மை என்ற பாகு பாடின்றி எடுத்துக் காட்டினர், இன்று மக்கள் அனைவரும் இனவாதத்தையும்,சமய பூசல்களையும், கொலைக்கலாச்சாரத்தை யும் ஒட்டு மொத்தமாக வெறுக்கின்றார்கள் என்பதை இத் தேர்தல் முடிவுகள் தெளிவாக எடுத்துக்காட்டியுள்ளது.

## 8.6.1. இலங்கையின் தேசிய மேதகை.

உலக நாடுகளில் நான்காவது பெண் ஜனாதிபதியாக இடம் பெற்றிருப்பினும், இலங்கை அரசியலில் முதன் முதலில் தெரிவு செய்யப்பட்ட பெண் ஜனாதிபதியாகிய திருமதி சந்திரிகா குமார துங்க ஒரு சிறப்பான சாதனையை ஏற்படுத்தியுள்ளார்கள் என்பது குறிப்பிடத்தக்கது ஒரே குடும்பத்தில் தாய், தந்தை, மகள் மூவருமே பிரதம மந்திரி பதவிகளை வகித்ததுமட்டுமன்றி சந்திரிகா குமாரதுங்க மிகக் குறுகிய காலத்தில் மாகாணச்சபை முதல் மந்திரி யாகவும்,பிரதமமந்திரியாகவும், நாட்டின் முதல்பெண் ஜனாதிபதி, யாகவும் பதவி வகிப்பது உலகிலே மிக விசேஷமான, தனித்தன்மை வாய்ந்த ஒரு சாதனை என்றே கூறவேண்டும். அத்துடன் அவர் பெற்ற வாக்குகளின் வீதம் 62,28 இதுவரை எந்த ஜனாதிபதிக்குமே கிடைக்காத பெரும்பான்மை என்பதும் குறிப்பிடத்தக்கது.

புதிதாக தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபதி திருமதி சந்திரிகா குமாரதுங்க தேர்தல் அலுவலகத்தில் தனது முதல் உரை ய ஆற்றியபோது, தனக்கு கிடைத்த வெற்றியானது ஒரு தனி நபருக்கு கிடைத்த வெற்றியல்ல, மாறாக ஜனநாயகத்திற்கும், சமாதானத் திற்கும் கிடைத்த வெற்றியென்று கூறினார். இதன் உண்மைக் கருத்தை நமது நாட்டில் கடந்த 17வருடமும் நிலவிய சூழ்நிலையை அறிந்தவர்களுக்கு தெளிவாகப் புரியும். இந்த கால கட்டத்தில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படிப்படியாக ஜனநாயகம் சிதைக்கப்பட்டு, சமாதானம் சீரழிந்து ஊழல், லஞ்சம், கொலைக் கலாச்சாரம், மட்டுமே ஆட்சி புரிந்ததையும், வெளியுலகத்திற்கு எமது நாடு ஏளனத்திற்கிடமாக விளங்கியதையும் எவரும் மறுக்க முடியாது. இந்த ஆட்சிக்கு எதிராக எவரேனும் குரல் எழுப்பினால் அவர்கள் மீது அரச பயங்கரவாதம் கட்டவிழ்த்து விடப்பட்டதும், தேர்தல் சட்டம், அவசரகாலச்சட்டம் பயங்கரவாத தடைச்சட்டம் என்ற பெயரில் ஜனநாயக விரோதச் செயல்கள் தொடர்ந்து நீடிக்கப்பட்டதும் இந்த 17 வருட ஆட்சியின் சாதனைகள் என்பதை நமது நாட்டின் சரித்திரம் கூறப் போகும் உண்மைகள்.

நமது நாடு சுதந்திரமடைந்த நாளிலிருந்து இது வரை ஒரு நேர்மையான 'தேச மேதகை' (Statesman) எவரையும் காணக் கிடைக்கவில்லை. இனவாதம், மதவாதம், பயங்கரவாதம் முதலிய வற்றை பேசியும், செயலில் காட்டியும் வாழ்ந்தவர்களைத்தான் நாம் பார்த்திருக்கிறோம். தற்போது நமது நாட்டின் ஜனாதிபதி யாக மக்கள் மன நிறைவுடன் தெரிவு செய்த திருமதி சந்திரிகா குமாரதுங்க அவர்களை நாம் பெறும் அரசியல் வாதியாக கருதாமல் நாட்டிற்கு கிடைத்த ஒரு உயர்ந்த 'தேசமேதகை' என்ற நோக்குடன் பார்ப்பது சாலச் சிறந்தது, காரணம் அவருடைய பேச்சுக்கள், செயற்பாடுகள் எல்லாவற்றையும் விட நாட்டின் கடந்த கால ஜனாதிபதிகளுடன் ஒப்பிட்டுப் பார்க்கும் போது இது தெளிவாகின்றது.

> ''இன ரீதியான, நிற ரீதியான, மத ரீதியான நிராகரிப்புகள் மனித நேயத்தை குலைத்து விடுகின்றன.''[12]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அட்டவணை 8.3. ஜனாதிபதிகள் மூவரும் பெற்ற வாக்குகள்

| வருடம் | ஐ. தே. க. | ஸ்ரீ.ல சு.க/பொ ஐ.மு. | பெரும்பான்மை |
|---|---|---|---|
| 1982 | ஜே. ஆர். ஜயவர்த்தனா | கொப்பேகடுவ | 902, 373 |
| | 3, 450, 811 | 2, 548, 438 | |
| | 52, 9% | 39, 07% | |
| 1988 | ஆர். பிரேமதாச | திருமதி பண்டார நாயக்கா | 279, 339 |
| | 2, 569, 199 | 2, 289, 860 | |
| | 50, 43% | 45, 95% | |
| 1994 | திருமதி. திசாநாய[illegible]கா | திருமதி. சந்திரிகா குமாரதுங்க | 1,993,922 |
| | 2, 715, 2[illegible]3 | 4, 709, 205 | |
| | 35, 91% | 62, 28% | |

இந்த அட்டவணையை கவனிக்கும் பொழுது ஐ. தே. கட்சியின் செல்வாக்கு படிப்படியாக குறைந்து போவதை காண முடிகிறது. அவர்கள் தொடங்கிவைத்த ஆட்சிமுறை சட்டங்கள், அராஜக நடவடிக்கைகளே இந்த வீழ்ச்சியின் உச்ச நிலையை கடந்த ஜனாதிபதித் தேர்தலில் அவர்களை அடைய வைத்ததென்றால் மிகையாகாது. நாட்டிலுள்ள 160 தேர்தல் தொகுதிகளில் ஒன்றே ஒன்றைத் தவிர (மஹியாங்கனை) மற்ற 159 தொகுதிகளில் ஐ.தே. கட்சி முதவிடத்தை பெறவில்லை. முதலாவதாக வந்த அந்த ஒரே தொகுதியிலும் பொதுத் தேர்தலில் அது பெற்ற வாக்குகளில் இருந்து 6000ம் வாக்குகள் குறைவாகவே கிடைத்துள்ளது. தேர்தல் முடிந்து 2½ மாத காலத்திற்குள் இந்த மாற்றம் என்றால் மக்கள் எவ்வளவு வேகமாக உண்மைகளை புரிந்துக்கொண்டுள்ளார்கள் என்பதையும், புரிந்துக்கொண்டது மட்டுமல்லாது துணிச்சலாக செயல்படவும் முனைந்துள்ளார்கள் என்பதையும் அதற்கான சுதந்திரமான சூழ்நிலை உருவாக்கப்பட்டுள்ளது என்பதையும் எளிதில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புரிந்துக்கொள்ளலாம் உள்நாட்டு யுத்தத்தை. இனக்கலவரத்தை முற்றாக நிறுத்தி நாட்டு மக்கள் அனைவரும் சகோதரத்துவத்துடன் வாழ்வதே மக்களின் ஒரே அபிலாசை என்பதையும் இது தெளிவு படுத்துகின்றது.

## 8.6.2. ஐக்கிய தேசிய கட்சி

1977ம் ஆண்டு தொடக்கம் 1994ம் ஆண்டு ஆகஸ்ட் 16ம் திகதி வரையும் பாராளுமன்ற தேர்தலிலும், ஜனாதிபதி தேர்தலிலும் முதலிடம் பெற்று பதவியிலிருந்தது ஐ. தே. கட்சியாகும். அரசயலமைப்பின்படி 1994ம் ஆண்டு நவம்பர் மாதத்தில் ஜனாதிபதித் தேர்தலும், 1995ம் ஆண்டு முற்பகுதியில் பொதுத் தேர்தலும் நடைபெற்றிருக்க வேண்டும். ஆனால் ஜனாதிபதித் தேர்தலை முதலில் நடத்தினால் தோல்வியுறலாம் என்ற ஐயப்பாட்டில் அன்றைய ஜனாதிபதி தனக்கிருந்த அதிகாரத்தைக் கொண்டு 1994ம் ஆண்டு ஜூன் மாதம் இறுதியில் திடீரென பாராளுமன்றத்தைக் கலைத்து பொதுத் தேர்தல் நடத்தப்படும் என அறிவித்தார்.

எதிர்பார்த்த வெற்றியை தேர்தலில் பெற முடியாத கட்டத்தில், மீண்டும் பதவியை கைப்பற்ற வேண்டும் என்ற ஆசையில் சிறுபான்மையினரின் ஆதரவைப் பெற பெரிதும் முயன்றனர். அந்த முயற்சி தோல்வியுற்றதும் அன்றிருந்த பிரதமர் ரனில் விக்கிரமசிங்கா பதவி விலகி திருமதி சத்திரிகா குமாரதுங்காவிற்கு பிரதமர் பதவியை கையளித்தார். முறைப்படி எதிர்க்கட்சி தலைவர் பதவியை ரனில் விக்கிரமசிங்கா ஏற்றிருக்க வேண்டும். 1991ம் ஆண்டில் ஐ.தே.கட்சியை சார்ந்த சிலர் லலித் அத்துலத்முதலி, காமினி திசாநாயக்கா தலைமையில் பிரிந்துச்சென்று ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னனி என ஒரு புதுக்கட்சியை உருவாக்கி ஒரு போதும் மீண்டும் ஐ.தே. கட்சியுடன் இணையமாட்டோம் என்று ஆணித்தரமாக கூறித் திரிந்தார்கள். ஆனால், பிரேமதாசாவின் மறைவுக்குப் பின் காமினி திசாநாயக்கா மீண்டும் ஐ.தே.கட்சியில் இணைத்தார். ஆனால் இவரது மனைவி அதே கட்சியில் இருந்துக் கொண்டார். ஐ.தே. கட்சியுடன் மீண்டும் இணைந்த காமினி திசாநாயக்கா, தனது அரசியல் சாணக்கிய தந்திரங்களை கையாண்டு அக்கட்சியில் முக்கிய இடத்தைப் பெறுதவற்கான ஆக்க முயற்சியில் ஈடுபட்டார். இதன் விளைவாக எதிர்க்கட்சி தலைமை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதவிக்கு ஐ.தே. கட்சிக்குள் போட்டியேற்பட்டது. இதனால் அன்றைய ஜனாதிபதியாகவும், கட்சித் தலைவராகவுமிருந்த டி.பி. விஜேதுங்க முதன் முறையாக இரகசிய வாக்கெடுப்பொன்றை நடத்த வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. இதில் காமினி 45 வாக்குகளையும், ரனில் 42 வாக்குகளையும் பெற்ற 3 வாக்கு வித்தியாசத்தில் காமினி எதிர்க்கட்சி தலைவரானார்.

தொடர்ந்து வந்த ஜனாதிபதி வேட்பாளர் தெரிவிலும் இதே நிலைமை தலைதூக்கியது. பெரும்பான்மையானோர் ரணில் போட்டியிட வேண்டும் என்று விரும்பியபோதும் தனது தந்திரோபாயங்களை முழுவதுமாக உபயோகித்து காமினி அதிலும் தனது நிலலையை ஸ்திரப்படுத்திக்கொண்ட போது கட்சிக்குள் புகைந்துக் கொண்டிருந்த உட்பூசல்களை வெளியுலகம் அறியும் நிலை ஏற்பட்டது. ஐ. ஐ. தே. முன்னணியின் ஆதிக்கம் ஐ தே. கட்சிக்குள் வலுப்பெற தொடங்கிவிட்டது என்பதையே இது உணர்த்துவதாக இருந்தது, ஜனாதிபதித் தேர்தல் பிரச்சாரத்தில் டி. பி. விஜேதுங்கா ஈடுபடவில்லை என்பதையும், பிரச்சாரத்தில் ஈடுபட்ட ரணில் ஐ. தே. கட்சியை வெற்றிபெறச் செய்யுங்கள் என்று மட்டுமே கூறிவந்ததையும், காமினியுடன் இணைந்து பிரச்சார வேலைகளில் ஈடுபடாததையும் இதற்கு நல்ல சான்றுகளாகும். இத்தேர்தலில் காமினியும், அவரது நெருங்கிய சகாக்களுமே முழு மூச்சுடன் ஈடுபட்டனர். பதவி ஆசைக்காக ஐ தே. கட்சியிலிருந்து விலகி, அதே பதவி ஆசைக்காக மீண்டும் அக்கட்சியில் இணைந்த காமினி எவருமே எதிர்பாராத விதத்தில் மரணத்தை தழுவிக்கொண்டார். அக்டோபர் மாதம் 24ம் திகதி அதிகாலையில் பாலத்துறையில் நடந்த தேர்தல் பிரச்சார கூட்டத்தில் இடம் பெற்ற குண்டு வெடிப்பு இவரை பலிகொண்டது. இத் திடீர் திருப்பம் ஐ. தே. கட்சியில் மீண்டும் பிரச்சினையை உருவாக்கியது. அரசயலமைப்பு சட்டத்தின்படி ஜனாதிபதி வேட்பாளர் ஒருவர் இறக்குமிடத்தில், அவருக்குப் பதிலாக மூன்று தினங்களுக்குள் அக்கட்சியை சார்ந்த புதிய வேட்பாளரின் பெயரை தேர்தல் ஆணையாளருக்கு அறிவிக்க வேண்டும், இதற்கமைய, புதிய வேட்பாளரை தெரிவு செய்வதற்காக ஐ. தே. க. கூடிய பொழுது கட்சிக் காரியாலயத்திற்கு வெளியே திரண்ட ஒரு கோஷ்டியினர், திருமதி திசாநாயக்காவை வேட்பாளராக நிறுத்

தும்படி ஆர்பாட்டம் செய்தனர், பலர் ரணில் வர வேண்டும் என்று விரும்பினாலும் இறுதியில் திருமதி திசாநாயக்காவையே வேட்பாளராக தெரிவு செய்தார்கள்.

இதிலிருந்து ஐ. தே. கட்சிக்குள், ஐ. ஐ. தே. முன்னணியின் கரம் ஓங்கியிருப்பது மேலும் உறுதிப்படுத்தப் படுகின்றது. திருமதி திசாநாயக்காவை தெரிவு செய்த போது அவர் ஐ. தே. கட்சியின் அங்கத்தவராக இருக்கவில்லை. ஐ. ஐ. தே. முன்னணியின் மத்திய மாகாண சபை உறுப்பினராகவே இருந்தார் என்பது குறிப்பிடத் தக்கது. இருந்த போதிலும் அவர் இரண்டேயிரண்டு மாகாண சபை கூட்டங்களுக்கே இதுவரை சமூகமளித்திருந்துள்ளார் என்பதும் அந்த இரு கூட்டங்களிலும் கூட ஒரு வார்த்தையேனும் கதைத் திருக்கவில்லை என்பதும் குறிப்பிடத் தக்கவையாகும்.

நடந்துமுடிந்த ஜனாதிபதித்தேர்தலில் இவர் இரண்டாம் இடத் தைப்பெற்றுள்ளார். கணவனின் மறைவினால் ஏற்பட்ட அனுதாப அலை ஆட்சியிலமர தனக்கு சாதகமாக இருக்குமென இவர் உறுதி யாக நம்பினார். அதன் காரணமாக மக்களை திசை திருப்ப அவர் பல யுக்திகளைக் கையாண்டார், ''ஒரே ஜனாதிபதி, ஒரே நோக் கம், ஒரே தேசம்'' என்ற தனது கணவனின் சுலோகத்தையே இவ ரும்உச்சரித்தார். ஆனால் இந்த சுலோகம் 20ம் நூற்றாண்டின் மிக மோசமான சர்வாதிகாரியும், படுபயங்கரமான இரத்த வெறியனு மான அடொல்வ் ஹிட்லரின் அரசியல் பாசறையிலிருந்து எடுத்தா ளப்பட்ட சுலோகமாகும் என்பதை இந்த நூற்றாண்டின் உலக வரலாறு அறிந்த எவரும் புரிந்துக் கொள்வார்கள். ஜனாதிபதி பதவியை பெற்றுக் கொள்வதற்காக ஐ. தே. கட்சியினர் எல்லா விதமான முயற்சிகளையும் மேற்கொண்டனர். அக்கட்சியின் பொறுப்பு வாய்ந்த முக்கியஸ்தர்கள் தொடர்ந்தும் இன வெறியை தூண்டும் பிரச்சாரங்களை மேற்கொண்டனர். 'சந்திரிகாவிற்கு போடப்படும் ஒவ்வொரு வாக்கும் புலிகளுக்குப் போடப்படும்' வாக்கே' என்றும் 'கதிரைக்கு வாக்கைப் போடுவோம், பிரபாகரனை ஜனாதிபதியாக்குவோம்' என்ற வார்த்தைகள் அடங்கிய சுவரொட்டிகளையும் இனவாதத்தை தூண்டும் பிரசுரங் களை விநியோகித்ததையும் இதற்கு உதாரணமாக கொள்ளலாம். ஆனால் மக்களோ மிகவும் பொறுப்புடன் தாம் அமைதியையும் ஜனநாயகத்தையும் விரும்புவதை உறுதியாக வெளிப்படுத்தியுள்ளார் கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8.6.3. **மலையகத் தமிழர்.**

மலையகத்தில் நடந்து முடிந்த ஜனாதிபதித் தேர்தல் ஒரு திருப்பு முனையாக அமைந்துள்ளதென்றே கூறவேண்டும். கடந்த பொதுத் தேர்தலில் இ.தொ. காங்கிரஸ் ஐ.தே. கட்சியுடன் இணைந்து யானை சின்னத்தின் கீழ் போட்டியிட்டதனால் 40 வீத மான மலையக தமிழ் வாக்குகளை ஐ. தே. கட்சி பெறக்கூடியதாக இருந்தது. ஆனால் இந்த ஜனாதிபதித் தேர்தலில் அந்நிலை முழு தாக மாறியுள்ளது. பொதுத் தேர்தலில் மலையகம் முழுதும் பச்சை நிறமாக இருந்த நிலைமாறி நீல நிறமாக பிரகாசித்துள்ளது என்பதை கீழ்காணும் அட்டவணை தெளிவாக்குகின்றது.

**அட்டவணை—84 மலையக வாக்குகள் - (1982-199)**

| மாவட்டம் | 1982 | | 1988 | | 1994 | |
|---|---|---|---|---|---|---|
| | .தே. க. | ஸ்ரீ.ல சு.க | ஐ.தே. க. | ஸ்ரீ.ல சு.க | ஐ.தே. க. | பொ. ஜ.மு. |
| நுவரெலியா | 62 11 | 33.04 | 62.15 | 35.98 | 39.55 | 57.14 |
| பதுளை | 58 66 | 36 79 | 60.08 | 37.36 | 42.20 | 55.26 |
| கண்டி | 59 80 | 36 88 | 54 88 | 43.65 | 41.68 | 56.64 |
| இரத்தினபுரி | 50 89 | 44.12 | 51.75 | 45.81 | 40.16 | 58.67 |
| மாத்தளை | 58.11 | 36 64 | 57.85 | 40.37 | 38.82 | 60.98 |
| கேகாலை | 57 02 | 36.91 | 57.11 | 40.54 | 42.30 | 5[illegible].06 |

இந்த அட்டவனையை கவனிக்கும்போது ஜனாதிபதித் தேர் தலை பொறுத்தமட்டில் கடந்த 12 வருடங்களில் (1982-1994) இருந்த நிலையில் ஒரு திடீர் மாற்றம் ஏற்படுவதை தெளிவாக கவ னிக்க முடிகிறது. இரண்டரை மாதங்களுக்கு முன் நடைபெற்ற பொதுத்தேர்தல் முறையிலேயே இத்தேர்தலும் நடைபெற்றிருந் தால் திருமதி சந்திரிகா. அட்டவணை குறித்துக் காட்டும் 06 மாவட்டங்களிலும் தோல்வியுற்றிருக்க வேண்டும். மாறாக அவர் பெரும் வெற்றியடைந்துள்ளார். மலையகத்தை பொறுத்தவரை

ஐ.தே. கட்சியின் தொழிற்சங்க பிரிவைச் சார்ந்த புத்திரசிகாமணி போன்றவர்கள் பகிரங்கமாக திருமதி. சந்திரிகாவிற்கு எதிராக பிரச்சாரம் செய்தாலும் ஏனைய அரசியல் கட்சிகளை சேர்ந்தவர்களும், தொழிற்சங்கங்கள், சமூக நிறுவனங்கள் ஆகியவற்றை சேர்ந்தவர்களும் மலையக மக்கள் மத்தியில் திருமதி சந்திரிகாவிற்கு சாதகமான ஒரு சூழ்நிலையை ஏற்படுத்த பாரிய அளவில் செயற்பட்டனர். அதே நேரம் மலையகத்தின் பிரதான தொழிற்சங்கமான இ.தொ.கா., கடைசிவரை யாரை ஆதரிப்பதென்று முடிவெடுக்காமல், இறுதியில் நடுநிலை வகிக்கப் போவதாகவும், மக்கள் சுதந்திரமாக தங்கள் வாக்கைப் பயன்படுத்தலாம் என்றும் அறிவித்தது. ஆனால் காமினியின் திடீர் மறைவு இந்நிலையில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்தியது. அனைவரையும் வியப்பில் ஆழ்த்தும் வண்ணம் திரு. தொண்டமான் பொ. ஐ. மு. அரசாங்கத்தின் உல்லாசத்துறை அமைச்சராக பதவி பிரமாணம் செய்துக் கொண்டார். அமைச்சர் பதவியை ஏற்ற பின்பே அவர் சந்திரிகாவிற்கு ஆதரவளிக்கும்படி மக்களுக்கு வேண்டுகோள் விடுத்தார். இந்த வேண்டுகோளை விடுத்து அவர் இந்தியா சென்றிருந்த சந்தர்ப்பத்தில் நவம்பர் 7ம் திகதி வீரகேசரி பத்திரிகை ஐ. தே. கட்சியை ஆதரிப்பதாக கூறி ஜூலை மாதம் 11ம் திகதி திரு. தொண்டமான் பொதுத் தேர்தலின் போது விடுத்த அறிக்கை ஒன்றினை பிரசுரித்திருந்தது மிக விசித்திரமாக இருந்தது. இதற்கு என்ன காரணம், யார் காரணம் என்று தெரியாவிட்டாலும் மலையக மக்களை குழப்ப, திசை திருப்ப மேற்கொண்ட ஒரு முயற்சியாகவே இதை கருத வேண்டியுள்ளது. மேலும், இவர் எந்தவொரு தேர்தல் பிரச்சாரத்திலும் ஈடுபடவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

### 8.6.4. தேர்தல் முடிவுகள்

மூன்றாவது ஜனாதிபதித் தேர்தல் நவம்பர் மாதம் 9ம் திகதி நடைபெற்றது. இதில் 6 வேட்பாளர்கள் போட்டியிட்டனர். மூன்று கட்சிகளும் இரண்டு சுயேட்சைகளும் போட்டியிட்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அட்டவணை - 8.5 ஜனாபதித் தேர்தல் முடிவுகள் - 1994

| கட்சி | பெயர் | பெற்ற வாக்குகள் | வீதம் |
|---|---|---|---|
| பொ. ஐ. மு | சந்திரிகா குமாரதுங்க | 4,709,205 | 62.28 |
| ஐ தே.க. | வஜிரா ஸ்ரீமதி திசாநாயக்க | 2,715,283 | 35.91 |
| சுயேச்சை 2 | ஹட்சன் சமரசிங்க | 58,886 | 0.78 |
| சி பூ.பு.க | ஹரிஸ்சந்திர விஜேதுங்க | 32,651 | 0.43 |
| சுயேச்சை | ஏ. ஜே. ரணசிங்க | 22,752 | 0.30 |
| ஸ்ரீ.ல.மு.மு. | நிஹால் கலப்பதிகே | 22,749 | 0.30 |

| | | |
|---|---|---|
| செல்லுபடியான மொத்த வாக்குகள் | 7,561,526 | 98.20 |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 151,706 | 1.97 |
| அளிக்கப்பட்ட மொத்த வாக்குகள் | 7,713,232 | 70.52 |
| பதிவுசெய்யப்பட்டவாக்காளர் | 10,937,279 | |

### 8.6.5 புதிய ஜனாதிபதியின் பங்களிப்பு

— எமது நாடு உண்மையான ஜனநாயக நாடாக மாற வேண்டுமாயின், ஜனநாயகத்தின் அடிப்படை அம்சமான இறைமை, சமத்துவம் சுய ஆட்சி நிலைநிறுத்தப்பட வேண்டும்.

— எமது நாடு பல இன, பல சமயத்தவர் வாழும் நாடு. எனவே நமது நாட்டில் வாழும் யாவரும் சமமாக நடத்தப்பட வேண்டும். அரசியல் யாப்புகளும், தேர்தல் சட்டங்களும் அடிப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படை மனித உரிமை வெளிசத்தின் மீது உருவாக்கப்பட வேண்டுமே அல்லாது 'தொகை' அடிப்படையில் உருவாக்க கூடாது.

— இலங்கை தேர்தல் முறைகளில் நிலவிய வெஸ்ட் மினிஸ்டர் முறையும், விகிதாசார முறையும் சிறுபான்மை மக்களுக்கு நன்மையளிக்கவில்லை, இந்த இரண்டு முறைகளையும் கலந்து ஒரு புது முறையை கையாளப்போவதாக பொ.ஐ.மு. அரசாங் கம் தெரிவித்துள்ளது. திரும்பவும் சிறுபான்மை மக்கள் பாதிப் படையக்கூடிய சாத்தியகூறுகள் இதில் இருக்கின்றது. இது வரை 20 வீதத்திற்கும் குறைவான பிரதிநிதித்துவத்தையே சிறு பான்மை மக்கள் பெற்றுவந்துள்ளனர். அவர்கள் 35 வீதமான பிரதிநிதித்துவத்தை பெற வேண்டியவர்கள். எனவே அவர் களுக்குரிய பிரதிநிதித்துவத்தை பெறுவதற்கேற்ற நிலையான ஒழுங்கமைப்பு முறையை (Institutional Enactment) அரசியல மைப்பில் புகுத்துவது அவசியம். இதன் மூலம்தான் நெடு நாளாக நிறைவேறாத சிறுபான்மையினரின் அபிலாஷைகள் நிறைவேற முடியும்.

— எமது அரசியல் யாப்பிலுள்ள நான்கு பிரஜாவுரிமைச் சட்டங் களும் மாற்றப்பட்டு, இலங்கையில் பிறந்த ஒவ்வொருவரும் இலங்கைப் பிரஜைகளாக்கப்பட வேண்டும். நாட்டின் பொரு ளாதார வளர்ச்சிக்கு முக்கிய காரணமாயிருந்துவரும் மலையக தொழிலாளர்களுக்கு ஐ.தே. கட்சியால் உருவாக்கப்பட்ட காரணமற்ற தொல்லைகளான, பிரஜாவுரிமை பிரச்சினை, சத்திய கடதாசி, விசேட அடையாள அட்டை முதலியன நீக் கப்பட வேண்டும். இதுவரைக் காலமும் பெருந்தோட்ட அமைப்பின் கீழ் இயங்கி வந்த நிலைமாறி ஏனைய மக்களைப் போல் இவர்களும் கிராம நிர்வாகத்தின் கீழ் கொண்டுவரப்பட வேண்டும்.

— கடந்த 17 வருடமாக வளர்க்கப்பட்ட பாதாள உலக பயங்கர வாத குழுக்கள் கண்டு பிடிக்கப்பட்டு, அழித்தொழிக்கப்பட வேண்டும். அப்போதுதான் உண்மையான ஜனநாயகம் தலை தூக்க முடியும். மக்கள் அமைதியாக வாழ அதீதமான நம்பிக் கையை வைத்திருக்கும் ஜனாதிபதியின் பாதுகாப்பு சிறப்பான முறையில் பலப்படுத்தப்பட வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

— கடந்த காலத்தில் பெரும்பான்மை வாக்குகளைப் பெற்று ஆட்சியிலிருந்த அரசுகள், உதாரணமாக 1970ம் ஆண்டில் 2/3 பெரும்பான்மையும், 1977ல் 5/6 பெரும்பான்மையும் பெற்றவர்கள் சிறுபான்மையினரின் அபிலாசைகளை நிறைவேற்றாமல் விட்டதுடன், அவர்களுக்கு விரோதமாகவும் செயற்பட்டன, மாறாக இன்று இப்புதிய அரசாங்கத்திற்கு கொடுக்கப்பட்ட இந்த பெரும்பான்மை வாக்கு சகல இன மக்களும் உரிமையோடும், சரிசமனாகவும் வாழ்வதற்கே என்பதை மறந்துவிடக்கூடாது,

## முடிவுரை

இலங்கையில் முதன் முதலாக 'நிறைவேற்று அதிகாரமிக்க ஜனாதிபதி முறை' என்ற எண்ணம் 1966ம் ஆண்டளவிலேயே உதயமாயிற்று. இதற்கு 1978ம்ஆண்டு செயல்வடிவம் கொடுக்கப்பட்டது. அன்று தொட்டு இன்று வரையும், இந்த நிறைவேற்று அதிகாரமிக்க ஜனாதிபதி முறைக்கு எதிராக பல குரல்கள் எழுப்பப்பட்டு வந்தன. இந்த அதிகாரத்தின் மூலமாக நாடு அபிவிருத்தி அடைவதற்குப் பதிலாக பல பிரச்சினைகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ளது. ஜனநாயகமும், சமாதானமும் சீர்குலைக்கப்பட்டுள்ளது. மூன்றாவது ஜனாதிபதித் தேர்தலின்போது சந்திரிகா குமாரதுங்க அவர்கள் 1995ம் ஆண்டுஜூலை மாதத்திற்குமுன் நிறைவேற்று அதிகாரமிக்க ஜனாதிபதி முறையை ஒழிக்கப்போவதாக பகிரங்கமாக உத்தரவாதம் அளித்துள்ளார். மக்களும் கூட இதையே எதிர்பார்க்கின்றனர். மிகப் பெரும்பான்மை வாக்குகளால் வெற்றிபெற்ற முதல் பெண் ஜனாதிபதி நாட்டில் ஜனநாயகமும், சமாதானமும் செழித்தோங்க தன்னை அர்ப்பணமாக்குவதாக உறுதி மொழி கொடுத்துள்ளார் இதை அனைவரும் வரவேற்கும் அதே வேளையில் சிறுபான்மைமக்களின் பிரச்சனைக்கு முன்னுரிமை கொடுத்து, அதனை சுமுகமாக தீர்த்து வைத்தால் தான் 'எமது நாட்டின் மேதகை' என்றசொல் பூரணத்துவம் பெறமுடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒன்பதாம் அத்தியாயம்

## மக்கள் தீர்ப்பு - 1992

பாராளுமன்றத்தின் ஆயுட்காலத்தை 6 ஆண்டுகளுக்கு நீடிப்பதற்காக நடத்தப்பட்ட மக்கள் தீர்ப்பின் தேர்தலில் இருந்து நாம் எவ்வளவோ அவதானிக்கக்கூடியதாக உள்ளது.

1982ல் நடைபெற்ற மக்கள் தீர்ப்பானது உலக வரலாற்றிலேயே முதல்தடவையாக ஜனநாயக அரசு, அரசாங்கத்தின் பதவி காலத்தை நீடிப்பதற்காக நடத்தப்பட்ட தேர்தலாகும் இந்த மக்கள் தீர்ப்பிலே பதிவு செய்யப்பட்டுள்ள வாக்காளர்களின் 38 சதமானோர் மட்டுமே இதனை ஆதரித்து இருக்கிறார்கள் கொள்கையளவில் இது மக்கள் தீர்ப்பாக இருந்த போதிலும நடைமுறைகளை அவதானிக்கும்போது, இது ஆளும் கட்சி சம்பந்தப்பட்ட தேர்தலாகவே தோன்றுகிறது உதாரணமாக 'விளக்கும், பச்சை நிறமும்' ஒன்றாக இணைக்கப்பட்டுள்ளதை அநேக இடங்களில் பரவலாக காணமுடிந்தது.

### 9.1 ஜனநாயகம்

இது மக்களுடைய முழு சுதந்திரத்துடனும் ஜனநாயக முறையின் கீழ் நடைபெற்றதா என்பது ஒரு கேள்விக்குறியாக இருக்கிறது. தேர்தலுக்குமுன் நடைபெற்ற ஒரு சில சம்பவங்கள் விசேடமாக பானையை ஆதரித்து அதற்காக கூட்டம் நடத்தியபோது நடைபெற்ற அசம்பாவிதங்கள் (உதாரணமாக கம்பஹா சம்பவம் போன்றவை) குறிப்பிடத்தக்கவை. எதிர்கட்சியினர் அனேக இடங்களில் பானையை ஆதரித்து மக்கள் மத்தியில் பிரச்சாரம் செய்வதற்கு அவர்களது சக்தியும், பலமும் குறைக்கப்பட்டமை காணக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூடியதாக இருந்தது. அதேவேளையில் பானைக்கு சார்பாக பிரச்சாரம் செய்வதற்கு ஒரு சில கட்சிகளிடம் தேவையான வசதிகள் இல்லாது இருந்தமையையும் காணக்கூடியதாக இருந்தது. அநேகமான தேர்தல் வாக்களிப்பு நிலையங்களில் எதிர்க்கட்சியை சேர்ந்தவர்கள் தடுக்கப்பட்டிருந்தமையும் காணக்கூடியதாக இருந்தது.

இந்நிலையில் நடைபெற்ற மக்கள் தீர்ப்பில் விளக்கை ஆதரித்து 3,141,223 வாக்குகளும், பானையை ஆதரித்து 2,605,983 வாக்குகளும் கிடைத்தன. 530,240 வாக்குகளை அதிகப்படியாக பெற்று விளக்கு வெற்றி பெற்றது. இந்த தேர்தலிலும் இதற்கு முன் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலிலும் தோட்ட மக்களின் பங்களிப்பு அதிகமாக இருந்தது தெளிவாகிறது. "தோட்டபகுதி மக்கள் காலை 11 மணிக்குள் தங்கள் வாக்குகளை அளித்தார்கள் என்றும், அனேக மக்கள் ஜனாதிபதிக்கு இறைவனின் ஆசி கிடைக்க வேண்டுமென்றும், நாட்டிலே சமாதானமும், ஒழுங்கும் நிலவ வேண்டுமென்றும் வேண்டினார்கள்" என செய்திகள் வெளிவந்தன[1]. அதே வேளையில் விசேட பூசைகள், நிகழ்ச்சிகள், சமயச் சடங்குகள் நடத்தினார்கள் என்பதும் பத்திரிகை மூலமாக நாம் அறியும் செய்திகள்.

## 9.2 மலையகத்தில் பிரச்சாரம்

இந்நிலையில் தோட்ட மக்களின் எதிர்காலம் எப்படி அமைய வேண்டுமென்று சிந்திக்க மலையகத்தில் வாழும் ஒவ்வொருவரும் கடமைப்பட்டுள்ளனர். தோட்ட மக்களுக்கு ஒரு ஒளிமயமான எதிர்காலத்தை உருவாக்கித் தருவோம் என்று நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தல், மக்கள் தேர்தல் இரண்டிலும் பிரச்சாரம் செய்த கட்சிகளின் அறிக்கைகளின் அடிப்படையில் சிந்திப்போமாகில் பல உண்மைகள் புலனாவதை அறியமுடியும். மக்கள் தீர்ப்பு குறித்த சர்வஜன வாக்கெடுப்பு 1982ம் ஆண்டு டிசம்பர் மாதம் நடத்தப்படுவதற்குமுன்னர், குறிப்பாக அக்டோபர், நவம்பர் மாதங்களில், மலையக மக்கள் மீது ஆளும் கட்சியினரின் விசேஷ கவனம் திரும்பியது. பொதுத்தேர்தல் நடத்தப்படும் பட்சத்தில் ஆளும் கட்சி தோல்வியுற நேரிடும் என்ற சந்தேகம் நிலவிய காரணத்தினாலேயே மக்கள் தீர்ப்புக்கான தேர்தல் நடத்தப்பட்டது. எதிர் கட்சியினரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணிசமான வாக்குகள் பெற வாய்ப்புகள் இருக்கின்ற எண்ணம் நிலவியதாலேயே மலையக மக்களின் வாக்கு செல்வாக்கு பெறலாயிற்று.

இக்கால கட்டத்தில் மலையக மக்கள் திரு. தொண்டமானின் தலைமைக்குள் சிக்கி இருந்ததாலும், அவர் அமைச்சர் பதவியில் இருந்ததாலும் அவரின் ஊடாக மலையக மக்களிடையே அரசுக்கு ஆதரவாக பிரச்சாரங்கள் முடுக்கிவிடப்பட்டன. இதில் ஜனாதிபதி உட்பட பல அரசியல் பிரமுகர்கள் முன்னணி வகித்தனர். இவர்கள் மலையக தோட்டத் தொழிலாளர்களுக்கு அளித்த வாக்குறுதிகளை அப்போது வெளிவந்த பத்திரிகை அறிக்கைகளை ஆதாரமாக கொண்டு நோக்குவது மலையக மக்களுக்கு எத்தகைய வாக்குறுதிகள் அரசாங்கத்தின் பொறுப்பில் உள்ளவர்களால் வாரி வழங்கப்பட்டன என்பதையும் அவற்றில் எத்தனை நிறைவேற்றப்பட்டன என்பதையும் அறிந்து கொள்ள உதவியாக இருக்கும்.

உண்மையில் இத்தகைய வாக்குறுதிகள் 1981ம் ஆண்டின் பிற்பகுதியில் இருந்தே தொடர ஆரம்பித்து விட்டன. தோட்ட முகாமையாளர்களுக்கான கருத்தரங்கொன்றில் அப்போதைய வர்த்தக கப்பற்துறை அமைச்சரின் கூற்றை கவனத்தில் கொள்ளலாம். அவர் தனது உரையில், "இந்நாட்டின் ஏற்றுமதியால் பெறப்படும் வருமானத்திற்கு பெரும் பங்கையளிக்கும் 13 லட்சம் மக்கள் தாங்கள் பெற வேண்டிய சமூக, பொருளாதார நன்மையை பெற முடியாமல் இருப்பது கேள்விக்குரிய விடயமெனக் குறிப்பிட்டார்.[2] 150 வருடங்களாக இம்மக்கள் இங்கு வாழ்ந்து வந்த போதிலும் நாட்டின் எப்பகுதியிலும் இல்லாதவாறு இம்மக்களிடையேதான் அதிகமாக போஷாக்கின்மை, குழந்தை இறப்பு வீதம், பிரசவ இறப்பு வீதம் என்பன. இருப்பதுடன், கல்வியறிவின்மை அறியாமை மற்ற மக்களைவிட இவர்கள் மத்தியில் அதிகமாக இருக்கிறதென்றும்" குறிப்பிட்டார். எனவே தோட்டப்பகுதியில் கிராமத்தைவிட ஒரு ஒழுங்கான அமைப்பு இருப்பதனால் தோட்ட மக்களின் தரத்தை உயர்த்துவது அவசியம் என்பதையும் வலியுறுத் இக்கருத்தரங்கில் உரையாற்றிய உதவித் தோட்டத்துறைதினார். அமைச்சர் தோட்டத் தொழிலாளர்களின் நலன்புரி தேவைகளுக்காக ஒதுக்கப்பட்ட நிதி போதாதென குறிப்பிட்டார். அதனைத் தொடர்ந்து தனது கருத்தை திடமாகவும் நிதானமாகவும் வெளியிட்ட விக்கிரம ஆரிய அவர்கள் தமது உரையின் போது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோட்டத்துறை திட்டங்களின் வெற்றியானது, முகாமையாளர்கள் வகிக்கும் பங்கின் முக்கியத்துவத்திலேயே தங்கியுள்ளதென வலியுறுத்தினார். அத்துடன உயர்ச்சியும் எழுச்சியுமுள்ள ஒரு பூரணத்துவ ஆரோக்கியமுள்ள தொழிலாளர் வர்க்கத்தை கட்டியெழுப்பும் பொறுப்பும சிறந்த முகாமைத்துவத்திலேயே தங்கியுள்ள தெனக் குறிப்பிட்டார். மேலும் ஒரு தோட்டப்பகுதி குழந்தையை ஒரு சாதாரண குழந்தை அல்லது ஒரு மனித வர்க்கம் என்ற கண்கொண்டு பாராது ஒரு ''மனித கூலி'' என்ற ரீதியில் நோக்கும் நிலையை ஒரு புஸ்தகத்திலிருந்து மேற்கோளாக எடுத்துக் காட்டினார்.

பணிப்பாளர் கலா நிதி ராஜா அமர சேகர அவர்கள் குறைந்த வருமானம் உடைய மக்கள் அரசினால் தகுந்த உதவி அளிக்கப்படாவிடின் அவர்களுடைய அடிப்படைப் போஷாக்கு தேவையை கூட பூர்த்தி செய்யமுடியாதென்று குறிப்பிட்டார். எனினும் தோட்டத்துறையை பொறுத்தமட்டில் 1980ம் ஆண்டு வழங்கப்பட வேண்டிய 70 ரூபாவும், 1981ம் ஆண்டு வழங்கப்பட வேண்டிய 107 ரூபாவும் இதுவரை வழங்கப்பட வில்லை. தோட்டத் தொழிலாளர்களுக்கு அவர்கள் வேலை செய்யும் நாட்களில் மட்டும் ரூபா 2/- கூட்டப் பட்டது. இதன் படி அவர்கள் ஒரு மாதத்திற்குப் பெறக்கூடிய அதிகபட்ச தொகை ரூபா 36/- மட்டுமே. இச்சொற்ப தொகையானது இன்றைய வாழ்க்கை செலவின் உயர்வுக்கு போதுமானதா? என்ற கேள்வியை எழுப்பினார். திரு. தொண்டமான் தோட்ட மக்களின் மருத்துவ வசதிக்கான ஒதுக்கீட்டு நிலையில் காணப்படும் புறக்கணிப்பை சுட்டிக்காட்டினார்.[3] நாட்டிலுள்ள மற்ற குடிமக்களுக்கு சராசரி 16/-ரூபா மருத்துவ வசதிக்காக ஒதுக்கப்பட்டுள்ள போது தோட்டப்பகுதி மக்களுக்கு மாத்திரம் 50 சதம் வழங்கப்படுவதையும் சுட்டிக் காட்டினார்.[4]

திரு. ஜே. ஆர். ஜயவர்த்தனா இப்படிக் கூறியுள்ளார். ஏறக்குறைய 150 வருடங்கள் இலங்கையில் வாழும் இந்திய வம்சாவழி தமிழர் மத்தியில் எத்தனை சட்டத் தரணிகள் தோன்றியுள்ளனர்? ஐந்து பேர் கூட இல்லை, வைத்தியர்களோ அரசியல் வாதிகளோ எத்தனை பேர்? கல்வியறிவுடையவர்கள், முக்கியமாக ஆங்கில, தமிழ், சிங்கள மொழிகளில் திறமை வாய்ந்தவர்கள், விஞ்ஞானம், சிவில், பொதுச் சேவை போன்ற துறைகளில் தேர்ச்சி பெற்றவர்கள் எத்தனை பேர் உளர்? எனவே ஏறக்குறைய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10 லட்சம் மக்களை கொண்ட மலையக தமிழ் சமுதாயத்தில் இருந்து கல்வி கற்ற மக்கள் உருவாக முடியவில்லை[5] அவர்கள் இந்நாட்டின் பிரஜைகள். தோட்டங்கள் சுவீகரிக்கப்பட்ட பின்பு அவர்களுக்கு நடந்தது என்ன? அவர்களுக்கென ஒரு கிராம மில்லை, இடமில்லை தொழிலில்லை. தோட்டங்களை விட்டு போக முடியுமா? அல்லது பரந்து சிதறி வாழ அவர்களால் முடியுமா? தோட்டங்கள் மூடப்பட்டால் அவர்கள் நிலை என்ன? 8000 தொழிலாளர்களைக் கொண்ட மயுரா புடவை தொழிற் சாலை மூடப்பட்டபோது அங்கு வேலை செய்த தொழிலாளர்கள் வேறு வேலை தேடிக்கொண்டார்கள். ஆனால் அதே நிலை தோட்டங்களில் ஏற்பட்டால் இந்த மலையகதமிழரின் கதி என்ன? இப்படி தொண்டமான், காமினி திசநாயக்கா போன்றவர் கள் பேசினார்கள். அப்போது 2000/ ரூபா வீதம் தோட்டத் தொழிலாளருக்கு கொடுக்க வேண்டும் என்று சிலர் கூறிய போது, அவர்களுக்கு லட்சம் ரூபா கொடுத்தாலும் இந் நாட்டில் நிலம் வாங்கும் உரிமை இருக்கிறதா அல்லது வேறு தொழில்தானும் தேட முடியுமா என்று தொடர்ந்துகுறிப்பிட்டார்.

பிரதம மந்திரி பிரமதாசா, தோட்டத் தொழிலாளர் குடியி ருப்பு வசதிகள் அற்றவர்களாக வாழ்கிறார்கள், எனவே வீடமைப் புத் திட்டத்தின் கீழ் அவர்களுக்கு வீடுகள் வழங்க வேண்டு மென வும் ஏற்றுக் கொண்டார் என்ற வார்த்தைகள் காணப்பட்டன.[6] தோட்டங்களில் பணிபுரியும் தொழிலாளர்களின் துரித முன்னேற்றம் கருதியும் கல்வி அபிவிருத்தி குறித்தும் தொலைக் காட்சி மூலம் நிகழ்ச்சிகள் ஒளிபரப்பு செய்ய முயற்சிகள் மேற் கொள்ளப்பட்டுவருவதாகவும், இதற்கான ஒழுங்குகளை மக்கள் பெருந்தோட்ட அபிவிருத்தி சபை செய்து வருகிறதென்றும் கூறப்பட்டது.[7]

இங்கு குறிப்பிட்ட செய்திகள் அரசாங்க மட்டத்திலும், அரசியல் உயர் அந்தஸ்தை வகிக்கும் பிரமுகர்களின் மூலமாகவும் வெளியிடப்பட்ட ஒரு சில அறிக்கைகளே இவை தவிர பல்வேறு மட்டங்களில் மக்கள் தீர்ப்பு வாக்கெடுப்பிற்கு முன்னதாக பல வாக்குறுதிகள் தோட்டத் தொழிலாளர்களுக்கு அளிக்கப்பட்டன. ஆனால் 12 வருடங்களுக்கு முன் ஆதிகாரபூர்வமாக அங்கீகரிக்கப் பட்ட பத்திரிகைகளின் வாயிலாக வந்த செய்திகளின் படி அள்ளி தெளிக்கப்பட்ட வாக்குறுதிகளுக்கு என்ன நடந்தது? வாக்குறுதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களை நம்பி வாக்களித்து, ஆட்சிபீட மேற்றப்பட்ட அரசியல் வாதிகள் கடந்த 12 வருடங்களாக என்ன செய்தார்கள்? அவர்கள் அளித்த வாக்குறுதிகளில் பாதியைத்தானும் நிறைவேற்றியிருப்பார் களே யானால் இன்று மலையக மக்கள் ஏனைய மக்களை விட பல்வேறு நிலைகளில் சுபீட்சமாக,நிறைவாக வாழ்ந்து கொண்டிருப் பார்கள். எனவே இந்த அரசாங்கம் மேற் குறிப்பிட்ட வினாக்களுக்கு எப்படி நியாயமான முறையில் பதிலளிக்கப்போகிறது என்பதையும் கீழ்வரும் அம்சங்களை நோக்குவதன் மூலமாக அறியலாம்.

## 9.3 மக்களின் நிலைமை

— சுகாதார வசதியீனங்களை நிவர்த்தி செய்ய எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை? எத்தனை தாய், சேய் மரணங்கள் தடுக்கப்பட்டுள்ளன?

— மருத்துவ சம்பந்தமான நிதி ஒதுக்கீட்டில் உள்ள பார பட்ச நிலையை (ஒரு தோட்ட தொழிலாளிக்கு 80 சதமும், ஏனைய சமூகத்தினர் ஒருவருக்கு 16/ரூபா) மாற்ற என்ன திருத்தங்கள் கொண்டு வரப்பட்டுள்ளன?

— இம்மக்களில் எத்தனை பேருக்கு போஷாக்கு நிறைந்த உணவு கிடைக்கிறது?

— தோட்டத்தில் உள்ள வயோதிபர், ஓய்வு பெற்றவர்களுக்கான பரிகார ஏற்பாடுகள் எவை?

— தோட்டங்கள் அரசாங்க மயப்படுத்தப்பட்டு பல ஆண்டுகளா கியும் ஏனைய அரசாங்க ஊழியர்களுக்குரிய உரிமைகள் தோட்டத் தொழிலாளர்களுக்கு வளங்கப்பட்டுள்ளனவா?

— மாதச் சம்பளமும் அதனோடு தொடர்புடைய ஏனைய அம்சங் களும் தோட்டத் தொழிலாளருக்கு கிடைத்துள்ளனவா?

— பிரதம மந்திரியாக 1982ல் கடமையாற்றிய காலம் சென்ற பிரேமதாச அவர்கள் மற்ற குடி மக்களுக்குள்ளதுபோல் தோட்டத் தொழிலாளருக்கும் வீடமைப்புத் திட்டங்கள் வேண்டுமென்பதை ஏற்றுக்கொண்டதன் படி இதுவரை, இந்த 12 வருட இடைவெளியில் 'ஏதாவது வீடுகள் கட்டப்பட்டு வழங்கப்பட்டனவா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

— 1982ல் மக்கள் தீர்ப்பு தேர்தலுக்கு முன்பும் 1993ல் மாகாண சபைத் தேர்தலுக்கு முன்பும் தோட்டத் தொழிலாளருக்கு வீடு, காணி சொந்த மாக்குவோம் என்று வாக்களித்தது போல் 1994ல் பாராளுமன்றத் தேர்தலுக்கு முன்பும் வீடு சொந்தமாக்குவோம் என்று அதே அரசு வாக்களித்தது. இந்த வாக்குறுதிகளுக்கு என்ன நடந்தன? எவ்வளவு தூரம் தோட்ட தொழிலாளர்களின் வீட்டுப் பிரச்சினை தீர்க்கப்பட்டுள்ளது?

— மலையகத்தில் கல்வி வளர்ச்சிக்கான பூரண பணிகள் மேற் கொள்ளப்பட்டனவா? மலையகத்தில் இருக்கும் ஏனைய இன மக்களின் பாடசாலைகளுக்குள்ள வசதிகள் மலையக தமிழ் மக்களின் பாடசாலைகளுக்கு இருக்கின்றனவா?

— தொலைக்காட்சி வசதிகளை தோட்டங்கள் தோறும் ஏற்படுத்து வதன் மூலம் கல்விப்பிரச்சினை தீர்ந்துவிடுமா? மேலும் இந்த 12 வருடங்களில் எத்தனை தோட்டங்களுக்கு தொலைக்காட்சி வசதிகள் ஏற்படுத்தப்பட்டன.

இவையனைத்தும் இன்னும் பல்வேறு கேள்விகளும், சந்தேகங் களும் சிந்திக்கத் தெரிந்த எவருக்கும் ஏற்படுவது சகஜமே. பன்னி ரண்டு வருடங்களுக்கு முன்னால் வழங்கப்பட்ட எந்தவொரு வாக் குறுதியும் பூர்த்தி செய்யப்படாத நிலையில் அண்மையில் நடந்த பாராளுமன்ற பொதுத் தேர்தலுக்கு முன் (16-8-1994) புதிதாக வேறு பல வாக்குறுதிகளும் மலையக மக்கள் மத்தியில் அதே அரசாங்க பிரமுகர்களால் வளங்கப்பட்டுள்ளன. இவை அனைத் தையும் கடந்தகால நடைமுறை அனுபவங்களின வெளிச்சத்தில் நோக்கும்போது இரண்டு அம்சங்கள் புலப்படுகின்றன.

— இந்த வாக்குறுதிகளை அளித்த அரசியல்வாதிகளின் ஒரே நோக்கம் தோட்டத் தொழிலாளர்களை ஏமாற்றி வஞ்சித்து அவர்களின் வாக்குகளை கொள்ளையடிப்பதாகும்.

— அப்பாவித் தோட்டத் தொழிலாளர்களில் பெரும்பாலானோர் தொடர்ந்து பொய்யான வாக்குறுதிகளை நம்பி ஏமாறும் நிலை யில் இன்னமும் அரசியல் விழிப்புணர்ச்சி சிறிதேனும் இல்லாத இருந்து வருவதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லா தேர்தல்களிலும் அளிக்கப்பட்ட வாக்குறுதிகள் வெறும் போலியானவை என்பது தெளிவாக தெரிவதுடன் இந்த ஏமாற்று வேலைகளுக்கு மலையகத்தின் பிரதான தலைவர்களே முழு உடந்தையாக இழந்திருக்கிறார்கள் என்ற உண்மை பெரும் வேதனைக்குரியதே. இந்த கசப்பான உண்மைகளை என்று மலையக மக்கள் உணர்ந்து தெளிவான அரசியல் சிந்தனையுடனும், பொறுப்புணர்ச்சியுடனும், செயல்படுகிறார்களோ, அன்று தான் அவர்களுக்கு உண்மையான விமோசனம் கிடைக்கும் அதுவரை அவர்கள் அளிக்கும் வாக்குகளே, அவர்களை அழிக்கும் பயங்கர கருவியாக இருந்து அரசியல் ஏமாற்றுக்காரர்களை ஆட்சி பீடத்தில் நீடிக்க வைத்துக் கொண்டிருக்கும்.

> ஜனநாயகம் என்ற தத்துவமே ஒரு முறையான ஆட்சிக்கு ஒத்துவராத விஷயமோ என்ற சந்தேகம் கூட சில சமயங்களில் வந்துவிடுகிறது. நாட்டு நன்மையைக் கருதி செய்ய வேண்டிய பல காரியங்களைக் கூடச்செய்வதற்கு ஒரு ஜனநாயக அரசு அஞ்ச வேண்டியதாக இருக்கிறது, தாற்காலிகமாக ஒரு பகுதி மக்களின் வெறுப்பைச் சம்பாதித்துக் கொள்வோம் என்ற அச்சம் இருந்தால் ஒரு ஜனநாயக அரசால் நல்ல காரியங்களைக்கூட செய்ய முடியாமல் போகின்றது.[13]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலையக மக்கள் ஆதரவு

சர்வசன வாக் கெடுப்பு—தோட்ட பகுதி மாவட்டங்கள்—(1982)[8]

| தொகுதிகள் | பதிவான வாக்குகள் | விளக்கு | | பானை | |
|---|---|---|---|---|---|
| நுவரெலியா | 201,878 | 117,585 | 58.45% | 43,371 | 21.48% |
| துபளை | 280,187 | 152,413 | 54.39% | 64,427 | 22.99% |
| கண்டி | 564,767 | 265,986 | 47 09% | 160,349 | 29.39% |
| இரத்தினபுரி | 402,202 | 177,029 | 44.02% | 128,367 | 31.91% |
| மாத்தளை | 187,276 | 110,689 | 59.11% | 39,348 | 21.01% |
| கேகாலை | 406,548 | 168,119 | 41.35% | 128,234 | 31.54% |
| யாழ்ப்பாணம் | 493,705 | 23,319 | 5.12% | 265,534 | 53 78% |
| மட்டக்களப்பு | 172,480 | 47,482 | 27.52% | 72,971 | 42.30% |

பதிவு செய்யப்பட்ட முழு வாக்குகள் — 8,145,015
விளக்கு பெற்ற வாக்குகள் — 3,141,223 (38.56%)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பானை பெற்ற வாக்குகள் — 2,605,983 (31.99%
விளக்கு- செல்லுபடியானவாக்குகள்— 56.65 %
பானை - செல்லுபடியான வாக்குகள்— 43.34 %
வாககளிக்காதவர் தொகையும், வீதமும் — 2,376,343 (29,17%)
மலையக தமிழர் வாக்குகள் வீதம் — 80 %

1972ம் ஆண்டு நிர்வாகத்தில் இருந்த ஸ்ரீ. ல. சு. கட்சி அரசு குடியரசு யாப்பின்படி பாராளுமன்றத்தை இரண்டு வருடங்கள் நீடித்ததற்காக, எதிர் கட்சியிலிருந்து ஜே.ஆர் ஜயவர்த்தனா பல எதிர்ப்புகளை தெரிவித்து தனது பதவியை ராஜினாமா செய்தார். அதன்பின் 25.7.1972ல் நடைபெற்ற இடைத்தேர்தலில் கொழும்பு தெற்கு தொகுதியில் நின்று போட்டியிட்டு வெற்றி பெற்றார். 1977ம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலில் ஐ. தே. க. 5/6 பெரும் பான்மையுடன் ஆட்சியை பிடித்தது. அப்போது அதன் பிரதமராக இருந்த அதே ஜே. ஆர். ஜயவர்த்தனா அவர்கள் தான் 1978ம் ஆண்டு கொண்டு வந்த யாப்பின் மூலமாக இடைத் தேர்தலை ரத்து செய்தார். அதன்பின் தனது ஆட்சிக்காலத்தையும் நீட்டித்தார். இதற்கு முன்னோடியாக 1982ல் நடைபெற்ற ஜனாதிபதி தேர்தல் பிரச்சாரத்தின் போது, மக்கள் தீர்ப்பின்றி எத்தேர்தலையும் ஒழிக்க மாட்டோம் என்று பேசிய அதே கையோடு, ''இலங்கையின் தேர்தல் படத்தை பத்து வருடங்களுக்கு சுருட்டி வைப்போம்'' என்ற வார்த்தைகளையும் கூறி தனது ஆட்சியை நீடிக்கும் உள் நோக்கையும் வெளியிட்டார். இந்த நிலைப் பாட்டை கவனிக்கும் போது ஜே. ஆர். ஜயவர்த்தணா அவர்கள், தான் ஸ்ரீ.ல.சு.கட்சியின் ஆட்சிக் காலத்தில் அந்த அரசு 2-வருடத்தை நீடித்தபோது ராஜினாமா செய்ததற்கும் அவர் ஆட்சிக்கு வந்த காலத்தில் அதை விட மோசமான ஜனநாயக விரோத சட்டங்களை ஏற்படுத்தி தனது ஆட்சியை நீடித்ததற்கும் உள்ள பெரும் முரண்பாடு தெளிவாகிறது.

அந்த காலகட்டத்தில் அவருக்கு சாதகமாக இருந்தது அவரது ட்சியின் 5/6 பெரும் பான்மையும், எதிர்கட்சிகளில் ஏற்பட்ட பிளவுகளால் அக்கட்சிகள் மிகவும் பலவீன நிலையடைந்ததுமே. அத்துடன் மட்டும் நிற்காது தனது அரசியல் சாணக்கியத்தை மேலும் இழிவான முறையில் பயன்படுத்தி தனக்கு எதிர் அணியில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்த கொப்பேகடு வைக்கு ஆதரவு தந்தவர்களை நக்சலைற் என பட்டம் சூட்டி, தன்னையும், தனது மந்திரி சபை அங்கத்தினரையும் நிர்வாக தலைவர்களையும் படுகொலை செய்ய முயற்சித்தார் களென்றும் குற்றம் சுமத்தி படுபயங்கரமான வன்முறையை அவிழ்த்து விட்டார். அதே வேளையில் சர்வசன வாக்கெடுப்பே மக்களின் நன்மை கருதி ஜன நாயக முறையில் நடத்தப்படும் என்றார். ஜனநாயக முறையென்ற வார்த்தையை பயன்படுத்தியே ஜனநாயக விரோத செயல்களில் ஈடுபட்டதற்கு ஜே. ஆர். ஜெய வர்த்தனாவுக்கு நிகர் அவரே தான் என்பது அவர் ஆட்சிபீடம்ஏறிய நாட்களில் இருந்தே கவனிக்க முடிந்தது. எதிர் கட்சிகளின் பலத்தை இன்னும் குறைப்பதற்காக கம்யூனிஸட் கட்சி அங்கத் தவர் பலரை சீ.ஐ.டி (C.I.D) தலைமையகத்திற்கு இட்டுச் சென்று விசாரணை என்ற பெயரில் கொடுமைப்படுத்தியும், ஸ்ரீ. ல. சு கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி, போலி கூப்பனட்டைகளை ஜனாதிபதி தேர்தலின் போது மக்களுக்கு வினியோகித்து பிரச் சாரம் செய்ததாக குற்றம் சாட்டி 36 பேரை கைது செய்ததும் மக்கள் தீர்ப்புக்கெதிராக செயலாற்றியவர்களை தண்டிக்கிறோம், என்றும் மக்கள் முன் பசப்பவும் செய்தார்.

அதே வேளையில் அக்டோபர் மாதம் 1982ம் ஆண்டு தனது கட்சியின் மூலமாக எல்லா மந்திரி சபை அங்கத்தினரையும் ராஜி னாமா செய்யும் அனுமதி பெற்றார். இதற்கு அவர் கொடுத்த காரணம் மந்திரி சபையில் புதிய அங்கத்தினரை தெரிவு செய்ய வேண்டும் என்பதே. 144 அங்கத்தினரில் மூன்றுபேர், திரு. தொண்டமான் திரு. எம். டி. எச். ஜயவர்த்தனா, திரு பக்கீர் மரக் கார் தங்கள் ராஜினாமா கடிதத்தைச் சமர்ப்பிக்கவில்லை. இந்த ராஜினாமா சமர்ப்பிப்பு சம்பவம் பாராளுமன்றத்தையும், மக் களின் வாக்களிக்கும் ஜனநாயக உரிமையையும் அவமதிக்கும் ஒரு செயல் என்பது மறக்க முடியாத ஒரு உண்மை. தனக்கு சாதகமாக இருக்கக் கூடிய நபர்களை தேர்ந் தெடுப்பதற்காக இந்த முறையை கொண்டு வந்த ஜே. ஆர். ஜயவர்த்தனா பதவியில் நீடித்திருக்க வேண்டுமென்ற தனது பேராசையை நடை முறைப்படுத்தவும், தனக்கு சார்பான வர்களின் பெரும் பான்மையை பாராளுமன்றத்தில் நிலை நாட்ட வுமே கண்ணாயிருந்தார் என்பதும் ஜனநாயக வழிமுறைகளைப் பற்றி அவர் கிஞ்சித்தும் கவலை கொள்ளவில்லை என்பதை எடுத் துக் காட்டுகிறது. அத்துடன் தான் கொண்டு வந்த சர்வசன

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாக்கெடுப்பு முறை நல்ல வெற்றியை ஈட்டி தனது ஆட்சியை நீடிக்க, இவர்கள் செயற்பட வேண்டுமென்பதும் இந்த ராஜினாமா சம்பவம் நமக்கு எடுத்தோதுகிறது.

## 9.6 சர்வசன வாக்கெடுப்பின் வரலாறு

இந்த சர்வசன வாக்கெடுப்பு முறை சுவிற்சலாந்து நாட்டில் முதலில் அமுலாக்கப்பட்டது. இது நாட்டின் முக்கிய செயற்பாடுகளில் அவர்களின் கருத்தை பெறுவதற்காக ஏற்படுத்தப்பட்ட பலன் தரும் வழி.[9] எவ்விதத்திலும் ஜனநாயகங்களுக்கு முரன்பாடானதாக இருக்கவில்லை. பதினெட்டாம், பத்தொன்பதாம் நூற்றாண்டுகளில் ஐக்கிய அமெரிக்காவிலும், பிரான்சிலும் இம்முறை அனுசரிக்கப்பட்டது. இதன் புதிய வழிமுறைகள், மக்களின் ஆய்வுக்காகவும், திருத்தம் செய்வதற்காகவும் நாட்டின் சட்டதிட்டங்களை ஒப்படைத்து அவர்களின் ஒத்துழைப்பை பெற ஐக்கிய அமெரிக்காவில் பயன்படுத்தப்பட்ட முறையாகும். இது முதல் முதலில் அமெரிக்காவில் உள்ள மசக்செற் பகுதியில் 1778ல் பரீட்சிக்கப் பட்டது. அதன் பின் (1820க்குப்பின்) எல்லா நாட்டின் சட்டங்களும் மக்கள் முடிவுக்கு விடப்பட்டன. இந்த சர்வசன வாக்கெடுப்பின்படி ஒரு தொகுதி மக்கள் முன்னவக்கப்பட்ட பிரச்சினையையோ, ஆய்வுக்குரிய விசயத்தையோ பொருட்படுத்தாமல் தாங்கள் ஆதரவு தரும் கட்சியின் வெற்றியையே முக்கியமாக கருதும் ஒரு ஆபத்து ஏற்பட வாய்ப்பு உண்டு. ஜனநாயகத்திற்கு பக்க பலமாகவே இருக்க ஏற்படுத்தப்பட்ட ஒரு முறைதான் சர்வசன வாக்கெடுப்பு என்பதை மறக்கடிக்கும் விதமாக ஆட்சிப்பொறுப்பில் உள்ளவர்கள் தங்களுக்கு சாதகமாக இந்த முறையை கையாளவும் முடியும். இங்கிலாந்தின் சட்ட வல்லுநர்கள் இந்த சர்வசன வாக்கெடுப்பு பற்றி குறிப்பிடும்போது, ''ஒரு நாட்டின் குரல்வளையை இரவு வேளையில் நெரித்துக் கொல்ல எடுக்கும் முயற்சியே'' என்கிறார்கள்.

சர்வசன வாக்கெடுப்பு சட்டபூர்வமாக சரியாக இருப்பதாக தோன்றினாலும், தார்மீகமாகவோ, நேர்மையாகவோ இருக்கி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டுமென்பதில்லை. 1978ம் ஆண்டு 13வது அத்தியாயத்தில் இடம் பெற்ற சர்வசன வாக்கெடுப்பு முறைக்கு எதிராக இலங்கையில் பல எதிர்ப்புகள் தெரிவிக்கப்பட்டன. இதில் ஜனாதிபதிக்கு மூன்று விதமான சட்ட மூலங்களை மக்களின் தீர்ப்புக்கென மக்களுக்கு சமர்ப்பிக்கலாம் என கூறப்பட்டது. ஆனால் இதில் பாராளுமன்றத்தின் காலத்தை நீடிப்பது பற்றி கூறப்படவில்லை. எனவே அரசியலமைப்பின் நாலாவது திருத்தம் மூலமாக பாராளுமன்றத்தை மேலும் 6 வருடங்களுக்கு நீட்டிக்க கூடிய விதமாக மாற்றப்பட்டது. ஆகவே 1983 ஆகஸ்ட் 4ல் கலைக்கப்பட வேண்டிய பாராளுமன்றம் 1989 வரை நீட்டிக்கப்பட்டது.

## முடிவுரை

அரசியலமைப்பின் நாலாவது திருத்தத்தின் அடிப்படையில் பாராளுமன்றம் நீடிக்கப்பட வேண்டுமென்ற உயர் நீதி மன்றத்தின் தீர்ப்பு ஒரு பெரும்பான்மை வாக்கால் நிறைவேறியது. உயர் நீதிமன்றத்தின் தலைமை நீதிபதி வீ.டி.எம். சமரக்கோன் தான் இந்த பாராளுமன்றம் நீடிக்கப்படும் காலத்தை எதிர்த்த மூன்று நீதிபதிகளில் ஒருவராவர். இவர் ஜனாதிபதி, ஜே.ஆர். ஜயவர்த்தனாவுக்கு எழுதிய தனது கடித முடிவில் கூறிய வார்த்தையாவது, "நான் தொடர்ந்து கொஞ்சக்காலம் இந்த அவமானத்தை தாங்கித்தானாகவேண்டும்."[10] 1982ம் ஆண்டு நவம்பர் 14ம் திகதி இந்த நாலாவது அரசியலைப்பு மாற்றம் நிறைவேற்றப்பட்ட பின்பு 1982 டிசம்பர் 12ம் திகதி சர்வசன வாக்கெடுப்பை நடைமுறைப் படுத்தும்படி தேர்தல் ஆணையருக்கு ஜனாதிபதி பணித்தார்.

இத்தேர்தல் பிரச்சாரத்தில் ஐ.தே. கட்சியுடன் இ.தொ. காங்கிரசும் சேர்ந்து "விளக்கு"க்கு வாக்களிக்கும்படி மலையக மக்களை வலியுறுத்தியது. அதே நேரத்தில் மற்றக் கட்சிகள் அவற்றுடன் சேர்ந்து ஐ.தொ.கா உம் இதற்கு எதிர்ப்பு தெரிவித்தன. த.ஐ.வி. முன்னணியும் இதற்கு எதிர்ப்பு தெரிவித்தது. இந்த வேளையில் ஆளும் கட்சி ஸ்ரீ ல.சு. கட்சியில் பிளவை ஏற்படுத்தி மைத்திரி பால சேனநாயக்காவை தன்வசப்படுத்தியதுடன், எதிரணித் தலைவர்களையும் அதிகாரப் பதவியிலுள்ளோரையும் ஆசைகாட்டி தம்பக்கம் இழுத்தனர். இத்தேர்தல் அவசரகாலச் சட்டத்தின் கீழ் நடைபெற்றபடியால், எதிரணி பத்திரிகைகள்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அச்சுக் கூடங்கள் சீல் வைக்கப்பட்டதுடன், நீதிமன்றத்தில் எந்த வொரு பிரச்சினைக்கும் எதிரணியினருக்கு நீதி கிடைக்கவில்லை. மாறாக அவசரகாலச் சட்டத்தின்கீழ் எதிரணியினர் தொடர்ந்து அச்சுறுத்தலுக்கே உள்ளாக்கப்பட்டனர். மேலும் இலங்கையில் ஒழுங்குபடுத்தப்பட்ட முறையான அமுக்கக் குழுக்கள் (Preassure Groups) இல்லாவிட்டாலும் சந்தர்ப்பத்திற்கு ஏற்ப சில பிரச்சினைக்கு தீர்வுகாண ஒரு சில அமுக்கக் குழுக்கள் முன்வந்தன. குறிப்பாக மக்கள் தீர்ப்பில் எல்லோரும் தங்கள் வாக்கை "பானை"க்கே அளிக்க வேண்டுமென பல குழுக்கள், தொழிற் சங்கங்கள் வலியுறுத்தின. இதில் முக்கியமாக குறிப்பிடப் பட வேண்டிய குழுக்கள்; ஜனநாயக உரிமைகளை பாதுகாக்கும் இயக்கம், சமூக சமய நிலை இயக்கம், உமனி உரிமை இயக்கம், மத குருமார் குரல் (voice of the Clergy) போன்றவைகள். இந்த குழுக்களுக்கு எதிராக ஐ. தே. கட்சியின் வலது கரமாக இருந்து செயற்பட்ட காவல்துறை கண்காணிப்பாளர் (S.P.) உயர் நீதி மன்றத்தினால் குற்றவாளி என நிரூபிக்கப்பட்டு ரூபா 10,000 அபராதம் விதிக்கப்பட்டபோது அந்த அபராதத்தையும் ஆட்சியில் இருந்த ஐ.தே.க. அரசே செலுத்தி, அன்றிருந்த மந்திரிசபை அமைச்சர்கள் அந்த எஸ்.பீக்கு உயர்மட்ட பதவி உயர்வு கொடுக்கப்பட்டது.[1] இத்தேர்தல் நடைபெற்றவிதமும், பாது காப்பு படையினர் அரசு பக்கமாக செயற்பட்ட முறையும், மக்கள் சுதந்திரமாக வாக்களிக்கும் நிலையை பாதித்து, முழுதும் ஜனநாயக விரோத நிலையையே எடுத்துகாட்டியது. அதுமட்டு மல்லாது பின்வந்த மற்ற தேர்தல்களில் வன்முறை நிலவவும் இது ஒரு முன்னோடியாகவும், முன் உதாரணமாகவும் விளங்கியது. இதில் தொண்டமான் ஐ. தே. கட்சிக்கு பக்கபலமாக இருந்தது மலையக மக்களுக்கு இ.தொ.கா. புரிந்த பெரிய துரோகமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பத்தாம் அத்தியாயம்

# மாகாண சபைத் தேர்தல் 1988-1993

மாவட்டங்களாகவும், மாகாணங்களாகவும், பிரிக்கப்பட்டு பரிபாலனம் செய்யப்படுவது எமது நாட்டிற்கு புதியதொன்றல்ல. ஒல்லாந்தர் காலத்திலிருந்தே இந்த நடைமுறை இருந்து வந்துள்ளது என்பது பற்றி சரித்திரம் கூறுகின்றது. இலங்கைத் தீவின் கரையோரைப் பகுதிகள் ஒல்லாந்தரால் 6ஆட்சி மாவட்டங்களாக பிரிக்கப்பட்டன.[1] இன்றிருக்கின்ற 9 மாகாணங்களும், ஆங்கிலேயர் ஆட்சியின் கீழ் இலங்கை முழுமையாக ஒற்றையாட்சியின் கீழ் வந்ததும் 1815ம் ஆண்டுக்குப்பின் உருவாக்கப்பட்டதாகும். இலங்கை 1948ல் சுதந்திர மடைந்த பின்னரும் இதில் எவ்வித மாற்றமும் ஏற்படவில்லை. ஆனால் மாவட்டங்களின் தொகை 25 ஆக அதிகரித்துள்ளது.

## 10.1 மகாணசபைச் சட்டம்

இலங்கையின் இனப்பிரச்சினையானது. நீண்ட காலமாக நாட்டை பலவீனப்படுத்தி வந்துள்ளதுடன் ஒரு தேசியப் பிரச்சினையாகவும் உருவெடுத்துள்ளது. இப்பிரச்சினையை தீர்ப்பதற்காக எடுக்கப்பட்ட முன்னைய ஒப்பந்தங்கள் செயல்படுத்தப்படாமல் போன காரணத்தால் சிறுபான்மையினரின் தேசிய விடுதலைப் போராட்டமானது சர்வதேச அரங்கில் விமர்சிக்கப்படும் நிலைக்கு தள்ளப்பட்டது. அது மட்டுமல்ல இது இந்திய அரசியலிலும் ஒரு தாக்கத்தை ஏற்படுத்தியது. எனவே தமிழ் பேசும் மக்களுக்கு ஒரு காப்பீடாக மாகாண சபைகள் அமையுமென்ற எதிர்பார்ப்புடன் அதனை உள்ளடக்கிய இலங்கை-இந்திய ஒப்பந்தம் 1987ம் ஆண்டு ஜூலை மாதம் 29 ம் திகதி உருவாக்கப்பட்டது.[2]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1989ம் ஆண்டின் 12ம் இலக்கச்சட்டம். இந்த சட்டத்தின் படி, சிறுபான்மை மக்களுடைய பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காகவும், அதிகாரத்தை பரவலாக்கவும் மாகாண சபை உருவாக்குப்பட்டது. ஆனால் இலங்கை அரசாங்கமோ இந்த சட்டத்தை சிறுபான்மையினரின் நன்மைக்காக உபயோகிக்காமல் மாகாணசபை ஆணை இல 42, 1987 மூலமாக நாடு முழுவதிலும் உள்ள எல்லா மாகாணத்திலும் தேர்தல் நடத்தியது. 1989ம் ஆண்டின் 12ம் இலக்கச் சட்டத்தின் மூலமாக ஒருசில மாற்றங்களையும் கொண்டு வந்தது. இச் சட்டங்கள் நமது நாட்டின் அரசியலமைப்பு 154 (அ) என்ற சரத்தில் அடங்கியுள்ளதை காணலாம்.[3]

மகாண சபைத் தேர்தல்கள் கட்சிப் பட்டியியல் முறையின்படி நடைபெற வேண்டும். அதன் ஒழுங்குக்கிசைய போட்டியிடும் கட்சிகள் தமது வேட்பாளர் பட்டியலை தயாரிக்க வேண்டும். வாக்காளர்கள் தாம் விரும்பும் கட்சிகளுக்கு மட்டுமின்றி அக் கட்சியில் தாம் விரும்பும் வேட்பாளர்களுக்கும் விரும்பி வாக்களிக்க முடியும். எனவே கட்சிகள் பெறும் வாக்குகளின் தொகைக்கும் அக்கட்சியில் வேட்பாளர் பெறும் வாக்குகளின் விகிதத்திற்கு ஏற்பவும் பிரதிநிதிகள் தெரிவு செய்யப்படுவார்கள். சபை உறுப்பினர்களின் எண்ணிக்கை அந்த மாகாணத்திலுள்ள ஒவ்வொரு மாவட்டினத்தினதும் 1000 சதுர கிலோ மீட்டர்களுக்கு அல்லது 40,000மக்களுக்கு ஒரு பிரதிநிதி என்ற முறையில் அமைகிறது. தேர்தல் முடிவுகளின் படி செல்வாக்குள்ள கட்சியிலிருந்து முதலமைச்சர் தெரிவு செய்யப்படுகின்றார். அவருடன் பணியாற்ற நான்கு அமைச்சர்கள் தெரிவு செய்யப்படுவார்கள். முதலமைச்சரின் நியமனம், மத்திய அரசின் விசேட அபிமானியும் இறுதிமுடிவு எடுக்கும் அதிகாரம் கொண்டவரும், ஜனாதிபதியின் கட்டளைப்படியே நடக்கும் ஆளுநரால் நடத்தி வைக்கப்படும், இம்மாகாணச் சபையின் ஆயுட்காலம் 5 வருடங்களாகும்.[4]

## 10.1.1 வெட்டுப்புள்ளி முறை

மாகாண சபைத் தேர்தலில் குறிப்பீட்ட ஒரு மாவட்டத்தில் போட்டியிடும் எந்த ஒரு கட்சியாவது அல்லது சுயேட்சைக் குழுவாவது வாக்களிக்கப்பட்ட வாக்குகளின் மொத்த எண்ணிக்கையில் எட்டில் ஒரு (18) பங்கை பெற்றால் மட்டுமே வேட்பாளர் ஒருவரை தெரிவு செய்யும் தகைமையை பெறும். இச்சட்டம் 1988ல் 2ம் இலக்க மாகாண சபைத் தேர்தலில் சட்டத்தின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருத்தம் காரணமாக தற்போது நீக்கப்பட்டுள்ளது. வாக்காளர் முதலில் தாம் விரும்பும் கட்சிக்கு அல்லது சுயேட்சை குழுவிற்கு வாக்களிக்க வேண்டும்; பின் தனது விருப்பு வாக்குகள் மூன்றை யும் தான் விரும்பும் மூன்று அபேட்சகரின் இலக்கத்திற்கு போட வேண்டும். ஆனால் ஒரு அபேட்சகருக்கே மூன்று வாக்குகளை யும் அளிக்க முடியாது. வாக்காளர் தமது விருப்பு வாக்குகளில் ஒன்றை, இரண்டை அல்லது மூன்றையுமே உபயோகிக்காமல் விடலாம். ஆனால் அவ்விருப்பு வாக்குகளை உபயோகிப்பதற்கு முன் முதல் முதலில் ஒரு கட்சிக்கோ, சுயேட்சை குழுவுக்கோ தனது வாக்கை தவறாது அளிக்கவேண்டும். கட்சிக்கு வாக் களிக்காது, அபேட்சகருக்கு அளிக்கப்படும் மூன்று வாக்குகளும் செல்லுபடியாகாது போய் விடும். அபேட்சகருக்கு வாக்களிக்காது ஒரு கட்சிக்கோ அல்லது ஒரு சுயேட்சை குழுவுக்கோ மாத்திரம் வாக்களித்தால் அது செல்லுபடியாகும். இந்த வாக்களிப்பு முறையின்படி ஒவ்வொரு அபேட்சகரும் தம்மால் இயன்ற வாக்கு களை தம் கட்சிக்கு பெற்று கொடுக்கின்றனர். இவ்வாறு கூடு தலான வாக்குகளை தங்கள் கட்சிக்கு பெற்றுக் கொடுக்கும் அபேட்சகர் பிரதிநிதியாக தெரிவு செய்யப்படாமல் போகும் ஆபத்தும் இத்தேர்தல் முறையினால் ஏற்பட வாய்ப்பு இருக் கின்றது!'' அது எப்படி என்று பார்ப்போம்.

ஒரு மாகாணச் சபைக்கு அளிக்கப்பட்ட மொத்த வாக்குகள் 100,000 எனக் கொள்வோம். இதில் பங்குபற்றிய கட்சிகளான ஏ,பீ,சி.முறையே 40,000, 30,000, 19,000 எனவும் சுயேட்சைக் குழுக்களான டீ, இ முறையே 8,000, 3.000 என்றும் வாக்குகளை பெற்றுக் கொண்டன. இவையனைத்தும் செல்லுபடியான வாக்குகள். அந்த மாவட்டத்தில் அங்கத்தவர் தொகை 20. மொத்தமாக கிடைத்த செல்லுபடியான வாக்குகள் 100,000. எனவே ஒரு அங்கத்தவர் எடுக்கவேண்டிய ஆகக் குறைந்த வாக்கு கள் (100,000-3000÷20) 4850 வாக்குகளாகும். இதன்படி ஏ எட்டு இடங்களையும், பீ ஆறு இடங்களையும், சீ நாலு இடங் களையும், டீ ஒரு இடத்தையும் பெறுகின்றன. இ, 4850க்கு குறைவாக [3000] பெற்றபடியால் ஒரு இடத்தையும் பெற வில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 10.1.2 தேர்தலும் விகிதாசார முறையும்

அனைவரின் வாக்கும் ஏதோ ஒரு வகையில் சட்டசபையில் பிரதிபலிக்கச் செய்ய வேண்டும் என்ற நோக்கில் இம்முறை அறிமுகப்படுத்தப்பட்டது. குறிப்பிட்ட தேர்தல் மாவட்டத்தில் ஒரு கட்சி அல்லது ஒரு குழு பெற்றுக்கொண்ட வாக்குகளின் விகிதத்திற்கு ஏற்ப ஆசனங்களை ஒதுக்கீடு செய்யும் முறையே விகிதாசார முறை எனப்படும். இம்முறையின்படி பெரும்பாலும் ஒவ்வொரு கட்சியும், சுயேட்சைக் குழுக்களும் ஆசனங்களைப் பெற முடியும் எனக் கூறப்படுகின்றது. ஜனநாயகம் நன்கு செயல்படுகிறதென்றும், சிறுபான்மை மக்கள் தம் வாக்குகளை பயன்படுத்தி பிரதிநிதிகளை தெரிவு செய்யமுடியுமென்றும் கூறப் படுகிறது. ஆனால் இந்த எதிர்பார்ப்புகளெல்லாம் எல்லா சந்தர்ப் பங்களிலும் சரியாக அமைவதில்லை. வெட்டுப்புள்ளி முறையின் கீழ் தேர்தலில் போட்டியிட்டு வாக்குகளைப் பெறும் கட்சி யொன்று ஒரு குறிப்பிட்ட விகிதத்திற்குமேல் வாக்குகளைப் பெற வேண்டும். பெரும்பான்மை கட்சியொன்றில் சேர்ந்து போட்டி யிடும் பட்சத்தில்தான் இந்த வெட்டுப்புள்ளி ஆபத்தை தவிர்த்துக் கொள்ளக்கூடியதாக இருக்கும் எல்பது ஒரு சிலரின் கணிப்பாகும் ஒரு சிறு பான்மை இனம் தனித்து போட்டியிடும் போதும், அதே சிறுபான்மை இனம் மற்றக்கட்சிகளோடு சேர்ந்திருக்கும் போதும், அதே சிறுபான்மை இனம் மற்றக் கட்சிகளோடு சேர்ந் திருக்கும் போதும் அவர்களின் அங்கத்தவர்களை தெரிவு செய்ய முடியாமற்போகும். உதாரணமாக, 1993ல் நடைபெற்ற மாகாண சபைத் தேர்தலில் சிறுபான்மை கட்சியான ஸ்ரீ. ல. மு. முன்னணி 2 அங்கத்தவர்களை மாத்திரம் தெரிவு செய்ததற்கானகாரணத்தை கூறலாம். அதேபோன்று ஒரு சிறுபான்மையினம், ஒரு பெரும் பான்மைக் கட்சியோடு சேர்ந்து போட்டியிடும் வேளையில் அதே சிறுபான்மை இனங்கள் மற்றைய கட்சிகளோடு சேர்ந்து போட்டி யிடும் போது அந்த சிறுபான்மையினரின் வாக்குகள் பிரிபடுவதால் அவர்களது பிரதிநிதிகள் எதிலும் தெரிவு செய்யப் படாமல் போகலாம். 1988ம் ஆண்டு நடைபெற்ற மாகாணசபை தேர்தலில் இரத்தினபுரி கேகாலை மாவட்டங்களில் ஒரு மலைய கத் தமிழ் பிரதி நிதி வீதம் தெரிவு செய்யப்பட்டார்கள். ஆனால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

199¹ம் ஆண்டு நடைபெற்ற மாகாண சபைத் தேர்தலில் ஒருவர் கூட தெரிவு செய்யப்படாமல் போனது இதற்கு ஓர் எடுத்துக் காட்டாக அமைகிறது.

மாகாண சபைத் தேர்தல் கொண்டுவரப்பட்டதன் நோக்கமும், விகிதாசார முறை புகுத்தப்பட்டதும் சிறுபான்மை மக்கள் அல்லது சிறு கட்சிகளின் அங்கத்தவர் தெரிவு செய்யப்பட வேண்டும் என்ற நோக்கத்தினாலாகும். ஆனால் இது பெரும்பாலும் நோக்கத்திற்கிசைய அமையவில்லை. ஆகவே இவ்விகிதாசார முறை மறு பரிசீலனை செய்யப்பட வேண்டும். சிறுபான்மை மக்கள் உண்மையாகவே பிரதிநித்துவப்பட வேண்டும் என்றால் ஒவ்வொரு மாவட்டத்திலுமுள்ள சிறுபான்மையினரின் வாக்குப்பட்டியலிலிருந்து அவர்களின் தொகையை கணித்து, அந்த பகுதியிலுள்ள பெரும்பான்மை இனத்தவர்களின் தொகையையும் கணித்து அந்த விகிதத்திற்கு ஏற்ப பிரதிநித்துவப்படுத்த வேண்டும். இதைத்தான் சோல்பரி கமிஷனும், அதற்குப்பின் வந்த தொகுதி நிர்ணயக் கமிஷனும் சிபாரிசு செய்தன.

அச்சமயத்தில் சிறுபான்மையோரது நலன்களை பாதுகாக்கவென அமைச்சர் சபை முன்வைத்த மகஜரில் அடங்கிய சில ஷரத்துக்கள் வருமாறு:

— மாகாண அடிப்படையில் பிரதிநிதிகள் தொகையை கணிப்பது.

— 40,000 மக்களுக்கு அல்லது 100 சதுர கிலோ மீட்டர்களுக்கு ஒரு ஆசனம்.

— ஒவ்வொரு மாகாணத்திலுமுள்ள தேர்தல் மாவட்டங்களில் தெரிவு செய்யப்படுவோர் தொகை இயன்ற அளவு சமமாக இருந்தால், அதே வேளையில் போக்கு வரத்து வசதிகளுக்கு ஏற்பவும், இலங்கை புவியமைப்புக்கு ஏற்பவும், இன அல்லது மக்கள நலன்கள் வேறுபடுவதற்கேற்பவும் உடன்பட்ட கோட்பாட்டினை மாற்றியமைக்க வசதி.

— தொகுதிகளை பிரித்தெடுக்கும் பொறுப்பு, ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட மூவர் கொண்ட தொகுதி நிர்ணயக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கமிஷனிடம் ஒப்படைக்கப்பட்டது. இந்த மகஜருள் அடங்கிய யோசனைகளின்படி, வட-கிழக்கு மாகாணங்களில் 16 ஆசனங்களுக்கு இடமளிக்கின்றது. ஆனால் சனத் தொகை அடிப்படையில் 8 ஆசனங்களுக்கு மட்டுமே இடமிருந்தது.

ஆனால் இந்த யோசனைகள் நடைமுறைப்படுத்தப்படவில்லை. மாறாக சிறுபான்மையினரதும், முக்கியமாக மலையகத்தில் பெரும் பான்மை வாக்குகளை கொண்டிருந்த தோட்டத் தொழிலாளர் வாக்குகளும் பெரும் பான்மையினத்தவர்களின் கட்சியின் வெற்றிக்காக பயன்படுத்தப்பட்டன. இது தவிர சிறுபான்மையினருக்கு நன்மை பயக்கும் சிபாரிசுகள் யோசனைகள் எதுவும் கொடுக்கப்படவில்லை என்பதே உண்மையாகும்.

## 10·2 மாகாண சபைத் தேர்தல் 1988

முதல் மாகாண சபைத் தேர்தல் 1988ல் ஏப்ரல் 28ம் திகதி தொடங்கி ஜுன் 2ம் திகதி வரை நடைபெற்றது. இந்த தேர்தலின் போது பயம், பகிஸ்கரிப்பு, வன் செயல்கள், கொலைகள் மிகவும் அதிகமாக இருந்தன. அதிகார பூர்வ கணக்கின்படி இத் தேர்தலின்போது 22 அபேட்சகர்கள் கொலை செய்யப் பட்டனர். இதில் ஸ்ரீ. ல. சு. கட்சி, ந. ச. ச. கட்சி, த. ஐ. வி. கூட்டணி, த. ஈ. வி. புலிகள் ஆகியன. போட்டியிடவில்லை. இந்த கட்சிகள் தேர்தலை பகிஷ்கரிக்கும்படி பிரச்சாரம் செய்தன. இத் தேர்தலில் ஐ. தே கட்சி, ஐ. சோ. கூட்டணி, ஸ்ரீ. ல. ம ஐ. கட்சி; லி. கட்சி, சுயேட்சை குழுக்கள் ஆகியன போட்டியிட்டன. ல. ச, ச. க, கொ. க, ஐ. சோ. கூ சேர்ந்து ஒன்றாகவும், ஐ. தே. க வுடன் இ. தொ. காசேர்ந்து ஒரு கூட்டாகவும் போட்டியிட்டன. மற்ற மலையக கட்சிகள், தொழிற்சங்கங்கள் ஐ. சோ. கூட்டணிக்கு ஆதரவு தந்தன. இந்த தேர்தல் வடகிழக்கு மாகாணங்களில் நடைபெறவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அட்டவணை — 10.1, மாகாணங்களுக்கு ஒதுக்கப்பட்ட ஆசனங்கள்[5]**

| மாகாணம் | மாவட்டங்கள் |
|---|---|
| மேல்மாகாணம் 104 | கொழும்பு 43, கம்பஹா 36, கழுத்துறை 23 |
| மத்திய மாகாணம் 58 | கண்டி 28, மாத்தளை 11, நுவரேலியா 17 |
| தென்மாகாணம் 55 | காலி 22, மாத்தறை 17, அம்பாந்தோட்டை 14 |
| வடமேல் மாகாணம் 52 | குருநாகல் 35, புத்தளம் 15 |
| வடமத்திய மாகாணம் 33 | அனுராதபுரம் 21, பொலன்னறுவை 10 |
| ஊவா மாகாணம் 34 | பதுளை 19, மொனராகலை 13 |
| சப்ரகமுவ மாகாணம் 44 | இரத்தினபுரி 23, கேகாலை 19 |
| கிழக்கு மாகாணம் 37 | மட்டக்களப்பு 11, அம்பாறை 14, திரிகோணமலை 10 |
| வடக்கு மாகாணம் 38 | யாழ்ப்பாணம் 19, மன்னார் 05, வவுனியா 04, முல்லைத்தீவு 05, கிளிநொச்சி 03 |

ஒவ்வொரு மாகாணத்திற்கும் ஊக்குவிப்பு ஆசனம் (Bonus) கூட்டப்பட்டிருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 10.3 தேர்தல் முடிவுகள்

இத்தேர்தலில் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் வாக்கெடுப்பு நடைபெறாத படியால் மற்ற ஏழு மாகாணங்களிலும் ஐ. தே. க. வெற்றி பெற்றது. அதே வேளையில் ஐ. சோ. மு.மேல் மாகாணத்திலும், சப்ரகமுவ மாகாணத்திலும் 30 வீதத்திற்கு மேற்பட்ட வாக்குகளை பெற்றது. 14 போனஸ் ஆசனங்களும் ஐ. தே. கட்சிக்கே கிடைத்தது.

### அட்டவணை-10.2 மாகாண சபைத் தேர்தல் 1988[6]

கட்சிகள் பெற்ற ஆசனங்களின் விபரம்

| மாகாணங்கள் | ஐ.தே.க. | ஐ.சோ.க. | ஸ்ரீ.ல மு.க, | வி.க. | சுயேட்சை |
|---|---|---|---|---|---|
| மேற்கு | 52+2 | 42 | 6 | 2 | — |
| மத்திய | 35+2 | 18 | 3 | — | — |
| தெற்கு | 36+2 | 15 | — | — | 2 |
| ஊவா | 18+2 | 13 | 1 | — | — |
| சப்ரகமுவ | 22+2 | 20 | — | — | — |
| வட மத்திய | 19+2 | 12 | — | — | — |
| வட மேற்கு | 29+2 | 19 | 2 | — | — |
| முழுத் தொகை | 211+14 | 139 | 12 | 2 | 2 |

இத் தேர்தலில் மலையக மக்களின் பிரதிநிதியாக 17 அங்கத்தினர் தெரிவு செய்யப்பட்டனர். அதை கீழ் வரும் அட்டவணையில் கண்டு கொள்க.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அட்டவணை—10.3. மாகாணத் தேர்தலில் மலையக மக்களின் பிரதிநிதித்துவம்-1988

### கட்சிகளும் அங்கத்தினர் தொகையும்

| மாகாணங்கள் | இ.தொ.க. | இ.தே.தோ.தெ. | ம.ம.மு | தோ.தொ.ச. | செ.ச | ஐ.சோ.கூ. |
|---|---|---|---|---|---|---|
| மத்திய மாகாணம் | 5 | 1 | 2 | 1 | 1 | — |
| ஊவா மாகாணம் | 2 | 1 | — | — | — | — |
| மேல் மாகாணம் | 2 | — | — | — | — | — |
| சப்ரகமுவ மாகாணம் | 1 | — | — | — | — | 1 |
| மொத்தம் | 10 | 2 | 2 | 1 | 1 | 1 |

இவர்களில் மூன்று பேர் மாகாண சபை மந்திரி பதவி பெற்றனர். ஊவா மாகாணத்தில் எம். சுப்பையாவும், மத்திய மாகாணத்தில் ராமநாதன் தொண்டமானும், மேல் மாகாணத்தில் செல்லச்சாமியுமே இம்மூவராவர், இத்தேர்தலின் பின் மலையக மக்களைப் பொறுத்தவரை தெரிவு செய்யப்பட்ட அங்கத்தினரோ, மந்திரி பதவி பெற்றவர்களோ எவ்வித செயற்பாட்டிலும் இறங்க வில்லை. இத்தேர்தலில் மலையகமக்களின் நிலைப்பாட்டை கவனிக்கும் போது அவர்களுக்கு கொடுக்கப்பட்ட வாக்குரிமை வெறுமனே வாக்களிக்கவே என்பது புலனாகிறது. தோட்டங்கள் தேசிய மயமாக்கப்பட்டு 13 வருடங்களாகியும் பெருந்தோட்டத்துறை இன்னமும் தனி நிர்வாகமாகவே இயங்குகிறது. தேசிய அமைப்பு முறையின் கீழ் அதன் நிர்வாகம் இன்னமும் கொண்டுவரப்படவில்லை. இத் தோட்ட தொழிலாளர் நாட்டின் துரித வளர்ச்சிக்கு பெறுமதியான அன்னியச் செலாவணியை பெற்றுக் கொடுத்தும். அவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடிப்படை தேவைகள், உரிமைகள் எதுவும் பெற முடியாத நிலையிலேயே உள்ளனர். மேல் மாகாணத்தில் வாழும் மக்கள் போதிய வசதியுடனும், சலுகைகளுடனும் வாழ்வதற்காகவே இவர்கள் தங்கள் இரத்தத்தை சிந்தி உழைப்பது போன்று கருத வேண்டியுள்ளது. காரணம் மற்ற மக்களுக்கு இயற்றப் படும் எந்த திட்டமோ, சலுகைகளோ இவர்களுக்கு மறுக்கப் பட்டே வந்திருக்கிறது. இவர்கள் தமது உரிமைகளை பெற தனியான ஒரு இலாகா அமைக்கப்பட்டுள்ளது, உதாரணமாக சம்பள உயர்வு சபை போன்றது. ஆனால் இதன் மூலமாக தோட்டத் தொழிலாளர் எதிர் பார்த்த நன்மை எதுவும் ஏனையோரைப் போல் கிடைப்பதில்லை என்பதுதான் உண்மை. இவற்றிலிருந்து நாம் அறிவது என்ன வென்றால், தோட்ட தொழிலாளர்களின் வாக்கு ஆளும் கட்சி தங்கள் நிலையை ஸ்திரப்படுத்த அவசியம் தேவை. ஆனால் வாக்களிக்கும் அவர்கள் எவ்வித சலுகையையோ, உரிமையையோ எதிர்பார்க்க கூடாது. அவர்கள் மத்தியில் இருந்து தெரிந்தெடுக்கப்படும் அவர்கள் பிரதிநிதிகளான தமிழ் வேட்பாளர்களும் இம்மக்கள் ஆதரவு தேடி அவர்களை நாடும் போது அவர்களுக்கு எதுவும் செய்ய முடியாது தங்கள் கைகளை விரித்துவிடுகிறார்கள். ஆனாலும் தேர்ந்தெடுக்கப்பட்ட அங்கத்தவர்களுக்கு அரசிடமிருந்து கிடைக் கும் சலுகைகள் அவர்களுக்கு முறையாக வந்து கிடைத்து விடு கின்றன. இதுதான் இந்த அரசால் தோட்ட தொழிலாளர் களின் நலம் கருதி ஏற்படுத்தப்பட்ட தேர்தல் முறைகளாலும், அவர்களின் நன்மைக்காக தேர்தலில் போட்டியிட்டு தெரிவு செய்யப்பட்ட அங்கத்தவர்களாலும் இந்த அப்பாவி தோட்டத் தொழிலாளர்கள் பெறும் நன்மைகள்!

## 10.4 மாகாண சபைத் தேர்தல் - 1993

இந்த மாகாண சபைத் தேர்தலுக்கு 1993ம் ஆண்டு மார்ச் மாதம் 18ம் திகதி நியமனங்கள் கோரப்பட்டன. ஆனால் வட கிழக்கு மாகாணங்களில் மாகாண சபைத் தேர்தல் நடைபெற வில்லை. 1993ம் ஆண்டு மே மாதத்தில் நடைபெற்ற இத் தேர்தலுக்கு மொத்தம் 94 நியமனப் பத்திரங்கள் பெறப்பட்டன. அவற்றில் ஒன்று நிராகரிக்கப்பட்டு 93 நியமனப் பத்திரங்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டன. ஒன்பது அரசியற் கட்சிகளிலும், 10 சுயேட்சைக் குழுக்களிலிருந்தும் 2351 வேட்பாளர்கள் தேர்தலில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போட்டியிட்டனர். அங்கீகாரம் பெற்ற அரசியற் கட்சி களிலிருந்து 2063 வேட்பாளரும், சுயேட்சைக் குழுக்களிலிருந்து 228 வேட்பாளரும் இத்தேர்தலில் போட்டியிட்டனர். இவர்களுள் 380 பேர் மாகாண சபைக்கு தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

இரண்டு பிரதான அரசியற் பிரமுகர்களின் படுகொலைக்குப் பின் இத்தேர்தல் நடைபெற்றுள்ளது. இத்தேர்தலுக்குப் பின்னும் முன்னும் பயங்கரவாதம் தலைதூக்காவிட்டாலும் கூட அந் நிலையை எதிர் பார்த்து அதனால் ஏற்பட்ட பீதியுணர்வு மக்கள் மத்தியில் நிலவவே செய்தது. முதல் மாகாண சபைத் தேர்தலை எதிர்த்தவர்கள் கூட இத்தேர்தலில் போட்டியிட்டனர். ஆனால் தமிழர் கட்சிகள் எதுவும் இத்தேர்தலில் போட்டியிடவில்லை. அநேக கட்சிகள் கூட்டுச் சேர்ந்து போட்டியிட்டதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

— ஐ. தே. க.வுடன், இ. தொ. கா.

— பொ. ஜ. ஐ. முன்னணி என்ற கூட்டில் ஸ்ரீ. ல. சு. க, ஐ. தொ ச, ஸ்ரீ. ல. மு. கா.

— ஜ. ஐ. தே. மு., ஐ. தொ. கா, தொ. தே. ச., ந. ச. ச. க,

இதை விட 10 சுயட்சை குழுக்கள் தனித்தனியாக இத் தேர்தலில் போட்டியிட்டன.

### 10.4.1 மலையக மக்களின் பங்களிப்பு

#### 10.4.1.1. நுவரெலியா மாவட்டம்

இம்மாவட்டத்தில் மாகாண சபைக்கான மொத்தம் 17 இடங்கள். இங்கு போட்டியிட்ட 160 வேட்பாளர்களுள் மலையகத் தமிழர் 102, முஸ்லீம் 6, சிங்களவர் 52. இந்த மாவட்டத்தில் மலையகத் தமிழர் சார்பில் பத்து வேட்பாளர்கள் வெற்றி பெற்றுள்ளார்கள். இ. தொ. கா, ஐ. தே. க, கூட்டு இணைப்பில் போட்டியிட்டதில் ஏழு பேரும், இ. தே. தோ. தொ. ச. (ஐ.தே.க. சார்பில் ஒருவரும், சுயேச்சையாக ஒருவரும், தொ. தே. ச, சார்பில் ஒருவரும் இதில் அடங்குவர். இந்த மாவட்டத்தில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுப்பையா சதாசிவம் அதிகபட்ச வாக்குகளைப் பெற்றுள்ளார். இவர்கள் பெற்ற விருப்பு வாக்குகளின் விபரம் வருமாறு :

**அட்டவணை 10.4- மாகாண சபை அங்கத்தவர்கள்- நுவரெலியா**

| | | | |
|---|---|---|---|
| 01. | சுப்பையா சாதசிவம் | - | 42,082 |
| 02. | சுப்பையா அழகன் சந்தசாமி | - | 41,670 |
| 03. | சிக்கன் வெள்ளையன் | - | 23,755 |
| 04. | செங்கமலை ரங்கநாதன் | - | 23,684 |
| 05. | முத்துசாமி நடராஜா | - | 21,901 |
| 06. | சந்தனம் அருள்சாமி | - | 20,261 |
| 07. | வீரசாமி விமலன் | - | 19,545 |
| 08. | வடிவேல் புத்திரசிகாமணி | - | 20,870 |
| 09. | சந்திரசேகரன் பெ. | - | 12,278 |
| 10. | தவசி ஐயாதுரை | - | 4,262 |

### 10.4.1.2 பதுளை மாவட்டம்

இந்த மாவட்டத்தில் 11 ஆசனங்கள் ஒதுக்கப்பட்டன. ஐ. தே. க, யுடன் இணைந்து, இ. தொ. கா. 13 இடங்களில் போட்டியிட்டது. வெற்றி பெற்ற தமிழர்களில் மூவர் இ. தொ. கா. வைச் சேர்ந்தவர்கள், ஒருவர் இ. தே. தோ, தொ. ச. த்தைச் சேர்ந்தவர். 1988ம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் இங்கு மூன்று அங்கத்தவர்களே தெரிவாகினர். இந்த நால்வரும் பெற்ற விருப்பு வாக்குகளின் விபரம் வருமாறு;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அட்டவணை-10.5 மாகாண சபை அங்கத்தவர்கள்-பதுளை**

| | | | |
|---|---|---|---|
| 01. | எம். சச்சிதானந்தன் | — | 32,108 |
| 02. | எம். சுப்பையா | — | 22,905 |
| 03. | சிவம் லோகநாதன் | — | 17,411 |
| 04. | கே. வேலாயுதம் | — | 24,845 |

### 10.4.1.3 கண்டி மாவட்டம்

இந்த மாவட்டத்திற்கு 28 ஆசனங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. ஐ. தே. க, யுடன் இணைந்து போட்டியிட்ட, இ. தொ. கா. வேட்பாளர்கள் மூவருமே வெற்றி பெற்றுள்ளனர். ஏனைய கட்சிகளுடன் இணைந்து போட்டியிட்ட தமிழர்கள் எவரும் வெற்றி பெறவில்லை, வெற்றி பெற்ற மூன்று வேட்பாளர்களும் பெற்ற விருப்பு வாக்குகளின் விபரம் வருமாறு.

**அவட்டவணை-10.6 மாகாணசபை அங்கத்தவர்கள் கண்டி**

| | | | |
|---|---|---|---|
| 01. | அண்ணாமலை கதிரேசன் | — | 25,549 |
| 02. | சிவசாமி ராஜரத்தினம் | — | 22,346 |
| 03. | ராமசாமி தங்கவேல் | — | 22,144 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 10.4.1.4 மாத்தளை மாவட்டம்

இந்த மாவட்டத்தில் 06 தமிழர்கள் பல்வேறு கட்சிகளின் சார்பில் போட்டியிட்டனர், ஐ. தே. க. யுடன் இணைந்து போட்டியிட்ட இ. தொ. க. வைச் சார்ந்த ஒரு வேட்பாளர் வெற்றியீட்டுள்ளார், கடந்த தேர்தலில் இங்கு ஒருவர்தானும் வெற்றி பெற்றிருக்கவில்லை, வெற்றிபெற்ற எஸ். கந்தையா பெற்ற விருப்பு வாக்குகளின் எண்ணிக்கை - 17,527 ஆகும்.

### 10.4.1.5 கொழும்பு மாவட்டம்

ஐ. தே. க.யுடன் இணைந்து போட்டியிட்ட இ. தொ. கா, வைச் சேர்ந்த மூன்று வேட்பாளர்களில் இருவர் மட்டுமே வெற்றி பெற்றுள்ளனர், ஏனைய கட்சிகளுடனும், சுயேச்சையாகவும் போட்டியிட்ட தமிழ் வேட்பாளர்கள் எவரும் வெற்றி பெற முடியவில்லை. இந்த இருவரும் பெற்ற விருப்பு வாக்குகள் வருமாறு,

01. இலங்கரத்தின மெனிக்கா வேலம்மா-செல்லசாமி - 32,360
02. ராமையா யோகராஜன் - 20,224

### 10.4.1.6 இரத்தினபுரி மாவட்டம்

இம்மாவட்டத்தில் 0.6 தமிழர்களும், 0.4 முஸ்லிம்களுமாக மொத்தம் 10 வேட்பாளர்கள் 4 கட்சிகளின் சார்பாக போட்டியிட்டனர், ஆயினும் எவரும் வெற்றி பெற முடியவில்லை. இ,தொ. கா, சார்பில் ஐ. தே. க, யுடன் இணைந்து போட்டியிட்ட ஏ. எம். டி. இராஜன் 14,300 வாக்குகளைப் பெற்றுக்கொண்டார். போனஸ் ஆசனத்தின் மூலம் இவர் பிரதிநிதித்துவம் பெறுகின்றார். இந்த 10 வேட்பாளர்களினதும் மொத்த வாக்குகளை கணக்கிடும்போது இந்த மாவட்டத்தில் ஒன்று அல்லது இரண்டு அங்கத்தவர்களை தெரிவு செய்யும் வாய்ப்பு உள்ளது என்பது தெளிவாகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேகாலை, இரத்தினபுரி, களுத்துறை ஆகிய மாவட்டங்களில் போட்டியிட்டும் தமிழ் வேட்பாளர்களால் வெற்றி பெற முடிய வில்லை. கம்பஹா, மொனராகலை மாவட்டங்களில் தமிழர்களின் சார்பாக ஒரு வேட்பாளரும் போட்டியில் கலந்துக் கொள்ள வில்லை.

இத் தேர்தலில் மலையகத் தமிழர் சார்பில் 21 அங்கத்தவர்கள் தெரிவு செய்யப்பட்டனர். இந்த 7 மாகாணங்களிலும் நடை பெற்ற தேர்தலில் ஐ. தே. கட்சியே முன்னிலையில் இருந்து 14 போனஸ் (வெகுமதி) ஆசனங்களையும் பெற்றுக் கொண்டது,

அட்டவணை-10 7 மாகாண சபைத்தேர்தலில்—1993

| மாவட்டம் | இ.தொ.கா. ஐதே.கா. | ஐ.தே.க — இ.தே தோ தொ.ச | தொ.தே. ச. | ம.மக்கள் முன்னனி |
|---|---|---|---|---|
| நுவரெலியா | 07 | 01 | 01 | 01 |
| பதுளை | 03 | 01 | | |
| கண்டி | 03 | | | |
| மாத்தளை | 01 | | | |
| இரத்தினபுரி | போனஸ் 1 | | | |
| கொழும்பு | 02 | | | |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 10.4.2 தேர்தல் வாக்குறுதிகள் - ஆய்வு

கட்சிகளாலும், சுயேட்சைக் குழுக்களாலும் தேர்தலுக்குமுன் கொடுக்கப்பட்ட வாக்குறுதிகள்.

— தோட்டங்களை மீண்டும் அரசுடைமையாக்குவோம்.

— தொழிலாளர்களின் வீடுகளையும், அவற்றை சுற்றியுள்ள காணிகளையும் அவர்களுக்கே சொந்தமாக்குவோம்.

— தொழிலாளர் குடியிருப்பிற்கு மின்சாரம் வழங்குவோம்.

— மாதச்சம்பளம் வழங்க வழிவகுப்போம்.

— தோட்ட மருத்துவமனைகளை அரச மருத்துவமனைகளாக்குவோம்.

— ஆசிரியர் பற்றாக் குறையை நீக்குவோம்.

— தடுத்து வைக்கப்பட்டுள்ள இளைஞரை விடுதலை செய்வோம்.

— தோட்டங்களை கிராமங்களாக்குவோம்.

— அரசாங்கம் கொண்டுவந்துள்ள 502 தோட்டங்களுக்கான கைத்தொழில் திட்டங்களை செயற்படுத்துவோம்.

— தோட்டப்புற வீடுகளை நவீனப்படுத்துவோம்.

— வடகிழக்குப் பிரச்சினைக்கான சமாதானத் திட்டத்தை வலியுறுத்துவோம்.

வாக்குறுதிகள் கொடுக்கப்படும் போது அவைகள் நடைமுறைப்படுத்தக் கூடியனவா என்பதை அவதானிக்க வேண்டும். அப்போதுதான் மக்களின் நம்பிக்கைக்கு பாத்திரமாக முடியும். அதுமட்டுமன்று, மாகாணசபையில் மலையக மக்களுக்கு பூரணமாக பங்குண்டு என்ற நிலையை அதிகாரிகளுடன் கலந்து ஸ்திரப் படுத்திக் கொள்வது மிகவும் அவசியம். இந்நிலையை ஏற்படுத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாது கொடுக்கும் வாக்குறுதிகள் அனைத்தும் சமுத்திரத்தில் வீழ்ந்த நீர்த்துளிபோல் காணாமல் போய்விடும். ஆகவே செயல் படுத்தக்கூடிய வாக்குறுதிகளை மாத்திரம் மக்கள் முன் வைப்பது தான் சிறந்தது.

நடந்து முடிந்த மாகாண சபைத்தேர்தலை, மாகாண சபைத் தேர்தல் எனக் கூறுவதைவிட இதனை ஒரு அபிப்பிராய வாக் கெடுப்பாகவும், இடைத்தேர்தலாகவும் கருதுவது பொருத்த மானதாகும். இத்தேர்தல் தரும் பாடங்கள், நடைபெறவிருக்கும் ஜனாதிபதித் தேர்தல் (நவம்பர்-1994) பொதுத் தேர்தல் (1995)? ஆகியவற்றிற்கான பரிசோதனைக் கணமாகவே அமைந்தது.

குறிப்பாக தபால் மூலமான வாக்குகளும், மத்தியதர வகுப்பு வாக்குகளும் ஐ.தே.க. மீது நம்பிக்கை இன்மையை காட்டு கின்றன. சிந்தனைச் தெளிவுள்ள இவ்வாக்காளரின் அதிருப்திக்கு அதிகரித்துவரும் வாழ்க்கை செலவு மட்டுமே காரணமல்ல. நீண்ட காலமாக செயல்பட்டு வரும் அரசாங்கத்தின் தலைமைத்துவ குறைகளுக்கான அவர்களது எதிர்ப்பைக் காட்டியுள்ளனர் என் றும் கருதலாம். தபால் மூலம் அளிக்கப்பட்ட வாக்குகளின் நிராகரிக்கப்பட்ட வாக்குகளின் எண்ணிக்கையை பார்க்குமிடத் தில் பெரும்பாலானோர் தேர்தலில் ஏற்பட்டிருக்கும் வெறுப் புணர்வையே காட்டியுள்ளனர் என்பது தெளிவாகிறது. கிராம அளவில் ஐ.தே.க பரந்த அளவில் வாக்குகளை பெற்றிருந்தது. பெரும்பாலும் தமிழ் பேசும் மக்களின் வாக்குபலமும் கிடைத் திருந்தது. குறிப்பாக மத்திய, ஊவா, சப்பிரகமுவ மாகாணங் களில் ஐ. தே. க. ஈட்டிய வெற்றிக்கு இ. தொ. கா. பெரும் பங் காற்றியுள்ளது. ஆகவே மலையக மக்களில் தனித்துவத்தை உணர்ந்து அவர்களது அபிலாசைகளை நிறைவேற்ற ஐ. தே. க. தயக்கம் காட்டக்கூடாது. தமிழ் மக்கள் இக்கட்சிக்கு கொடுத் துள்ள பெரும் ஆதரவு இந்நாட்டை ஆட்டிப் படைக்கும் இப் பிரச்சினைக்கு நல்லதோர் தீர்வு கிடைக்கும் என்ற நம்பிக்கையை பிரதிபலிப்பதாக அமைகிறது.

ஸ்ரீ.ல.சு க. தனது உள் பிரச்சினைகளின் காரணமாக நிலை குலைகின்றது என்ற கருத்தை இத்தேர்தல் முடிவுகள் வலு விழக்கச் செய்துள்ளன. இனவாதக் கொள்கையால் மலையக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்களின் ஆதரவை இவர்களால் பெறமுடியவில்லை என்ற கருத்தும் பரவலாக உள்ளது.

ந. ச. ச. க எல்லா மாவட்டங்களிலும் போட்டியிட்டிருந்தும் ஓரே ஒரு ஆசனத்தைத்தான் பெற முடிந்தது. இ அவர்களோ அவர்களது கொள்கைகளோ மக்கள் மத்தியில் பிரபலமாகாமையையே எடுத்துக் காட்டுகிறது.

ஸ்ரீ. ல. மு, கா. இரண்டு இடங்களை பெற்றுள்ளது. இவர்களும் பல கட்சிகளாகவும், சுயேட்சை குழுக்களாகவும் பிரிந்து போட்டியிட்டதாலேயே, வாக்குகள் சிதறிப் போக, செல்வாக்கிழந்து, தோல்வியைத் தழுவவேண்டியதாயிற்று.

### 10.4.3 மலையக மக்களின் எதிர்பார்ப்பு

மலையக மக்களைப் பொருத்த மட்டில், இத்தேர்தல் அநேக பாடங்களை கற்றுத்தந்துள்ளது. முதன் முறையாக 167 பேர் இத்தேர்தலில் போட்டிபிட்டுள்ளனர். மலையக மக்கள் செறிந்து வாழும் நுவரேலியா மாவட்டத்தில் ஒதுக்கப்பட்ட 17 ஆசனங்களுக்காக 102 பேர் போட்டியிட்டனர். இவர்களில் வெற்றி பெற்றவர்களின் தொகை 10 ஆகும். மலையக தமிழ் வாக்காளர்களின் தொகை 158,000 ஆகும். இத்தொகையை வேட்பாளர் எண்ணிக்கையால் வகுத்தால் ஒரு வேட்பாளருக்கு 1550 வாக்குகள்தான் கிடைக்கும்.

கூடுதலான வேட்பாளர் பிரவேசம் மலையகத் தமிழர்களின் வாக்குகளை கூறுபோடும் செயலாக இருந்தாலும் மறுபிறத்தில் மலையக மக்களின் அரசியல் ஆர்வத்தினை எடுத்துக்காட்டுவதாக அமைகிறது என்றும் பொருள் கொள்ளலாம் அநேகமானோர் விளம்பரம் தேடியும் இத்தேர்தல் களத்தில் குதித்துள்ளனர். இத்தனை வேட்பாளர் மத்தியில் 10 பேரை தெரிவு செய்ய முடிந்தது உண்மையில் வாக்காளர் புரிந்த சாதனை என்று தான் கூற வேண்டும்.

கடந்த (1988) மாகாண சபைத் தேர்தலின் போது ஆளும் கட்சி வரிசையில் 14 பேரும், எதிர்கட்சி வரிசையில் மூன்று பேருமாக மொத்தம் 17 மலையக தமிழ் அங்கத்தினர் இடம் பெற்றிருந்தனர். இதில் 2 வெகுமதி ஆசனங்களாகும். இம்முறை நடந்த தேர்தலில் 01 வெகுமதி ஆசனத்துடன் மொத்தம் 21

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேர் தெரிவாகி உள்ளனர். முறையே ஆளும் கட்சியில் 18 பேரும், எதிர் கட்சியில் 3 பேரும் இடம் பெற்றிருந்தனர்.

மேல் மாகாணத்தில் இரண்டுபேர் ஆளும் கட்சியில் இடம் பெற்றுள்ளனர். இதில் ஒரே ஒரு பெண்மணிதான் மலையக பெண்களை பிரதிநித்துவப் படுத்துகின்றார். அநேக தொழிற் சங்கங்கள் பல கட்சிகளோடு சேர்ந்து போட்டியிட்டிருக்கின்றனர். ஒரு மாவட்டத்தில் மாத்திரம் மலையக தொழிற்சங்க வட்டாரத்தில் மூன்றாவது சக்தியாக வளர்ந்துள்ள பெருந்தோட்ட தொழிற் சங்க கூட்டு கமிட்டியை அரசியல் துறையில் வளர்த்தெடுப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட போதும் கூட்டுக் கமிட்டியில் அங்கம் வகிக்கின்ற தொழிற் சங்கங்களின் முரண்பாடுகள் காரணமாக அம்முயற்சி வெற்றி பெறவில்லை கூட்டுக் கமிட்டியை அடிப்படையாக கொண்டு இடது சாரி கட்சியொன்றை அமைப்பதற்கான பேச்சு வார்த்தைகள் நடைபெற்ற போதும் அதுவும் பலனளிக்கவில்லை. ஆயினும் கூட்டு கமிட்டியில் அங்கம் வகிக்கும் தொழிற்சங்கங்கள், விவசாய தோட்டத் தொழிலாளர் காங்கிரஸ் தலைமையில் ஒன்றிணைந்து சுயேட்சைக் குழுவாக பதுளை மாவட்டத்தில் போட்டியிட்டு தோல்வியுற்றது.

களுத்துறை, இரத்தினபுரி, கேகாலை ஆகிய மூன்று மாவட்டங்களிலும் கணிசமான அளவில் தமிழ் வாக்காளர்கள் இருந்தும்கூட தமிழ் வேட்பாளர் எவரும் வெற்றி பெறவில்லை. தமிழ் மக்களின் வாக்குகள் சிதறிப் போனது தான் இதற்கான முக்கிய காரணம். இதில் எத்தனை தூரம் உண்மை இருக்கின்றதென்பதற்கு இரத்தினபுரி மாவட்ட தேர்தல் முடிவுகளை ஒரு உதாரணமாக எடுக்கலாம்.

முஸ்லிம் மக்கள் சார்பில் போட்டியிட்டவர்கள் எவரும் இவ்விடங்களில் வெற்றி பெறவில்லை. மேற்குறிப்பிட்ட மாவட்டங்களில் ஒரு குறிப்பிட்ட அளவில்தான் மலையக வாக்காளர் இருக்கின்றார்கள். இந்த வாக்குகள் அனைத்தையும் ஒன்று திரட்டினால் மலையக மக்களின் அரசியல் அரங்கில் உறுதியான ஒரு திருப்பத்தை காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அட்டவணை-10.8 இரத்தினபுரி மாவட்டம்[8]

| வேட்பாளர்கள் | கட்சிகள் | வாக்குகள் |
|---|---|---|
| ஏ. எம். டி. ராஜன்[1] | இ. தொ. கா | 14 300 |
| எம். எஸ். சிவலிங்கம் சதீஷ்குமார் | ஐ தே. க. | 10,713 |
| கந்தசாமி செல்வகுமாரன் | பொ. ஐ மு. | 2,119 |
| ஜெயராம் ரவிச்சந்திரன் | ஜ. த. தே க. | 776 |
| பொட்டு தங்கேஸ்வரன் | ந.ச. ச. க. | 313 |
| கருணாநிதி | .. | 278 |

### முடிவுரை

மகாண சபைத் தேர்தல்களில் மலையக வேட்பாளர்களின் எண்ணிக்கை அதிகரிப்பு ஒரு புறத்தில், தேர்தல் நடவடிக்கைகளில் மலையக மக்களின் ஆர்வமான ஈடுபாட்டை எடுத்துக்காட்டினா லும் மறுபுறத்தில் பின் வரும் அம்சங்களை நமது கவனத்திற்கு கொண்டு வருகிறது.

மலையக தமிழ் அமைப்புகள் தொழிற்சங்கரீதியாக தங்கள் பலத்தை பரீட்சிக்காமல் அரசியல் ரீதியாக ஒரு கூட்டுக்குழுவின் கீழ் செயற்படுவது வரவேற்கத்தக்க மாற்றம் மட்டுமல்ல அவசியமானதும் ஆகும். இந்த மாற்றம் வேட்பாளர் மத்தியில் மட்டுமல்ல வாக்காளர் மத்தியிலும் ஒரு பாரிய தாக்கத்தை ஏற்படுத்தும்.

1977ம் ஆண்டு மே மாதம் 15ம் திகதி டெவன் தோட்டத்தில் இடம் பெற்ற சம்பவத்தை நாம் மறந்து விடலாகாது. 1970ம்-1977ம் ஆண்டுக்கு இடைப்பட்ட காலகட்டத்தில் ஆட்சி பீடத்திலிருந்த அரசாங்கம் குடியேற்ற திட்டங்கள் என்ற போர்வையில் மலையகத் தோட்ட மக்களை வெளியேற்றி சிங்கள குடியேற்றங் களை அமுல் படுத்தி வந்தது. இதனால் மலையக மக்களின் எண்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ணிக்கை குறைந்தது. அது மட்டுமன்று மலையக தமிழ் மக்களின் வாக்குகளின் பலத்தை குறைக்கும் முயற்சிகளும் மேற்கொள்ளப் பட்டது, இதன் அடிப்படையில் நுவரேலியா மாவட்டத்தில் பிர தான சாலையோரமாகவுள்ள டெவன் தோட்டத் காணியில் 7000 ஏக்கர் காணியை பெரும்பான்மை மக்களுக்கு பகிர்ந்தளிக்க முயன் றனர். அதன் முதல் கட்டமாக தோட்டத்தில் பிரவேசித்த நில அளவையாளர்கள் தொழிலாளர்களால் திருப்பிஅனுப்பப்பட்டனர். மீண்டும் காவல் துறையினரது பாதுகாப்புடன் வந்த அளவை யாளர் துரத்தியடிக்கப்பட்டனர். இதில் ஈடுபட்ட "ஜொக்ஸ் போர்ட்" தோட்டத்தை சேர்ந்த சிவனு லட்சுமணன் என்ற இளைஞன் போலீசாரால் சுட்டு கொல்லப்பட்டார். இக்கொலை மலையக மக்கள் மத்தியில் பெரியதொரு தாக்கத்தை ஏற்படுத் தியது. மலையகத்தில் தொழிலாளர்கள், மாணவர்கள், ஆசிரியர் கள் என பலரும் ஒன்றுபட்ட மனதுடன் தொடர்ச்சியாக ஆர்ப் பாட்டம் நடத்தினர். இக்கூட்டுப் போராட்டங்கள் காரணமாக 7000 ஏக்கர் காணியை காலனியாக்கும் திட்டம் தோல்வியுற்றது.

அன்று ஒன்றுபட்ட போராட்டத்தால் பாதுகாக்கப்பட்ட வாக்கு பலத்தை, ஐக்கியத்தால் வென்று தேர்தலினால் நன்மை யடைய முடியாதிருப்பது எமது பலவீனமா அன்றேல் துரதிஷ் டமா? தொழிலாளர் அனைவரும் தொழிற் சங்க பிரிவினைகளை மறந்து நடத்திய போராட்டத்தின் பலனை சிவனு லட்சுமணன் சம்பவம் எமக்கு தெளிவு படுத்துகிறது. அதே போல் மலையகத் தமிழ் மக்கள் அனைவரும் மலையக மக்கள் என்ற ரீதியில் ஒன்று பட்டு ஒரு தனி அரசியற்கட்சியின் கீழ் கூடுவார்களேயானால் அரசியலில் அவர்களது வலிமையை வெளிப்படுத்த முடியும். தங்களது தனத்துவத்தையும் இழக்காமல், தொழிற்சங்கங்கள் ஒன்று சேர்ந்து ஒரு கூட்டு அமைப்பை ஏற்படுத்த வேண்டும். வருங்கால மலையக தமிழ் மக்களின் உறுதியான வாழ்விற்கு அஸ்தி வாரமிட வேண்டும் என்ற பரந்த சிந்தனையை மட்டும் மனதில் கொள்ள வேண்டும். இது போன்ற ஒரு மாற்றத்தை ஏற்படுத்தினாலன்றி மலையக மக்களின் சமூக அந்தஸ்து உயர முடியாது.

மலையக தொழிற் சங்கங்கள் பலப்பரீட்சையில் இறங்காது ஒரு கூட்டு அமைப்பின் கீழ் மாகாணசபைத்தேர்தலில் போட்டி யிட்டிருந்தால், குறைந்தது 40 அங்கத்தவர்களை பெற்றிருக்க முடி யும். காலந்தாழ்த்தாது இது பற்றி ஆழச்சிந்தித்து நடவடிக்கை எடுப்பது சம்பந்தப்பட்டவர்களின் தலையாய கடமையாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதினோறாம் அத்தியாயம்

## அரசியல் அமைப்பும் தேர்தல் முறைகளும்

இன்றைய உலகின் அதிகார பரவலாக்கள் என்ற கோட் பாட்டின் தந்தை மொன்டெஸ்கு என்பவராவார். இவர் நன் நோக்குடன் கொண்டு வந்த அதிகார பரவலாக்கல் முறை நடை முறையில் எதிர்பார்த்த நன்மையை கொண்டு வரவில்லை. இந்த முறையை நடைமுறைப்படுத்த முயற்சித்தபோது பல சிக்கல்கள் குறுக்கிட்டன. ஆசியாவில் இலங்கை பழமை வாய்ந்த ஜனநாயக நாடென்று பெயர் பெற்றிருந்தது. சர்வசன வாக்குரிமை முறை பிரிட்டனில் நடைமுறைக்கு வந்த மூன்று வருடத்தில் இலங்கையில் அமுல்படுத்தப்பட்டது. 1833 ம் ஆண்டு இலங்கை பிரிட்டிஷ் ஆட்சியின்கீழ் உட்பட்டதிலிருந்து பல அரசியலமைப்புகள் நாட்டின் நிர்வாகத்தில் புகுத்தப்பட்டன. இந்த அரசியல் யாப்புகளில் தேர்தல் சட்டமுறையும் முக்கிய இடத்தை பெற்றிருந்தது.

தேர்தல் சட்ட மென்பது ஒரு நாட்டின் சட்ட பூர்வமாக வரை யறுக்கப்பட்ட அமைப்பு, பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்படுவதை ஒழுங்குபடுத்தும் விதிகளின் தொகுப்பு, அல்லது கோவை எனலாம். அரசு முறைகளும், தேர்தல் முறைகளும், தேர்வாளர் தகமைகளும் நாட்டுக்கு நாடு வேறுபடுவதால் தேர்தல் பற்றிய சட்டங்களும் வேறுபட்டு நிற்பது இயல்பானது. பொதுவாக ஒரு நாட்டின் தேர்தல் சட்டம் பின்வரும் விடயங்களை தன்னுள் அடக்கியுள்ளது.

— அபேட்சகர் தகமை.

— வாக்காளர் பதிவு, பட்டியல் தயாரிப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

— நியமனப் பத்திரிகை தாக்கல் செய்யும் நடவடிக்கை

— தேர்தல் பிரச்சார விதிகள்

— வாக்களிப்பு நடவடிக்கை

— தேர்தல் முடிவு அறிவிப்பு

— தேர்தல் குற்றம், தண்டனைகள், விசாரணை முறைகள்

— தேர்தல் நிர்வாகம்

எமது நாட்டில் தோதல் சட்டம் என ஒன்று இல்லாமல் தேர்தல் சட்டம் உள்ளடக்கும் விடயம் யாவும் அரசியல் அமைப்பில் சேர்க்கப்பட்டுள்ளது. இந்த தேர்தல் சட்டங்களை உருவாக்கு வதற்கு நமது நாட்டின் பாராளுமன்றத்திற்கு அதிகாரம் வளங்கப் பட்டுள்ளது. நாட்டிற்கு நாடு தேர்தல் சட்டங்கள் மாறுபட்டிருந்த போதிலும் சர்வசன வாக்குரிமை, இரகசிய வாக்குரிமை போன்ற அம்சங்களை பல நாடுகளில் காணக் கூடியதாயுள்ளது. ஒரு நாட்டின் தேர்தல் முறை நன்நோக்கு அடிப்படையில், பகுத்தாய் வுடனான உண்மையான ஜனநாயக அரசை அமைப்பதற்கு மிக அவசியமானதும், அந்த அரசின் அடிப்படை அம்சமுமாகும். இதனால் ஜனநாயக நாடுகள் தமது தேர்தல் தொகுதிகளையும். தேர்தல் முறைகளையும் ஏற்படுத்தி நிர்வகிக்கும் நிலைப்பாட்டில் மிகவும் அக்கறை செலுத்துகின்றன. ஒரு நாட்டின் தேர்தல் முறை, அந்நாட்டில் வாழும் பல இனமக்கள், முக்கியமாக சிறுபான்மை யினர், பல சமயத்தை சேர்ந்தவர்கள் யாவரும் சமத்துவமாக வாழ வும், அவர்கள் அபிலாஷைகள் நிறைவேற்றப்படவும் நாட்டின் சமூக, பொருளாதார, அரசியல் அபிவிருத்திகளில் முக்கிய கவன மும் எடுக்கும் விதமாக அமைக்கப்படுகிறது. தேர்தல் சட்ட நிபுணர் கள் தேர்தல் சட்டங்களை உருவாக்கும்பொழுது அச்சட்டங்கள் ஜனநாயக கோட்பாடுகளின் பாதுகாப்பிற்கு துணைபுரியும் சாதன மாகவும், அந்நாட்டின் சகல மக்களுடைய விருப்பத்திற்கும் நியாய மான முறையில் உதவவும் மக்கள் யாவரும் அரசியலில் முழுமை யாக பங்கு பெறுவதற்கு வேண்டிய வழி வகைகளை உருவாக்கவும் ஏதுவாக அமைய வேண்டும்.

ஜனநாயக அரசுகளின் வரலாற்றை நோக்கும்போது நன் நோக் குடன் இயற்றப்பட்ட தேர்தல் சட்டங்கள் நிர்வாகத்தின் குறை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடு காரணமாகவும், அரசியல் வாதிகளின் சுயநலத்தின் காரண மாகவும் நடைமுறையைப் பொறுத்த மட்டில் அடக்குமுறை சட்டங் களாக மாறியுள்ளன. இதனால் ஜனநாயகமே அர்த்தமற்ற ஒரு சொல்லாக மாறிவிடுகிறது. உதாரணமாக 1982 ம் ஆண்டு இலங்கையில் தேர்தலுக்குப் பதிலாக மக்கள் தீர்ப்பு என்ற முறை அனுசரிக்கப்பட்டது. 1977ம் ஆண்டு பாகிஸ்தானில் நடைபெற்ற பொதுத்தேர்தலும், அதன்பின் கொண்டுவரப்பட்ட தேர்தல் ஊழல் குற்றச்சாட்டும், ராணுவம் ஆட்சியை கைப்பற்றியதும், பூட்டோ எவ்வித மனிதாபிமானமுமின்றி தூக்கிலிடப்பட்டதும் தேர்தல் சட்டம் முறை தவறி கையாளப்பட்டதற்கு ஒரு உதாரண மாகும். இனி இன்று நடைமுறையில் உள்ள ஒரு சில தேர்தல் சட்டங்களை ஆராய்வோம்.

## 11.2 அரசியல் அமைப்புகள்

இலங்கை அரசியல் அமைப்பு 1833 ம் ஆண்டு தொடங்கி 1978 ம் ஆண்டுவரை பல மாற்றங்களை கொண்டு வந்துள்ளது.

1833 - கோல்புறூக் அமைப்பு முறை

1910 - புதிய அமைப்பு முறை

1920 - மானிங் அமைப்பு முறை

1924 - புதிய அமைப்பு முறை

1931 - டொனமூர் அமைப்பு முறையும் சர்வசன வாக்கெடுப்பு முறையும்

1946 - சோல்பரி அரசு அமைப்பு

1948 - இலங்கை சுதந்திரம் அடைதல்

1972 - இலங்கை சோசலிச குடியரசு அரசியலமைப்பு

1978 - இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பு

இவற்றில் கடைசி அரசியலமைப்பைவிட மற்றெல்லா அமைப்பும் வெஸ்ட்மினிஸ்டர் முறையிலேயே அமைக்கப் பட்டிருந்தன.[1] ஆனால் கடைசி அரசியல் அமைப்பும் மற்றைய மேற்கத்திய நாட்டுமுறையிலேயே அமைக்கப்பட்டிருந்தது. உதாரணமாக, இங்கிலாந்து, அமெரிக்கா, பிரான்ஸ் நாடுகளின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசியல் அமைப்புகளின் ஒரு கலப்படமாக ஒரு சில மாற்றங்களோடு உருப்பெற்றிருந்தது. ஆனால் நமது நாட்டு மக்களின் நலனை கருத்தில் கொண்டு, தெற்காசிய நாடுகளில், முக்கியமாக, அண்டை நாடான இந்தியாவில் உள்ள அரசியல், தேர்தல் முறைகளை உள்ளடக்கியதாக அமையவில்லை. எனினும் 1931ம் ஆண்டுக்குப்பின் உருவாக்கப்பட்ட அரசியலமைப்பில் சிறுபான்மையினருடைய எண்ணங்களும், அபிலாஷைகளும் பிரதிபலிக்கப் படவில்லை. இதன் காரணமாக இன்று எமது நாடு 1970ம் ஆண்டு தொடக்கம் உள்நாட்டுப் போரின் காரணமாக நாட்டின் சமூக, பொருளாதார நிலை சீர் குலைந்துள்ளது. இதனாலேயே இன்று ஜனநாயகம் என்ற போர்வையில் உருவாக்கப்பட்ட அரசியலமைப்பும், அதில் உள்ளடக்கப்பட்ட தேர்தல் சட்டங்களும் நாட்டில் வாழும் பல இனமக்களின் தேவைக்கேற்ப அமையவில்லை.

1977ம் ஆண்டு ஆட்சிக்கு வந்த ஐக்கிய தேசிய கட்சி புதிய அரசியலமைப்பு முறையை கொண்டு வருவதற்கு முன்னரே, அன்றிருந்த அரசியலமைப்பில் இரண்டாவது திருத்த மசோதா மூலமாக தேசிய அரச சபையில் நிறைவேற்று அதிகாரங் கொண்ட ஜனாதிபதி முறையை 197/ம் ஆண்டு அக்டோபர் மாதம் 4ம் திகதியன்று புகுத்தியது. இச்சட்டத்தின் மூலம் தேர்தல் இல்லாமலேயே ஜே.ஆர். ஜயவர்த்தனா தன்னைத் தானே இலங்கையின் முதலாவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக பிரகடனம் செய்தார். இதன் பின்பு புதிய அரசியலமைப்பில் புதிய தேர்தல் சட்டங்களும் உருவாகின. இதுவரை காலமிருந்த வெஸ்ட் மினிஸ்டர் பாராளுமன்ற தேர்தல் முறை அகற்றப்பட்டு விகிதாசார பிரதிநித்துவமுறை அரசியலமைப்பில் 99ம் பிரிவு மூலம் அறிமுகப்படுத்தப்பட்டு நடைமுறைபடுத்தப்பட்டது.

## 11.3 தேர்தலும் வரையறை ஆணைக்குழுவும்

1931ம் ஆண்டு உருவாக்கப்பட்ட டொனமூர்யாப்பின்படி, தேர்தல் நடத்துவதெற்கென வரையறை ஆணைக்குழு ஒன்று நியமிக்கப்பட்டது. இக்குழு மூன்று அங்கத்தினரை கொண்டதாகவும், ஒரு தவிசாளரை அடக்கியதாகவும் இருக்கும். தேர்தல் தொகுதிகளை உருவாக்குவது, தேர்தல் சட்டங்களை நடைமுறைப்படுத்துவது, தேர்தல் தொகுதிகளை வரையறுப்பது, பல

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அட்டவணை-11 1 தேர்தல் தொகுதிகள் 1931-1980

| ஆண்டு | 3 அங்கத்தினர் | 2 அங்கத்தினர் | தொகுதிகள் | அங்கத்தினர் |
|---|---|---|---|---|
| 1931 | — | — | 50 | 50 |
| 1946 | மத்திய கொழும்பு | கடுகண்ணாவை<br>அம்பலாங்கொடை பலப்பிட்டிய<br>பதுளை<br>பலாங்கொடை | 89 + 6 | 95 + 6 |
| 1959 | மத்திய கொழும்பு | கொழும்பு தெற்கு<br>அக்குறண<br>மூதூர்<br>மட்டக் களப்பு | 139 + 6 | 145 + 6 |
| 1976[2] | மத்திய கொழும்பு<br>நுவரேலியா - மஸ்கெலியா | சேருவலை<br>ஹறிஸ் பத்துவ<br>மட்டக்களப்பு | 160 + 8 | 168 |
| 1980[3] | — | — | 22 | 196 + 29 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அங்கத்தவர் கொண்ட தொகுதிகளை உருவாக்குவது போன்ற பணிகளில் இந்த குழு ஈடுபடும். இக்குழு அங்கத்தினர் 1978ம் ஆண்டு யாப்பிற்கு முன்பு 10 வருடங்களுக்கொருமுறை புதிய தேர்தல் தொகுதிகளை நிர்மாணிக்கவும் அவற்றை மாற்றி யமைக்கவும் அதிகாரம் பெற்றிருந்தனர். புதிய அரசியலமைப்பு முறைப்படி தேர்தல் தொகுதிகளை 20க்கு குறையாமலும் 24க்கு மேற்படாமலும் தேர்தல் மாவட்டங்களை நிர்மாணிக்க இவர் களுக்கு அதிகாரமுண்டு. அட்டவணை 11.1 இதை விளக்க மாக தருவதை கவனிக்கலாம்.

### *11.3.1* பல அங்கத்தினர் கொண்ட தொகுதிகள்

சிறுபான்மை இனங்கள் தம் பிரதிநிதிகளை தெரிவு செய் வதற்கென பல அங்கத்தவர் கொண்ட தொகுதிகளை சோல்பரி கமிஷன் சிபாரிசு செய்தது. இதன் விளைவாக நான்கு இரட்டை அங்கத்தினர் தொகுதிகளும், ஒரு மூன்று அங்கத்தினர் தொகுதி யும் உருவாக்கப்பட்டன. ஆனால் தொகுதி நிர்ணயக் கமிஷன் எதிர்பார்த்தது நடைபெறவில்லை. உதாரணமாக பலாங் கொடை இரட்டை அங்கத்தினர் தொகுதியில் பெரும்பான்மை இனத்தை சேர்ந்த இரண்டு சிங்களவரே தெரிவு செய்யப்பட்டார் கள். தோட்டத் தமிழரது வாக்குரிமை பறிபோனபின் இரண்டு இரட்டை அங்கத்தினர் தொகுதிகளிலும் சிங்களவரே தெரிவு செய்யப்பட்டனர். இதனால் பாராளுமன்றத்தில் சிங்களப் பிரதி நிதிகள் தொகையே பெருகத் தொடங்கியது.

— 1976ல் பல அங்கத்தினர் தொகுதிகளில்[4] இலங்கை முஸ்லீம்களுக்கு ஆதரவாயிருந்தது. இதனால் ஐந்து பல அங்கத் தினர் கொண்ட தொகுதிகளில் 12 பேர்கள் தெரிவு செய்யப் பட்டபோது அவர்களில் 5 பேர்கள் முஸ்லீம்களாக இருந்தனர்.

— 1976ல் புதிய தேர்தல் தொகுதிகள் உருவாகியதன் மூல மாக பெரும்பான்மை சிங்களவருக்கே அது சாதகமாக அமைந்தது. உதாரணமாக, திருகோணமலையிலுள்ள சேருவிலை தேர்தல் தொகுதி பெரும்பான்மை மக்களுக்கெனவே உருவாக்கப்பட்டதை கவனிக்கலாம்.

— 1976ல் மூன்று அங்கத்தினரை கொண்ட நுவரேலியா-மஸ்கெலியா தேர்தல் தொகுதியில் இரண்டு மலையக தமிழ் அங்கத்தினர் தெரிவு செய்யப்பட வேண்டிய இடத்தில் ஒரு அங்கத்தினரே தெரிவு செய்யப்பட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

— 1980ல் நுவரேலியா மாவட்ட தேர்தல் தொகுதியில் இத்தனை காலமும் கண்டி மாவட்டத்தை சேர்ந்த ஹிங்குராங்கெத்தை பகுதியை இணைத்ததன் மூலமாக அங்கிருந்த தமிழ் மக்களின் பெரும்பான்மை எண்ணிக்கை குறைக்கப்பட்டு சிறுபான்மையாக இருந்த சிங்கள மக்களின் எண்ணிக்கை கூட்டப்பட்டது. இதுவும் தமிழ் மக்களின் பிரதிநித்துவத்தை குறைக்க திட்டமிட்டு செய்யப்பட்ட ஒரு செயல்.

## 11.4. விகிதாசார முறை

இந்த முறையானது 1792ம் ஆண்டு அலெக்சான்டர் ஹமில்டனால் உருவாக்கப்பட்டது. இதை ஹமில்டன் முறை அல்லது ஆகக்கூடிய எஞ்சிய தேறுவர் தொகை என்றும் கூறுவர். இந்த முறை முதன் முதலாக ஐரோப்பா நாடுகளிலேயே அமுலாக்கப்பட்டது.

டென்மார்க் — 1855 ம் ஆண்டு
சுவிஸ் கன்டோன்ஸ் — 1891ம் ஆண்டு
பெல்ஜியம் — 1899ம் ஆண்டு[5]

இந்த முறை தேசிய அரசியலில் சிறுபான்மையினரின் பிரதிநிதித்துவம் இடம்பெற வழி செய்தது. ஐக்கிய தேசிய கட்சி 5/6 பெரும்பான்மையை பெற்று அரசாங்கத்தை அமைத்த போது தனது நிலையை தொடர்ந்தும் ஸ்திரத்தன்மையுடன் தக்கவைத்துக் கொள்வதற்காக தனக்கு கிடைத்த 5/6 பெரும்பான்மை மூலமாக 1978ம் ஆண்டு இலங்கை ஜனநாயக சோசலிஷ குடியரசு அரசியலமைபில் இந்த விகிதசம முறையை ஏற்படுத்தியது. ஹமில்டன் முறையுடன் ஒப்பிடும் போது இதில் பல மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளதை அவதானிக்க முடிகிறது. ஒரு குழுவுக்கு அல்லது கட்சிக்கு அளிக்கப்பட்ட வாக்குகளின் விகிதாசாரத்திற்கு ஏற்ப ஆசனங்கள் ஒதுக்கப்படும். இந்த விகிதாசார முறையின் சட்டதிட்டங்கள் நாட்டுக்கு நாடு வேறுபடுகின்றது. சில நாடுகளில் பட்டியல் முறை அமுல் படுத்தப்படுகின்றது. இந்த முறையின்படி பல அங்கத்தவர்கள் அல்லாத உறுப்பினர்களைத் தெரிவு செய்யும் தேர்தல் மாவட்டங்கள் அமைக்கப்படுகின்றன. தேர்தலில் ஒவ்வொரு கட்சியும் பெறும் வாக்குகளின் விகிதத்திற்கேற்ப பட்டியலில் இருந்து பிரதிநிதிகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெரிவு செய்யப்படுவார்கள். இந்த முறையில் தெரிவு செய்யப்படும் வேட்பாளர் யாராக இருக்கக்கூடும் என்று வாக்காளரால் யூகிக்க முடியாதிருக்கிறது. விகித சம தேர்தல் முறையில் மேற்குறிப்பிட்ட பட்டியல் முறையைவிட தனிமாற்று வாக்கு முறை என்ற முறையும் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. அவுஸ்திரேலிய அரசியலமைப்பில் இந்த முறைக் காணப்படுகிறது. இம்முறையில் வாக்காளர் தம் விருப்ப ஒழுங்கிற்கமைய மூவருக்கு வாக்களிக்கலாம்.

பிரெஞ்சு அமைப்பில் 1917, 1927 வரையிலான காலப்பகுதியில் காணப்பட்ட விகித சம முறையில் குறுக்கு-வாக்களிப்பு முறை அனுமதிக்கப்பட்டிருந்தது. போட்டியிடும் அரசியல் கட்சிகளால் முன் வைக்கப்படும் வேட்பாளர் பட்டியல்களிலிருந்து தமக்கு விருப்பமான வேட்பாளரை தெரிவு செய்யும்படி வாக்காளர்கள் பணிக்கப்பட்டனர். கட்சி பட்டியல் முறை இல்லாமலும் விகிதாசார முறையை நடைமுறைப்படுத்தலாம். எடுத்துக்காட்டாக டென்மார்க் நாட்டில் உள்ள தேர்தல் முறையை கூறலாம். இங்கு மூன்று மட்டங்களில் வாக்களிப்பு நடைபெறும். முதலாவதாக நியமன மட்டத்தில் நடைபெறும். இங்கே வாக்காளர் மாவட்டத்தின் தனிப்பட்ட வேட்பாளரை தெரிவு செய்வர், இரண்டாவதாக தேர்தல் தொகுதி அடிப்படையிலும் மூன்றாவதாக மாகாண அடிப்படையிலும் நடைபெறும். இவற்றையெல்லாம் விட வேறு சில முறைகளும் பல நாடுகளில் அமுல்படுத்தப்பட்டு வருகின்றன. அதாவது; கோட்டா முறை, சராசரி பெரும்பான்மை முறை, எஞ்சிய பெரும்பான்மை முறை போன்ற முறைகளைக் கூறலாம்.

இந்த அனைத்து முறைகளும் ஒரே நோக்கை கொண்டிருப்பினும் ஒரு சில முறைகள் சில பெரிய கட்சிகளுக்கும், மற்றும் சில சிறிய கட்சிகளுக்கும் ஆதரவாக உள்ளன.

— ஹமில்டன் முறை அல்லது ஆகக்கூடிய எஞ்சிய தேறுனர் தொகை முறையில் கூடிய பிரதிநிதித்துவத்தை ஒரு குறிப்பிட்ட நிலைக்கு குறைக்கப்படுவதால் இது சிறிய கட்சிகளுக்கு விரும்பக்கூடிய ஒரு முறையாக கருதப்படுகின்றது[6]

— டி 'ஹென்ட் முறை அல்லது சராசரி பெரும்பான்மை முறை பெரிய கட்சிகளுக்கு அனுகூலமாக உள்ளது. கூடிய பிரதிநிதித்துவத்தை குறைப்பதற்கு பதிலாக கட்சிகள் மேலதிக பிரதிநிதித்துவத்தை அதிகரிக்கும் விதமாக உள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

— ஜெப்பர்சன் முறை இம்முறையில் முதல் வட்ட ஆசன ஒதுக்கீட்டின் பின் ஒரு குறிப்பிட்ட கட்சி கொண்டுள்ள ஆசனங்களின் எண்ணிக்கையின் மீதே மேலதிக ஆசனங்களை ஒதுக்குவது தங்கியுள்ளது, இந்த முறை பெரிய அரசியல் கட்சிகளுக்கு சில நன்மைகளை அளித்தாலும் சிறிய கட்சிகளுக்கான வாய்ப்பை அடைத்து விடாது.

## 11.4.1 இலங்கையில் ஹமில்டன் முறை

இலங்கையில் நடைமுறைப்படுத்தப்படும் விகிதாசார முறையானது பட்டியல் முறை வாக்களிப்பு இணைக்கப்பட்ட ஹமில்டன் முறையாகும். எப்படியாயிலும் இந்த முறை அதன் கலப்பற்ற தன்மையுடன் இங்கு அமுல்படுத்தப்படுவதில்லை. யாப்பு ரீதியான 3 கட்ட மாற்றங்கள் தேர்தல் முறையில் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

— தேர்தல் மாவட்டங்களை வரையறுக்கவும் பாராளுமன்றத்திற்கு தெரிவு செய்யப்படும் அங்கத்தவர் தொகையை தீர்மானிக்கவும் வழி செய்கின்றது.

— அங்கத்தவர் பட்டியலை தயாரித்தலும் வாக்களிப்பு முறையும்.

— வாக்குகளை ஆசனங்களாக மாற்றும் முறை இலங்கையில் மாறுபட்ட பண்புகளையுடைய மூன்று முறைகள் விகித சம முறையின் கீழ் மூன்று வெவ்வேறான் தேர்தல்களில் கடைபிடிக்கப்படுகின்றன.

— உள்ளூராட்சி தேர்தல்
— மாகாணச் சபைத் தேர்தல்
— பாராளுமன்றத் தேர்தல்
— ஜனாதிபதித் தேர்தல்

## 11.4.2 வெட்டுப் புள்ளி முறை

இந்த முறையின்படி ஒரு கட்சி அல்லது குழு தேர்தலில் அங்கத்தவர்களை தெரிவதற்கு ஆகக்குறைந்தது 1/8 அல்லது 12½ வீதமான வாக்குகளை பெற்றிருக்க வேண்டும். (அரசியலமைப்பு 99-5A, 5B) இந்தச் சட்டம் பின்பு மாற்றப்பட்டு வெட்டுப்புள்ளி 5 வீதமாக்கப்பட்டது. ஒவ்வொரு தேர்தல் மாவட்டத்திற்கும் பின்வரும் அடிப்படையில் ஆசனங்கள் ஒதுக்கப்படும். பாராளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை தப்போது 225 ஆகும். மாவட்டங்களிலிருந்து வாக்காளர் தொகைக்கேற்ப தெரிவு செய்யப்பட வேண்டிய தொகை 160 ஆகும். மாகாணத்திற்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4 அங்கத்தவர் என்ற அடிப்படையில் 36 அங்கத்தவர் தெரிவு செய்யப்படுவர். இதனை மாகாணங்களிலுள்ள மாவட்டங்களுக்கு பிரித்துக் கொடுக்கப்படும். தேசிய பட்டியல் என்ற அடிப்படையில் நியமிக்கப்பட்டவர்கள் 29 ஆகும். உறுப்பினர்களை பிரித்து ஒதுக்குவதும், பிரதிநிதிளைத் தெரிவு செய்வதும் கணித முறையில் அமைந்துள்ளதேயன்றி தனிப்பட்ட ஒரு நபரின் அல்லது ஒரு ஆணைக் குழுவின் விருப்பத்திற்கு நடப்பதில்லை.

## 11.5. ஆசனங்கள் தெரிவு செய்யும் முறை

பாராளுமன்றத்தேர்தலில் ஒரு குறிப்பிட்ட தேர்தல் மாவட்டத்திற்கு, மாவட்டரீதியாகவும், மாகாணரீதியாகவும் ஆசனங்கள் ஒதுக்கப்படுகின்றன. இதை விட தேசிய பட்டியல் ரீதியில் ஒரு கட்சியோ அல்லது சுயேட்சை குழுவோ பெற்றுக் கொண்ட மொத்த வாக்குகளின் விகிதத்திற்கு ஏற்ப ஆசனங்களை ஒதுக்கீடு செய்வதே விகிதாசார முறையாகும். இந்த முறையின்படி பொதுத் தேர்தலுக்கு 225 ஆசனங்கள் ஒதுக்கப்படுகின்றன. இது வரையறை ஆணைக்குழுவின் செயலாகும். அவையாவன:

— இலங்கை முழுவதும் மாவட்ட அடிப்படையில் 160 உறுப்பினர்களை தெரிவு செய்யும் - இது ஒவ்வொரு மாவட்டத்திலுமுள்ள பதிவு செய்யப்பட்ட வாக்காளரின் தொகைக்கேற்ப வித்தியாசப்படும். ஆனால் ஒவ்வொரு மாவட்டத்திலும் 5க்கும் குறையாத ஆசனங்கள் கிடைக்குமாறு பார்த்துக் கொள்ள வேண்டும்.

— இலங்கையிலுள்ள 9 மாகாணங்களுக்கும், சரி சமமாக ஒரு மாகாணத்திற்கு 4 அங்கத்தவர் வீதம், 36 ஆசனங்கள் ஒதுக்கீடு செய்யப்படுகின்றன. வரையறை ஆணைக்குழு அவ்வாறு ஒவ்வொன்றிக்கும் உரித்தாயுள்ள எண்ணிக்கையை அத்தகைய தேர்தல் மாவட்டங்களுக்கிடையே ஒப்புரவான முறையில் பங்கீடு செய்யும்.

— தேசிய பட்டியல் மூலம் 29 பேர் தெரிவு செய்யப்படுவார்கள். ஒரு கட்சிக்கோ அல்லது சுயேட்சை குழுவிற்கோ முழு இலங்கையிலும் வாக்களிக்கப்பட்ட தொகையிலிருந்து இந்த விகிதாசார முறையின் கீழ் ஆசனங்கள் ஒதுக்கீடு செய்யப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

— ஒவ்வொரு மாவட்டத்திற்கும் அங்கத்தினர்களை தேர்தல் வரையறை ஆணைக்குழு அந்தமாவட்டத்தில் பதிவு செய்யப் பட்ட வாக்காளர் தொகைக் கேற்ப அங்கத்தவர் எண்ணிக் கையை நிர்ணயிக்கும். இந்த எண்ணிக்கையுடன் மூவரை சேர்த்து கட்சியோ குழுவோ வேட்பு மனுக்களை தாக்கல் செய்யும்.

## 11.5.1 கணித முறை

— தகைமை பெறும் தொகை (Qualifying number) யானது எல்லா மாவட்டத்திலும் தேறுநர் இடாப்பில் பெற்ற எண்ணிக்கையை 160 ஆல் வகுக்கக் கிடைக்கும் முழு ''எண்'' ஆகும்; உதாரணம்; 1993ம் ஆண்டு தேர்தல் இடாப்பில் பதியப் பட்ட முழு வாக்காளர் தொகை 50 இலட்சம் என எடுத்துக் கொண்டால் ஒரு அங்கத்தவர் தெரிவு செய்யப்பட வேண்டிய தகைமை பெறும் தொகையானது

தகைமை பெறும் தொகை $\frac{5,000,000}{160} = 31,250$

— இயையான வாக்குத் தொகை (Relevant number of votes) வெட்டுப்புள்ளி முறையின் கீழ் எந்தவொரு கட்சியோ குழுவோ ஒரு மாவட்டத்தில் 5 விழுக்காடுக்கு குறைந்த வாக்குகளைப் பெறுமாயின் இந்த வாக்குகள் ஏனைய கட்சிகள், குழுக்கள் பெற்ற மொத்த வாக்குகளிலிருந்து கழிக்கப்பட வேண்டும். உதாரணம்;இரத்தின புரிமாவட்டத்தில் கட்சி ஏ.பி.சீ. பெற்ற வாக்குகள் 350,000, ஆகும் சுயேட்சை குழு 1,2.கட்சிடீ பெற்ற மொத்த வாக்குகள் 10,000,

∴இயையான வாக்குத் தொகை= 350, 000-10, 000-340, 000.

— வினைத் தொகை (Resultant Number). இயையான வாக்குத் தொகையை அந்த மாவட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட ஆசனங் களில் ஒன்றை கழித்து, வகுக்கும் பொழுது கிடைக்கும் பெறு பேறே வினைத்தொகையாகும். ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஆகக்கூடிய வாக்குகளை பெறும் கட்சிக்கோ,குழுவிற்கோ, ஒரு ஊக்குவிப்பு (Bonus) ஆசனம் வழங்கப்படும். உதாரணம்; இரத்தினபுரி மாவட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட ஆசனங்களின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொகை 10. இந்த மாவட்டத்திற்கு கிடைத்த இயையான வாக்குத்தொகை 340,000, இதன்படி வினைத் தொகை-

$$\frac{340,000}{10-1} = 37,778.$$

இந்த வினைத் தொகையினால் ஒவ்வொரு கட்சியும் பெற்ற வாக்குகளை வகுக்கும் பொழுது வரும் பெறுபேறே அங்கத்தவர் தொகையாகும். இந்த உதாரணங்கள் கீழே விழக்கமாக தரப்பட்டிருப்பதை கவனிக்கவும்.

## அட்டவணை-11 2 அங்கத்தவர் தெரிவு முறை

| கட்சி/ குழு | கிடைத்த வாக்குகள் | ஊக்கு விப்பு ஆசனம் | தெரிவு செய்யப் பட்ட அங்கத்த வர் | எஞ்சிய தொகை | மேலதிக அங் கத்த வர் | மொத் தம் |
|---|---|---|---|---|---|---|
| ஏ | 170,000 | 01 | $\frac{170,000}{37,778} = 4$ | 18,889 | | 05 |
| பீ | 95,000 | | $\frac{95,000}{37,778} = 2$ | 19,440 | 01 | 03 |
| சீ | 76,000 | | $\frac{76,000}{37,778} = 2$ | 444 | | 02 |

மொத்தமாக இரத்னபுரி மாவட்டத்திற்கு 10 அங்கத்தவர்கள் இதனடிப்படையில் தெரிவுசெய்யப்டுவர்.

### முடிவுரை

இந்த விகிதாசார முறையின் கீழ் கணக்கிடும் முறையிலும்நாட்டிற்கு நாடு வித்தியாசம் இருக்கின்றது. எமது நாட்டில் நடக்கும் ஏனைய தேர்தல்களிலும் இதே கணித முறையே கையாளப்படுகின்றது.இது ஒரு புது முறை என்றபடியால் மக்கள் இன்னும் சரியாக புரிந்து கொள்ள வில்லை.ஏனெனில் இது ஒரு சிக்கலான முறை என்பதால் 'கம்யூட்டர்' உதவியுடனேயே இதனை செய்யும் நிலையில் உள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பன்னிரண்டாம் அத்தியாயம்

# இலங்கை ஒரு தேர்தல் நாடு

''ஒரு நாட்டில் எத்தனை தடவை தேர்தல் நடைபெறுகிற தென்பது அந்த நாட்டின் ஜனநாயகத் தன்மையை எடுத்துக் காட்டு கிறது,'' என்று மறைந்த ஜனாதிபதி பிரேமதாச டாக்காவில் நடந்த சார்க் மகாநாட்டில் கூறினார். 'இலங்கை ஒரு வாழும் ஜன நாயகத்தை கொண்டுள்ள நாடு. அது சுதந்திரம் பெற்றதன் பின், இன்று வரை பல தேர்தல்களை கண்டுள்ளது'' என்றும் அதே ஜனாதிபதி பிரேமதாசதான் கூறினார். அவரே சிலாகித்து குறிப் பிட்ட அந்த ஜனநாயக அமைப்பினால் அவரது உயிரைக் காப் பாற்ற முடியாமல் போய்விட்டது. முதலாவதும் இரண்டாவதும் உலகப்போர்களுக்கு இடைப்பட்ட காலத்தில் மக்களாட்சிக்கு எதி ரான கருத்துக்கள் வலுப்பெறத் தொடங்கின. வலிமையுடை யோன் செய்வதே சரியென கருதிய ஹிட்லர், மூசலோனி போன் றோர் துப்பாக்கி ஓசையை பூபாளமாகவும், மரண ஒலிகளை மங்கல ஓசையாகவும் ரசித்தனர். இரண்டாம் உலகப்போர் முடிந்த கால கட்டத்தில் பல ஆசிய, ஆபிரிக்க நாடுகள் சுதந்திரம் பெற்று மக்களாட்சியை பின்பற்ற எத்தனித்தன. அந்த வேளையில் இலங் கையும் சுதந்திரம் பெற்று அதே மக்களாட்சிமுறையை பின்பற்றி யது. ஆனால் பெயரளவில் மக்களாட்சி என்று சொன்ன போதும் நடைமுறையில் கையாளப்படுவது மறைமுக மக்களாட்சி முறையே, அதாவது பிரதிநித்துவ மக்களாட்சி என்ற இந்த முறையில் தேர் தலில் வாக்களிக்கும் ஒரு உரிமை தவிர மற்றைய செயற் பாடுகளில் மக்கள் நேரடியாக பங்கு பெறும் வாய்ப்புகள் அவர்களுக்கு கிடைப் பதில்லை. 1970ம் ஆண்டுமுதல் இந்நிலை வலுப்பெற்று இன்று வரை இந்த மறைமுக மக்களாட்சி, ஜனநாயகம் என்ற போர்வை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யில் மக்களுடைய எண்ணங்களை. அபிலாஷைகளை பிரதிபலிக்க விடாமல், ஆளும் கட்சியினருடைய அதிகாரத்தையே முழுமையாக வளர்த்து வந்துள்ளது. எனவே இன்று தேர்தல் என்று ஒன்று வரும்போது இங்கு மக்கள் எதிர்பார்ப்பது வன்செயல்கள், கொலைகள், குண்டுவெடிப்புகள், பீதி, ஊரடங்குச்சட்டம், அவசரகாலச் சட்டம், விசாரணையின்றி கைது, காலவரையரையற்ற தடுப்பு காவல், வேலையிழப்பு, நாட்டின் பொருளாதார பின்னடைவு, போன்ற இன்னும் பல துர்ப்பாக்கிய விளைவுகள். இதனால் அன்று ஹிட்லர், முசலோனி போன்றோர் கூறிய, வலிமையுடையோன் செய்வதே சரியென்ற கூற்று இன்று நம்மத்தியில் நடைமுறைப் படுத்தப்படுவதை நாம் தெளிவாக காணமுடிகிறது.

## 12.1 அரசியல்வாதிகள் தொழிற்சாலை

நமது நாட்டின் தேர்தல் முறைப்பற்றி நமது இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பில் கூறப்பட்டுள்ளது. கடந்த 17 வருடங்களாக அதிகாரத்தில் இருந்தவர்கள் பல்வேறு தேர்தல்களை தங்களுக்கு சாதகமாக ஏற்படுத்தியிருந்தார்கள். இச் சிறிய நாட்டில், இச்சிறிய சனத்தொகையுடன் நாலுதேர்தல்கள் நடைபெறுகின்றன. அவையாவன: ஜனாதிபதித் தேர்தல், பாராளுமன்றத் தேர்தல், மாகாண சபைத் தேர்தல், உள்ளூராட்சித் தேர்தல். இந்த உள்ளூராட்சித் தேர்தல் மாநகரசபை தேர்தல், நகர சபைத்தேர்தல், பிரதேசசபைத்தேர்தல் என்றுமூன்றுபிரிவாக நடைபெறுவதால் உண்மையில் கூறப்போனால் நமது நாட்டில் எல்லாமாகா ஆறு தேர்தல்கள் நடைபெறுகின்றன. இத்தேர்தல்கள் மூலமாகநமது நாட்டில் அரசியல் வாதிகளை உருவாக்கும் ஒரு தொழிற்சாலை அமைக்கப்பட்டுள்ளதென்று கூறலாம். இன்னும் சற்று தெளிவாக கூறப்போனால் இத் ''தொழிற்சாலை'' உருவாக்கும் மந்திரிமாரால், அங்கத்தினரால் நாட்டிற்கு வருவாய்க்கு பதிலாக செலவே முக்கிய அம்சமாக விளங்குகிறது. அதுமட்டுமல்லாது நடைமுறையில் நாம் காணக்கிடக்கும் இன்னும் பல தீய விளைவுகளை கவனத்தில் கொள்ள வேண்டும். உதாரணமாக நாட்டில் ஆண் ஆதிக்க சமுதாயம், தேவையற்ற கட்டுப்பாடுகள், வன்செயல்கள், கொலைகள், பணமோசடி, வாரிசு வளர்ச்சி, குருதிச் சலுகை (Nepotism), குடும்பச்சண்டை, கட்சிப்பூசல் முதலிய மலிந்து வந்துள்ளன. இவைகளையெல்லாம் மக்களுக்கு வாரி வளங்கமக்களின் வரிப்பணமே உபயோகப் படுகிற தென்பதை கவனிக்கும் போதுதான் நாம் எங்கே போய் கொண்

டிருக்கிறோம் என்பது புரியாமலிருக்கிறது. நமது நாட்டில் நடைபெறும் தேர்தல்களும், தெரிவு செய்யப்படும் அங்கத்தினர் பற்றிய ஒரு சிறு கண்ணோட்டம்.

## அட்டவணை 12.1 அங்கத்தவர் தொகை[1]

| | சபைகள் | தொகை | அங்கத்தினர் தொகை |
|---|---|---|---|
| 1 | பிரதேச சபைகள் | 259 | 3768 |
| 2 | நகர சபைகள் | 39 | 346 |
| 3 | மாநகர சபைகள் | 12 | 233 |
| 4 | மாகாண சபைகள் | 9 | 437 |
| 5 | பாராளுமன்ற தேர்தல் மாவட்டங்கள் | 22 | 225 |
| 6 | ஜனாதிபதி தேர்தல் | 1 | |
| | மொத்தம் | 342 | 5010 |

எமது இச்சிறிய நாட்டை, அதுவும் பொருளாதாரத்தில் தன்னிறைவு காணாத நாட்டை முன்னேற்றப்பாதைக்கு இட்டுச் செல்வதற்கு இத்தனை தேர்தல்களும், அங்கத்தினர்களும் தேவைதானா? நட்டத்தில் நடைபெறும் இந்த அரசியல் அங்கத்தினரை 'உற்பத்தி செய்யும்' இந்த தொழிற்சாலையின் தன்மை பற்றி நாம் இன்னும் ஊன்றி ஆராய்ந்தால், நமது பாராளுமன்றத்தில் 1993ம் ஆண்டு 91 அமைச்சர்கள் இடம் பெற்றிருந்தனர். இவர்கள் முறையே ராஜாங்க மந்திரி, மந்திரிசபை, திட்டமிடல் மந்திரி, கரு அமைச்சு (subject Minister) என்ற நான்கு பிரிவிலும் பதவி வகித்த மந்திரிகளாவர். இவர்களுக்கு செலவிடப்பட்ட பணம் ஒருவருடத்தில் 4,777,000,000/ரூபாவாகும்[2]. இத்தொகையை கவனிக்கும்போது நாட்டின் கல்வி, சுகாதாரம், சமூக முன்னேற்ற திட்டங்களுக்கு செலவிடும் தொகையைவிட எவ்வளவோ அதிகம் என்பது குறிப்பிடத்தக்கது. அத்துடன் நமது நாடு 1988ம் ஆண்டு தொடங்கி 1993ம் ஆண்டு வரையிலான 6 வருடகால இடைவெளியில் நாட்டின் 5 பேர் கொண்ட ஒவ்வொரு குடும்பமும் தலா 25,000 ரூபா வெளிநாட்டில் பெற்ற கடனுக்காக வட்டியும் முதலும் கட்டி வந்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துள்ளனர். இதற்காக 100 பில்லியன் (ரூபா 100, 000, 000, 000) ரூபா பணம் கொடுக்கப்பட்டுள்ளது.[3] நமது நாட்டின் நிலையை மற்றைய அண்டைய நாடுகளான இந்தியா பாகிஸ்தானுடன் ஒப்பிட்டு பார்ப்போம்.

## அட்டவணை 12.2 அண்மை நாடுகளின் அங்கத்தவர்

| நாடுகள் | அமைச்சர்கள் | அங்கத்திவர் | சனத்தொகை |
|---|---|---|---|
| இந்தியா | 53 | 540 | 911,000,000 |
| பாகிஸ்தான் | 16 | 217 | 126,000,000 |
| இலங்கை | 91 | 225 | 17,000,000 |

இந்த அட்டவணையை கவனிக்கும்போது நமது நாட்டிற்கு இத்தனை அமைச்சர்கள், அங்கத்தினர் தேவைதானா என்ற கேள்வி எழுபுகிறது! அத்துடன் இந்நிலை யாரால் உருவாக்கப்பட்டது? இது பற்றி நம்மில் யாராவது பொறுப்புடன் சிந்தித்து செயலாற்ற முன் வந்துள்ளோமா? என்ற சிந்தனையும் எழும்புகிறது.

## 12.2 இலங்கை அரசியலின் கின்னஸ் சாதனை

1. நமது நாடு கூடிய தொகையான அமைச்சர்களை கொண்ட நாடு.

2. இடைக்கால கபினற் அமைச்சர்களை பெருந்தொகையாக கொண்ட நாடு.

3. பெருந்தொகையான சந்தர்ப்பவாத அரசியற்கட்சி தாவல்களை கொண்ட நாடு.

4. ஜனநாயகம் என்ற பெயரில், தேர்தலுக்கு பதிலாக மக்கள் தீர்ப்பு என்ற போர்வையில் பாராளுமன்றத்தை 6 வருடங்கள் நீடித்த சாதனையை கொண்ட நாடு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. தேர்ந்தெடுக்கப்பட்ட அங்கத்தினர், தம் மனச்சாட்சியை விலை கூறும் விதமாக, திகதியிடப்படாத ராஜினாமாக் கடிதங்களை தமது தலைவருக்கு சமர்ப்பித்த பின்பும், தொடர்ந்து நாடாளுமன்ற அங்கத்தினராக நீடித்து மக்களை நீதியோடும், நேர்மையோடும், வாய்மையோடும் வழிநடத்துவதாக உலகுக்கு காட்டும் சாதனை.

6. தமது தலைவர்களுக்கு எதிராக கொடுக்கப்பட்ட பத்திரத்தை வாசிக்காமலேயே கைச்சாத்திட்டபின், அதையிட்டு பிற்காலத்தில் வருந்தும் அரசயல்வாதிகளை கொண்ட நாடு.

7. ஒரு அங்கத்தினர் 5 வருடம் பாராளுமன்றத்தில் இருந்து விட்டால் சாகும்வரை ஓய்வூதியமும், மற்றும் சலுகைகளும், ஒருவர் ஜனாதிபதியாக ஒருவருடம் தானும் இருந்து விட்டால் அவர் சாகும்வரை ஓய்வூதியத்துடன் இன்னும் பல உயர்நிலை கவனிப்புகள். பொருளாதாரத்தில் மிகவும் பின்தங்கிய நமதுநாட்டிற்கு இவையாவும் சுமைகளே தவிர எவ்வித பொருளாதார பங்களிப்புமல்ல என்பது கண்கூடு.

8. நமது நாடே உலகில் 91 மந்திரிமாரும் பதவியில் இருந்து கொண்டே புதிய தேர்தலை சந்தித்துக்கொண்டு மக்களின் உரிமைகளை காக்கவும், நாட்டின் அமைதியை காக்கவும் அமைக்கப்பட்ட காவலர்கள் என்று கூறும் நாடு.

9. நமது நாட்டில்தான் பாராளுமன்றம் கலைக்கப்படுவதற்கு ஒரு சில நாட்களுக்குமுன் புதிய மந்திரியை நியமிக்கும் சாதனையை காண முடியும்.

10. நமது நாட்டில்தான் ஆளும் கட்சியினர் அரசியல்யாப்பை பின்பற்றாமல் தங்களுக்கு சாதகமான முறையில் தேர்தலை முன் அல்லது பினபோடுவலதக் காண முடியும்.

11. மக்கள் நன்மையை கருதாமல், ஆளும் கட சியின் நன்மைக்காக மட்டுப 16 வருடங்களில் 17 அரசியல் யாப்பு திருத்தங்களை கொண்டு வந்த சாதனையும் நமது நாட்டிற்கே சொந்தமானது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

12- தேர்தலுக்கு முன்னும் பின்னும் கூடுதலான அரசியல் கொலைகளும் இடம் பெற்ற நாடு.

13. ஒவ்வொரு தேர்தல் முடிவிலும் ஒரு வார காலத்திற்கு முழு நாடும் செயற்படாமல் இருந்து நாட்டின் பொருளாதாரத்தை பாதிப்பதன் மூலமாகவும். உலக அரசியலில் ஒரு பெரும் சாதனையை நிலை நாட்டுகிறது நமது நாடு.

14. நமது நாட்டின் அளவையும், சனத்தொகையையும் கணக்கெடுக்கும் பட்சத்தில், அதிகமான தேசிய அரசியற்கட்சிகளைக்கொண்ட நாடாகவும் திகழ்கிறது.

15. வளர் முகநாடுகளில் கூடுதலான பொது விடுமுறைகளைக் கொண்டுள்ள நாடும் இலங்கை நாடே. 1993ம் ஆண்டில் அரச ஊழியர் ஒருவர் 196 நாட்களுக்கு குறையவே வேலை செய்துள்ளார்.

16. 1979ம் ஆண்டு தொடங்கி 1994ம் ஆண்டு ஆகஸ்ட வரை அவசர கால சட்டத்தின் துணையுடன் ஜனநாயக ஆட்சியை நடத்தி வந்த பெருமையையும் இலங்கையே பெறுகிறது.

17. தனது நாட்டுப் பிரஜைகளின் ஒரு பகுதியனருக்கு, நான்கு நீண்ட வருடங்களாக பொருளாதாரத்தடையை நீடித்து அவர்களை பெரும் கஸ்டங்களுக்குள்ளாக்கிய சாதனையும் நமது நாட்டுக்கே உரியது.

18. விமானத் தாக்குதல் மூலமாக தொடர்ந்து தனது நாட்டுக் குடிகளையே கொன்று குவித்த பெருமையும் நமது நாட்டிற்கே உரியது.

19. ஏழு தலைமுறைகளாக இலங்கையில் வாழ்ந்துவரும் ஒரு பிரிவினருக்கு இன்னமும் பிரஜாவுரிமையை மறுக்கும் நாடும் நமது இலங்கை நாடே.

இவற்றின் மூலமாக நாம் உலகிற்கு எடுத்துக்கூற முயல்வது என்ன? புள்ளிவிபரத்தின்படி நமது நாடு 88% எழுதப்படிக்கத் தெரிந்தவர்கள் உள்ள நாடு என்றாலும் உலகிலேயே அறிவற்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வர்களை கொண்ட நாடு நமது நாடு என்பதை நம்மையறியாமலே பிரசித்தம் பண்ணுகிறோம்.

## 12.3 சிறுபான்மை மக்களும் 10 பொதுத் தேர்தல்களும்

இலங்கை சுதந்திரமடைந்த பின்பு 10 பொதுத் தேர்தல்கள் நடைபெற்றிருக்கின்றது. இவற்றில் வெஸ்ட் மினிஸ்டர் முறையும், விகிதாசார முறையும் கையாளப்பட்டிருக்கின்றன. இவ்விரு முறையையும் இங்கே கொடுக்கப்பட்டுள்ள அட்டவணை தெளிவாக காட்டுவதை கவனிக்கமுடியும்.

(பார்க்க. பக்.188)

செய்திகளைச் சேகரிக்க வேண்டும்; ஆனால் செய்தியைச் சுரண்டலுக்கு உபயோகிக்கக்கூடாது. ஒருவனைக் கடத்திச் சென்ற செய்தியைப் பிரசுரம் செய்ய வேண்டும்; ஆனால் அதை நிமிஷந் தோறும் பறையறையும் நாடகமாக மாற்றக் கூடாது மக்கள் எல்லோரும் மனிதர்கள். வெறும் செய்தித் தொகுதிகளல்ல என்பதை நாம் அறிய வேண்டு மென்று நம்புகிறேன். ஒரு பரபரப் பூட்டும் நாடகப் நஷ்டமானாலும் சரி, ஒரு மனிதனின் தனிமை உரிமையை நாம் நசுக்கக் கூடாது [10]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அட்டவணை-12.3 பத்து பொதுத் தேர்தல்கள்—சிறுபான்மையினரின் நிலை 1147-1994[6]

| | சிங்களவர் | சிறுபான்மை இனம் | | | | ஏணையோர் | | மொத்த அங். |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | இல. தமிழர் | மலை தமிழர் | முஸ்லீம் | மொத்தம் | தெரிவு | நியமன | |
| 1 | 58 (57.42) | 15 (14.85) | 14 (13.86) | 08 (7.92) | 37 (36.73) | — | 06 (5.94) | 101 |
| 2 | 66 (65.34) | 12 (11.88) | 10 (9.90) | 06 (5.94) | 28 (27.72) | 01 | 06 | 101 |
| 1947 | 68 (67.32) | 13 (12.87) | 07 (6.93) | 06 (5.94) | 27 (26.73) | 01 | 06 | 101 |
| 1952 | 75 (74.25) | 13 (12.87) | +1 | 06 (5.94) | 20 (19.8) | 01 | 05 | 101 |
| 1956 | 75 (74.25) | 12 (11.88) | 0 | 07 (6.93) | 19 (18.81) | 01 | 06 | 151 |
| ச. தொகை அடிப்படையில்-1960 | 106 (70.19) | 17 (11.25) | 18 (11.92) | 10 (6.62) | 45 (29.8) | 0 | — | 151 |
| 1960 பங்குனி | 123 (81.45) | 18 (11.92) | 0 | 09 (5.96) | 27 (17.88) | 01 | — | 151 |
| 1960 ஆடி | 121 (80.13) | 18 (11.92) | +1 | 11 (7.28) | 30 (19.86) | — | — | 151 |
| 1965 | 121 (80.13) | 17 (11.25) | +2 | 11 (7.28) | 30 (19.86) | — | — | 151 |
| 1970 | 123 (81.45) | 19 (12.58) | +1 | 08 (5.29) | 28 (18.54) | — | — | .58 |
| 1977 | 137 (81.45) | 18 (10.71) | 1 | 12 (7.14) | 31 (18.45) | — | — | 168 |
| 1989 | 182 (162+20) (80.88) | 22 (20+2) (9.77) | 1+2 | 18 (13+5) (%) | 43 (34+9) (19.11) | — | — | 225 |
| 1994 | 180 (157+23) (80%) | 18 (17+1) (8%) | 8(6+2) (3.55) | 19 (16+3) (8.44) | 45 (39+6) (20%) | — | — | 225 |

(+) நியமன அங்கத்தவர்கள்/தேசிய பட்டியல்

( ) சதவீதம்

1—சோல்பரி 46/47 அமைச்சர் சபை திட்டத்தின்படி

2—அகில இலங்கை சனத் தொகை அடிப்படையில் தொகுதி நிர்ணயகுழு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோல்பரி அமைப்புமுறை முன்பிருந்த இனவாத பிரதிநித்துவ முறையைரத்து செய்து சனத்தொகைரீதியாகவும், இடரீதியாகவும் ஆசனங்களை ஒதுக்கும் முறையை உருவாக்கியது. இம்முறையின் படி சிறுபான்மையினருக்கு 43 ஆசனங்கள் கிடைக்குமென்றும், இதனால் சிறுபான்மையினரை முழுதும் பிரதி நித்துவப் படுத்த முடியுமென்றும் நம்பப்பட்டது.[5] ஆனால் நியமன அங்கத்தினர் ஆறுபேரும் ஆங்கிலேயர் (பறங்கியர்) சிறுபான்மையினரின் அபிலாசைகளை பிரதிநித்துவப்படுத்தாமல் ஆளும் கட்சிக்கு சார்பாகவே செயல்பட்டனர்.

தேர்தல் நிர்ணயக்குழு

இதன் சிபரிசின்படி சிறுபான்மை மக்களுக்கு 34 ஆசனங்கள் கிடைக்கு மென்று கூறியது. அதற்கேற்ப பல அங்கத்தினர் கொண்ட தொகுதிகளையும் ஏற்படுத்தியது. ஆனால் இவைகளும் பெரும்பான்மை இனத்திற்கு சார்பாகவே (ஒரு சில இடங்களில் ஒரு சில முஸ்லிம் அங்கத்தினரைத் தவிர) செயற்பட்டார்கள்.

— நடைபெற்ற முதல் தேர்தலில் மேற்குறிப்பிட்ட இரு குழுக் களினதும் எதிர்பார்ப்புகள் நிறை வேற வில்லை. ஆனாலும் இத்தேர்தலில் மலையக பிரதி நிதிகள் தெரிவு செய்யப்பட்ட படி யால் ஓரளவு சிறுபான்மையினரின் பிரதிநித்துவம் (26.75%) வெளிக் கொணரப்பட்டது.

— 1952 தொடங்கி 1994 வரை நடை பெற்ற தேர்தல்களில் சிறுபான்மை மக்களின் பிரதிநித்துவம் 36 வீதத்திற்கு பதிலாக 19, 18, 17, 20 என அமைந்துள்ளன.

இதன் காரணம், ஜனத்தொகையின் அடிப்படையில் தேர்தல் தொகுதிகள் நிர்ணயிக்கப் பட்ட போது, வாக்கு பறிபோன மலையக மக்களின் ஜனத்தொகையும் சேர்த்துக் கொள்ளப் பட்டது. இதனால் மலையக தமிழரின் பிரதி நிதிகள் தெரிவு செய்யப்பட வழியின்றி கண்டிய சிங்களவரின் பிரதி நித்துவம் 12 ஆக கூட்டப்பட்டது.

— இந்த சனத்தொகை அடிப்படையின்படி சிறுபான்மை மக்களுக்கு 151 ஆசனங்களில் 45 ஆசனங்கள் கிடைத்திருக்க வேண்டும். ஆனால் தொகுதி நிர்ணயக்குழு அங்கத்தினரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூட்டிய போது சிறுபான்மையினருடைய நன்மைக்கு பதிலாக தீமையே விளைந்தது.

— முதன்முதலாக நியமன அங்கத்தினர் முறை சிறுபான்மை மக்களுக்காகவே கொண்டுவரப்பட்டது. ஆனால் 1958 நவம்பர் 20 எஸ். டபுள்யூ, ஆர். டீ. பண்டாரநாயக்காவினால் மாற்றப்பட்டு பெரும்பான்மையினத்தை சேர்ந்த என். எச். ஏ. டபுள்யூ கருணாரத்தினா நியமன அங்கத்தினராக நியமிக்கப்பட்டதை தொடர்ந்து பெரும்பான்மை மக்களும் இதில் சேர்க்கப்பட்டார்கள். இம்முறை 1977 வரை நடைமுறையி இருந்தது.

— புதிய விகிதாசார முறைப்படி நடந்த இரண்டு தேர்தல்களிலும் சிறுபான்மை மக்களின் பிரதிநித்துவத்தில் மாற்றம் எதுவும் இருக்கவில்லை. இதன் காரணம் தேர்தல் மாவட்டங்களை வரையறை செய்யும் போது பெரும் பான்மை இனத்திற்கே சாதகமாக அமையும்படி இருந்தது. உதாரணமாக நுவரேலியா மாவட்டம் அதிக மலையக மக்கள் வாழும் ஒரு பகுதி. இதனுடன் பெரும்பான்மை சிங்களவர் வாழும் ஹிங்குராங் கெத்தயை இணைத்ததும், சிங்கள குடியேற்றங்களை செய்து அம்பாறை, திரிகோணமலை போன்ற பகுதிகளில் சிறுபான்மை இனத்தின் பலத்தை குறைத்தது.

## 12.4. வெஸ்ட் மினிஸ்டர் முறையும்-விகிதாசார முறையும்

### அட்டவணை 12.2 இருமுறைகள்-ஒரு ஒப்பீடு

| | வெஸ்ட் மினிஸ்டர் முறை | விகிதாசார பிரதிநித்துவ முறை |
|---|---|---|
| 1. | சனத்தொகை அடிப்படையில் கண்டிய சிங்களவருக்கு கூடிய பிரதிநித்துவமும், மலையக தமிழருக்கு குறைவான பிரதிநித்துவம். | 1. பதிவு செய்யப்பட்டவாக்காளர் அடிப்படையில் கூடிய கனம். மத்திய தெற்கு மாகாணத்திற்கு 2/3 பங்கு சக்தி கரையோர சிங்களவர் கையில். |
| 2. | பூகோள ரீதியாக ஒவ்வொரு 1000 சதுர மைலுக்கு ஒரு ஆசனமாக 25 ஆசனங்கள். வடகிழக்கிற்கு 8 ஆசனங்கள். | 2. மாகாண ரீதியாக ஒரு மாகாணத்திற்கு 4 என்ற அடிப்படையில் 36 ஆசனங்கள். ஆனால் வடகிழக்கிற்கும் 8 ஆசனங்களே. இது சனத்தொகை குறைந்த பகுதிக்கு சாதகமானது. |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதிய முறையான விகிதாசார பிரதிநிதித்துவம் மூலம் சிறு பான்மை மக்களுக்கு நன்மை கிடைக்கும் என்று கூறப்பட்டபோதும் நடைமுறையில் பெரும்பான்மை இனத்திற்கே சாதகமாக அமைந்ததை காண்கிறோம்.

இந்த இரண்டு முறைகளும் பதிவு செய்யப்பட்ட வாக்குகளிலேயே தங்கியுள்ளன. எனவே இடம் பெயர்ந்தவர்கள், அகதிகள், பதிவு செய்யப்படாதவர்கள் தங்கள் வாக்குகளை உபயோகிக்க எவ்வித வசதியும் செய்யப்படவில்லை.

இவ்விரண்டு முறையிலும் ஒரு அங்கத்தினரை தெரிவு செய்வதற்கு அவர் பெற வேண்டிய ஆகக்குறைந்த வாக்குகள் பற்றி எவ்விதமான வெட்டுப்புள்ளி முறையும் இருக்கவில்லை.

இவ்விரண்டு முறையிலும், ஒரு குழுவினரோ, தொகுதியினரோ தங்கள் எதிர்ப்பை காட்டவோ, பகிஸ்கரிப்பு மூலமாக தங்கள் பிரச்சினையை வெளிக்கொண்டுவரவோ வாய்ப்புகளில்லை. அப்படி ஒரு நிலை உருவானாலும் அதிகாரத்தில் இருப்பவர்கள் ஆயுதப் படையின் உதவியுடன் தேர்தலை எப்படியும் நடத்தி அதை ஒரு ஜனநாயகத் தேர்தல் என்று பறைசாற்ற பின்வாங்க மாட்டார்கள்.

உலகிலேயே இரண்டே நாடுகளில்தான் (அவுஸ்ரேலியா பெல்ஜியம்) தேர்தலில் எல்லோரும் கட்டாயம் வாக்களிக்க வேண்டுமென்ற சட்டமுண்டு. வாக்களிக்காவிடில் சிறைத் தண்டனையும் உண்டு. எனவே பின்வரும் ஆய்வுகளில் இருந்து சிறுபான்மையினர் தங்களின் அபிலாஷைகளையும், தங்களது மொழி, கலாச்சாரம் முதலியவற்றை வளர்க்க முடியாமல் இரண்டாந்தர பிரஜைகளாக தள்ளப்படுகிறார்கள் என்பதையும், இதன் காரணமாக ஒரு கொடிய உள்நாட்டு யுத்தம் நாட்டை கடந்த 15 வருடமாக அழிவு நிலைக்கு இழுத்துச் செல்வதையும் காணக் கிடக்கிறது. எனவே நாட்டின் ஆட்சியாளர்களே நாட்டின் வளர்ச்சிக்காக பயன் படுத்த வேண்டிய நிதியை ஆயுதத்திற்கும், ஆயுதப் படைக்கும் செலவிட்டுக் கொண்டு தனது மக்களையே கொன்று குவித்துக் கொண்டும், நாட்டின் பொருளாதார வீழ்ச்சிக்கும் கொலைக்கலாச்சாரத்தை வளர்க்கவும் செய்து கொண்டிருக்கின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அட்டவணை-125 வெஸ்ட் மினிஸ்டர்/விகிதாசாரமுறை

| | மாகாணம் | 1977 | 1989 | 1994 |
|---|---|---|---|---|
| 1. | மேல் ... | 39 (21.41) | 48 | 48 (24.46) |
| | கொழும்பு | 17 | 20 | 20 |
| | கம்பஹா | 13 | 17 | 17 |
| | களுத்துறை | 09 | 11 | 11 |
| 2. | தெற்கு ... | 21 (12.5) | 27 | 26 (13.76) |
| | காலி | 10 | 11 | 10 |
| | மாத்தறை | 07 | 09 | 09 |
| | அம்பாந்தோட்டை | 04 | 07 | 07 |
| 3. | மத்திய... | 24 (12.29) | 23 | 25 (12.75) |
| | கண்டி | 14 | 12 | 12 |
| | மாத்தளை | 04 | 05 | 05 |
| | நுவரேலியா | 06 | 06 | 08 |
| 4. | வட மேல்... | 19 (11.31) | 22 | 22 (11.22) |
| | குருநாகல் | 14 | 15 | 15 |
| | புத்தளம் | 05 | 07 | 07 |
| 5. | சப்ரகமுவ... | 17 (10.12) | 19 | 19 (9 69) |
| | இரத்தினபுரி | 08 | 10 | 10 |
| | கேகாலை | 09 | 09 | 09 |
| 6. | வடக்கு ... | 14 (8.33) | 16 | 15 (7.65) |
| | யாழ்ப்பாணம் | 11 | 11 | 10 |
| | வவுனியா | 03 | 05 | 05 |
| 7. | கிழக்கு ... | 12 (7.14) | 15 | 15 (7.65) |
| | மட்டக்களப்பு | 04 | 05 | 05 |
| | திருகோணமலை | 03 | 04 | 04 |
| | திகாமடுல்ல | 05 | 06 | 06 |
| 8. | வட மத்திய .... | 10 (5.95) | 13 | 13 (6.63) |
| | அநுராதபுரம் | 07 | 08 | 08 |
| | பொலன்னறுவை | 03 | 05 | 05 |
| 9. | ஊவா ... | 12(7.14) | 13 | 13 (6.63) |
| | பதுளை | 09 | 08 | 08 |
| | மொனராகலை | 03 | 05 | 05 |
| | மொத்தம் | 168 | 196 | 196 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

— இந்த மாகாணங்கள் (இல 1,2) இரண்டிலும் 'வெஸ்ட் மினிஸ்டர்' முறையின் கீழ் 28 வீதமான ஆசனங்களைப் பெற்றுள்ளனர். ஆனால் விகிதாசார முறையின்படி 37.75 வீதமான ஆசனங்களைப் பெற்றுள்ளதன் மூலம் கரையோர சிங்களவரின் பிரதிநிதித்துவம் அதிகரிக்கப்பட்டுள்ளது. தேசிய பட்டியலிலும்கூட அதிகமானோர் இப்பகுதியிலிருந்தே தெரிவுச் செய்யப்பட்டுள்ளதையும் காணக் கூடியதாக உள்ளது. பதிவுசெய்யப்பட்ட வாக்காளர்களின் தொகையும் இங்கு கூடுதலாகவுள்ளது.

— மலையக மக்கள் செறிந்து வாழும் மத்திய மாகாணத்தில் ஒரு ஆசனம் மாத்திரமே கூடியுள்ளது. பதிவு செய்யப்படாத வாக்காளர்களின் எண்ணிக்கை அதிகமாகவுள்ளது. ஆகவே முழுச் சனத்தொகைக்கும் ஏற்ற பிரதிநிதித்துவம் இல்லாது மலையகத் தமிழர்கள் பாதிப்படைகின்றனர்.

— மலையக மக்கள் வாழுகின்ற ஏனைய மாகாணங்களில் (இல5,9) விகிதாசார முறையின்படி பிரதிநிதித்துவம் கூடுவதற்கு பதிலாககுறைந்தே காணப்படுகிறது.

— இலங்கைத் தமிழர்கள் கூடுதலாக வடக்கு மாகாணத்தில் (இல.6) புதிய முறையின் கீழ் பிரதிநிதித்துவம் குறைந்தே காணப்படுகின்றது.

— கிழக்கு மாகாணத்தில் (இல.7) சிறிதளவு முன்னேற்றம் காணப்படுகின்றது.

இந்த இரண்டு மாகாணங்களிலும் அநேகமானோர் வாக்காளர் இடாப்பில் பதியப்படவில்லை. பெருந்தொகையான மக்கள் வெளி நாடுகளுக்கும், உள்நாட்டிலும் யுத்தத்தின் நிமித்தம் புலம் பெயர்ந்து சென்றுள்ளதே பதியப்படாமைக்கு காரணமாகவுள்ளது.

எமது நாட்டில் இந்த இரண்டு முறைகளாலுமே சிறுபான்மை, மக்கள் முழுமையான அரசியல் பிரதிநிதித்துவத்தை பெற முடியாது கடைசியாக நடைபெற்ற பொதுத்தேர்தலிலும் 20 சதவீதமான பிரதிநிதித்துவத்தையே சிறுபான்மை மக்கள் பெற்றுள்ளனர்.

## 12.5 புதிய அணுகுமுறை

எந்தவொரு ஜனநாயக நாடும் மக்கள் இறைமை, சமத்துவம் சுய ஆட்சி என்ற மூன்று கருத்துக்கள் அடிப்படையிலேயே சுற்றி சுழல்கின்றது. ஆனால் நமது நாட்டிலோ இம்மூன்றும் பெரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பான்மை மக்களுக்கு சாதகமாகவே இருக்கும் வண்ணம் அரசியல மைப்பு உருவாக்கப்பட்டுள்ளது. இந்த நிலை மாற்றப்படவேண்டும். பெரும்பான்மை இனத்தவரின் உரிமைகள் எப்படி அவர்களால் அனு பவிக்கப்படுகிறதோ அதே வண்ணம் சிறுபான்மையினரும் தங்கள் உரிமைகளை நியாயமான முறையில் பெற வழிவகை செய்யப்பட வேண்டும். எனவே நமது நாட்டின் தேர்தல் முறையானது நமது நாட்டில் வாழும் பல இனத்தவருடைய சமூக, கலாச்சார, மொழி உரிமைகளை மதித்து அவற்றை வளர்ப்பதற்கு வேண்டிய விதமாக மாற்றி அமைக்கப்படவேண்டும். நாட்டுக்கு நாடு தேர்தல் முறைகளில் மாற்றங்கள் இருந்தாலும் வெஸ்ட்மினிஸ்டர் முறையும் விகிதாசார பிரதிநிதித்துவ முறையும் தேவையானமாற்றங்களுடன், சிறுபான்மையினரினதும் நன்மை கருதி, அமைக்கப்படல் வேண்டும். பெரும்பான்மையினரின் விருப்பத்திற்கு மட்டும் இடம் கொடுத்து அரசியல்யாப்பு மாற்றப்படக்கூடாது. சிறுபான்மையினரின் அனுமதி யோடும், ஒத்துழைப்போடும் அரசியல் யாப்பில் மாற்றம் செய்யும் நிலைமை கொண்டு வரப்படவேண்டும். சுருங்கக்கூறின், இன அடிப்படையில் அங்கத்தவர் பிரதிநிதித்துவம் பெறக்கூடிய நிலை யான ஏற்பாடு செய்யப்படவேண்டும். எனவே கீழ்காணும் கருத்து களை மனதில் கொண்டு நாட்டின் நன்மை கருதி நடவடிக்கைகள் எடுப்பது முக்கியமென கருதப்படுகிறது.

— எமது நாட்டின் தேசியக்கொடியை அன்று தொட்டு இன்று வரை எல்லா மக்களாலும் முழுமையாக ஏற்றுக் கொள்ளப்பட வில்லை. கொடி சம்பந்தமாக ஆரம்பத்திலேயே சிறுபான்மை யினரால் வழங்கப்பட்ட ஆலோசனைகள் புறக்கணிக்கப்பட்டன. கொடிக்கான சின்னத்தையும் நிறத்தையும் சேனாநாயக்காவின் அரசு தன்னிச்சையாக நிர்ணயித்தது.[8] இக்கொடி பல்லின மசகளின் மரியாதையை பெற வேண்டும் என்று எண்ணினால் அதில் மாற்றம் செய்யப்படவேண்டும். எமது நாடு ஒரு விவசாய நாடு. எனவே அதன் சின்னம் விவசாய சின்னமாக இருக்க வேண்டும். பல்லின மக்களும் இங்கு சம அந்தஸ்துடன் வாழ்கிறார்கள் என்பதை நிரூபிக்கும் வன்னம் கொடியில் ஒவ்வொரு இனத்துக்குமென நிறங்கள் இடம்பெற வேண்டும்.

— உண்மையான ஜனநாயகம் என்பது ஒவ்வொரு சமூகத் தினிதும் சமத்துவம், சுயாட்சி, இறைமை என்பவற்றைக் கொண் டிருக்க வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

— எமது நாட்டில் இன்றிருக்கும் நான்கு வகையான பிரஜாவுரிமை சட்டங்களும் ஒழிக்கப்பட்டு இந்த நாட்டில் பிறந்த ஒவ்வொருவரும் இந்நாட்டு பிரஜையாக, சரி சமமாக நடத்தப்படவேண்டும்

— 1889ம் ஆண்டு ஆங்கிலேயரால் நிர்ணயிக்கப்பட்ட தற்போதைய மாகாணங்களின் எல்லைகள் மாற்றப்பட்டு பல்லின மக்களுக்குஏற்ற விதத்தில் புதிய மாகாண எல்லைகள் வகுக்கப்படவேண்டும். மாநில அரசுகளின் கீழ் சுயாட்சி முறை கொண்டுவரப்பட வேண்டும். மாநில அரசுக்கு முழு உரிமையும் கொடுக்கப்பட வேண்டும்.

— இரு மொழிகளுக்கும் (தமிழ்-சிங்களம்) நடைமுறையில் சம அந்தஸ்த்து கொடுக்கப்படவேண்டும்.

— இன்றுள்ள நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறை ஒழிக்கப்படவேண்டும்.

— எமது ஆட்சித்துறை பிரதிநிதிகுழுவும், பல் இன சபைகளும் தான் அதிகாரத்தை கொண்டிருத்தல் வேண்டும்.

— பிரதிநிதி குழு மக்களால் தெரிவு செய்யப்படவேண்டும். ஊக்குவிப்பு ஆசனம், தேசியப்பட்டியல் முறைகள் ஒழிக்கப்படவேண்டும்.

— அங்கத்தவர் தொகை குறைக்கப்படுவதோடு, இவர்கள் பல்லின மக்கள் மத்தியிலிருந்து தெரியப்படவேண்டும்.

— பல்லின மக்கள் சமவிகிதாசாரப்படி தெரிவு செய்யப்படவழி வகைகள் செய்யப்பட வேண்டும்.

— எந்தவொரு சட்டமும் இவர்களின் ஒத்துழைப்பின்றி மாற்றப்படவோ புதிய சட்டங்கள் உருவாக்கப்படவோ கூடாது.

— ஜனாதிபதியும், உபஜனாதிபதியும் பிரதிநிதித்துவக் குழு மூலமாகவும், பல்லின மக்கள் சபை மூலமாகவும், வடகிழக்கு அரசியல்சபை மூலமாகவும் தெரிவு செய்யப்படவேண்டும். இதில் ஜனாதிபதி பெரும்பான்மை இனத்தை சேர்ந்திருந்தால், உபஜனாதிபதி சிறுபான்மை இனத்தை சேர்ந்தவராக இருக்க வேண்டும். சமத்துவத்திற்கும், சுய ஆட்சிக்கும் இடம் கொடுக்கப்பட வேண்டும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எந்தவொரு சமயமும் மற்ற சமயங்களைவிட தனிப்பட்ட உரிமை களைபெறும் நிலை மாற்றப்பட்டு, நாடு சமய சார்பற்ற நாடாக துலங்க வேண்டும்.

— நமது நாட்டிற்கு, மேற்கத்திய நாடுகளின் அரசியலமைப்பு முறைகள் சரிப்பட்டு வரமாட்டாது. உதாரணமாக ஜெர்மனி நாட்டின் முறையை நமது நாடு பின்பற்றுவது ஏற்கத்தகுந்ததல்ல. காரணம் அந்நாட்டின் அங்கத்தினர் மனச்சாட்சியின்படி நிர்வகிக்க இடமுண்டு. ஆனால் நமது நாட்டிலோ அரசியல் முறையில் வாடிக்கையாதரவு (Patronage) தந்தை வழிமுறை(Patriarchal) அதிகம் நிறைந்திருப்பதாலும் எல்லாவற்றையும்விட நேர்மைக்கு இடமில்லாதவர்களாய் அரசியல்வாதிகள் இருப்பதனாலும் நமது நாடு மேலைநாடுகளின் அரசியல்வழிமுறைகளை கடைப்பிடிக்க முடியாத நிலையில் உள்ளது. மாறாக அயல்நாடுகளின் அரசியல் முறைதான் உதாரணமாக இந்தியா போன்ற நாடுகளை குறிப்பிடலாம், நமது நாட்டுக்கு ஏற்ற விதத்தில் மாற்றப்பட வேண்டும்.

— நமது நாட்டில் சாதாரண ஏவலாள் (Peon) வேலை பார்ப்பதென்றாலும் அடிப்படை கல்வி தகுதியை (க. பொ. த., உ/த-) பார்க்கிறோம். ஆனால் நமது நாட்டில் மக்களை ஆளும் பிரதிநிதிகள் இன்று தங்கள் சொந்த பெயரையே சரிவர எழுதத் தெரியாதவர்களாயிருப்பதும், பணபலம் இருந்தால் போதும் என்ற நிலைப்பாட்டுடன் அரசியலில் பிரவேசிப்பதும் சர்வ சாதாரணமாயுள்ளது. கடந்த தேர்தலில் பங்கு பற்றிய அங்கத்தினர் தனிப்பட்ட வகையில் 3 லட்சத்திலிருந்து ஒரு கோடி வரை தேர்தலுக்கு செலவு செய்தது தெரியவந்துள்ளது. இப்படி அவர்கள் செலவு செய்வதற்கும் காரணமுண்டு. ஏனென்றால் செலவழித்ததைவிட பல மடங்கு பெற முடியும் என்ற எதிர்பார்ப்பே இதில் முக்கியமானது. எனவே தேர்தலில் செலவிடும் தொகை பற்றி ஒரு வரையறை இருப்பதோடு, அரசியலில் பிரவேசிக்க ஒரு கல்வித் தகமையையும் நிட்சயப்படுத்த வேண்டும்.

— நமது நாட்டில் ஏற்பட்ட யுத்தத்தின் விளைவாக, பல ஆயிரக்கணக்கில் ஆண்களின் இழப்பால்,பெண்கள்தொகை கூடியுள்ளது. இருந்தும் அரசியலில் பெண்களின் பிரதிநிதித்துவம் மிகக் குறைவு. நமது அரசியலை அவதானிக்கும்போது, கணவன் இறக்கும்போதுதான், அதுவும் அரசியல் கொலைக்கு ஆளாகும்போதுதான் ஒரு பெண் அரசியலில் பிரவேசிக்கலாம் என்ற நிலைமை புலனாகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நிலை மாறி பெண்கள் இயல்பாகவே அரசியலில் பிரவேசிக்கும் சூழ்நிலை உருவாக வேண்டும். பெண்களின் தொகைக்கேற்ற பிரதி நிதித்துவம் கிடைக்க வேண்டும். குறைந்த பட்சம் பாகிஸ்தானில் உள்ள சட்டம்போல் 30 சதவீதம் அங்கத்துவம் என்றாலும் நமது பெண்களுக்கு கிடைக்க வேண்டும்.

— நமது நாட்டின் பல்வேறு திணைக்களங்கள் கல்வித்தகுதியும் முதிர்ச்சியும் கொண்டவர்களின் பொறுப்பில் ஒப்படைக்கப்பட வேண்டும். தங்கள் இலாகாக்களின் நிலைபற்றி 5 வருடத்திற்கொரு முறையென்றாலும் மீளாய்வு செய்ய வேண்டும். அத்துடன் மற்றவர்கள் தமது பணியை சரிவர ஆற்றுகிறார்களோ என்று மேற்பார்வை பார்க்கவும் அமைச்சர்கள் கடமைப்பட்டவர்களாயிருப்பார். ஆனால் அதிகாரம் செலுத்துபவர்களாயிருக்கக்கூடாது.

— தேர்தல் வரையறை ஆணைக்குழு ஜனாதிபதியால், நியமிக்கப்படுவதை விட பல்லின மக்கள் சபையால் தெரிவு செய்யப்பட வேண்டும். இக்குழுவில் சிறுபான்மை இனத்தவரின் அங்கத்துவமும் இடம்பெற வேண்டும்.

— பாராளுமன்றம் கலைக்கப்பட்டவுடன் ஜனாதிபதியின் தலைமையில் இடைக்கால அரசு இயங்கவேண்டும். ஏற்கனவே ஆட்சியில் இருந்த எந்த அங்கத்தினரும் தொடர்ந்து இந்த இடைக்கால அரசு நிர்வாகத்தில் இருப்பது முற்றாக தவிர்க்கப்பட வேண்டும்.

— அரசு பணிகளில் ஓய்வுபெறுவதற்குஒருவயதுஎல்லை கொடுகப்பட்டுள்ளது. இதன் மூலமாக வயது முதிர்ந்து முடியாத நிலையில் வேலையில் இருப்பதன் மூலமாக ஏற்படும் தொய்வு நிலையை தடுக்கவும், வளர்ந்து வரும் இளம் சந்ததியினருக்கு சந்தர்ப்பம் கொடுக்கவும் சாத்தியமாகிறது. ஆனால் அரசியலில் இந்நிலை இல்லை. எனவே அங்கும் இந்த சீர்கேட்டை சரி செய்ய அரசியல் வாதிகளுக்கு வயதெல்லை வரையறுக்கப்படவேண்டும்.

— தேர்தலுக்குப்பின் அரசியல் கட்சித்தாவல்கள் சட்டபூர்வமாக தடை செய்யப்பட வேண்டும்.

— நாட்டின் ஒற்றுமையையும், பொதுமையையும் வளர்க்க உண்மையிலேயே நாம் அக்கறையுடையவர்களாயிருந்தால் பெரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பான்மை மக்களை மட்டும் குறித்துக்காட்டும் ஒரு தலை சார்பான தேசியக் கொடியும், தேசிய கீதமும் மாற்றியமைக்கப்படவேண்டும்.

சிறுபான்மையினரை சிறுகச் சிறுக பாதித்ததே இன்று விஸ்வ ரூபத்தில் பெரும்பான்மையினரையும், ஒட்டுமொத்தமாக நாட்டையே சீரழித்து நிற்கிறது. அன்று விதைத்ததை இன்று அறுக்கிறோம். எனவே நமது நாட்டின் புத்தி ஜீவிகள் மட்டுமல்ல, அரசியலமைப்பு சட்ட திருத்த குழுவில் உள்ளோரும் நாட்டின் நன்மை கருதி மேற்குறிப்பிட்டுள்ள கருத்துகளை சிந்தனைக்கு எடுத்து ஒரு நல்ல பயன் உள்ள தேர்தல் முறையையும், அரசியல் யாப்பையும் உருவாக்க முன் வரவேண்டும். இல்லாவிடின் நமது நாட்டின் அழிவை நாமே துரிதப்படுத்தியவர்களாவோம்.

> தேசத்தைப் பாதிக்கும் பலவிதப் பிணிகளையும் காணும் அரசியல் வாதிகள், தங்கள் அரசியல் வழியிலேயே சீர்கேடான முடிவுகளை எடுக்கும் அதிகாரத்தைக் கைப் பற்றியுள்ளனர்! எழுத்தறிவைத் தாண்டியோ, தாண்டாமலோ, ஏட்டுச் சுரைக்காய் அறிவுடனும் அரசியல் தில்லுமுல்லுகளின் அனுபவங்களுமே பெற்ற அரசியல் தலைவர்கள் நாட்டின் விதியை நிர்ணயிக்கும் சிக்கலான விஷயங்களில் முடிவெடுக்கச் சற்றேனும் தகுதிபெறவில்லை. அவ்வாறு தகுதியில்லாத நிலையை அவர்கள் மனச் சாட்சி என்பது மகாத்மா காந்தியுடன் இறந்த விட்டது போலும்.[10]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதின்மூன்றாம் அத்தியாயம்

# அரசியலில் பெண்கள்

இலங்கையில் 1927 ம் ஆண்டு படித்த முற்போக்குவாத பெண்கள் ஒன்றுகூடி ''பெண்கள் சர்வசனவாக்குரிமை சங்கம்' என்ற ஒன்றை ஆரம்பித்தார்கள். இதன் முதல் தலைவியாக லேடி டெய்சி பண்டார நாயக்கா[1] [சந்திரிகாவின் தந்தை வழி பாட்டி] நியமிக்கப்பட்டார். இலங்கையில் ஆண், பெண் இருபாலாருக்கும் வாக்களிக்கும் உரிமை 1931 ம் ஆண்டு அளிக்கப்பட்டது. அன்று கூடுதலான பெண்கள் தொழில் செய்ததால் வேலை வாய்ப்புச் சட்டங்கள் இயற்றும் பொழுது பெண்களையும் சேர்த்துக் கொள்ள வேண்டுமென வாதாடினார்கள்.

### 13 1 தேர்தலும் பெண்களும்

1931ம் ஆண்டு நடைபெற்ற முதலாவது அரச சபைத்தேர்தலில் ருவான்வலல ஆசனத்திற்கு அட்லின் மொளமுரே குமாரி ஹாமி என்ற பெண், போட்டியிட்டு, தெரிவு செய்யப்பட்டார். அதன்பின் கிழக்கு மாகாணத்தில் இடம் பெற்ற இடைத்தேர்தலில் திருமதி நேசம் சரவணமுத்து போட்டியிட்டு வெற்றி பெற்றார். 1936 ம் ஆண்டு நடைபெற்ற அரச சபைத் தேர்தலில் மூன்று பெண் மணிகள் போட்டியிட்டனர். ஹட்டன் ஆசனத்திற்கு திருமதி சி. எஸ். ராஜரத்தினமும், ருவான்வலை ஆசனந்திற்கு அட்லின் மொளமுரே குமாரி ஹாமியும், வட கொழும்பு ஆசனத் திற்கு திருமதி நேசம் சரவணமுத்தும் போட்டியிட்டு, அவர்களில் நேசம் சரவணமுத்து மாத்திரம் வெற்றி பெற்றார். 1947 ல் இடம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்ற முதல் பாராளுமன்றத் தேர்தலில் டெய்சி மரியா ப்ளோரன்ஸ் போட்டியிட்டு வெற்றி பெற்றார். 1952 ல் நடைபெற்ற இரண்டாவது தேர்தலில் 12 பெண்கள போட்டியிட்டனர். 1956ம் ஆண்டு நடைபெற்ற பொதுத்தேர்தலில் முதன் முதலாக விமலாவிஜயவர்த்தனா என்ற பெண்மணி தேர்தலில் போட்டியிட்டுதெரிவு செய்யப்பட்டு, சுகாதார அமைச்சர் பதவியையும் பெற்றார் இவரே தெற்காசியாவில் அமைச்சர் பதவியை பெற்ற முதல் பெண்மணி என்ற பெருமையை பெறுகிறார்[2]

1959ம் ஆண்டு எஸ். டபிள்யு ஆர். டி. பண்டாரநாயக்கா கொலை செய்யப்பட்ட பின்பு அவரது மனைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா அத்தனகலையில் இடைத்தேர்தல் மூலமாக வெற்றி பெற்று அரசியலில் பிரவேசித்தார். 1960 ம் ஆண்டு மார்ச் மாதம் நடைபெற்ற பொதுத் தேர்தலில் 14 பெண்கள் போட்டியிட்டனர். ஆனால் மூவரே வெற்றி பெற்றனர். அத்துடன் இந்த பாராளுமன்றத்தின் ஆயுட்காலம் வெறும் 33 தினங்களுடன் முடிவடைந்தது.

1960ம் ஆண்டு ஜூலையில் நடைபெற்ற ஐந்தாவது பாராளுமன்றத் தேர்தலில் சிறிமாவோ பண்டாரநாயக்கா போட்டியிடாமல் உலகின் முதல் பெண் பிரதமராக பதவி ஏற்றார் 1964 ல் நடைபெற்ற ஆறாவது பொதுத் தேர்தலில் போட்டியிட்ட 13 பெண்களில் 4 பேரே வெற்றி பெற்றனர். இதில் சிறிமாவோ பண்டாரநாயக்கா எதிர்க்கட்சித் தலைவியானார். 1970 ல் நடைபெற்ற பொதுத் தேர்தலில் 14 பெண்கள் போட்டியிட்டு 5 பேர் வெற்றி பெற்றனர். இவர்கள் முறையே சிறிமாவோ பண்டாரநாயக்கா அத்தனகலையில், மல்லிகா ரத்வத்த பலாங்கொடையில், குமாரி இலங்கரத்ன மீறிகமையில், குசலா அபேவர்த்தனா மொனராகலையில், வியன் குணவர்த்தனா கல்கிசையில் தெரிவு செய்யப்பட்டனர். இரண்டாவது முறையாக சிறிமாவோ பண்டாரநாயக்கா பிரதம மந்திரி பதவியையை பெற்றது குறிப்பிடத்தக்கது. 1977 ல் நடைபெற்ற பொதுத் தேர்தலில் 14 பெண்கள் பங்குபற்றி 4 பேர் வெற்றி பெற்றனர். அரசியல் அமைப்பு மாற்றியமைக்கப்பட்ட பின்பு 1989 ம் ஆண்டு ஆறு பெண் உறுப்பினர்கள் பாராளுமன்றத்தில் இருந்தனர். இதில் முதல் தமிழ் பெண் ரங்கநாயகி பத்மநாதன் பாராளுமன்ற அங்கத்தவராக பொத்துவில் ஆசனத்திற்கு நியமிக்கப்பட்டார். இதனைத் தொடர்ந்து புதிய முறையின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கீழ் நடைபெற்ற 1989 ம் ஆண்டு பொதுத் தேர்தலில் 29 பெண்கள் போட்டியிட்டனர்.[3] இவர்களில் ஐ. தே. கட்சியைச் சேர்ந்த 7 பெண்களும், ஸ்ரீ. ல. சு. கட்சியைச் சேர்ந்த 4 பெண்களுமாக 11 பெண்கள் பாராளுமன்றத்திற்கு தெரிவானார்கள். 1994 ல் நடைபெற்ற பத்தாவது பொதுத்தேர்தலில் 44 பெண்கள் போட்டியிட்டனர். இவர்களுள் நியமனம் பெற்றவருடன் சேர்ந்து 8 பெண்கள் பொ. ஐ. ஐ. முன்னணியிலும், 3 பேர் ஐ. தே. கட்சியிலும் இருந்து தெரிவு செய்யப்பட்டார்கள் இத்தேர்தல் மூலமாக நாட்டின் இரண்டாவது பெண் பிரதம மந்திரியை மக்கள் உருவாக்கினார்கள். திருமதி சந்திரிகா குமாரதுங்க உலகின் முதலாவது பெண் பிரதம மந்திரியின் புதல்வி என்பதும் கவனத்திற்குரியது.

இலங்கையிலேயே பாராளுமன்றத் தேர்தலில் அதிமிக்க கூடுதல் வாக்குகளைப் பெற்ற வாக்காளர் என்ற பெயரையும் திருமதி சந்திரிகா குமாரதுங்க (4,64,588 வாக்குகள்) பெறுகிறார். இப்பொதுத் தேர்தல் முடிந்து 2½ மாதத்தில் நடைபெற்ற ஜனாதிபதித்தேர்தலில் அமோக வெற்றியீட்டி, இலங்கையின் முதல் பெண் ஜனாதிபதியாகவும், உலகில் 4 வது பெண் ஜனாதிபதியாகவும் இடம் பெறுகிறார். இந்த ஜனாதிபதி தேர்தலில் ஆகக்கூடிய வாக்குகளைப் பெற்று பெரிய சாதனை புரிந்ததும் குறிப்பிடத்தக்கது. இதன் மூலமாக இலங்கை அரசியலில் பெண்கள் படிப்படியாக முன்னேறி இருப்பதை அவதானிக்கக் கூடியதாயுள்ளது

## 13.2 மலையகப் பெண்கள்

மலையகத்தை பொறுத்தவரையில், ஏனைய சமூகங்களுடன் ஒப்பிடும்பொழுது, தொடர்ந்தும் மலையக பெண்கள் பின்தங்கியிருப்பது வேதனைக்குரியது மட்டுமல்ல. இதன் காரணத்தையும் உற்று நோக்குவது அவசியமாகும். 1940களில் மலையக மக்களின் நிலைமையை அறிந்து அதற்காக குரல்கொடுத்த முதல் பெண்மணி மீனாட்சி அம்மையார் என்றால் அது மிகையாகாது. இவர் அன்றைய சட்டசபை உறுப்பினர் கோ. நடேச ஐயரின் துணைவியார் என்பது அனைவரும் அறிந்ததொன்று. அவர் பல மேடைகளில் ஏறி பேசி, பாடல்கள் இயற்றி தன் சொந்தக்குரலிலேயே பாடியதாலும், அன்றைய மலையக மக்கள் திரண்டு இக்கூட்டங்

களுக்குச் சென்றார்கள். அவர்களது பாடல்களில் ஒன்று அன்றைய மலையக மக்களின் அரசியலை துலாம்பரமாக எடுத்துக் காட்டுகின்றது:

மந்திரிகளே, மகா தந்திரிகளே யுங்கள்-
மனம் போனபடி பேச்சை சிந்துகிறீர்களே

இந்தியர் இலங்கையில் இருக்கக் கூடாதாம் - அவர்க்
கேற்ற சுதந்திரம் கொடுக்கக் கூடாதாம்.

நீதியற்ற மந்திரி சபை நேர்மையைப் பாரு - அவர்கள்
நியாயமற்ற பக்ஷபாத செய்கையைக் கூறு

ஏதினிமேல் சும்மாவிடில் ஏற்காது சீறு - நாங்கள்
இந்த லங்கா ஆள வேண்டாம் வேலையைப்பாரு[4]

இவரைத் தொடர்ந்து வேறு சில பெண்களும் மலையக மக்களுக்காக குரல் கொடுத்தது உண்மை எனினும், இலங்கை சுதந்திரம் அடைந்த பின்னால் இந்த நிலைமாறி அவர்கள் குடும்பத்திலும், தோட்ட நிர்வாகத்திலும், தொழிற்சங்கங்களிலும் மென்மேலும் அடக்கு முறைக்கே உட்படுத்தப்படுகிறார்கள் என்றே கூற வேண்டும்.

தெற்காசியாவில் மூன்று நாடுகளில் மூன்று பெண்களால்[5] ஆட்சி நடைபெற்றுக் கொண்டிருக்கும் இக்காலகட்டத்தில், எமது மலையகத்தில், இன்று பெண்களுக்காக உருவாக்கப்பட்ட மாதர் சங்கங்கள்கூட தலைவர்களுக்கு மாலைபோடுவதற்காக மாத்திரமே செயல்பட்டு வருகின்றன. பெண்கள் விடுதலைக்காக குரல் கொடுப்பது இன்று ஒரு பொது விடயமாக உள்ளது. ஆனால் இதனால் மட்டுமே அவர்கள் விடுதலை பெற்றுவிடப் போவதில்லை. மாறாக மலையக பெண்களின் கல்வி அறிவை வளர்ப்பது, ஓய்வு நேரத்தை அதிகரிப்பது, வீட்டு வேலைகளை தனியாக பெண்களின் தலையில் சுமத்தாதிருப்பது, வீட்டு நிர்வாகம், நிதிநிர்வாகம், கோவில் கமிட்டி, பாடசாலை அபிவிருத்தி குழுக்கள், தொழிற்சங்க கமிட்டிகள் போன்றவற்றில் பெண்ணுக்கு சந்தர்ப்பம் அளித்தால் இவர்கள் சமூக வாழ்வில் பங்கு பெற முடியும். அத்துடன் சிறு வயது முதலே பெண்களுக்கு தன்நம்பிக்கையை வளர்க்க வேண்டும். அதாவது உறுதியுடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிகாரத்தை வலுப்படுத்திக்கொள்ளும் விதத்தில் வளர்க்கப்பட வேண்டும். அப்படி வளர்க்கப்படாத பெண்களுக்கு பயிற்சிகள் மூலம் அதனை வளர்த்தெடுக்க வேண்டும். மலையக பெண்களை ஊக்குவிக்க முழு சமூகமும் முன் வரவேண்டும் அச்சுறுத்தலுக்கு அஞ்சி பின் வாங்காது ஆதிக்கத்துடன் பெண்கள் செயற்பட முயன்றால்தான் பெண்கள் மரியாதையும், மதிப்பும் பெறமுடியும். இதன் மூலமாக, குடும்பத்திலும், சமூகத்திலும், பெண்களுக்கு எதிராக நடக்கும் வன்முறைகளிலிருந்து விடுபட முடியும். பெண்கள் சமுதாயம் விழிப்புற வேண்டுமானால் அவர்கள் மத்தியில் கல்வியறிவு நிறைந்திருக்க வேண்டும். கல்வி கற்ற பெண்களின் சிந்தனைத் திறனும் செயல் திறனும் சேர்ந்தால் மலையகப் பெண்கள் எழுச்சி பெற்றவர்களாக இயல்பாகவே தோன்றுவார்கள்.

1993ம் ஆண்டு நடந்த மாகாணசபைத் தேர்தலில் 167 மலையகத் தமிழர் போட்டியிட்டும் அவர்களில் ஒரு பெண் வேட்பாளர் கூட இடம் பெறாதது அரசியலில் ஈடுபாடு கொள்ளும் அளவிற்கு பெண்கள் இன்னும் தயாராகவில்லை என்பதை உணர்த்துவதுடன் ஆண் ஆதிக்கத்தின் பிடியில் இவர்கள் பலமாக சிக்குண்டிருப்பதையும் உணர்த்துகின்றது.

துர்க்கை, லட்சுமி, சரஸ்வதி ஆகிய பெண் தெய்வங்களை பக்தி சிரத்தையுடன் வழிபடுகின்ற ஆண்கள், தங்களுடைய இல்லங்களில் மனைவிக்கு எந்த மரியாதையும் காட்ட மாட்டார்கள். அவளை அடிமையைப் போல் நடத்தவும் தயங்கமாட்டார்கள். இந்த விஷயத்தில் பெரும்பாலான ஆண்கள் இரட்டை வேடம் போடுகின்றவர்களாகவே இருக்கிறார்கள். பெண் அடிமைத்தனம் நம்முடைய சமுதாயத்தில் பிரிக்க முடியாத ஓர் அம்சமாகி விட்டது.[7]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதினான்காம் அத்தியாயம்

# மக்கள் தொடர்பு சாதனங்கள்

மலையக மக்களின் அரசியல் முன்னேற்றத்திற்காக மக்கள் தொடர்பு சாதனங்கள் மூலமும் பல முயற்சிகள் எடுத்துள்ளோம்

முதன் முதலாக 1984ம் ஆண்டு சுவிஸ் வானொலி பிரெஞ்ச் அலை வரிசை மூலம் மலையக மக்களின் நிலைபற்றி விரிவான பேட்டி ஒன்று அளிக்கப்பட்டது.

1994-ம் ஆண்டு மே மாதம் வெரித்தாஸ் தமிழப்பணியில் இம்மக்களின் நிலைபற்றிய இன்னுமொரு பேட்டி அளிக்கப் பட்டது.

இலங்கையின் பழம் பெரும் நாளிதழலான வீர கேசரிக்கு அவ்வப்போது எமது கருத்துக்களை எழுதி வருகிறோம். கடந்த ஒரு வருட காலத்தில் மலையக மக்களின் அரசியல் நிலைபற்றி எம்மால் எழுதப்பட்டு பிரசுரமான ஒரு சில கட்டுரைகளை இந்த அத்தியாயத்தில் தருவது இந்நூலுக்கு மிகவும் பொருத்தமாக இருக்குமென நம்புகிறோம்.

## 14.1 தமிழ் மக்களும் மாகாண சபை தேர்தலும்

மலையக வேட்பாளர்களே பதவியை அல்ல சேவையையே இலட்சியமாக கொள்ளுங்கள். மலையக வாக்குகளை கூறு போடா தீர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு தனி அரசியல் கூட்டு கட்சியை உருவாக்கி அதன் கீழ் ஒன்றிணையுங்கள். பெருந்தலைவர்களினதும் பெருந்தோட்ட கூட்டு கமிட்டியினதும் தனித்துவத்தை அழிக்காது மலையகத்திலிருக்கும் சகல அமைப்புகளையும் ஒன்றிணைத்து செயல்படுங்கள். உடன் பிறந்தே கொல்லும் வியாதியை போல் மலையக தமிழ் இனம் அழிந்து போய்விடாது மண்ணணுக்குரியவர்களாய் மாண்புடன் தலை நிமிர்ந்து சகலதுறைகளிலும் மேம்பட்டு வாழ உங்களுக்கு கிடைத்திருக்கும் இச்சந்தர்ப்பத்தை முழுமையாக பயன்படுத் துங்கள்.

## மலையக மக்களின் இலட்சியம்

1. மலையக மக்கள் ஒரு தனிதேசிய இனமாக அங்கிகரிக்கப்பட வேண்டும்.

2. சகல மக்களும் பூரண பிரஜாவுரிமை பெற வேண்டும்.

3. நாட்டில் ஏனைய மக்களுக்கு 300 குடும்பங்களுக்கு ஒரு கிராம சேவக அலுவலர் இருப்பது போன்று மலையக மக்களுக்கும் மலையக தமிழ் கிராம சேவக அலுவலர்கள் நியமிக்கப்பட வேண்டும்.

4. இன்று 18 மாவட்டங்களில் 25 உதவி அரசாங்க அதிபர் பிரிவுகள் உள்ளன. இதில் தோட்ட மக்களுக்கென ஒரு அரசாங்க அதிபர் பிரிவும் இல்லை. ஆகவே மலையக மக்கள் வாழும் ஒவ்வொரு பிரதேசத்திலும் உதவி அரசாங்க மலையகப் பிரிவுகள் உருவாக்கி மலையக தமிழ் ஊழியர்கள் மூலமாக செயல்படுத்த வேண்டும்.

5. மலையக மக்கள் வாழும் ஒவ்வொரு மாவட்டங்களிலும் இன விகிதாசாரத்தின் அடிப்படையில் சகல துறைகளிலும் தொழில் வாய்ப்புகளை அளிக்க வேண்டும்.

6. அரசாங்க அபிவிருத்தி திட்டங்களை உருவாக்கும்பொழுது மலையக மக்களையும் கருத்திற் கொள்ள வேண்டும்.

7. மலையகத்தில் மேற்கொள்ளப்படும் குடியேற்றங்களையும் நில வெளியேற்றங்களையும் தடுத்து நிறுத்த வேண்டும். மலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யகத்தில் இருக்கும் தரிசு நிலங்களை விவசாய தேவைகளுக்காக மலையக தமிழ் மக்களுக்கே பகிர்ந்து அளிக்கப்பட வேண்டும்.

8. தோட்டங்கள் தனியார் மயமாக்கப்பட்ட பொழுது தொழிலாளர் சார்பாக கொடுக்கப்பட்ட வாக்குறுதிகள் நிறைவேற்றப்பட வேண்டும்.

9. தோட்ட தொழிலாளருக்கு மாதச் சம்பளம் வழங்கப்பட வேண்டும்.

10. மலையக பெண் தொழிலாளர்களின் வேலை நேரம் குறைக்கப்படவேண்டும். அது மட்டுமல்ல தோட்டத்துறையில் ஆண், பெண் அடிப்படையில் தொழில்களை பாகுபாடு செய்வதை தவிர்க்க வேண்டும்.

11. தோட்ட வைத்தியசாலைகளை அரசாங்கம் கையேற்க வேண்டும்.

12. மலையகத் தமிழ் மாணவர்களின் கல்வி தராதரம் உயர்த்தப்பட வேண்டும். [இடம், கட்டிடம், பயிற்றப்பட்ட ஆசிரியர் பற்றாக்குறை நீக்கப்படல்]

13. மலையகத்தில் பல தொழில் நுட்ப கல்லூரிகள் ஆரம்பிக்கப்பட வேண்டும்.

14. ஸ்ரீபாத கல்வியியல் கல்லூரி (பத்தனை) மலையக கல்வியியல் கல்லூரியாக மாற்றப்பட்டு நூறுசதவிகிதமும் மலையக தமிழ் மாணவ மாணவிகளுக்கே கொடுக்கப்பட வேண்டும்.

சுருங்கக் கூறின் மலையக மக்கள் இந்நாட்டின் இரண்டாந்தர பிரஜைகளாக இருக்கக்கூடாது. அவர்களும் ஏனைய மக்களை போன்று உரிமையோடு வாழ வேண்டும். அப்போதுதான் இரு இனமும் ஒன்று சேர்ந்து இந்நாட்டை வளப்படுத்த முடியும்

அண்மைக் காலங்களில் உருவாக்கப்பட்ட விகிதாசார முறைப்படி வாக்களிப்பது வாக்காளர் மத்தியில் ஒரு குழப்பத்தை ஏற்படுத்தியுள்ளது என்பதை கடந்த தேர்தலின் போது விரயமாக்கப்பட்ட வாக்குகள் தெளிவுபடுத்துகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாகாண சபை தேர்தலில் கட்சிக்கு அல்லது சுயேச்சை குழுவுக்கு எதிராக உள்ள சின்னத்திற்கு ஒரு வாக்கும் அங்கத்தவர்களை தெரிவு செய்வதற்கு 3 விருப்புரிமை வாக்குகளும் நீங்கள் விரும்பும் 3 வேட்பாளர் இலக்கத்திற்கு மேல் புள்ளடியிட்டு 3 வேட்பாளருக்கு மேற்படாத உங்கள் விருப்பு தெரிவுகளை வெளிப்படுத்தலாம். ஆனால் தான் விரும்பும் 3 வாக்குகளையும் ஒரே வேட்பாளருக்கு அளிக்க முடியாது. இந்த வாக்களிப்பு முறையினபடி ஒவ்வொரு அபேட்சகரும் தம்மாலான வாக்குகளை கட்சிக்கு பெற்றுக் கொடுக்கின்றனர். ஒவ்வொரு கூடுதலாக பெற்றுக் கொடுக்கப்பட்ட ஆசனங்களுக்கு அதனை பெற்றுக் கொடுக்க உதவிய அபேட்சகர்களை தெரிவு செய்ய முடியாது போகும் ஆபத்துள்ளது. இதனால்தான் இன்று அநேக கட்சிகள் கூட்டாக போட்டியிடுகின்றன. இந்த நிலையில் மலையக மக்களுக்கு ஒரு தனி கூட்டு கட்சி இல்லாதபடியால் அவர்களில் அநேக வேட்பாளர்கள் தெரிவு செய்யப்படாது போகின்றார்கள். இன்றைய அரசியலை நோக்கும் போது மலையகத் தமிழர் வாக்களிக்க மட்டுமே பிரஜாவுரிமை பெற்றவர்களாகத் தோன்றுகிறார்கள், ஏனெனில் தோட்டத் தொழில் துறையும் இத்துறை சார்ந்த மக்களும் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சின் கீழ் வருவதால் மாகாண சபையை பொறுத்த வரையில் இம்மக்களுக்கு எதையும் செய்ய வேண்டிய அவசியமில்லை. இதனால் இன்று மலையக மக்கள் தேர்தலில் நம்பிக்கையற்றவர்களாக இருக்கிறார்கள்.

## மலையக வாக்காளர்களே சிந்தியுங்கள்

வாக்காளர் பட்டியல்கூட தமிழில் கொடுக்கப்படவில்லை. இடதுசாரி கட்சிகள் கோரிக்கையின்மீது இந்நிலை மாற்றப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

இன்று மலையக மக்கள் ஓரளவிற்கு தங்கள் நிலையை அறிய எத்தனித்து வருகிறார்கள். இத்தேர்தலில் என்ன செய்வது என்று தெரியாமல் யாருக்கு வாக்களிப்பது என்று புரியாமல் குழம்புகின்றார்கள். கடந்த மாகாண சபை தேர்தலை போன்று இதுவும் மலையக மக்களின் வாக்குகளை பெற மட்டுமா?

தமக்கென்று ஒரு கட்சி இல்லாததால் தங்கள் அபிலாஷைகள் நிறைவேற்றிக் கொள்ள முடியாதவர்களாக இருக்கிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேர்தலை பகிஷ்கரித்து அவர் தம் எதிர்ப்பைக் காட்டலாமா? வாக்குகளை பிழையாக பிரயோகித்து தமது மனக்குறையை வெளிப்படுத்தலாமா? ''நான் உங்களில் ஒருவன்'' ''என்னை ஆதரியுங்கள்'' ''உங்கள் வாக்குகளை விரயமாக்காதீர்கள்'' என்று கூறிக் கொண்டு உங்களை அணுகும் வேட்பாளருக்கு நீங்கள் கூறும் பதில் என்ன?

''நீங்கள் என்ன செய்தீர்கள்? எமது பிரச்சினைகளை தீர்த்து விட்டு வாருங்கள் வாக்களிக்கிறோம் என்பீர்களா?வேட்பாளர்களே ஒன்று கூடுங்கள், எங்கள் வாக்குகளை கூறு போடாதீர்கள் எனறு ஆணித்தரமாக கூறுவீர்களா?

வேட்பாளர்களே ஒன்று சேர்ந்து ஒரு திட்டத்தை எம்முன் வையுங்கள் ஆதரிக்கிறோம் என்பீர்களா?

கடந்த மாகாண சபை தேர்தலில் இரு முனைப் போட்டியாக இருந்தது இம்முறை நான்கு முனை போட்டியாக மாறிவிட்டது. இதைவிட சுயேச்சை குழுக்களும் தோன்றியுள்ளன. இவை எல்லா வற்றிலும் மலையக வேட்பாளர்கள் இருக்கின்றனர். இதனால் யாருக்கு வாக்களிப்பது என்ற தடுமாற்றம் ஏற்படுகின்றது. ஆகவே உங்கள் வாக்குகளை போதை வஸ்துக்கோ, பணத்திற்கோ, நண் பருக்கோ தாரை வார்த்து விடாதீர்கள். குழுக்களாக சிந்தித்து செயல்படுங்கள். உங்கள் எதிர்காலம் உங்கள் கையில்தான் உள்ளது. உறுதிமொழிகள் தேர்தல்களின் வெற்றியை நிர்ணயிப்பதில் மாத் திரம் நின்று விடாது அவை நடைமுறைப்படுத்தப்பட்டு மக்களுக்கு பயன் தருவதாக அமைய வழி செய்யுங்கள். தேர்தலுக்குப்பின் நீங்கள் முனைப்பாக செயல்படவேண்டும். இன்று எமக்கு தேவை ஒரு தேசிய அரசாங்கமே. சகல மக்களினதும் சமத்துவம் இதனால் பேணப்படும். இது விடயத்தில் எல்லா கட்சிகளும் ஒத்துழைக்க வேண்டும்.

## பெரும்பான்மை மக்களே

பெரும்பான்மை இனத்தை சேர்ந்த ஒரு சில அரசியல்வாதிகள் மலையக மக்களை இரண்டாம் தர பிரஜைகளாக எண்ணி அவர் களது தனித்துவத்தை தவறாக புரிந்து கொண்டு அவர்கள் 'மலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடு, கோருகிறார்கள் என்று உணர்ச்சிகளை தூண்டும் பிரச்சாரங் களில் ஈடுபடுகிறார்கள்.

மலையக மக்கள் ஒரு தனி அரசு அமைக்கவோ அல்லது நாட்டை ஆளவோ ஆசைப்படவில்லை. ஆனால் தாம் ஒரு தனி இனம். தாங்களும் மற்றவர்களைப்போல் சகல உரிமைகளோடும் வாழ விரும்புபவர்கள், பெரும்பான்மை மக்களுடன் சேர்ந்து தொழில் புரியும் இவர்களை வர்க்கரீதியாக பிரித்துப் பார்க்க வேண்டாம் என்று தான் கோருகிறார்கள். பெரும்பான்மை மக்க ளிடையே தங்களைப் போலவே வறுமையில் வாடும் ஒரு பகுதியின ரும் இருக்கிறார்கள் என்பதை மலையக மக்கள் அறிந்தே உள்ளார் கள். ஆதலால் பிரச்சினைகளை தீர்க்க இரு சமூகமும் இணைந்தே செயல்பட வேண்டும் என்பதே அவர்கள் சிந்தனையாகும்.

(வீரகேசரி - 16-05-95)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 14.2. சிறுபான்மை மக்கள் தேர்தலை ஒன்றிணைந்து சந்திக்க வேண்டும்.

சிறுபான்மையினருக்கு பாகுபாடு காட்டப்படுவதை தடுக்கவும் அவர்களை பாதுகாக்கவும் அமைக்கப்பட்ட ஐக்கிய நாடுகளின் ஆணைக்குழு சிறுபான்மையினருக்கான வரைவிலக்கணத்தை பின்வருமாறு தருகின்றது.

"தங்களது இன, மத, மொழி பாரம்பரியங்களை நிலையாக பாதுகாக்க விரும்பும் அவற்றைக்கொண்டிருக்கும் ஒரு சமுதாயத்திலுள்ள அதிகாரமற்ற மக்களே சிறுபான்மையினராவர். அல்லது ஏனைய மக்களை விட வித்தியாசமான பண்புகளையும் சிறப்பியல்புகளையும் கொண்ட மக்களாவர்"

இந்த வரைவிலக்கணம் 1993 ஆம் ஆண்டிற்கு முன் தென்னாபிரிக்காவிலிருந்த வெள்ளையர்களை உள்ளடக்காது. ஆனால் இலங்கையிலுள்ள இலங்கைத் தமிழர், முஸ்லிம் மக்கள், மலையகத்தமிழர், பறங்கியர், சிங்கள கிறிஸ்தவர், உரிமையற்று வாழும் பெண்கள், ஒழுங்குபடுத்தப்படாத விவசாயிகள், கூலி வேலை செய்வோர், தொழிற்சாலைகளின் அடிமட்டத் தொழிலாளர் என அனைவரையும் உள்ளடக்குகின்றது.

இந்தப்புதிய வரைவிலக்கணத்திற்கு ஏற்ப, இலங்கையில் இது நாள் வரை இனங்காணப்பட்ட சிறு பான்மையினரும் மேலே குறிப்பிடப்பட்டுள்ள ஏனைய சிறுபான்மை மக்களும் இன, மத, மொழி பேதங்களை விடுத்து ஒன்று சேர வேண்டும். சுதந்திரம் பெற்ற நாள் தொடக்கம் இவர்கள் அதிகாரமற்ற குரலற்ற மக்களாக வாழ்ந்து வந்தவர்கள் என்பதை எண்ணிப் பார்த்து வருங்காலத்திலாவது சம அந்தஸ்துடன் வாழக் கூடிய சூழ் நிலைகளை ஒன்றிணைந்து உருவாக்க வேண்டும். வரப்போகின்ற 10 ஆவது பொதுத்தேர்தல் இதற்கு நல்லதோர் தருணமாக அமைகிறது. சிறுபான்மை மக்கள் அதனை நன்கு உணர்ந்து செயற்பட வேண்டும்.

### 10-ஆவது பொதுத்தேர்தல்

நாட்டு மக்களின் வாழ்வில் தேர்தல் காலங்கள் முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைகிறது. வரப்போகின்ற வருடங்களுக்

களுக்கான கொள்கைகள், சட்டங்கள், திட்டங்கள் முதன்மை அடிப்படையில் தீர்மானிக்கப்படுவதால் மக்களின் வாழ்வில் தேர்தல் ஒரு திருப்பு முனையாகவும் அமைகிறது. மக்களின் இறைமை முடுக்கிவிடப்படும் கால கட்டமும் இதுவென்பதால் சிறுபான்மையினரும் அவர்களுக்காக குரல் கொடுக்கும் அரசியல் தலைவர்கள், தொழிற்சங்கத் தலைவர்கள், போராளி குழுக்கள் என அனைவரும் ஒன்றிணைந்து இத்தருணத்தை சிறுபான்மை மக்களது நலன்பேண பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.

சிறுபான்மை மக்கள் அனைவரும் ஒன்றிணையாத பட்சத்தில் கடந்த பொதுத்தேர்தலைப் போன்றே இப்போதும் சிறுபான்மையினரின் வாக்குகள் சிதறுண்டு போய்விடும். அதனால் தேர்தல் மூலம் பெறக்கூடிய நன்மைகள் வழக்கம் போல் கிடைக்காமல் போய்விடும்.

கடந்த பொதுத்தேர்தலை சற்று ஆராய்ந்து பார்ப்போம். ஒன்பது கட்சிகள் 1989ஆம் ஆண்டு நடை பெற்ற பொதுத் தேர்தலில் பங்குபற்றின. இதில் சிறுபான்மையினரின் வாக்குகள் ஏழு கட்சிகளுக்கு பங்கிடப்பட்டுள்ளது. அதே போன்று போட்டியிட்ட 10 சுயேச்சை குழுக்களில் 7 குழுக்களுக்கு சிறுபான்மை வாக்குகள் பிரிக்கப்பட்டுள்ளன. பாராளுமன்றத்தின் மொத்த ஆசனங்களின் தொகை 225 ஆகும்.

மொத்த ஆசனங்களில் 43 ஆசனங்களை மட்டுமே சிறுபான்மை இனத்தைச் சார்ந்தவர்கள் பெற்றுள்ளார்கள். சிறுபான்மையினர் அனைவரும் ஒரே சிந்தனையுடன் ஒரே கட்சியாக செயல்பட்டிருந்தால் 65 முதல் 70 ஆசனங்களை இவர்களால் இலகுவாக பெற்றிருக்க முடியும். மாற்றியமைக்கப்பட்ட தேர்தல் முறையில் அதற்கான சாத்தியம் உண்டு. எப்படி என்று பார்ப்போம்.

**விகிதாசார முறை**

விகிதாசார முறையில் கட்சிக்கே முதலிடம் கொடுக்கப்படுகின்றது. இருபத்திரெண்டு தேர்தல் மாவட்டங்களிலும் 160 அங்கத்தவர்கள் தெரிந்தெடுக்கப்படுகிறார்கள். சிறுபான்மை மக்களது மொத்த வாக்குகளும் ஒரு சிறுபான்மை கட்சிக்கு கிடைக்குமானால் தெரிவாகும் அங்கத்தவர் தொகையும் கூடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்றது. அத்துடன் 9 மாகாணங்களுக்கென ஒதுக்கப்பட்ட 36 அங்கத்தவர்களிலும் கூடிய எண்ணிக்கையை பெறக்கூடிய தாக இருக்கும். உதாரணமாக வட-கிழக்கை பொறுத்தவரையில் மாகாணங்களுக்கு ஒதுக்கிய முழுத்தொகையான 8 அங்கத்தவர் களையுமே பெறக்கூடியதாக இருக்கும்.

அதேபோல் தேசிய பட்டியலுக்கு ஒதுக்கப்பட்ட 29 அங்கத் தவர்களிலிருந்தும் அதிகமான அங்கத்தவர்களை பெறுகின்ற வாய்ப்பும் இருக்கின்றது.

## வெட்டு புள்ளி முறை

ஒவ்வொரு தேர்தல் மாவட்டத்திலும் செல்லுபடியான மொத்த வாக்குகளில் 5% வீதமான வாக்குகளை பெறத்தவறும் எந்த ஒரு கட்சியோ அல்லது குழுவோ நிராகரிக்கப்பட்டு விடுகிறது. கடந்த தேர்தலின் போது 3 கட்சிகளுக்கு ஒரு அங்கத்தவராவது கிடைக்கவில்லை. இதில் 2 சிறுபான்மை மக்களைச் சேர்ந்த கட்சிகளாகும். அதேபோல் போட்டியிட்ட 0 சுயேச்சை குழுக்களில் 4 குழுக்கள் மாத்திரமே அங்கத்வர் களை பெறக்கூடியதாக இருந்தது. இதில் 5 சிறுபான்மை குழுக் கள் இருந்தன என்பது குறிப்பிடத்தக்கது. இதிலிருந்து சிறு பான்மையினர் பல கூறுகளாக விலகி நிற்கையில் பெரிய கட்சி களுக்கு கூடிய அங்கத்தவர்களைப் பெற சாதகமாக அமைகிறது. என்பதை விளங்கிக்கொள்ளக்கூடியதாக இருக்கின்றறு.

## போனஸ் ஆசனம்

ஒவ்வொரு தேர்தல் மாவட்டத்திலும் கூடுதலான வாக்குகளை பெறும் ஒரு கட்சிக்கு அல்லது குழுவிற்கு ஒரு போனஸ் ஆசனம் ஒதுக்கப்படுகின்றது. சிறுபான்மை மக்கள் செறிந்து வாழும் மாவட்டங்களில் இந்த போனஸ் ஆசனத்தை பெறும் வாய்ப்பு இருக்கின்றது.

## தேர்தல் பகிஷ்கரிப்பு

முதலாவது சட்டசபை தேர்தல் (1931) காலத்திலிருந்தே சிறுபான்மையினர் தேர்தல்களை பகிஷ்கரித்து வந்துள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடந்த பொதுத்தேர்தலின்போது கூட பகிஷ்கரிப்பும், வேண்டு மென்றே வாக்குகளை செல்லுபடியாகாமல் செய்ததும் இடம் பெற்றுள்ளது.

இலங்கையில் நடைமுறையிலிருக்கும் ஜனநாயக முறையின் படி சிறுபான்மையினரை மேலும் பலவீனப்படுத்தவும் மற்றவர் களின் பலத்தை அதிகரிக்கவும் இது உதவுமே தவிர பகிஷ் கரிப்பின் உண்மையான நோக்கம் நிறைவேறுவதில்லை. பகிஷ் கரிப்பால் தேர்தல் எவ்விதத்திலும் பாதிப்படைவதில்லை. இவை அனைத்தையும் சற்று ஆழமாக சிந்தித்தால் சிறுபான்மையினருக் கென ஓர் தனிக்கட்சி இருக்கும் பட்சத்தில் அவர்களது அபிலா ஷைகளை நிறைவேற்றுவது சாத்தியமான ஒன்றாக இருக்கும் என்பது தெளிவாகும்.

## குறுகிய காலம்

தேர்தல் ஆண்டாக பிரகடனப்படுத்தப்பட்டாலும் அது தற்போது தேர்தல் மாதமாக மாறிவிட்டது. வேட்பு மனு தாக்கல் செய்வதற்கும், தேர்தல் நடத்துவதற்கும் ஒதுக்கப்பட்டிருந்த காலம் 1982 ம் ஆண்டு முதல் குறைக்கப்பட்டு விட்டது. இதனால் ஆளும் கட்சியே அதிக நன்மையை பெறுகின்றது. ஆகவே சிறுபான்மை யினர் விரைந்து செயல்பட வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ள னர். சிறுபான்மையினரின் நலனுக்காக அனைவரும் வேற்றுமை களை மறந்து ஒன்று சேர்வதைப் பற்றி உடனடியாக முடிவெடுக்க வேண்டும்.

ஒரே கட்சி அல்லது ஒரே குழுவாக அவர்கள் தேர்தல் களத்தில் இறங்கவேண்டும். தம்மோடு அவர்கள் போராளி குழுக்களையும் இணைத்துக் கொள்ள வேண்டும். சிறுபான்மையினர் அனைவரும் ஒன்று சேர்வது இன்றைய நிலையில் ஒரு கட்டாயத் தேவையாக சிறுபான்மை மக்கள் கருதுவதால் அதனை வலியுறுத்துவதில், மத வழிகாட்டிகள், மத நிறுவனங்கள், அரசு சார்பற்ற சமூக நிறு வனங்கள், புத்திஜீவிகள் என சிறுபான்மை மக்களுக்கு குரல் கொடுக்கும் அனைவரும் தங்கள் கடமையாக எண்ணி செயல்பட வேண்டும்.

ஒன்றுபடாததால் ஏற்பட்ட தீமைகளை நாங்கள் கடந்த பொதுத்தேர்தல்களில் கண்டு வந்துள்ளோம். அதைச்சற்று விரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாகப் பார்ப்போம். முதலாவதாக இலங்கைத் தமிழரின் நிலையை கவனிப்போம்.

## இலங்கைத் தமிழர்

ஒற்றுமை சாதனைகளின் அடித்தளமாக அமையும் என்பது நிதர்சனமான உண்மை. அதற்கு சான்றாக 1977 ல் நடைபெற்ற பொதுத்தேர்தலைக் கூறலாம். இலங்கைத் தமிழர் தமது வேற்றுமைகளை புறக்கணித்து ஒரே கட்சியின் கீழ் போட்டி இட்டனர். அந்த ஒற்றுமையானது இலங்கைச் சரித்திரத்தில் ஓர் அற்புதத்தை நிகழ்த்திக் காட்டியது. முதன் முதலாக ஒரு தமிழர் எதிர்க்கட்சி தலைவரானார். ஆனால் துரதிருஷ்டவசமாக பின்னர் அவர்கள் பல வழிகளில் பிரிந்து போனார்கள். தேர்தல்களை பகிஷ்கரித்தார்கள். ஒரு சிலர் பெரிய கட்சிகளுக்கு துணை போனார்கள். கடைசியில் பலம் குன்றியவர்களானார்கள்.

ஆகவே கடந்த கால அநுபவங்கள் கற்றுத் தந்த பாடங்களை இத்தேர்தல் சமயத்தில் இவர்கள் கவனத்தில் கொள்ள வேண்டும். பேதங்களை மறந்து மீண்டும் ஒன்றுசேர வேண்டும். சிறுபான்மை மக்களின் நலன் ஒன்றை மட்டுமே கருத்தில் கொண்டு ஏனைய சிறுபான்மை மக்களுக்கு நேசக்கரம் நீட்ட வேண்டும். அனைவரையும் அரவணைத்து ஒரே சிறுபான்மை கட்சியாக நின்று சிறுபான்மை மக்களை வழிநடத்த வேண்டும். இதுவே பெருவாரியான சிறுபான்மை மக்களின் தேர்தல் கோரிக்கையாக உள்ளது.

## முஸ்லிம் மக்கள்

கடந்த தேர்தலில் பல முஸ்லிம் அங்கத்தவர்கள் தெரிவு செய்யப்பட்டிருந்தாலும் அவர்களால் முஸ்லிம் சமூகத்திற்கு அதிக நன்மைகளை கொடுக்க முடியவில்லை. காரணம் இவர்கள் பல கட்சிகளின் மூலம் தெரிவாகியிருந்ததேயாகும். ஒரு கட்சியின் கீழ் இவர்கள் போட்டியிட்டிருந்தால் இவர்களின் பலம் அதிகரித்திருக்கும். கடந்த தேர்தலில் முஸ்லிம வாக்குகள் 6 வீதமாக பிரிந்து போயுள்ளது.

வட- கிழக்கில் வாழும் முஸ்லிம் மக்களுடன் ஏனைய பகுதிகளில் வாழும் முஸ்லிம் மக்களுக்கும் நெருங்கிய தொடர்பிருப்ப

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாக தெரியவில்லை. சிறுபான்மையினர் என்ற ரீதியில் இது ஒரு விளைவைத்தரும் என்று நினைக்க முடியாது. ஆகவே இவர்கள் தமக்குள்ளும் இணைவை ஏற்படுத்தி ஏனைய சிறு பான்மையினரை யும் சேர்த்து சிறுபான்மையினரின் கட்சியாக ஒரே குடையின் கீழி ருந்து தேர்தலைச் சந்திக்க வேண்டும்.

## மலையகத் தமிழர்

சுதந்திர இலங்கையின் முதலாவது தேர்தலில் மலையகத் தமிழர் சார்பில் 7 பேர் தெரிவாயினர். அதே சமயம் பல இடது சாரி கட்சிகளின் வெற்றிக்கும் இவர்கள் காரணமாயிருந்தனர். ஆனால் அன்று ஆட்சி பீடத்திலிருந்த அரசாங்கம் பிரஜாவுரிமை சட்டத்தை அமுல்படுத்தி அவர்களது வாக்குரிமையை அபகரித்தது. அதனால் அவர்கள் அரசியல் அநாதைகளானார்கள். இலங்கை சரித்திரத்திலேயே மலையகத் தமிழர் சார்பாக ஒரு கபினட் அமைச்சர் தெரிவானது 1977ஆம் ஆண்டுதான்.

மலையகத்தமிழர் ஒருவர் 1989இல் கொழும்பில் போட்டி யிட்டு வெற்றிபெற்றார். அதேஆண்டில் ஐ.தே. கட்சியினால் 2 மலையகத் தமிழர்களுக்கு இடம்கொடுக்கப்பட்டது. அன்று இழந்த அரசியல் உரிமைகளில் 70 சதவீதமான உரிமைகளை மலையக மக்கள் மீளப்பெற்றுள்ளனர். இதனால் இவர்களது வாக்குகள் அதிகரித்துள்ளது. ஏனைய சிறுபான்மை மக்களைப் போன்றே இவர்களது வாக்குகளும் கடந்த காலங்களில் கூறு போடப்பட்டுள்ளது. இவர்களது வாக்குகளின் பெரும் பகுதி ஆளும் கட்சிக்கும் மிகுதி எதிர்க்கட்சிகளுக்கும் சுயேச்சை குழுக்களுக்கும் பிரிந்து போயுள்ளது. இது அவர்கள் போராடி பெற்ற வாக்குரிமையை மழுங்கச் செய்கிற தென்றே கூற வேண்டும். இதற்கு முக்கிய காரணம் அவர்களுக்கு கொடுக்கப்படும் கவர்ச்சியான தேர்தல் வாக்குறுதிகள்தான்.

இன்று மலையகத்தில் சுமார் 5 லட்சத்துக்கும் மேற்பட்ட வாக்காளர்கள் இருக்கின்றார்கள். இவர்கள் தங்கள் வாக்குகள் சிதறிப்போவதை தவிர்க்க வேண்டியது இன்றைய கால கட் டத்தில் ஒரு கட்டாயத் தேவையாகும். நாட்டின் ஏனைய சிறு பான்மை மக்களுடன் இவர்கள் இணைந்து செயல்பட வேண்டும். அனைவரும் ஒருமுகமாக ஒரு சிறுபான்மை கட்சியின்கீழ் தேர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலில் போட்டியிடுவதன் மூலம் தங்கள் சார்பில் கூடுதலான அங்கத்தவர்களை பெற முடியும். இப்படி ஒன்றிணைவதால் மட்டுமே அரசியல் சமுத்திரத்தில் இவர்கள் ஓர் சக்திவாய்ந்த அலையாக தோன்ற முடியும். வாக்காளர் இடாப்பில் இவர்கள் பெயர் பதிவு செய்துகொள்ளாமல் இருப்பதும் பெயர் பதிவதில் அதிகாரிகள் காட்டும் அசிரத்தையும் நீங்க வேண்டும். சம்பந்தப் பட்டவர்கள் இவ்விடயத்தில் சிரத்தைகாட்டுவது அவசியம்.

சிறுபான்மையினர் ஐக்கியம் நாட்டை ஆள்வதற்கல்ல. நாட்டை பிரித்தாள வேண்டும் என்ற எண்ணமும் இவர்களுக் கில்லை. தமது தாய் நாட்டில் தம் சொந்த வாக்குரிமையை உபயோகப்படுத்த வேறு கட்சிகளில் தங்கியிருக்கக் கூடாது என் பது இந்த ஐக்கியத்தின் நோக்கமாகும். சிறுபான்மையினரை இரண்டாந்தர பிரஜைகளாக கணிக்கப்படுவதை அவர்கள் விரும்ப வில்லை. சம அந்தஸ்துடன் சமாதானமாக வாழ்வதே இவர்களது விருப்பமாகும். ஒட்டுண்ணிகளாக இனியும் இவர்கள் வாழ்ந்தால் தன்மானம் அற்றவர்களாகவே கணிக்கப்படுவார்கள். இவர்களது வாக்குகளை மொத்தமாக ஒரு சிறுபான்மை கட்சிக்கு அளிப் பதற்கு இவர்களுக்கு வழி அமைத்துக்கொடுத்திருந்தால் இவர்கள் ஒட்டுண்ணிகளாக வாழ்ந்திருக்க மாட்டார்கள் என்பது திண்ணம்

இந்த அவல நிலைக்கு அவர்கள் தள்ளப்பட்டதற்கு அவர் களை வழி நடத்தும் தலைவர்கள்தான் பொறுப்பெடுக்க வேண் டும். அவர்களது தீர்க்கதரிசனமற்ற சுயநலம் மிகுந்த சிந்தனை கள் அதேசமயம் முதலாளித்துவ கொள்கைகளை உடைய சில சிறுபான்மை தலைவர்கள் இந்த சீரழிவுக்கு காரணமாகும்.

(வீரகேசரி - 02-07-94)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 14 3. வாக்குரிமையுடன் வீடு, காணி உரிமைகளும் வழங்கப்பட வேண்டும்.

மலையகம் உருவாகிய காலகட்டத்திலிருந்து பல தலைமுறைகளாக தோட்டத் தொழிலாளர் தேசிய சட்டத்தினின்றும் அமைப்புக்களிலிருந்தும் பிரித்தே வைக்கப்பட்டுள்ளார்கள். இதனால் முழுத் தேசிய வருமானத்தின் பிரதான பங்காளராக இருந்தும் அவர்களுக்குரிய உரிமைகள், குறிப்பாக குடியிருப்பு உரிமைகள் அளிக்கப்படவில்லை.

வசிக்கும் குடியிருப்புகளில் 90 வீதமானவை 150 வருடங்களுக்கு மேலாக பழமை வாய்ந்த லயன் காம்பராக்களாகும். இந்தக் காம்பராக்கள் 150 சதுர அடிக்கும் குறைவான விஸ்தீரணத்தைக் கொண்டவை. ஒரு காம்பராவில் பெற்றோர் திருமணம் முடித்த பிள்ளைகள் என இரண்டிற்கும் மேற்பட்ட குடும்பங்கள் வாழ்கின்றன. ஒரே காம்பராவை இரண்டாகப் பிரித்து குடியிருக்கும் சூழ்நிலைகளும் நிறையவே உண்டு.

இத்தகைய குடியிருப்பு நிலை தொழிலாளரின் பௌதிக ஆன்மிக வாழ்வுகளை பாதிப்பதோடு, சுகாதார சீர்கேடுகளையும், பல்வேறு சமூகப் பிரச்சினைகளையும், தோற்றுவிக்கின்றது. ஒரு தனி மனிதனதும் குடும்பத்தினதும் தனித்துவம், சுதந்திரம் இரண்டுமே முற்றாக பாதிப்படைகின்றது.

தோட்டக் குடியிருப்புகளில் பெரும்பான்மையானவை பல வருடங்களாக திருத்தப்படாத மோசமான நிலையில் உள்ளன. சம்பள நிர்ணய சபை நியதிகளின்படி தோட்டத் தொழிலாளரின் மொத்த வேதன அமைப்பில் 10 வீதத்தை குடியிருப்புகளின் பராமரிப்பு. புனரமைப்பு என்பனவற்றுக்காக ஒதுக்கப்பட வேண்டும். இந்த விதிமுறைகூட தோட்டங்கள் தேசியமயமாக்கப்பட்ட பின் நடைமுறைப்படுத்தப்படவில்லை. மீண்டும் தனியார் மயமாக்கப்பட்ட பின் நிலைமை மேலும் மோசமானது.

நிர்வாகம் குடியிருப்புத் தேவைகளை முற்றாக அலட்சியம் செய்கின்ற காரணத்தால், நடைமுறை பிரச்சினைகளின் சுமை தாங்காது தொழிலாளர் தமது சொந்த முயற்சியிலும் செலவிலும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறு குடிசைகளை அமைக்கின்றபோது அதையும் நிர்வாகம் தடை செய்து விடுகிறது. கட்டியதை பிரிக்கும்வரை சம்பந்தப்பட்ட தொழிலாளி வேலையிலிருந்து இடை நீக்கம் செய்யப்படுவதால் தொழிலாளர்களால் இது தொடர்பாக எதுவும் செய்ய முடியாத வர்களாக இருக்கிறார்கள்.

குடியிருப்பு பிரச்சினைக்கு தொழிலாளர்கள் இப்போது முக்கியத்துவம் கொடுத்து வருவதை உணர்ந்த ஆட்சியாளர்களும் தொழிற்சங்கங்களும் அண்மைக்காலங்களில் இப்பிரச்சினை குறித்து பல சந்தர்ப்பங்களில் பல்வேறு வாக்குறுதிகளை அளித்து வந்துள்ளனர். முக்கியமாக தனியார் மயமாக்குவதற்கு முன் பாகவும் மாகாணசபைத் தேர்தலுக்கு முன்பாகவும் இவ்வாறான வாக்குறுதிகள் அளிக்கப்பட்டன. மாகாண சபைத் தேர்தலுக்கு முன்பாக வீடும் காணியும் மே மாதம் 31ஆம் திகதி தொழிலாள ருக்கு சொந்தமாக்கப்படும் என்ற வாக்குறுதியை தொடர்ந்து இது சம்பந்தமாக மட்டுப்படுத்தப்பட்ட 'தோட்டப்பணியாளர் கூட்டுறவு சங்கத்தின் துணை விதிகள்' என்ற கையேடும் வெளி யிடப்பட்டது.

இன்று நுவரெலியா மாவட்டத்தில் மாத்திரம் இத்தகைய 120 கூட்டுறவு சங்கங்கள் அமைக்கப்பட்டுள்ளதாக கூறப்படு கின்றது. எனினும் அதன் அங்கத்தவர்கள் எனக் கூறப்படும் சம் பந்தப்பட்ட தொழிலாளர்களுக்கு இது குறித்து எந்தவித தெளிவு மில்லை. அதே நேரத்தில் சில தோட்டங்களில் இச்சங்கத்திற் காக 'செக்ரோல்' மூலம் 250 ரூபா சம்பளத்தில் இருந்து கழிக்கப் பட்டிருக்கிறது.

கூட்டுறவு சங்கம் தொடர்பான துணை விதிகள் வெளியிடப் பட்டு, கூட்டுறவு சங்கங்கள் அமைக்கப் பட்டதாக கூறப்பட்டா லும், தற்போது தொழிலாளர்களின் குடியிருப்பு சம்பந்தமாக பல அமைப்புகள் தோன்றியிருப்பதை அவதானிக்க கூடியதாக இருக்கின்றது. அவையாவன.

1. தோட்டக் குடியிருப்பு சமூகநல அபிவிருத்தி நிதியம்.

2. பெருந்தோட்ட தொழில் அமைச்சு தோட்டத் தொழிலா ளர் வீடமைப்பு அபிவிருத்தி நிகழ்ச்சி முறை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. பெருந்தோட்ட வீடமைப்பு சமூக அபிவிருத்தி நிதியம்.

4. தோட்டத் தொழிலாளர் வீடமைப்பு கூட்டுறவு சங்கம்.

இப்படி அரசு மட்டத்திலான பல அமைப்புகள் ஒரே பிரச்சினையை மையமாக வைத்து செயல்பட முனைவது பணவிரயத்தையும் நடைமுறைப்படுத்துவதில் பல சிக்கல்களையும் ஏற்படுத்தும்.

'நோராட்' நிறுவனம் கடந்த வருடம் இந்த நான்கு அமைப்புகளில் ஒன்றான, 'தோட்டக் குடியிருப்பு சமூக நல அபிவிருத்தி நிதியத்திற்கு 700 மில்லியன்களை வழங்கியிருக்கிறது. நோரட் நிறுவனத்தின் நோக்கம் முழுமையாக பூர்த்தி செய்யப்படுகின்றதா என்ற கேள்வியும் இங்கு எழுகின்றது.

ஆனால் தோட்டமட்டத்தில் இச்சபைகளுக்கும் கூட்டுறவு சங்கத்திற்கும் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளவர் தோட்ட நிர்வாக அதிகாரியே. இதன் மூலம் தொழிலாளர்கள் சுதந்திரமாக செயல்படாமல் அதிகாரியிடமே தங்கியிருக்கும் நிலைக்கு தள்ளப்படுகிறார்கள்.

உண்மை நிலைமை இவ்வாறு இருக்க தொழிலாளர் குடியிருப்பு விடயத்தில் கடந்த ஒரு மாத காலத்திற்குள் அளிக்கப்பட்ட வாக்குறுதிகளுக்கிடையேயும் பாரிய வித்தியாசங்களை அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது

எப்படியிருப்பினும், முன்னர் அளித்த வாக்குறுதியின் படி இனமத பேதமின்றி தோட்டத்தொழிலாளரின் குடியிருப்பும், அவர்கள் பயிர் செய்யும் காணியும் சொந்தமாக்கப்பட வேண்டும். இலங்கையில் ஏனைய பகுதிகளுக்கு குடியிருப்பும் காணிகளும் எவ்வாறு வழங்கப்படுகின்றதோ அதே முறையை இவர்கள் விடயத்திலும் பின்பற்ற வேண்டும். பின்வரும் அம்சங்களை உள்ளடக்கி ஒவ்வொரு குடும்பத்தினதும் தனித்துவமும் சுதந்திரமும் சிதையாத வகையில் தொழிலாளருக்கு குடியிருப்புகளை உடைமையாக்க வேண்டும்.

ஒவ்வொரு தொழிலாளர் குடும்பத்திற்கும் ஆகக் குறைந்தது 10 பேர்ச் காணி முறையான பத்திரங்களுடன் கொடுக்கப்பட்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதில் காலத்திற்கேற்ற, வாழ்வதற்குகந்த நவீன வீடுகள் அமைத்துக் கொடுக்கப்பட வேண்டும்.

தண்ணீர், மலசலகூட வசதிகள் தனித்தனியாக ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்.

மின்சார வசதிகள் செய்து கொடுக்கப்பட வேண்டும்.

ஒவ்வொரு தோட்டத்திலும் கூட்டுறவுக் கடை, வைத்திய சாலை, வாசிகசாலை போன்ற வசதிகள் அமைத்துக் கொடுக்கப்பட வேண்டும்.

குடியிருப்புகளுக்கான முறையான பாதை வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்.

ஒவ்வொரு தோட்டத்திலும் பாடசாலைகள் அமைத்து ஆசிரியர்கள் வசிப்பதற்கு அவசியமான இல்லங்களை அமைத்துத்தர வேண்டும்.

ஒவ்வொரு குடும்பத்திற்கும் உபரி வருமானம் கிடைப்பதற்கு ஏதுவாக பயிர்ச் செய்கைக்கென குறைந்தது 20 பேர்ச் காணியாவது சொந்தமாக்கப்படவேண்டும். அதாவது நடைமுறையிலிருக்கும் சுவர்ணபூமி, காணிப் பகிர்வு திட்டங்கள் போன்றவை தோட்டப் புறங்களிலும் அறிமுகப்படுத்தப்படவேண்டும்.

மேற்கூறிய அம்சங்களோடு, கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய அம்சம், தோட்டத் தொழிலாளருக்கு காணி வழங்கும் விடயத்தில் பரப்பப்படும் தப்பான பிரச்சாரங்களாகும். ஒரு சில அரசியல் தலைவர்கள் மதத் தலைவர்கள், அரச அதிகாரிகள் போன்றோர் மக்கள் வாக்குரிமை மட்டும் பெற்று விட்டால் போதாது, முறையானதும் முழுமையானதுமான வீட்டுரிமையும், காணி உரிமையும் பெற்றாக வேண்டும். அதற்கான துரித நடவடிக்கைகள் குறித்து தோட்டத் தொழிலாளர்கள் சிரத்தையோடு சிந்திக்க வேண்டும். அளிக்கப்படும் உரிமைகளை முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ளவும், ஆரோக்கியமான எதிர்கால மாற்றங்களை நாடவும், அவற்றை நடைமுறைப்படுத்தவும், தோட்டத் தொழிலாளர், தொழிற் சங்கங்கள், படித்த இளைஞர்கள், மதத் தலைவர்கள் சமூக ஸ்தாபனங்கள் யாவரும் ஒன்றுபட்டு உணர்வு பூர்வமாக செயல்பட முன்வர வேண்டும்.

(வீரகேசரி - 10-07-94)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 8.5. இரண்டாவது ஜனாதிபதித் தேர்தல்—1988

இரண்டாவது ஜனாதிபதித் தேர்தல் 1988ம் ஆண்டு டிசம்பர் மாதம் 19ம் திகதி நடை பெற்றது. இந்த தேர்தலில் அப்போதைய பிரதம மந்திரி ரணசிங்க பிரேமதாச ஐ. தே. கட்சி சார்பிலும் திருமதி சிறிமா பண்டாரநாயக்க ஸ்ரீ. ல. சு. கட்சி சார்பிலும், திரு ஒசி அபேய குணவர்த்தனா ஸ்ரீல மஹஜன கட்சி சார்பிலும் போட்டியிட்டனர். இந்த தேர்தலை தமிழ் ஈழ விடுதலைப்புலிகளும், ஜே. வி. பி.யினரும் பகிஸ்கரித்தனர். இத்தேர்தல் பல வன் செயல்கள் மத்தியில் நடைபெற்றது. தேர்தல் தினத்தன்று 20 வாக்களிப்பு நிலையங்கள் தாக்கப்பட்டன. 10 பேர்கள் உயிர் இழந்தனர்

ஐ. தே. க. ஜனசவிய திட்டம், வறுமை ஒழிப்பு திட்டம் ஆகியவற்றை முன்வைத்தும், ஸ்ரீ.ல.சு.கட்சியுடன் இணைந்த 5 கட்சிகள் கொண்ட கூட்டு முன்னணி சிறுபான்மையினரின் உரிமைகள், தொழிலாளர் உரிமைகள் ஆகியவற்றை கருப்பொருளாக கொண்டும் பிரச்சாரம் செய்தன. ஸ்ரீ. ல. மஹஜன கட்சி கருப்பொருள் இல்லாமல் பொதுவாக பிரச்சாரம் செய்தது. இந்த தேர்தலில் இடதுசாரிக் கட்சிகள் திரு. ஒசீயை ஆதரிக்கும் நிலைக்கு தள்ளப்பட்டன. மலையகத்தில் திரு. தொண்டமான் ஐ. தே. கட்சியை சேர்ந்த திரு. பிரேமதாசாவை ஆதரித்தே பிரச்சாரம் செய்தார். அனைத்து பிரஜாவுரிமையற்ற இந்திய மக்களுக்கு பிரஜாவுரிமை அளிக்கப்படும் என்ற ரீதியில் பிரச்சாரம் செய்தார். இத்தேர்தலில் வாக்களிக்கக் கூடியதாக பதிவு செய்யப்பட்டிருந்த 9,375,742 பேரில் 5,186,233 பேரே வாக்களித்தனர். இது முழுத் தொகையின் 55.32 வீதமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அட்டவணை -8.2 ஜனாதிபதித் தேர்தல் –1988[9]**

| போட்டியிட்டோர் பெயர்கள் | போட்டியிட்ட கட்சிகள் | செல்லுபடியான வாக்குகள் வீதம் | பதியப்பட்டவாக்குகள்வீதம் |
|---|---|---|---|
| ஆர். பிரேமதாசா | ஐ.தே.க. | 2,569,199 | 50.43 |
| சிறிமாவோ பண்டார நாயக்கா | சி.ல சு.க. | 2,289,860 | 44.95 |
| ஒசி அபேயகுணசேகர | சி.ல.ம.மு. | 235,719 | 4.63 |
| வாக்களித்தோர் தொகை | | 5,186,223 | |
| நிராகரிக்கப்பட்ட வாக்கு | | 91,445 | |
| மேலதிக வாக்குகள் | | 279,339 | |
| பதியப்பட்ட வாக்குகள் | | 9,375,742 | |

## 8.6. மூன்றாவது ஜனாதிபதித் தேர்தல்-1994

1994ம் ஆண்டு நவம்பர் மாதம் 9ம் திகதி நடைபெற்ற ஜனாதிபத் தேர்தல் இலங்கை வரலாற்றில் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்படவேண்டிய ஒரு நிகழ்ச்சியாகும் கடந்த 17 வருடங்களாக நடைபெற்று வந்த தேர்தல்களில் முக்கிய அம்சங்களாக திகழ்ந்தவை, அரச வன்செயல்கள், கொலைகள் என்பதை யாருமே மறுக்க முடியாது. அவற்றின் ஒரு தொடர்ச்சியாகவே அக்டோபர் மாதம் 24ம் திகதி அதிகாலையில் ஐ தே. கட்சியின் ஜனாதிபதித் தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் ஏற்பட்ட குண்டுவெடிப்பும் அதில் விளைந்த உயிர் சேதங்களும் எமக்கு நிரூபிக்கின்றன. எப்படியாவது ஒரு காரணத்தை காட்டி நாட்டில் குழப்பத்தை ஏற்படுத்த காத்திருந்த எதிர்க்கட்சியினர் இச்சம்பவம் மூலமாக திரும்பவும் 1983ம் ஆண்டு இருண்ட ஜூலையைக் கொண்டு வந்து நாட்டை இரத்தக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசியலில் 80வீத பங்கை வகித்த பெரும்பான்மை சிங்கள அரசியல் வாதிகள் சிறுபான்மையினருடைய நலன்களைப் பற்றி சிந்திக்காமல் அதற்கு எதிர்மாறான, ஆசியலமைப்பு, தேர்தல் முறைகள் என்பவற்றை உருவாக்கியதன் மூலம் எமது நாட்டின் சிறுபான்மை மக்கள் இரண்டாந்தர பிரஜைகளாக்கப்பட்டார்கள்.

ஒரு நாட்டினதும், சமுதாயத்தினதும், சமூங்களினதும் ஜனநாயக வாழ்விற்கும், பாதுகாப்பிற்கும், பரஸ்பர புரிந்துணர்விற்கும், நிருவாக அமைப்பு முறைக்கும், சட்ட திட்டங்களும், ஒழுக்க நெறிக் கோவைகளும் கட்டாய தேவையாகும். இத்தேவைகளின் ஊற்றினையே ஆயசியல் அமைப்பு என்று அழைக்கிறோம். ஒரு அரசியல் அமைப்பானது ஒரு நாட்டின் சட்டமாக கருதப்படுவதால் அந்த நாட்டில் வாழுகின்ற பல இன மக்களுடைய மொழி, சமயம், கலாச்சாரம் முதலியவற்றை பாதிக்குமாகையால் அங்கு சகல இன மக்களும் பாதுகாப்போடும், ஜனநாயகத்தோடும் வாழ முடியாமல் போகின்றது. இதனால் இன்று எமது நாட்டுக்கு ஒரு நிரந்தரமானதும், சகல இன மக்களாலும் ஏற்றுக்கொள்ளக் கூடியதுமான அரசியலமைப்பும் தேர்தல் முறையும் தேவை என்பதை இந்நூல் எடுத்துக்காட்டுகிறது.

மலையக மக்களின் அரசியல் சுதந்திர வரலாற்றை புரட்டிப் பார்க்கும்போது பல உண்மைகள் தெளிவாகின்றன. 1920ம் ஆண்டு தொடங்கி 1948ம் ஆண்டு வரையும் அவர்கள் இலங்கையில் அரசியல் பலம் பொருந்தியவர்களாக இருந்துள்ளார்கள். அன்று அவர்களது பிரதிநிதிகள் தெரிந்தெடுக்கப்பட்டார்கள். மலையக மக்கள் தனித்துப் போட்டியிட்டார்கள். இதனால் தங்கள் உரிமையையும் தனித்துவத்தையும் தக்க வைத்துக் கொண்டார்கள். ஆனால் 1948ம் ஆண்டுக்குப்பின்பு அன்றைய மலையகத் தலைவர்களின் சுயநலத்தினாலும், தீர்க்க தரிசனமற்ற செய்கைகளாலும் அவர்கள் பெற்றிருந்த உரிமையை இழக்க வேண்டி வந்தது. இதைவிட தாங்கள் இலங்கையர் என்ற எண்ணத்தை மழுங்கடித்து, இவர்கள் இந்திய நாட்டவர்கள் என்ற கொள்கையை சில தலைவர்கள் வலுப்படுத்திக் கொண்டு வந்தார்கள். இதனால் இந்த தலைவர்கள் மத்தியில் ஒரு திடமான கொள்கை காணப்படவில்லை. அதாவது, இந்த மக்கள் இலங்கையிலேயே வாழ வேண்டும். அவர்களுக்கு எதிராக உருவாக்கப்பட்ட அநீதியான சட்டங்களுக்கு முழுமையான எதிர்ப்பு தெரிவிக்காது போனால் இவர்கள் பெற்ற அரசியல் உரிமைகளை படிப்படியாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இழந்து விடுவார்கள் என்ற திடமான கொள்கை இந்த தலைவர்கள் மத்தியில் இருக்கவில்லை.

1977ம் ஆண்டுவரையும் அரசியல் அநாதைகளாக ஆளுங் கட்சியின் விருப்பு வெறுப்புகளுக்கு ஏற்றவாறு நடத்தப்பட்டார்கள். பின்பு இவர்கள் படிப்படியாக தங்கள் அரசியல் பலத்தை உருவாக்கும் வேளையில், இவர்களும் ஒரு தனித் தேசிய இனம் என்ற கொள்கையை வலியுறுத்துவதற்குப் பதிலாக, தலைவர்கள் இவர்களை கூறுபோட்டு, இவர்களின் சந்தாவையும், வாக்குகளையும் பெற்று, இவர்களுடைய நலனை பேணுவதற்குப் பதிலாக தங்களினதும், தங்களைச் சார்ந்தவர்களினதும் நலத்தை வளர்ப்பதில் ஈடுபட்டிருந்தனர்.

கடந்த காலங்களில் இவர்கள், வாக்களிக்கும் இயந்திரமாக இருந்தார்களே தவிர, தங்கள் வாக்குகள் மூலமாக அவர்களுடைய நலன்களை பெறுவதற்கோ, மற்ற மக்களைப் போல் சமத்துவமாக வாழ்வதற்கோ தேவையான ஆக்க முயற்சி எதுவும் இத்தலைவர்காளல் மேற்கொள்ளப்படவில்லை என்றே கூறவேண்டும். இதைவிட 3 இலட்சத்திற்கு மேலானோர் எவ்வித உரிமையுமற்றவர்களாக வாழ்ந்து கொண்டிருப்பது ஒரு கேலிக்கூத்தாகவே உள்ளது. இவர்களை தவிர்த்து ஏனையோரும் இன்னமும் முழுமையான அரசியலில் ஈடுபடுவதற்கு தடைகள் இருந்துகொண்டே இருக்கின்றன. வாக்காளர் இடாப்பு தயாரிக்கப்படும்போது இவர்களின் பெயர்கள் வேண்டுமென்றே தவிர்க்கப்படுகின்றன; தேர்தல் முறையை சரியாக புரிந்து கொள்ளாதபடியால் பெரும்பான்மை வாக்குகள் நிராகரிக்கப்படுகின்றன; வாக்களித்தும் பிரயோசனம் என்ன என்ற விரக்தி மனப்பான்மை, தேர்தல்களை புறக்கணிக்கவும் செய்கிறது.

ஏனைய சமூகத்தைச் சேர்ந்த பெண்கள் மிக வேகமாக முன்னேறி வரும் காலகட்டமிது. ஆனால் மலையக பெண்களின் வாழ்விலே எவ்வித முன்னேற்றமும் இல்லை. (1991ம்) ஆண்டு நடைபெற்ற உள்ளூராட்சித் தேர்தலில் தேர்ந்தெடுக்கப்பட்ட 167 மலையக அங்கத்தினர் மத்தியில் ஒரு மலையக பெண்ணும் இடம் பெறவில்லை என்பது மிகவும் கவலைக்குரிய விடயமாகும். இதைவிட, தோட்டக் கமிட்டியிலோ, பாடசாலை, அபிவிருத்தி சபையிலோ கோவில் நிர்வாகக் குழுவிலோ பெண்களுக்கு எவ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வித பங்குமில்லை, சமுதாயத்தில் சம உரிமையும் இல்லை. ஆனால் குடும்பத்திற்கோ நாட்டின் பெருமளவு பொருளாதார வளர்ச்சிக்கோ அதிகளவு பங்களிப்பு அளித்தவர்கள், அளிக்கிற வர்கள் மலையகப் பெண்கள் என்பது யாவரும் அறிந்த உண்மை

மலையக மக்களின் விடுதலைக்கும், முன்னேற்றத்திற்கும் பெண்களின் பங்கு மிக அவசியம் என்பதை உணர்ந்து அவர்களுக்கு அறிவைக் கொடுக்க வேண்டும். நியாயங்கள், உரிமைகள் போன்ற தார்ப்பரியங்களை அவர்கள் முழுமையாக புரிந்து கொண்டால் நிட்சயம் அவர்களது வாழ்வில் சுபிட்சம் ஏற்படும். ஆகவே மலையக மக்கள், அரசியல் வாழ்வைப் பொறுத்த மட்டில், மற்றவர்களில் சார்ந்து நிற்பதை தவிர்த்து, தங்கள் தனித்துவத்தை உறுதிப் படுத்த வேண்டும். எமது நாட்டின் அரசியலில் அவர்களுக்கு ஒரு முக்கிய பங்கு உண்டென்பதை உணர்ந்து, தங்கள் சக்தியை ஒன்று திரட்டி நாட்டின் ஏனைய மக்களைப் போல் மனித மாண்புடன் தமது வாழ்க்கையை நடத்த முன் வருவதே அவர்களது பிரதான இலட்சியமாக இருக்க வேண்டும்.

○

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பார்வைக் குறிப்புகள்

## முதலாம் அத்தியாயம்

1. Roberts michael Ed. collective Indentities, Nationalisms and Protest in Modern S.L., Marga Ilnstitute. 1979, p.79

2. Chattopadhyoya, H.P., Indians in S. L , Calcutta, 1979, p. 106

3. மேற்படி-பககம் 123

4. மேற்படி - பக்கம் 123

5. Bandarage Asoka, Colonialism in S. L., Colombo 1985 p 88

6. மேற்படி - பக்கம் 19

7. கிதபொன்கலன், ச. பௌத்த சிங்களவரும் சிறுபான்மையினரும் சென்னை, 1987, பக்கம் 53

8. மேற்படி - பக்கம் 60

9. சி. வி, வேலுப்பிள்ளை

## இரண்டாம் அத்தியாயம்

1. சிவராசா அம்பலவாணர், நவீன அரசியற் கோட்பாடுகள் யாழ்ப்பாணம், 1989, பக்கம் 15

2. மேற்படி - பக்கம் 124

3. கோமதிநாயகம் பி. தற்கால அரசியற் கொள்கைகள் மதுரை, 1984, பக்கம் 25

4. மேற்படி - பக்கம் 34

5 Democracy in S. L., Logos 26 No, 2, August 1987 p 80

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. சந்திரசேகரன், சோ, 'இலங்கை இந்திய வரலாறு' மதுரை 1989 பக்கம். 178.

7. முன் நூல் (1) பக்கம் 125,

8. பலரிடம் எல்லா... கமிட்டின்

## மூன்றாம் அத்தியாயம்

1. The Planters' Association of Ceylon 1854-1954, Times of Ceylon, 1954, p. 2.

2. Forrzst, D, M , A hundred years of Ceylon Tea (1886-1967), London, 1967, p, 27.

3. De Silva, K. M., Universal Franchise 1931-1981, 1981, p.4

4. முன் நூல் (3)-பக்கம் 5

5. ,, ,, 36

6. ,, ,, 38

7. ,, ,, 40

8. ,, ,, 32

9. De. Silva, G.P.S.H., A Statistical survey of Elections of the legistative of S.L., 1911 -1977, Colombo, 1979, p ix

10. முன் நூல்—பக்கம் 88

11. கருணாநிதி மூ., சிறையில் பூத்த சின்னமலர்கள். பக்கம். 11

## நான்காம் அத்தியாயம்

1. Perera. Niranjan V. The P R. Electoral system of S L A. An Analysis, Logos, June 1988 No. 2 Vol 27

2. De Silva; K. M. Universal Franchise, 1931-1981, p. 102,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. மேற்படி—பக்கம் 78

4. Kodikara, S. U., Indo-Ceylon Relations Since independence Colombo, p. 79

5. உதய மூர்த்தி எம். எஸ். தலைவன் ஒரு சிந்தனை பக். 39

6. அரசாங்க செயல்கள்

7. தேசத்தை பாதிக்கும்

8. கணேபன், பி.சி பெண்களே நீங்கள் முன்னேற வேண்டாமா? பக் 7


## ஐந்தாம் அத்தியாயம்


1. சித பொன்கலன், ச., பௌத்த சிங்களவரும் சிறுபான்மை யினரும், சென்னை, பக்கம் 40

2. De Silva, G.P.S. H, A statistical survey of Elections to the legislatives of S. L, 1911-1977, p.301

3 மேற்படி- பக்கம். 97, 106


## ஆறாவது அத்தியாயம்

1. 1970ம் ஆண்டு இலங்கையில், 12 மாநகர சபைகள், 34 நகர சபைகள், 86 பட்டின சபைகள், 540 கிராம சபைகள் என மொத்தம் 672 உள்ளூராட்சி அமைப்புகள் இருந்தன.


2. Proposals (White Paper) for the Establishment of district Councils, June 1968, p.p 5-7

3. Vide Local Authorities Elections Amendment Bill (Debate) Hansard, Vol 46, 1987, Column 1 ,1315


4. 1980ம் ஆண்டு 540 கிராம சபைகளும், 86 பட்டின சபைகளும் கலைக்கப்பட்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. 1987ம் ஆண்டிற்கான தேர்தல் ஆணையாளரின் நிருவாக அறிக்கை, ஜூன் 1988, பக்கம்,7

6. 1988ம் ஆண்டிற்கான தேர்தல் ஆணையாளரின் நிருவாக அறிக்கை, செப்டெம்பர் 1989, பக்கம் 10

7. 1991ம் ஆண்டிற்கான தேர்தல் ஆணையாளரின் நிருவாக அறிக்கை, 1992 பெப்ரவரி, பக்கம்.y5

8. மேற்படி - ஒன்று திரட்டப்பட்டது.

## ஏழாம் அத்தியாயம்

1. De Silva K. M., Universal Franchise 1931-1981 p 89

2. Nadesan, S. A , History of the up Country Tamil People

3. De Silva, G. P. S. H., A. Statistical Survey of Elections to the legislatives of S.L.

4. மு. நூ. (2), பக்கம்.151

5. Abeynaike, H. B. W Parliament of SL p. 547 Lake house

6. முன் நூல் (2) பக்கம்.161

7. மேற்படி - பக்கம்.349

8. முன் நூல் [2), பக்கம்.367

9. முன் நூல் (5), பக்கம்.549

10. முன் நூல் (5] பக்கம்.350

11. முன் நூல் [5] பக்கம். 352

12. முன் நூல் (5), பக்கம்.353

13. முன் நூல் [2), பக்கம்.213

14. முன் நூல் (6), பக்கம்.354

15. Ponnambalam Satchi. Sri Lanka the National Question and the Struggle p.164

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

16. கீத பொன்கலன், பௌத்த சிங்களவரும் சிறுபான்மையின ரும் சென்னை, பக்கம் 81

17. முன் நூல் (2) பக்கம் 218

18. Tribune, 23 July 1977 p 6

19. Jannocon, C., (Fr). One week of Terror, Satydoya, Bulletin, Nov, 1977, Kandy p-7

20. முன் நூல் (5) பக்கம் 355

21. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பு, அரசினர் ஆணைபபடி அச்சிடப்பட்டது, 1978 பக்கம் 355

22. முன் நூல் 19 அத்தியாயம் V பிரசாவுரிமை 16 இல 26

23. இருபதாம் நூற்றாண்டின் குள்ள நரி என்று உலகம் இவரை வர்ணித்தது

24. De. Silva, W. P. P. 9th Parliament of Sri Lanka, Lake House, Colombo, p49

25. முன் நூல் (24) ஒன்று சேர்க்கப்பட்டது.

26. முன் நூல் (21), பக்கம் 69

27. முன் நூல் (24) பக்கம் 134

28. Island Paper, 26th Feb 1989

29. முன் நூல் (24) ஒன்று திரட்டப்பட்டது.

30 போராட்டமே வாழ்க்கை

32. அரசியலில் பிறர்...

31. இக்கால ..

33. அரசியல் தரும்... ரால்ப் வால்டோ எமர்சன்

**எட்டாம் அத்தியாயம்**

1. Wilson A.J., The Gaullish System in Asia. The Constitution of S. L., 1978, Macmillan, London, 1979, P.46

. Third Amendment Bill, Gazetted on 22nd July 1982, Ceylon Daily News of 15th August 1982,

4. Presidential Elections Act No, 15 of 1985, Section 5

5. Warnapala Wiswa, W, A., Recent Politics in S, L, Navrang & Hewagama Dias, L., New Delhi, 1983 p39

6. Presidantial Election Act No. 19 of 1981

7 The Presidential Poll, Economic Review, Sep 1982, p,39

8. முன் நூல் (5) ப, 56

9. De Silva, W. P. P, Ferdinand T.C.L (Compliers) 9th Parliament of S.L., Lake House Colomdo 1989? P. 48.

10. மேற்படி-பக்கம் 43 தொடக்கம் 46 வரை

11. வாஸந்தி, மல்லிகை நவம்பர்-4. பக் 78

## ஒன்பதாம் அத்தியாயம்

1. Sunday Obeserver 24. 10. 1982,

2 Daily News, 10, 11, 1981

3. Daily News, 10, 11, 1981. திரு. தொண்டமான் 9,11,81. அன்று நடைபெற்ற கூட்டத்தில் கூறியது.

4. 1921ம் ஆண்டு மருத்துவ தேவை சட்டத்தின் பிரகாரம் மலையகத் தொழிலாளர் ஒருவருக்கு 50 சதம் ஒதுக்கப்பட்டுள்ளது!

5. சனாதிபதி ஜே. ஆர். ஜயவர்த்தனா, 11-09-1982 தோட்டச் சபையின் வருடாந்த கூட்டத்தில் கூறியது.

6. Island Paper, 15-11-1982

7. Islanu Paper, 14-10-1982

8. Abenayake H. B. W., Parliament of S.L. Lake House group, 1987? p.41-64 compiled by the author

9. Warnapala wiswa, W.A., Recent Politics in S.L Navrang, Hewagama Dias. S.L., New Delhi 1983, p.126

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10. Ceylon Daily News, November 18, 1982 Chief Justices' letter to President.

11. முன் நூல் (9) ப.145-146

12. ஜனநாயகம்...

**பத்தாம் அத்தியாயம்**

1. கீத பொன்கலன்ச., பௌத்த சிங்களவரும் சிறுபான்மையினரும், சென்னை, 1987, ப, 297

2, மேற்படி - ப. 339

3. 13th Amendment to the Constitution, Oct. 1987

4. 1988ம் ஆண்டின் இரண்டாம் இலக்க மாகாண சபைத் தேர்தல் சட்டம்

5' LEITAN TRESSIE G. R, Political Integration though Decenralization and devolution of power, the SRI Lankan Experience, Colombo 1990 p 18

6. வீரகேசரி - 18.05-1993

7. வீரகேசரி பத்திரிகைகளில் இருந்து ஆசிரியரால் தொகுக்கப்பட்டது.

8. வீரகேசரி - 25, 05, 1993

**பதினோராம் அத்தியாயம்**

1. Zafrullah, H. M.. Sri Lanka's Hybrid Presidential & Parliamentary System Kolala Lumpur, 1981, p.3

2, Report of the Delimitation Commission, 1976, p.4

3. இலங்கை சனநாயக சோசலிஷக் குடியரசின் அரசியலமைப்பு, 1978 - உறுப்புரை 95, 96, p.69

4. முன் நூல் (2) - p.6

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. ɪne P. R. Electoral System-An Analysis, Logos, June 1988 No2, Vol 27, p 22

6. மேற்படி-V 27

7. முன் நூல் (3)-p


## பன்னிரண்டாம் அத்தியாயம்


1 தேர்தல் ஆணையாளரின் பல அறிக்கைகளிலிருந்து ஒன்று சேர்க்கப்பட்டது.

2. Island Paper- 14th August 1994

3. Social Justice 87, Vol-28, No, 06, June 1994, P.4

4. Island Paper - 6th July 1994

5. De Silva, K.M, Universal Franchise 1931-1981, The Sri Lankan Experience, Colombo, 1981 P. 89

6. பலவேறு ஆவணங்களிலிருந்து ஆசிரியரால் தொகுக்கப்பட்டது

7. தேர்தல் ஆணையாளரின் அறிக்கைகளிலிருந்து ஆசிரியரால் தொகுக்கப்பட்டது.

8: Ponnambalam Satchi, Sri Lanka, The National Question and the Tamil Liberation Struggle London, 1983, P. 72.


## பதின்மூன்றாம் அத்தியாயம்


1, De Silva, K M, Universal Franchise 1931-1981, The Sri Lankan Experience, Colombo 1981 p 66

2. வீரகேசரி பத்திரிகை 02, 09, 1994

3. De Silva, W.P.L, Ferdinandor T. C. L Compilers — 9th Parliament Of Sri Lanka Lake House Colombo p 49

4. மீனாட்சியம்மாள் கோ — இந்தியர்களது இலங்கை வாழ்க்கையின் நிலை Reprint WERC Colombo ப 3

5. Island Paper— 25 th August 1994

6. அரசாங்க கலை ஜார்ஜ் பெர்னாட் ஷா


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பின் இணைப்பு 1

**உள்ளூராட்சித் தேர்தல் 1991 மலையக பிரதிநிதிகள்—மாநகரசபை**

| மாவட்டம் | அங்கத்தினர் பெயர் | பி. முதல்வர் உறுப்பினர் | கட்சி | வாக்குகள் | இடம் |
|---|---|---|---|---|---|
| கண்டி | து. மதியுகராஜா | உ | ஐ.தே.க. | 3308 | 4வது |
| மாத்தளை | மு. சிவஞானம் | பி மு | ,, | 2723 | 3வது |
| | ந. கனகரத்தினம் | உ | ,, | 2099 | 7வது |
| நுவரேலியா | வி. கிருஷ்ணசாமி | பி மு | ,, | 1605 | 6வது |
| | மா. தனுஷ்கோடி | உ | ,, | 2341 | 3வது |
| | நேருஜி | உ | சுயேட்சை | 948 | 9வது |
| பதுளை | சு. சுவாமிநாதன் | பிமு | ஐ.தே.க. | 1881 | 4வது |
| இரத்தினபுரி | ச. சிவலிங்கம் | உ | ,, | 1043 | கடைசி |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நகரசபை

| தொகுதிகள் | அங்கத்தினர் பெயர் | து. தவிசாளர் உறுப்பினர் | கட்சி | வாக்குகள் | இடம் |
|---|---|---|---|---|---|
| வத்தேகம | வை, சிதம்பரம் பிள்ளை | உ | ஐ.தே.க. | 418 | 8வது |
| கம்பளை | பெ. லட்சுமணன் | உ | ,, | 1131 | 5வது |
| நாவலப்பிட்டி | ஞா. சூசை | உ | ,, | 404 | — |
| | ச. செல்லையா | உ | சுயேட்சை | 1456 | 3வது |
| தலவாகொல்லை | கோ. பொ. கந்தசாமி | து.த. | ஐ.தே.க. | 859 | 2வது |
| | ம. துரைசாமி | உ | ,, | 433 | 4வது |
| | சு. கருப்பையா | உ | சுயேட்சை | 3(6 | 6வது |
| பண்டாரவளை | சோ. சத்தியமூர்த்தி | து.த. | ஐ.தே.க. | 280 | 7வது |
| | த. க. ராமசாமி | உ | ,, | 350 | 4வது |
| | பெ. கோ ராமசாமி | உ | ,, | 338 | 5வது |
| ஹட்டன் | ந. அகலமுத்து | து.த. | ,, | 1603 | 3வது |
| | தா. கருப்பையா | உ | ,, | 1316 | 4வது |
| | ரா. முருகையா | உ | ,, | 557 | 6வது |
| | ரா. வேலாயுதம் | உ | ,, | 434 | சடைசி |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிரதேசசபை

| தொகுதிகள் | அங்கத்தினர் பெயர் | துதவிசாளர் /உறுப்பினர் | கட்சி | வாக்குகள் | இடம் |
|---|---|---|---|---|---|
| அக்குரணை | ரா. நாராயணசாமி | உ | ஐ தே. க | 1564 | 2 வது |
| பன்வில | சி. காளிமுத்து | து.த. | ஐ.தே.க | 2259 | 2 |
| | கி. செல்லச்சாமி | உ | ஐ தே க | 2540 | 1 |
| | ப. சத்தியவேல் | உ | ஐ.தே. க | 1953 | 3 |
| | அ. ஜோசப் | உ | ஐ.தே. க | 1635 | 5 |
| உடுதும்பர | ந. பெருமாள் | உ | ஐ.தே. க | 1872 | 2 |
| மெததும்பர | பா. சின்னையா | உ | ஐ.தே. க | 3096 | 2 |
| ப. ஹேவாகெட்ட | மா. வைத்தியலிங்கம் பிள்ளை | உ | ஐ.தே.க | 2992 | 2 |
| உடபலாத்த | க. பெருமாள் | து த. | ஐ.தே த | 3617 | 2 |
| | வி. சத்தியசுந்தரம் | உ | ஐ.தே க | 3150 | 6 |
| | மு. கருப்பையா | உ | ஐ.தே.க | 3026 | 8 |
| பஸ்பாகே கோராள | ரா. வேலு | து.த. | ஐ.தே.க | 2366 | 1 |
| அப்பன் | து. சண்முகம் | து.த. | ஐ.தே.க | 2203 | 1 |
| காஸ்க கோராள | அ. பென்சமின் | உ | ஐ.தே.க | 808 | 8 |
| மாத்தளை | ர. கத்தையா | உ | ஐ.தே.க | 975 | 7 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| தொகுதிகள் | அங்கத்ததினர் பெயர் | து. தவி, சளார் / உறுப்பினர் | கட்சி | வாக்குகள் | இடம் |
|---|---|---|---|---|---|
| ரத்தோட்டை | சு. செல்லையா | து.த | ஐ.தே.க | 4158 | 1 |
| | யொ. சந்தானம் | உ | ஐ.தே.க | 2015 | 11 |
| உக்குவெல | ரா. அருச்சுனன் | உ | ஐ.தே.க | 1791 | 4 |
| அம்பேகமுவ | ஜெ. சண்முகம் | த | இ.தொ.கா | 4864 | 3 |
| | ச. வீரமலை | உ | இ.தொ.கா | 7469 | 1 |
| | சி. ஆறுமுகம் | உ | இ.தொ.கா | 4667 | 4 |
| | ர. ராசையா | உ | இ.தொ.கா | 3691 | 5 |
| | அ. கி. ஜோசே | உ | இ.தொ.கா | 3664 | 7 |
| | ர. கந்தன் | உ | இ.தொ.கா | 3544 | 9 |
| | லோ. வேலு | உ | இ.தொ.கா | 3533 | 10 |
| | வே. சுகிர்தம் | உ | இ.தொ.கா | 3083 | 12 |
| | செ. ஆறுமுகம் | உ | இ.தொ.கா | 3019 | 13 |
| | வே. வேலு | உ | இ.தொ.கா | 2872 | 14 |
| | பொ. சுப்பையா | உ | இ.தொ.கா | 2412 | 20 |
| | சி. செல்லையா | உ | ஸ்ரீ.ல.சு.க. | 2297 | 21 |
| | க. கணபதி | உ | சுயேட்சை | 2798 | 16 |
| | அ. சவரியார் | உ | சுயேட்சை | 1520 | 22 |
| | ஐ. கருப்பையா | உ | சுயேட்சை | 1498 | 23 |
| நுவரேலியா | ரா. வேலுசாமி | த. | இ.தொ.கா. | 12499 | 1வது |
| | மு. ராமு | து.த. | இ.தொ.கா | 613 | 6 |
| | செ. குருசாமி | உ | இ.தொ.கா | 5705 | 3 |
| | க. செங்கோடன் | உ | இ.தொ.கா | 3812 | 4 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| தொகுதிகள் | அங்கத்தினர் பெயர் | துதவி சாளர் /உறுப் பினர் | கட்சி | வாக்கு கள் | இடம் |
|---|---|---|---|---|---|
| | ந. அம்மாசி | உ | இ.தொ.கா | 3802 | 5 |
| | அ. சரவனமுத்து | உ | ,, | 3612 | 7 |
| | மா. பூச்சி | உ | ,, | 3093 | 8 |
| | கோ. சுப்பையா | உ | ,, | 2942 | |
| | வே.சுப்பையா | உ | ,, | 2932 | |
| | டே. சந்தனம் | உ | ,, | 2750 | |
| | ரா.ரா.நல்லன் | உ | ,, | 2531 | |
| | ரா.சிதம்பரம் பிள்ளை | உ | இ.தொ.கா | 2508 | |
| | ஜெ.துரைசாமி | உ | இ.தொ.கா | 2268 | |
| | ப.ஐயாசாமி | உ | இ.தொ.கா | 2261 | |
| | நா.சின்னையா | உ | இ.தொ.கா | 2194 | |
| | வீ.ரி. தர்மலிங்கம் | உ | சுயேட்சை | 7952 | 2 |
| | பா.சத்தியநாதன் | உ | சுயேட்சை | 1902 | |
| | பா.சண்முகம் | உ | சுயேட்சை | 1747 | |
| | ச.நடேசன் | உ | சுயேட்சை | 1712 | |
| கொத்மலை | க.துஞ்சப்பன் | துத | ஐ.தே.க. | 3239 | 3 |
| | ச. அருணாசலம் | உ | ,, | 4246 | 1 |
| | ம.ராமையா | உ | ,, | 3319 | 2 |
| | ரா.ராமசாமி | உ | ,, | 2746 | 8 |
| | ரெ.குட்டன் | உ | ,, | 1902 | 18 |
| | ச.ராமையா | உ | ,, | 1763 | 20 |
| | ரா.குமாரப்பிள்ளை | உ | ,, | 1566 | |
| அங்குராங் கெத்த | து.வியோ | உ | ,, | 2450 | 4 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| தொகுதிகள் | அங்கத்தினர் பெயர் | துதவிசளர் /உறுப்பினர் | கட்சி | வாக்குகள் | இடம் |
|---|---|---|---|---|---|
| | ர.குமாரன் | உ | ஐ. தே.க. | 2025 | 6 |
| | தி. ராமசாமி | உ | ,, | 1666 | 15 |
| வலப்பனை | செ.கந்தசாமி | து.த, | ,, | 2299 | 1 |
| | த. மெய்யப்பன் | உ | ,, | 3580 | 3 |
| | ப, காளிமுத்து | உ | ,, | 3247 | 4 |
| | சி. ராமையா | உ | ,, | 3231 | 5 |
| | பா. அழகர் | உ | ,, | 2203 | 12 |
| | ந. கலப்பன் | உ | ,, | 1719 | 13 |
| குருநாகல் | தி. சந்தனம் | உ | ,, | 533 | 8 |
| சிலாபம் | பொ. கனகசபை | உ | ,, | 1825 | 11 |
| சொரணாதொட்ட | இ. மாரிமுத்து | உ | ,, | 2387 | 2 |
| | ரா. பு. ரங்கசாமி | உ | ,, | 1365 | 2 |
| பசறை | ம. சோனமுத்து | து.த. | ,, | 3678 | 2 |
| | ப. செல்லையா | உ | ,, | 3580 | 3 |
| | மு, அடைக்கலம் | உ | ,, | 3103 | 4 |
| | ஜே.சந்தானம் | உ | ,, | 2583 | |
| | பா.ச.சுப்பையா | உ | ,, | 2511 | |
| | பெ.ராமசாமி | உ | ,, | 1761 | |
| | யோ.முனியப்பன் | உ | ,, | 1270 | |
| பதுளை | மா.கருப்பையா | து த | ,, | 3216 | |
| | சு.அடைக்கலம் | உ | ,, | 2969 | |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| தொகுதிகள் | அங்கத்தினர் பெயர் | து.தவிசாளர் /உறுப்பினர் | கட்சி | வாக்குகள் | இடம் |
|---|---|---|---|---|---|
| ஹாலி எல | த. அருணாசலம் | து த | ஐ.தே.க | 3467 | 1 |
| | கு. ஜே சின்னச்சாமி | உ | | 3198 | 3 |
| | ந. அபிமன்னன் | உ | | 2835 | 4 |
| | கு. வேலுசாமி | உ | ந.ச.ச.க | 776 | கடைசி |
| ஊவாபரணகம | தி. கந்தையா | உ | ஐ.தே.க | 5791 | 2 |
| வெலிமடை | சோ. சே. கருப்பையா | உ | ஐ.தே.க | 2777 | 6 |
| பண்டார-வளை | செ. நடேசன் | உ | ஐ.தே.க | 4036 | 2 |
| எல்ல | ஹ. ராமன் | து த | ஐ.தே.க | 5273 | 1 |
| | மா. மெய்யன் | உ | | 1878 | 4 |
| அப்புதளை |ச. சங்கிலி | து த | ஐ.தே.க | 3483 | 2 |
| | வி. கந்தசாமி | உ | | 2650 | 3 |
| | ரா. கந்தசாமி | உ | | 1459 | 6 |
| | தி. ராசலிங்கம் | உ | ந.ச.ச.க | 874 | கடைசி |
| ஹல்த-முல்லை | சு. சங்கர நாயர் | து த | ஐ.தே.க | 3885 | 1 |
| | சி. போ. ராமசாமி | உ | ஐ தே.க | 2701 | 3 |
| இரத்தினபுரி | ரா. சுப்ரமணியம் | து த | ஐ.தே.க | 20 4 | 3 |
| பலாங்-கொடை | ரா. சுப்பையா | உ | ஐ.தே.க | 3237 | 1 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| தொகுதிகள் | அங்கத்தினர் பெயர் | து.தவி சாளர் உறுப் பினர் | கட்சி | வாக்கு கள் | இடம் |
|---|---|---|---|---|---|
| அட்டகலன் பன்ன | ஆ.பெரியசாமி | உ | ஐ.தே.க | 1932 | 13 |
| | மு.புச்சமுத்து | உ | ,, | 18471 | 4 |
| நிவித்திகல | நா.ராமன் | உ | ,, | 3058 | 8 |
| எட்டியாந் தோட்ட | மு.கந்தன் | து த | ,, | 5467 | 1 |
| ஹவான்வெல | வி.சபாபதி | உ | ,, | 1488 | |
| தெனியாய | ர.செல்லத்துரை | து த | ,, | 3147 | 3 |
| தெஹியோ விட்ட | பா.நாராயணன் | உ | ,, | 2716 | 3 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின் இணைப்பு — 2

# மலையக பிரதிநிதிகள் 1920-1994

## அ. சட்டசபை

### 1. சட்டசபை 1920-1924

★ முதல் இந்திய பிரதிநிதிகள்: ஈ.ஜி.அடமலனி, ஐ,எக்ஸ்,பெரேரா

★ இரண்டாவது இந்திய பிரதிநிதி: எஸ். ஆர். மொகமட் சுல்தான் இவரைப் பின் பற்றி கே. நடேச ஐயர் இரண்டாவது அங்கத்தவரானார். இச்சபையில் 14 உத்தியோக பூர்வ அங்கத்தினரும், 23 உத்தியோக பூர்வமற்ற அங்கத்தினரும் இடம் பெற்றனர்.

### 2. சட்ட சபை 1925-1930

முதல் இந்திய பிரதிநிதியாக ஐ.எக்ஸ். பெரேராவும் இரண்டாவது இந்திய பிரதிநிதியாக கே. நடேச ஐயரும் இடம் பெற்றனர், இச்சபையில் உத்தியோக பூர்வமான அங்கத்தினர் 12 பேரும், உத்தியோக பூர்வமற்ற அங்கத்தினர் 37 பேரும் இருந்தனர்.

## ஆ. அரசசபை

### 1. முதலாவது அரச சபை 1931 - 1935

பண்டாரவளை : பெலோஸ் கோடன்ட் அப்டி
தலவாக்கொல்லை ; வைத்தியலிங்கம், சிதம்பரம்பிள்ளை
ஹற்றன் : பெரிய சுந்தரம், தொழிற்துறை, வணிகத்துறை மந்திரியாக நியமிக்கப்பட்டிருந்தார்.

### 2) இரண்டாவது அரச சபை 1936-1947

ஹற்றன் : கே. நடேச ஐயர்,

பண்டாரவளை : ஜோன் லெடெஸ்ரன், இவர் 1943ல் நடந்த இடைத் தேர்தலில் தெரியப்பட்டார். தொழிற்துறை, வணிகத் துறை மந்திரியாகவும் நியமிக்கப்பட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலவாக்கொல்லை : வைத்தியலிங்கம் சிதம்பரம் பிள்ளை
இவர் நியமன அங்கத்தவராவார்

ஐ. எக்ஸ். பெரேரா, திவான் பகதூர் பட்டம் பெற்றிருந்தார்

## இ. பாராளுமன்றம்

### 1) முதலாவது பாராளுமன்றம் 1147 - 1151

இலங்கை இந்தியா காங்கிரஸ் (C.I.C) என்ற கட்சியின் கீழ்,
பதுளையில் எஸ். எஸ். சுப்பையா
கொட்ட கலையில் குமார வேலு,
மஸ்கெலியாவில் சி. ஆர். மேத்தா
நாவலப்பிட்டியில் ஆர். இராசலிங்கம்.
நுரளையில் ஆர். எஸ். தொண்டமான்,
தலவாக்கொல்லையில் சி. வி. வேலுப்பிள்ளை
பண்டார வளையில் கே. வி. நடராஜா பிரதிநிதிகளாயிருந்தனர்.

### 2. இரண்டாவது பாராளுமன்றம் 1951-1956

எஸ். வைத்தியலிங்கம் நியமன அங்கத்தவராயிருந்தார்.

### 3. மூன்றாவது பாராளுமன்றம் 1956-1960

இந்த கால கட்டத்தில் எவரும் இடம் பெற வில்லை.

### 4. நாலாவது பாராளுமன்றம் 1960 (மார்ச் தேர்தல்)

இலங்கை ஜனநாயக காங்கிரஸ் (C. D. C) கட்சியின் கீழ் போட்டியிட்ட தொண்டமான் (நுவரேலியா) வீ.கே. வெள்ளையன் [மஸ்கெலியா] ஏ. அசீஸ் (கொழும்பு) மூவரும் தோல்வியுற்றனர். எனவே எவரும் இடம் பெறவில்லை.

### 5. ஐந்தாவது பாராளுமன்றம் 1960-1965 (ஜூலை)

இத்தேர்தலிலும் எவரும் வெற்றி பெற வில்லை. ஆனால் எஸ். தொண்டமான் நியமன அங்கத்தவராகவும், எஸ். ஜேசுதாஸ் செனற்றராகவும் இடம் பெற்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 6. ஆறாவது பாராளுமன்றம் 1965-1970

வி. அண்ணாமலை, எஸ். தொண்டமான் இருவரும் நியமன அங்கத்தினராகவும் எஸ், ஜேசுதாஸ் செனற்றராகவும் இடம் பெற்றனர்.

## 7. ஏழாவது பாராளுமன்றம் 1970-1977

ஏ. அசீஸ் நியமன அங்கத்தவராக இடம் பெற்றார்.

## 8. எட்டாவது பாராளுமன்றம் 1977-1988

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் (C.W.C) கட்சியின் கீழ் எஸ். தொண்டமான் மூன்றாவது அங்கத்தினராக நுவரேலியா தேர்தல் தொகுதியில் தெரிவு செய்யப்பட்டார்.

## 9. ஒன்பதாவது பாராளுமன்றம் 1988-1994

எஸ் தொண்டமான், தேவராஜ் இருவரும் தேசிய பட்டியலி லும் செல்லச் சாமி கொழும்பில் 1991 சிவலிங்கம் நுவரேலியாவிலும் சென்னன் பதுளையிலும் தெரிவு செய்யப்பட்டனர்.

## 10. பத்தாவது பாராளுமன்றம் 1994

நுவரேலியா மாவட்டத்தில் ஐ.தே.கட்சியின் கீழ்போட்டியிட்ட முத்து சிவலிங்கம், எஸ் சதாசிவம், ஆறுமுகம் தொண்டமான், சுயேட்சையில் போட்டியிட்ட சந்திர சேகரன் தெரிவு செய்யப் பட்டனர்.

பதுளை மாவட்டத்தில் ஐ.தே.க. வில் போட்டியிட்ட வீரன் சென்னன் தெரிவு செய்யப்பட்டார். கண்டி மாவட்டத்தில் ஐ.தே.கவில் போட்டியிட்ட ஆர்.பி. சிவசாமி தெரிவு செய்யப் பட்டார். ஐ.தே. கவின் தேசிய பட்டியலில் எஸ். தொண்டமான் ராஜன் இருவரும் இடம் பெற்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்இணைப்பு-3

# உரிமைக்காக உயிர் நீத்தமர்கள்

கடிவாள மிட்ட குதிரையைப்போல் ஒரே திசையில் செலுத்தப் பட்டுவந்த மலையக மக்கள் மத்தியிருந்து ஒரு சிலரின் பார்வைகள் திசை திரும்பியபோது, தியாகத்தின் தூய மனம் இந்த மலை முகடு களைத் தொட்டு தழுவி ஊடுருவிச் சென்றுள்ளதை சரித்திர ஏடுகள் பதித்து வைத்துள்ளதை காணமுடிகிறது. தனக்காக, தன்குடும் பத்திற்காக மட்டும் வியர்வை சிந்தி, இரத்தம் சிந்தி உழைக்கும் மக்கள் மத்தியில் இந்த தியாகப்பூக்கள் பிறருக்காக இரத்தம் சிந்தி யுள்ளன. அவர்களின் உடம்பிலிருந்து வெளியேறிய வியர்வைத் துளி களும் கூட பிறர் நலனுக்காகவே பயன்பட்டுள்ளன. ''என் சமூகத் தின் விடியலுக்காக, வருங்கால சந்ததியினரின் நலனுக்காக கொடுப் பதற்கு என் உயிரைத் தவிர என்னிடம் வேறெதுவுமில்லை'' என்று மனமுவந்து உயிரைக் கொடுத்த உத்தமர்கள் இவர்கள். இவர்களை நாம் நினைவு கூர வேண்டும். சோர்ந்து போகும் நேரத்தில், கோழை யாய் மனம் உள்வாங்கும் தருணத்தில், இந்த தியாகச் செம்மல்களை நினைவு கூரவேண்டும். நாம் பிறந்த இந்த சமூகத்தின் நலனுக்காக தம்மாலான நற்பணியை செய்ய இவர்களது தன்னலமற்ற தியாகம், எமக்கு ஊக்கத்தைக் கொடுக்கும்.

''அடிபணிந்து வாழ் வதை விட
நிமிர்ந்து நின்று சாவதே மேல்'' — தாமஸ் புலவர்

| | |
|---|---|
| *1940*— | கோவிந்தன், முல்லோயா தோட்டம், ஹேவா ஹெட்ட, |
| *1942*— | வேலாயுதம், கந்தலா தோட்டம் புப்புரஸ்ஸ |
| *1950*— | வேலுசாமி, ,, ,, ,, |
| — | வெள்ளையன், மீரியாக்கொட்ட தோட்டம், சாமிமலை, |
| *1953*— | அட்லின் நோனா, எள்கெல்வெல தோட்டம் |
| — | ஆகியப்பன், மல்சொல்ல, நாவலப்பிட்டி |
| *1957*— | வைத்திலிங்கம், டெவன் பணியபத்தனை, தல வாக்கலை |
| — | நடேசன், வேறெயஸ் தோட்டம், இரத்தினபுரி |
| — | வேதன், வெப்டல் தோட்டம், நேபொட. |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| 1958— | நான்ஸில், பொகவந்தலாவ தோட்டம். |
| — | அய்யாவு, ,, ,, |
| — | கொம்பாண்டி, சென்மார்கிரட், உடபுசல்லாவை |
| — | பொன்னையா, ,, ,, ,, |
| — | ஏப்ரகாம் சிங்ஹோ, டயகம தோட்டம், அக்கர பத்தனை. |
| 1959— | காளக்கார முத்துசாமி, மாத்தளை, எல்கடுவ. |
| — | கருமலை, நல்ல தண்ணி தோட்டம் மஸ்கெலியா |
| 1960— | மாமுண்டி, வெற்றிலையூர், எட்டியாந் தோட்டை |
| — | சிதம்பரம், மல்லான, நிட்டம்புவ. |
| — | தங்கவேல், மூக்கலாஞ்சேனை, ரக்குவானை. |
| — | விஜயசேன, எல்லந்துளை, இங்கிரியா. |
| 1961— | நடேசன், லட்சுமி தோட்டம், நாவலப்பிட்டி |
| — | மாரியப்பன், ,, ,, ,, |
| — | ஆராயி, ,, ,, ,, |
| — | செல்லையா, ,, ,, ,, |
| — | சோலை, சின்ன கிலா போக்கு, மடுல்கலை. |
| 1969— | ரெங்கசாமி, கந்த நுவர, எல்கடுவ |
| — | அடிகள், ,, ,, ,, |
| 1970— | இராமசாமி, நாளந்த தோட்டம், மாத்தளை |
| — | பார்வதி, ,, ,, ,, |
| — | ஆறுமுகம், ,, ,, ,, |
| — | கந்தையா, ,, ,, ,, |
| — | அழகர்சாமி, கீனாக்கொலை, பசறை, |
| — | கந்தசாமி, ,, ,, |
| 1977— | சிவனு லட்சுமணன், டெவன் தோட்டம், தலவாக்கலை. |
| 1980— | பழனிவேல், பல்லேகல தோட்டம், கண்டி, |

தொழிலாளர் வர்க்கத்தின் நன்மைக்காக மொழி பேதம் மறந்து போராட்டங்களின் மூலம் உயிரைக் கொடுத்து உரிமைக் காத்த இந்த நன்நெஞ்சங்களில் ஏற்றிய தீபங்கள் மலையக மக்கள் உள்ளங்களை ஒளிபெறச் செய்யட்டும், கிடைத்த விடரங்களைக் கொண்டு இவர்களை நினைவுக்கூறும் நாம் விலாசங்களை விட்டுச்செல்லாது வீரமரணம் எய்திய பலரையும் பாசத்தோடு நினைவு கூறுவோம். நெஞ்சமதில் சுமப்போம்,

—

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துணை நூல் பட்டியல்

## தமிழ் நூல்கள்


அவையன், அ., — ஜனநாயகம் (வினோபா) தமிழ்நாடு காந்தி
(தமிழாக்கம்) — நினைவு நிதி, மதுரை,
1962

அறவாணன், க.ப., — தமிழரின் தாயகம், உலகத் தமிழாராய்ச்சி
1984 — நிறுவனம், சென்னை,

கோமதிநாயகம், பி. — தற்கால அரசியல் கொள்கைகள், வைகை
1984 புக்ஸ் சிண்டிகேட், மதுரை,

சந்திரசேகரன் சோ. — இலங்கை இந்தியர் வரலாறு, பைரவன்
1989 பதிப்பகம், மதுரை,

சிவராசா அம்பல — நவீன அரசியற் கோட்பாடுகள் பட்டப்
வாணர் படிப்புகள் கல்லூரி, யாழ்ப்பாணம்.
1989

நடராசன் அ.ச. — இந்திய அரசியல் சாசனம், பாலாஜிபப்ளிகே
1992 ஷன்ஸ். சென்னை.

பெரிய கருப்பன் — ஆய்வியல் அறிமுகம். மீனாட்சி புத்தக
இராம்
இலக்குமணன். — நிலையம். மதுரை. 3ம் பதிப்பகம்.
எம்.எஸ்.
1986

மீனாட்சியம்மாள். — இந்தியர்களது இலங்கை வாழ்க்
கோ.ந. கையின் நிலைமை.
? Reprint WERC.Colombo.

பாஸ்கரன். இரா. — முதலாளித்துவம் என்றால் என்ன?
(மொழி பெயர்ப் (அ.புசுயெப்) முன்னேற்றப் பதிப்பகம்
பொளர்
1985 சோவியற் நாடு, 1989

வரதராசன்.மு. — மொழிப் பற்று. பாரி நிலையம்.
1985 சென்னை. ஆறாம் பதிப்பு,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆங்கில நூல்கள்


Abeynaike H. B. W 1988? — Parliament of Sri Lanka, Lake House, Colombo.

Arasaratnam Sinnapha 1986 — Sri Lanka after Independence Nationalism, Communalism, and Nation building Monograph-5, University of Madras

Bala, S S, 1994 — Peace Contribution For Sri Lanka, Swastika Ltd, Colombo.

Bandarage Asoka 1985 — Colonisation in Sri Lanka-The Poitical Economy of the Kandyan High Lands 1833-1886, Lake House, Colombo, Reprint.

Chattopadityaya, H. P, 1979 — Indians in Sri Lanka, K. Banergie O.P, S Publishers Calctta

De Silva G.P H., 1979 — A Statistical Survey of Elections of the Legislatures of Srl Lanka, 1911 1977 Marga Publications Colombo

De ilva H. L. 1991 — An Appraisal of the Federal Alternative for Sri Lanka, Dehiwala.

De Silva K. M., 1984 — A History of Sri Lanka, Oxford University Press, Second Impression Delhi.

1981 — Universal Franchise 1931-1991, the Sri Lanka Experience, Department of information, Sri Lanka.

De Silva W.P.S, And Ferdinando J.C.L. (Compliers) 1990 — 9th Parliament of Sri Lanka, Lake House, Colombo.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Euerding Ulrich (Ed] 1993 — Problems of Democracy-Constitutionalism and Political Violence, Goe the Institute, Colombo

Fernando A Basel, J, 1991 — Sri Lanka Militarization VS Modernization, Asian Monitor Resource Centre, Hong-Kong.

Forrest D.M. 1967 — A Hundred years of Ceylon Tea: *1867-1967*, Chatlo & Wimdas Ltd. London

Garcia Ed *1994* — A Journey of Hope-Essays on Peace And Politics, Claretion Publications Phillippines

Gunasinghe Newton *1990* — Changing Socio Economics Relations in the Kandyan Countryside, Social Scientists Association, Colombo

Gunaratne Malinga, H. 1988 — For a Soverign State, Sarvodaya Book Pubiishing Services, Ratmalane

Leitan Tresse G.R. 1990 — Political Integration through Decentralization and Devolution Of Power : the Sri Lankan Experience, University Of Colombo,

Mendis, U.L.B., *1984* — British Governors and Colonial Policy in Sri Lanka, Tisaka Prakasa-Kayo Ltd, Colombo

Nadesan, S. 1993 — A History of the UP Country Tami People, A Nandalala Publications, Sri Lanka,

Nehru Jawaharlal 1986 — The Discovery of India, Oxford University Press, Fifth Impression, Delhi.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Peacock, Q, 1989 — Minority Politics in Sri Lanka, Arihant, Publishers Jaipur.

Peiris, H. A., (Compiled) 1988 — Political Parties in Sri Lanka. Since Independence, A Bibiliography, Lake House Bookshop, Colomdo

Ponnmbalam Satchi 1983 — Sri Lanka, NationalQuestion and the Tamil Liberation Struggle, ZED Books Ltd. London

Roberts Michael (Ed)*1979* — Collective Identities Nationalism and Protest in Moden Sri Lanka, Marga Institute, Colombo.

Russell Jane *1982* — Communal politics Under the Donough more Constitution. *1931 1947*, Tisara Prnkasakayo Dehiweia

Sharma Saran Jagadish *1975* — Indias' Minorities — A Bibiliographical Study, Vikes Publishing House, Delhi

Singh Inder Antia *1987* — The Origine of the Partition of India; *1936-1947*, Oxford. University Press. Delhi

Thambiah, S *1986* — Sri Lanka, Ethnic Fratricide and the dismantling of Democracy Oxford University Press, Delhi

Vamadevan, M, *1989* — Sri Lankan Repatriates in Tamil Nadu, Zen Publishers, Madras'

Warnapalga Wiswa, W,A, Hewagama Dias L, *1983* — Recent Politics in Sri Lanka; the Presidential Election and the Referendum of *1982*, Navrang, New Delhi

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Warnapala Wiswa, W A — Local Politics in Sri Lanka,
1983 South Asian Publishers Pvt Ltd. New Delhi

Wilson Jayaratnam A — The States of South Asia
Dennis Dalton (Ed) Problems of National Integrations,
1982 Vikas Publishing House, Great Britain.

1994 — S J. v. Selvanayagam and rhe Crisis of Sri Lankan Tamil Nationalism; 1942-1977
C Hurst Co. Ltd. London

Zafrullah. H. M, — Sri Lankas Hybrid Presidential and
1981 Parliament rySystem & the Seperation of Powers Doctrine University of Malaya press, Kuala Lampur.

— Planters Associations of Ceylon
1854-1954 The Times of Ceylon; 1954

— Ferguson s Ceylon Directory
1910, 1920, 1929

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# REVIEWS

LOGOS — Democracy in Sri Lanka, Vol. 26 No. 2 August 1987

— Indo Sri Lanka Peace Accord, 26th July- Vol. 26, No 1 & 2, December 1987.

— The P R, electoral system of Sri Lanka an analysis, Vol. 27, No 2-June 1988

— Independence of the Judiciary, Vol. 23, No 2 July 1984

Quest — Devolution of power and the Provincia Council System, Quest 98, January 1986 Revised June 1992

SLFI — Electoral Systems, Sri Lanka Foundation Institute,

(De Silva C.R.Ed) Seminar Report 1987

Gunawardanary — WesumperumaEd Constitutional Structures and Devolution of power, Seminar Report 1987

De Silva CR — Wesumperuma Ed Political Culture in Sri Lanka, Sri Lanka Foundation Institute, Siminar Report Colombo 1988

Gunawasdena V. Ed Local Government in Sri Lanka Seminar Report Colombo 1987

De Silva CR Ed — Political Party system of Sri Lanka, Sri Lanka Foundation Institute, Seminar Report 1987

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Marga — Systems and Devolutions and Decentralisation, Seminar Report Marga Institute *1986*

— Ethnicity and Devolution: Polution oriented perspectives Seminar Report, Marga Institute *1987*

— Party System and the Democnatic Process Seminar Report, Marga Institute, *1988*.

— Reflections on Governance, Marga Institute Colomdo *1994*

CRM — The Franchise-Can we do better? *4-10-81*

Social Justice — Social Justice *87* Vol *28* No *6* - June *1994*

CRDS — The Provrincial Council Systems and Devolution of Law and Order Centre for Regional Development Studies

Monograph No *18* 1994

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# GOVERNMENT PUBLICATIONS

— Report of the Delimitation Commission *1976*

— இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பு- *1978*

— *1981* ம் ஆண்டின் 1ம் இலக்க பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டம் (*1981* ஜனவரி).

— Provincial Council Act No *42* of *1987*

— Parliamentary Elections (Amendment) Act No *15* of *1988*

— *1988*ம் ஆண்டின் *2*ம் இலக்க மாகாணசபைத் தேர்தல் சட்டம்

— Provincial Councils (Consequential Provisions) Act No *12* of *1989*

— *1991*ம் ஆண்டுக்கான தேர்தல்கள் ஆணையாளரின் நிருவாக அறிக்கை, ஆர். கே. சந்திரானந்த த. சில்வா *1992*

— Report of the Cmmisioner, of Elections on the ninth Parliamentary general election of Sri Lanka, Held on *15.2.1989*. Published January *1993*.

— தேர்தல்கள் ஆணையாளரின் *1993* ம் ஆண்டின் நிருவாக அறிக்கை ஆர். கே. சந்திரானந்த சில்வா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிழை நீக்கம்

| பக் | பத்தி | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|---|
| 10 | 01 | 06 | 1881 | 1981 |
| 52 | 02 | 01 | பின்ன | பின்னர் |
| 97 | 03 | 01 | 13,1 | 7,13,1 |
| 114 | 03 | 01 | 7,15 | 7,13 |
| 141 | 01 | 04 | இழந்திருக் கிறார்கள் | இருந்திருக் கிறார்கள் |
| 151 | 01 | 08 | முடியுப | முடியும் |
| 164 | 02 | 06 | கணமாகவே | களமாகவே |
| 166 | 02 | 08 | முயற்சிசுள் | முயற்சிகள் |
| 186 | 07 | 02 | குடிகளையே | குடிகளையே |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூலாசிரியர் **அருட் தந்தை ச. கீத பொன்கலன்,** கண்டி அம்பிட்டியா குரு நிலை கல்லூரியிலும் (Seminary) தொடர்ந்து மறையில் B. Th. Rome, பெல்ஜியம் நாட்டின் லுவேன் பல்கலைக் கழகத்தில் சமூகவியல் பட்டம் பெற்றவர். இன்று மலையக மக்களைப்பற்றி பல ஆராய்ச்சிக் கட்டுரை களை பத்திரிகைகளுக்கு எழுதிக் கொண்டுள்ளார். 1974-ம் ஆண்டு முதல், மலையகத்தில் வாழ்ந்து, குறிப்பாக ஊவா மாகாணத்தில் மலையக மக்களுடைய கல்வி முன்னேற்றத்திற்கான பல திட்டங்களை செயல் படுத்தியவர். தொழில் நுட்பக் கல்வி, வாழக்கை கல்வி, ஆசிரியர் பயிற்சி போன்ற திட்டங்களை நிறை வேற்றியுள்ளார்.

படிப்பிற்காக ஐரோப்பா சென்றபோது அங்கு வாழ்ந்த இலங்கை அகதிகளை பற்றி ஆய்வு செய்து 1986-ல் Sri Lankans in Exile என்ற ஆங்கில நூலை வெளியிட்டார். சிறுபான்மை மக்களின் பிரச்சினைகளை மையமாகக் கொண்ட **"பௌத்த சிங்கள வரும், சிறுபான்மையினரும்"** என்ற ஆய்வு நூலை 1987-ல் அவர் அகதியாக இந்தியாவில் தங்கியிருந்தபோது வெளியிட்டார். மலையகத் தொடர் என்ற வரிசையில் மலையகத்தை ஆட்டிப்படைக்கும் பிரச்சினைகளை பற்றி மூன்று சிற்றேடுகளை வெளியிட்டுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org